தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் கருத்துக்களில் திருக்குறளின் தாக்கம்

முனைவர் கஸ்தூரி ராஜா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் கருத்துக்களில் திருக்குறளின் தாக்கம்

முனைவர் கஸ்தூரி ராஜா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : உலக சமுதாய சேவா சங்கம், திருவான்மியூர்)
வரிசை எண் : 1

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Tattuva Nāni Vētāttiri Makarisiyin karuttukkalil tirukkuralin tākkam**
Author	:	Dr. Kasturi Raja Principal Bakthavatchalam Memorial Womens' College Chennai
General Editor	:	Dr. T. Mahalakshmi Associate Professor Faculty of Literature &Manuscriptology International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	648
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	vi+138
No. of Copies	:	1200
Price	:	Rs. 65/- (Rupees Sixty five only)
Printed by	:	United Bind Graphics 95 (43), Millers Road, Kipauk Chennai - 600 010
Subject	:	Philosophical view of Vedathiri Maharishi's thought on Tirukkural

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் படைப்புகளில் திருக்குறளின் தாக்கம் எனும் இந்நூல் இந்த ஆய்வு நிறுவனத்தில் வெளியிடப்படுவது ஏன் எனும் அறிவியல் சார் சிந்தனையாளர்கள் பலர் வினவலாம்.

அய்யன் வள்ளுவனின் அடிதொடரச் சூளுரைப்பீர்
உய்யவழி வேறில்லை திருக்குறளைத் தோள் சுமப்பீர் (கலைஞர்)

எனும் வாக்கிற்கேற்பக் குறளுடன் பொருத்திப் பார்த்து ஒப்பீட்டாய்வு செய்திருப்பது இங்குக் கவனத்துக்குரியது. பௌத்தம் சமணம் இவ்விரு மதங்களையும் அவைதீக மரபு கொண்டவை என்றும், சைவம் வைணவம் போன்ற மதங்கள் வைதீக மரபு சார்ந்தவை என்றும் அறிவியல் சார் சிந்தனையாளர்கள் கருத்துரைப்பர். இந்நூல் வைதீக மதவாதியின் படைப்பையும் அவைதீக மதவாதியான வள்ளுவனின் குறளையும் ஒப்பீட்டாய்வு செய்கிறது.

இருவிதமான கருத்துக்கள் மோதும்போதுதான் புதுவிதமான கருத்துக்களும் கருத்தியல்களும் உருவாகும் என்ற அடிப்படையில் இந்த நூல் அமைகிறது என்பது எமக்கு மகிழ்ச்சி அளிப்பதாய் அமைகிறது.

மனவளக்கலை, மகரிஷி மணிமொழிகள், உலக சமாதானம், மனம், மதமும் மனிதனும், உலக சமுதாய வாழ்க்கை நெறி, நான் யார்? எனும் படியான பல்வேறு தலைப்புகளில் 44க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் மகரிஷி. இவரது படைப்புகள் தனி மனிதம் தொடங்கி உலகம், சமூகம் எனப் பரவலாகச் சிந்திக்க வைப்பதாக அமைகின்றன.

எனது மகள் ஞானமெனும் சிறுமி ஓர் நாள்
என் நண்பரை நோக்கிக் கதை சொல்லென்றாள்
மனது மிக உற்சாகம் கொண்டவட்கு
மாமுனிவர் வள்ளுவர் கதையைச் சொன்னார்.
உனது கதை சரியில்லை மணலைச் சோறாய்
ஒருவருமே சமைக்க முடியாதென்றாள், பின்
தனது கருத்தென்னென்று என்னைக் கேட்டாள்.
நீதிபதி பொறுப்பேற்றேன் இருவர் முன்னே (ப. 4)

எனும் பாடலில் கதைக்கூற்றுத் தன்மையில் எளிய நடையில் விளக்கும் முறை கவித்துவத்தைக் காட்டுவதாய் அமைகிறது. திருக்குறள் உட்பொருள் விளக்கம் (ப. 11)தனில்

அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
அகத்துதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக்காட்டி
அறிவுதனை அறிவித்தார் திருவள்ளுவர்

அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்
அறிஞர் திருமூலர் அவ்வறிவில் ஆழ்ந்து
ஆனந்தக் கவியாத்தார் இராமலிங்கர்
அறிவில் அறிவாய் நிலைத்து அறம்வகுத்தோர்
அதை வாழ்ந்து காட்டினோர் நினைவு கூர்வாம்

என்ற பாடலின் வழியே மெய்ஞ்ஞானிகள் திறங்களை எடுத்துரைக்கிறார்.

கருத்தியலை முன்வைத்து வாதிடும் முறை சமயத்தின் வழியாக அமைகிறது. பொருளை முன்வைத்துப் பொருள் முதல்வாத அடிப்படையில் அறிவியல் சார் அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இறை தத்துவம் குறித்து,

இறைவெளி சாட்சியாக எல்லோரும் பார்த்துக் கொண்டே
மறைவாக நீ உள்ளாய் என்று மாற்றுரை பகர்கின்றன

என்கிறது வேதாத்திரியம் எனும் படி இந்நூல் முழுதும் குறளின் கருத்துகளுடன் இயைந்துசெல்லும் மையப்புள்ளிகளை அவ்வப் போது தொட்டும் துலாவியும் விவரித்து இருப்பது இந்நூலின் வெற்றியாக உணர முடிகிறது. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி பெயரில் அமைந்த அறக்கட்டளைப் பொழிவு நூலாக வெளி வருகிறது. ஆய்வுலகு ஆராய இந்நூல் பல தளங்களை முன் வைத்துள்ளது. ஆய்வுகள் தொடரோட்டம் போன்றது. இந்நூலை நன் முறையில் உருவாக்கித்தந்த முனைவர் கஸ்தூரி ராஜா அவர்களுக்கும் இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி இணைப்பேராசிரியர் அவர்களுக்கும் மிக்க நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் குறிப்பு



பிறப்பு சென்னையில், இருப்பும் நிலைப்பும் தமிழில்! இலக்கியத்தில் நிலையாமை என்பதனை ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொண்டாலும் இவர் தம் புகழும் பெருமையும் நிலையானவை. இவர் தமிழகத்தின் பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர்.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலங்களில் நாடகம் எழுதியும், நடித்தும் புகழ் பெற்றவர். கல்லூரியில் படித்த காலங்களில் பல்வேறு பொறுப்புகள் வகித்துத் தம்மால் அவற்றை மேன்மைப்படுத்தியவர். அண்ணா ஆதர்ச மகளிர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிப் பணி நிறைவு பெற்றவர்.

தம் பெயரில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அறக்கட்டளை நிறுவிய பெருமையால் உயர்ந்து நிற்பவர். நல்ல கட்டுரையாசிரியர். ஆய்வுக் கருத்தரங்குகள் பலவற்றில் ஆய்வுக்கட்டுரை படித்துத் தம்மாள் தமிழுக்குச் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்று மெய்ப்பித்துக் கொண்டு வருபவர்.

இலங்கைக்கும், அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று தமிழின் பெருமையைப் பறைசாற்றி வந்தவர். சிறுகதை நூல், கட்டுரை நூல்கள், ஆய்வு நூல்கள், கவிதை நூல்கள் என 16 நூல்கள் எழுதியவர். சோவித் பண்பாட்டு மையம் நடத்திய கவிதைப் போட்டி, மங்கையர்மலர் நடத்திய நாடகப் போட்டி, அண்மையில் மலேசியாவில் நடந்த உலகப் பொதுமறை மாநாட்டில் நிகழ்ந்த கவிதைப் போட்டி முதலியவற்றில் பரிசும் விருதுகளும் பெற்றுச் சிறப்பிக்கப் பெற்றவர்.

தமிழ் இலக்கியத்தில் நிலையாமை, திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள், இலக்கிய மலர்கள், திருக்குறளும் சைவ சித்தாந்தமும், முக்கனி ஆகிய கட்டுரை நூல்களம், வேரும் விழுதும்

என்ற கவிதை நூலும, சிறுகதைத் தொகுதி நூல்களும் இவரது படைப்பாற்றல் திறமையைப் பறை சாற்றுவன. திருக்குறள் ஞாயிறு, இலக்கியச் சுடர்மணி, தமிழ்க்காப்பாளர், தமிழ்ப்பணிச் செம்மல் முதலிய விருதுகள் பெற்றுள்ளார். இவரது நூல்களை ஆய்வு செய்து மூவர் எம்.ஃபில். பட்டம் பெற்றுள்ளனர்.

எம்.ஃபில். ஆய்வு நெறியாளராக இருப்பவர். தம்மைத் திருக்குறள் பணியில் ஆழமாக ஈடுபடுத்திக் கொண்டவர் இவர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தினம் ஒரு குறளை எழுதி வைப்பதனைக் கடமையாகக் கொண்டும் திருக்குறளை மாணவர்களைச் சொல்ல வைத்தும் திருக்குறள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் குறள்நெறி பரப்பி வருபவர். முனைவர் மு. இளங்கண்ணன் அவர்கள் 2008இல் தொகுத்த திருக்குறள் மந்திரக் கதைகள் என்ற நூலில் 10 சிறுகதைகள் எழுதிப் பாராட்டப் பட்டவர். திருவள்ளுவர் பைந்தமிழ் இலக்கிய மன்றத்தின் துணைத் தலைவராகவும், திருக்குறள் பணி அறக்கட்டளையில் செயலாளராகவும், உலகத் திருக்குறள் பேரவையின் சென்னை மாவட்டத்தின் துணைத் தலைவராகவும், அனைத்திந்திய எழுத்தாளர் சங்கத்தின் பெரம்பூர் பகுதியின் துணைத் தலைவராகவும், இருந்து மாதந்தோறும் கூட்டம் நடத்தித் தமிழுக்குத் தொண்டாற்றி வருபவர்.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் படைப்புகளில் திருக்குறளின் தாக்கம்

உலகப் பொதுமறையாம் திருக்குறளை எழுதிய திருவள்ளுவரின் காலத்தை அறிஞர் குழுவினர் கி.மு. 31–இல் தோன்றியவர் என வரையறுத்துள்ளனர். தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி 14–8–1911 அன்று தோன்றி 28–3–2006–அன்று ஆழியாற்றுத் திருக்கோயிலுள் இறை நிலையடைந்தார். எனவே, இவரது காலம் 20ஆம் நூற்றாண்டாகும்.

ஆனாலும், இரு பெரும் தத்துவ ஞானிகளும் உரைத்த கருத்துகள் உலகந் தழுவியதாகவே அமைந்துள்ளன என்பதனை அனைவரும் அறிவர். கி.மு. 31–இல் தோன்றிய திருவள்ளுவரின் திருக்குறள் கருத்துகள் கி.பி. 20ஆம் நூற்றாண்டில் தோன்றிய தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷியின் படைப்புகளில் அமைந்துள்ளமையைச் சுட்டுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

திருவள்ளுவர் - தத்துவஞானி வேதாத்திரிமகரிஷி

ஆதிபகவன் என்ற பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார் என்பதும், வாசுகி என்ற பெண்ணை மணந்து இல்லறம் நடத்தினார் என்றும், மயிலாப்பூர், மதுரை, கன்னியாகுமரி போன்ற இடங்களில் வாழ்ந்தார் என்றும் பல்வேறு அறிஞர்களின் கருத்துகளை அனைவரும் அறிவோம்.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் 1981–ஆம் ஆண்டில் 'எனது வாழ்க்கை விளக்க'மென்ற தன் வரலாற்று நூலை எழுதி அவர்தம் வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார். இனி, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் வாழ்க்கை வரலாறு, அவர்தம் படைப்புகள், அப்படைப்புகளில் திருக்குறளின் தாக்கம் ஆகியனவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

"தாயின் பெயர் சின்னம்மாள்; பரம ஏழை;
தந்தை பெயர் வரதப்பன்; இவர்களுக்கு
ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினொன்றாண்டில்
ஆகஸ்டு பதினான்கு திங்கள் காலை,
போயின நூற்றிருபத்தியொரு விநாடி
பிறந்தேன் யான்; கூடுவாஞ்சேரி ஊரில்"

"மீன இராசிச், சிம்ம இலக்கனத்தில்
மேடத்தில், இராகு சனி செவ்வாய் நிற்க,
பானு கடகம் புதனேர இலக்கினத்தில்
பலமிழந்து கன்னியிலே சுக்கிரன் நிற்க,
வானகுரு கேது துலா இராசி நிற்க
வந்த உத்திரட்டாதி மீன்சனி திசையில்
போன மிச்சம் மூன்றாண்டு, ஐந்து திங்கள்
பொழுதைந்து; இதுவே என்பிறந்த காலம்"

(என் வாழ்க்கை விளக்கம். ப.3)

என்ற அவர்தம் பாடல் வரிகளால் அவருடைய பெற்றோர், அவர் பிறந்த ஊர், நாள் ஆகியனவற்றைத் தெளிவாக அறியமுடிகிறது.

வேதாத்திரி மூன்றாம் வகுப்பு வரை படித்தார். அவரது வறுமையின் காரணமாக நெசவுத் தொழில் மேற்கொண்டார். ஆயினும் இரவுநேரத்தில் ஆங்கிலம், தமிழ், கணக்கு ஆகியன வற்றைக் கற்றார். சென்னை, மயிலாப்பூரில் உள்ள இராயல் ரேசிங் கிளப்பிலும், போஸ்டல் ஆடிட் அலுவலகத்திலும், பகுதி நேர ஆசிரிய ராகவும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டும், அவருடைய குடும்பத் திற்குத் தேவையான பொருளாதார நிறைவு கிட்டவில்லை. எனவே, வேதாத்திரி அவர்கள், போஸ்டல் ஆடிட் அலுவலகத்திற்குத் தேவையான அட்டைக் கோப்புகளைச் செய்தும், மௌலானா லுங்கிக் கம்பெனியில் ஒப்பந்தம் செய்து, லுங்கி உற்பத்தி விற்பனையில் ஈடுபட்டும் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்தார்.

ஏ. பாலகிருஷ்ணன் என்பவரின் நட்பால் அவருக்கு ஆன்மிக ஈடுபாடு ஏற்பட்டது. அவரையே குருவாக ஏற்றுக்கொண்டு, பல்வேறு வினாக்களுக்கு விடை காணமுயன்றார். வைத்தியநாத பூபதி எஸ். கிருஷ்ணாராவ் அவர்களின் வழிகாட்டலால் ஆயுர்வேதம், சித்தமருத்துவம் ஆகியவற்றை முறைப்படி பயின்றார். மேலும், சரகசம்கிதை, சுச்ருத சம்கிதை, மாதவநிதானம், அட்டாங்க இருதயம், ரசரத்ன சமுச்சயம் முதலான சம்சுகிருத நூல்களின் மொழிபெயர்ப்புகளையும், தத்துவ விளக்கத்தையும், புருவத்திடையே தியானம் செய்யும் யோக முறையினையும் பயின்றார். மேலும், அருட்பெருஞ்சோதி இராமலிங்க வள்ளலார் அருள்பாலிப்பினையும் பெற்றார் (எனது வாழ்க்கை விளக்கம் ப. 111) என்று தன் வாழ்க்கை வரலாற்றில் குறித்துள்ளார்.

மேலும், கடவுள், மனம், ஆன்மா, மறுபிறவி, மனத்தின் ஆற்றல் – போன்ற பல்வேறு ஐயங்களுக்குத் தெளிவான விளக்கங்கள் அடங்கிய நூல்கள் பல எழுதியுள்ளார். 1958–ஆம் ஆண்டு உலகச்

சமுதாய சேவா சங்கத்தை நிறுவினார். இன்று இந்தியா, மலேசியா, ஜப்பான், அமெரிக்கா, தென்கொரியா போன்ற பல்வேறு நாடுகளில் அச்சங்கத்தின் கிளைகள் அமைந்து சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தத்துவஞானியும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அறிவியல் சார்ந்த ஆன்மிகத்தைப் பரப்பிவந்தார்.

குறிப்பாக, மகரிஷி அவர்கள் கோவை மாவட்டம் ஆழியாற்றில் நிறுவியுள்ள அறிவுத் திருக்கோயில், மக்களுக்கு அமைதியைத் தேடித்தரும் திருக்கோயிலாக இன்றும் திகழ்கின்றது. "நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமை யுடைத்திவ் வுலகு" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப 28–3–2006–அன்று ஆழியாற்றுத் திருக்கோயிலுள் இறைநிலையடைந்தார். **"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"** என்ற அருமறையின் வாக்கிற்கேற்ப இன்றும் அவர்தம் தத்துவம், மனவளக் கலை குண்டலினியோகம் வழி உலகில் நிலைத்து நிற்கின்றார்.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் எழுதிய நூல்கள்

1. மனவளக்கலை பாகம் ஒன்று
2. மனவளக்கலை பாகம் இரண்டு
3. மனவளக்கலை பாகம் மூன்று
4. எளியமுறை உடற்பயிற்சி
5. எனது வாழ்க்கை விளக்கம்
6. ஞானமும் வாழ்வும்
7. பாடு பாப்பா
8. மகரிஷி மணிமொழிகள்
9. உலக சமுதாய சேவா சங்கம்
10. காந்தத்தத்துவம்
11. என் குருநாதர்
12. உலக சமாதானம்
13. அருட்பேராற்றலின் அன்புக்குரல்
14. வான் காந்தத்தத்துவம்
15. திருக்குறள் உட்பொருள் விளக்கம்
16. இறையுணர்வும் அறநெறியும்
17. ஜீவகாந்தம்
18. அருள்தந்தையின் பதில்கள் பாகம் – 1
19. அருள்தந்தையின் பதில்கள் பாகம் – 2
20. பிரம்மஞானம்
21. இன்பமாக வாழ

22. குடும்ப அமைதி
23. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து
24. செயல் விளைவுத் தத்துவம்
25. மாக்கோலமாய் விளைந்தமதி விருந்து
26. சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்
27. மனம்
28. ஞானக் களஞ்சியம் I, II
29. வாழ்க்கை மலர்கள் (நாள் ஒரு நற்சிந்தனை)
30. வேதாத்திரியம்
31. ஆன்மிக விளக்கு
32. அணுவிஷம்
33. பிரம்ம ஞான சாரம்
34. இறைநிலை அறிவு
35. மதமும் மனிதனும்
36. அறிஞர்களின் கடமை
37. அருளருவி பகுதி – 1
38. வாழ்வியல் விழுமியங்கள்
39. அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி பன்முக ஆய்வு
40. வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
41. நான் யார் ?
42. கடவுளும் கருமையமும்
43. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி
44. அருளருவி பகுதி – 2

எனப் பல்துறை நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.

திருவள்ளுவரைப் பற்றி மகரிஷி கூறும் கருத்துகள்

> **ஞானநெறி காட்டிய பெரியார்களுள் சிறந்த ஒரு பேரறிஞர் திருவள்ளுவர். அவர் படைப்பு என்ற கற்பனையிலிருந்து விடுபட்டுப் பரிணாமம் என்ற உண்மை வழியிலே முழுமை பெற்ற மெய்ஞ்ஞானி ஆவார். தனது தெளிந்த கருத்துகளை விளக்கி மனித சிந்தனையை உண்மை வழிக்குத் திருப்பிவிட்டிருக்கின்றார். புலன் கவர்ச்சி மயக்கத்திலிருந்து தெளிந்து, ஆன்ம உணர்வால் விழிப்பு நிலை பெற வழிகாட்டியுள்ளார்** (திருக்குறள் உட்பொருள் விளக்கம். ப. 10)

என்கிறார். திருவள்ளுவர் வாசுகியைத் தேர்ந்தெடுத்த விதத்தைப் பலர் பலவாறு கூறக் கேட்டிருக்கிறோம். இதோ மகரிஷி அவர்களின் பகுத்தறிவு விளக்கத்தைக் கீழ்வரும் பாடல்கள் வழி கூறியிருப்பதைப் பார்ப்போம். 'பகுத்தறிவு வாதம்' என்ற தலைப்பில்,

"எனதுமகள் ஞானமெனும் சிறுமி ஓர்நாள்
என் நண்பரை நோக்கிக் கதை சொல்லென்றாள்
மனது மிக உற்சாகம் கொண்ட வட்கு
மாமுனிவர் வள்ளுவர் கதையைச் சொன்னார்
உனது கதை சரியில்லை மணலைச் சோறாய்
ஒருவருமே சமைக்க முடியாதென்றாள்; பின்
நினதுகருத் தென்னென்று என்னைக் கேட்டாள்
நீதிபதி பொறுப்பேற்றேன் இருவர் முன்னே".

என்று விளக்குகிறார். மேலும், 'அறிவின் திறனால் உணர்த்திய காதல்' என்ற தலைப்பில் கீழ்வருமாறு பாடுகிறார்,

"உத்தமியாள் அறிவுடையாள் பதியாய்த் தன்னை
உவந்தேற்பாள் ஒருவனைத் தேர்ந்திட வள்ளுவர்
பித்தனைப் போல் மணல் முடிச்சுடன் திரிந்தார்;
பேரறிவால் வாசுகி யூகித் தறிந்தாள்
வித்தையெனப் பலர் முன்னே மணல் கொண்டாள்
வீசியெறிந்தாள் மறைவில் அரிசிச் சாதம்
சித்தம் மகிழ்ந்தே படைத்துச் சூழ்ந்தோர்க் கெல்லாம்
சிந்தை நிலையறிவித்தாள் எனநான் சொன்னேன்".

(எ.வா. விளக்கம். ப. 88)

திருவள்ளுவர் கூறும் மெய்ப்பொருளை,

"அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானார்
அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக் காட்டி
அறிவுதனை அறிவித்தார் திருவள்ளுவர்;
அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்
அறிஞர் திருமூலர் அவ்வறிவில் ஆழ்ந்து
ஆனந்தக் கவியாத்தார் இராம லிங்கர்
அறிவில் அறிவாய் நிலைத்து அறம் வகுத்தோர்
அதை வாழ்ந்து காட்டினோர் நினைவு கூர்வாம்".

(திருக்குறள் உட்பொருள் விளக்கம். ப. 11)

என்ற அடிகளின் மூலம் மெய்ஞானிகளின் திறத்தை உணர்த்துவதை அறியலாம்.

வேதாத்திரியம்

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் வெளிப்படுத்திய வேதாந்தக் கருத்துகள் அனைத்தும் விஞ்ஞானத்தோடு தொடர்புடையதாக இருப்பதால், கற்றாரும், கல்லாரும் வாழ்வில் பயன்படுத்த எளிமையாக உள்ளன. மகரிஷி வேதத்தின் உட்பொருளாய் அமைந்தவர். கீழ்வரும் அவர்தம் பாடல் இதனைத் தெளிவுபடுத்தும்.

"வேதத்தை யான்படித்த தில்லை ஆனால்
வேதத்தின் உட்பொருளாய் என்னைக்கண்டேன்
வாதத்தில் யான் கலந்து கொண்டதில்லை
வாதிப்போர் அனைவருக்கும் பொருளாய் உள்ளேன்
போதித்த அண்டங்கள் உயிர்கட்கெல்லாம்
பிறப்பிடமாய்க் கருப்பொருளாய் என்னைக் கண்டேன்
சோதிப்போர் புலனறிவால் என்னைக் காணார்
சுயநிலையை அகத்துணர அவர் நான் ஒன்றே."

அனைத்துமாகியிருக்கிற ஒரே மெய்ப்பொருளைப் பற்றிய சத்தியங்களின் தொகுப்பே "வேதாந்தமும் வேதாத்திரியமும்". முந்தையது பழமைக்கும் பழமை; பவித்ரமான சமசுகிருதத்தில். பிந்தையது புதுமைக்கும் புதுமை, தூய தமிழில். இரண்டும் சிந்திப்பது மூலமற்ற மூலத்தையே. வேதாந்தத்திற்குத் தூய தமிழில் மகரிஷி எழுதிய விஞ்ஞான பாஷ்யம் வேதாத்திரியம் எனலாம். உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை என்ற மூன்று முக்கிய மறைகளின் தத்துவ சாரத்தோடு, புதிய சிகரங்களைத் தொட்டு நிற்கும் இன்றைய விஞ்ஞான சாரத்தையும் சேர்த்தால் நமக்குக் கிடைப்பது வேதாத்திரியம்.

தத்துவத்தையும் விஞ்ஞானத்தையும் இணைப்பது அவ்வளவு எளிதல்ல. தத்துவத்தை விஞ்ஞானப்பூர்வமாக உணரும் துணிவும், விஞ்ஞானத்தைத் தத்துவார்த்தமாக அலசி ஆராய்கிற அறிவுத் திறனும் கொண்ட ஒரு மகான்தான் இந்த இணைப்பைத் தர முடியும். அதைத் தருபவரே வேதாத்திரி மகரிஷி. வேதாத்திரியம் நமக்கு ஆதிசங்கரரை மட்டுமல்ல; ஆல்பர்ட் ஐன்ஸ்டீனையும் அடையாளம் காட்டுகிறது.

வேதங்கள்

ரிக், யசூர், சாம, அதர்வண என நான்கு வேதங்களாகத் தொகுத்தார் வியாசர். ஒவ்வொரு வேதமும், சம்கிதை (பல்வேறு தேவர்களிடம் பிரார்த்தனைகள்), பிராம்மணம் (பல்வேறு யாகங்கள் பற்றிய விபரங்கள்), ஆரண்யகம் (அறுதி உண்மையைப் பற்றிய ஞானம்) என மூன்று பகுதிகளாக அமைக்கப்பட்டிருக்கிறது. நான்கு வேதங்களின் கிளைகளாக ஆறு தர்சனங்கள் எழுந்தன. தர்சனம் என்பது பார்த்து அதன் உட்பொருளை அறிவது. அவை முறையே நியாயம், வைசேசிகம், மீமாம்சம், சாங்க்யம், யோகம், வேதாந்தம் எனப்படுகின்றன. ஏணிப்படிகள் போன்று, ஞானத்தின் அறுதி நிலைக்கு நம்மை உயர்த்துகின்றன இந்தத் தர்சனங்கள்.

பரமாத்மாவே சீவன்களாகியிருக்கிறது. சீவன்கள் அறிவின் முழுமையான ஞானத்தினால் பரமாத்மாவுடன் ஒன்ற, ஆதியும் அந்தமும் ஒன்றாகி விடுகிறது. எதுவுமாகக்கூடிய ஒரே பொருள்தான் எல்லாமாகியிருக்கிறது; எனவே அந்த ஒரு பொருளாகிய பிரம்மமே நானாகியிருக்கிறது என்ற ஞானம் அத்வைத ஞானம். கடல் அலையாகிறது. அசைவு நீங்க அலை கடல் ஆகிறது.

கடலே அலைகளாகி இருப்பதுபோலப் பரமாத்மாவே சீவன்களாகி இருக்கின்றது என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிற விசிட்டாத்வைதம் சற்று வித்தியாசப்படவும் செய்கிறது. பரமாத்மாவே சீவன் தன் மலர்களை அகற்ற, அகற்ற பரமாத்மாவை அணுகலாமே தவிர ஒன்றிவிட முடியாது என்பது விசிட்டாத்வைதத்தின் கூற்று.

"ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று தேடி
அலையும் அறிவிலிகாள் – பல்
ஆயிரம் வேதம் அறிவு ஒன்றே தெய்வம்
உண்டாம் எனல் கேளீரோ?
நாமம் பலகோடி ஓர் உண்மைக்கு உளவென்று
நான்மறை கூறிடுமே – ஆங்கே ஓர்
நாமத்தை நீர் உண்மை என்று கொள்வீரென்று
அந்நான் மறை கண்டிலதே."

எனப் பாரதி மனம் நொந்து நைந்துருகுகின்றபோது, அவருக்கு ஆறுதல் கூற வருகிறது வேதாத்திரியம். ஒரு பாமரனும் உள்ளதை உள்ளவாறு உணரக்கூடிய வல்லமையை அவனுக்குத் தருகிறது வேதாத்திரியம். உள்ளதை உணர்ந்து, நாம ரூபங்களுக்கு அப்பால் நின்று உலகம் அனைத்திற்கும் பொதுவானதொரு இறைத்தத்துவத்தை வேதாந்த சாட்சியோடு நமக்குத் தருகிறது வேதாத்திரியம்.

இறையுணர்வு என்பது புனிதமானது; உயர்வானது. அந்த இறையுணர்வை வெளிப்படுத்த மொழி ஒரு சாதனமே. சாதனங்களைப் பற்றிய சர்ச்சையில் இறங்கிச் சத்தியங்களைக் கோட்டைவிட வேண்டா என நம்மை எச்சரிக்கிறது வேதாத்திரியம்.

வேதாந்த சத்தியங்கள்

சத்யம், ஞானம், அனந்தம் பிரஹ்மன்; அகம் பிரம்மாஸ்மி போன்ற வேதாந்த சத்தியங்களை வேதாத்திரி ஞானம் அதாவது நம் மறுவினையைக் கொண்டு அறிய வைப்பது வேதாத்திரி மகரிஷியின் வேதாத்திரியமாகும். இதனை,

"அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப்பக்குவம் நீ

அவனில்தான்நீ, உன்னில் அவன்
அவன்யார்? நீயார்? பிரிவேது?
அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவனை மறந்தால் நீ சிறியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்தஇடம்
அறிவு முழுமை அதுமுக்தி."

என்ற வரிகளில் அன்றாடம் நாம் பேசுகிற வாய்மொழிச் சொற்களாலேயே ஆதி மூலமே அணுவாகவும் நாமாகவும் இருக்கிறது என்ற அத்வைதத்தையும்,

"ஆதியெனும் பரம்பொருள்மெய் எழுச்சிபெற்று
அணுவென்ற உயிராகி அணுக்கள்கூடி
மோதியிணைந்து இயங்குகின்ற நிலைமைக்கேற்ப
மூலகங்கள் பலவாகி அவையிணைந்து
பேதித்த அண்டகோடிகளாய் மற்றும்
பிறப்பு இறப்பிடை உணர்தல் இயக்கமாகி
நீதிநெறி உணர்மாந்தராகி வாழும் நிலையுணர்ந்து
தொண்டாற்றி இன்பம் காண்போம்."

என்ற பாடலில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிற ஒரு பரம்பொருள் தான் ஆதி. அதுவே அணுக்கள், மூலகங்கள், அண்டங்கள், உயிரினங்கள் என அனைத்துமாகியிருக்கின்றது என்பதையும் சாதாரண மக்களுக்கும் வேதாத்திரியம் உணர்த்தும். "கடவுள் எனப்படுபவனே மனிதன் ஆனான்" என்ற வரியில் கடவுளையும், மனிதனையும் இனிமையாகவும், இதமாகவும் இணைத்து விடுகிறது. மேலும்,

"அழுத்தம் எனும்உந்தாற்றல் ஒன்றைக் கொண்டே
அணுமுதலாய் அண்டகோடி அனைத்தும் ஆக்கி
வழுத்துமோர் அறிவுமுதல் ஐந்தும் ஆறும்
வகைவகையாய் உயிரினங்கள் தோற்றுவித்து
முழுத்திறனுடன் காத்து முடிக்கும் மேலாம்
முழுமுதற்பொருளே நம்மறிவாய் ஆற்றும்"

அனைத்து மதத்தவரும் முழுமனத்தோடு ஏற்றுக் கொள்ளும் வழியே வேதாத்திரி மகரிஷியின் வழியாகும். இதனையே பாரதி :

"ஆத்திசூடி இளம்பிறை யணிந்து
மோனத்திருக்கும் முழுவெண்மேனியான்
கருநிறங்கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன்
முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப் பலப் பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துணராது

பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்."

என்கிறார். இன்றைய சமூகத்தின் தேவை வேதாத்திரியம் என்பதனை உலாவரும் வேதாத்திரியம் என்ற கட்டுரை கீழ்வருமாறு விளக்குகிறது.

நாம் கற்பித்த நாம ரூபங்களுக்கு அப்பாற்பட்டவன் இறைவன் என்ற சத்தியத்தை ஆண்டாள் தமது திருப்பாவையில் "நாராயணனே நமக்கே பறைதருவான்", "கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா" "மாமாயன், மாதவன், வைகுந்தன் என்றென்றும் நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்" "தாயைக்குடல் விளக்கம் செய்த தாமோ "தரனை" என்று பலப்பல நாமங்களைப் பாடிக்கொண்டே வந்த ஆண்டாள், இருபத்து எட்டாவது பாசுரத்தில் கூறுவார்;

"அறியாத பிள்ளைகளாம் அன்பினால் உந்தன்னை
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா நீதாராய் பறையேலோ ரெம்பாவாய்"

இப்பாசுரத்தில், (திருப்பாவையில் இப்பாசுரத்தில் மட்டுமே) ஆண்டாள் இறைவா என்று பொதுவாக அழைப்பதை நாம் காணலாம்.

ஆதிசங்கரர் முதல் பல மகான்கள் உரையெழுதிய நமது நாட்டின் பாரம்பரியம் மிக்க மறைநூல்களை அணுகுவதற்கு நாம ரூபங்களைக் கடந்த புதிய பார்வைகளையும், விஞ்ஞானப்பூர்வமான விளக்கங்களையும் தருகிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி.

"யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பச்யதி
தஸ்யாஹம் ந ப்ரணச்யாமி ஸ ச மே ந ப்ரணச்யதி"
(பகவத் கீதை **6:30**)

என்ற பகவத் கீதையின் இறைச்சத்தியத்தை நாம் அனைவரும் அறிவோம். இதன் பொருள் : யார் என்னை எல்லாவற்றிலும், எல்லா வற்றையும் என்னிடத்திலும் காண்கிறானோ அவன் காட்சியினின்று நாம் மறைவதில்லை; அவனும் என் காட்சியினின்று மறைவதில்லை. எந்த ஒன்று எல்லாவற்றிலும் இருக்கிறதோ, எந்த ஒன்றில் எல்லாமே இருக்கிறதோ அதன் பெயர் தான் கிருஷ்ணம். அந்த ஒன்று எது என்று நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது வேதாத்திரியம். அனைத்துக்கும் உள்ளும் புறமுமாக இருப்பது வெளிதானே. வெளியைத் தவிர அனைத்துக்குள்ளும் புறமும் இருக்கக்கூடியது வேறேது? பேரறிவாக, பேராற்றலாக எங்கும் நீக்கமற இருக்கிற பெருவெளியே கிருஷ்ணம்

என்பது வேதாத்திரிய சத்தியம். இந்தச் சத்தியம் நமக்குப் பாரதியாரையும் அடையாளம் காட்டுகிறது.

“உள்ளும் புறமுமாய் உள்ளதெல்லாம் தானாகும்
வெள்ளம் ஒன்றுண்டாம் அதனைத்
தெய்வமென்பர் வேதியரே”

என்று கூறிய பாரதியார் அந்தத் தெய்வீக வெள்ளம் அல்லது அந்தப் பரசிவ வெள்ளம் எது என்று உணர்த்த அவர் உரைத்தது;

“வெட்டவெளியாய் அறிவாய், வேறுபல
சக்திகளைக் கொட்டும் முகிலாய்
அணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்”

அறிவாகவும், ஆற்றலாகவும் எங்கும் நீக்கமற இருப்பதுமான வெட்ட வெளியே அந்தத் தெய்வீகமான வெள்ளம். இறைஞானத்திற்குப் பிரம்மச்சர்யமே உன்னத மார்க்கம் என்பவர்கள் பலர் இருந்தாலும், இல்லறத்தில் நின்று முழுமையான இறைஞானம் பெறலாம் என்பது வேதாத்திரியக் கூற்று. புத்தர், நபிகள் போன்ற மகான்கள் இல்லறத்தில் இருந்தவர்கள் தானே! தெய்வமும், தெய்வநீதியும் வெவ்வேறு அல்ல என உணர்ந்து, ஈஸ்வர் என்றாலும், அல்லா என்றாலும் அந்தத் தெய்வத்தையே குறிக்கிறது என்றும் உணர்த்திய மகாத்மாகாந்தி இல்லறத்தில் இருந்தவர் தாமே. இராமனுச ஆச்சாரியார் இல்லறத்தில் இருந்தவர்தாமே! இல்லறத்தாரும் இறைஞானம் பெறும்வகையில் ஞானத்தை அறிவதற்கான முறையை எளிமைப்படுத்துகிறது வேதாத்திரியம்.

“இல்லறத்தில் மெய்ஞ்ஞானம் விளங்கி வாழ
இயலாத காலமொன்று இருந்த துண்டு
இல்லறத்தை விட்டுப் பலர் துறவை நாடி
எங்கெங்கோ சுற்றி அலைந்தார் அந்நாளில்
இல்லறத்தில் கடமை செய்தே தவம் பயின்று
இறைநிலையை யறியும் முறை கண்டு கொண்டோம்
இல்லறமும் துறவறமும் ஒன்று சேர்ந்து
இணைந்த உயர்அறம் கண்டோம் மகிழ்ச்சி பெற்றோம்.”

என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

ஆன்மிகத்தில் பெண்களை ஒதுக்கியதால் ஏற்பட்ட விளைவுகள்

பெண்மையைப் பற்றிய ஆதிகாலத்துப் பார்வை வேதனை மிகுந்ததாகவேயிருக்கிறது. எல்லாமே பிரம்மாவின் அம்சம் என்று கூறப்பட்டாலும், எங்கெங்குச் சென்றாலும் எல்லையற்ற தொல்லையைப் பெண்மை தாங்கவேண்டியிருந்தது. ஆன்மிகத்திற்குப் பெண்மை

தகுதியல்ல என்பதோடல்லாமல், ஆன்மிகத்துறையில் ஆழச் சென்று ஞானம் அடையப் பெண் வாசனையே கூடாதென்றார்கள். தாயாகவும், தாரமாகவும், தங்கையாகவும், தமக்கையாகவும் நமக்கு அனுதினமும் உதவுகிற பெண்மை தன்னை ஆன்மிகத்தில் உயர்த்திக் கொள்ள நமது சமுதாயம் தடையாகவே இருந்தது. இன்னும் இருக்கிறது. பிரம்மச்சரியம் கெட்டுவிட்டால் முனிவனாக முடியாதென்றால், பிரம்மச்சரியம் கெட்ட இடத்தில் தானே முனிவனே பிறந்தான்! ஆன்மிகத்தில் பெண்மையை ஒதுக்கியதால் நாம் அடைந்த நட்டத்தை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஞானம் பிறந்த நாடு நம் நாடு. ஆனால் எல்லோருக்கும் சென்றடையாமல் ஞானத்தை மறைத்ததும் நம் நாடே. பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் ஐரோப்பாவில் முந்நூறே ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த விஞ்ஞானம் பட்டி தொட்டியெல்லாம் பரவி நிற்கிறது. ஒவ்வொரு குடிசையிலும், டி.வி, ரிமோட், செல்போன், கால்குலேட்டர், மிக்ஸி என்று விஞ்ஞானத்தின் ஆட்சியை நாம் பார்க்கிறோம். ஆனால் விந்தையைப் பாருங்கள்! பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் பிறந்த மெய்ஞ்ஞானம் இன்னும் நமது இல்லங்களுக்கு வரவில்லை. பிரஹ்மனுக்கும், பிரம்மாவுக்கும் உள்ள உறவு புரிய வில்லை. பகவத்கீதையின் சாரம் பாமரனுக்கு வரவில்லை. உருவங் களுக்கு அப்பால் உறையும் உண்மை நமக்கு வந்து சேரவில்லை. ஏன் இந்த அவலநிலை ? சிறிது சிந்தித்தால் காரணம் புரியும்.

உண்மையை உணரும் உரிமை எல்லோருக்கும் உண்டு என்பதை உணராது, சரிபாதி பெண்களுக்கு ஞானம் கூடாதென்றோம். மீதி பாதியில் எல்லோருக்கும் கூடாதென்றோம். பரவவேண்டிய ஞானம் பதுங்கிவிட்டது. அப்படி பதுங்கிய ஞானம் காலம் செல்லச் செல்லப் பரமனை உணர்வதற்குப் பயன்படாமல், பாமரமக்களின் பணத்தைக் கவரும் கருவியாக மாறத் தொடங்கியது. ஞானம் அஞ்ஞானமாகி நிற்கிறது இன்று.

ஞானத்திலிருந்து பெண்மையை ஒதுக்குவது முறையல்ல என்பதை உணர்ந்து, ஞானத்தைத் தொடக்கூடாதென்று யார், யாரையெல்லாம் அன்றைய சமுதாயம் ஒதுக்கியதோ, அவர்களும் ஞானத்தைத் தொடலாம், முக்தி பெறலாம் என்பதை வலியுறுத்திய பெருமை மகான் வியாசரைச் சாரும். ஞானம் எல்லோருக்கும் பொதுவானது எனும் அவரது கருத்தை வேறு யார் மூலமாகவும் சொன்னால் அது எடுபடாது என்று நினைத்து, "பெண்பாலர், வைசியர், சூத்திரர் ஆகியவரும் என்னைச் சார்ந்திருந்து நிச்சயமாகப் பரகதி அடைகின்றனர்" என்பதை,

"மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யேஅபி ஸ்யு: பாபயோனய:
ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா சூத்ராஸ்தே அபி யாந்திபராம்கதிம்"
(பகவத் கீதை 9:32)

என்ற சுலோகத்தில் சாட்சாத் கிருஷ்ணன் கூறுவதாகவே அமைத்தார் வியாசர்.

வழிவழியாக வந்த சமுதாயம் பெண்மையை ஞானத்திலிருந்து ஒதுக்கி வைத்தாலும், அவ்வப்போது பெண்மைக்காகக் குரல் கொடுத்த மகான்கள் நமது பாரத பூமியில் வந்த வண்ணமாகவே இருக்கின்றனர். இந்த மகான்களின் வரிசையில் இன்று நாம் அருட் தந்தையைப் பார்க்கிறோம். தத்துவரீதியாகவும், சமுதாய ரீதியாவும், தனிமனிதக் குடும்ப அளவிலும் பெண்மையின் உயர்வையும் மதிப்பையும் உணர்த்தி, அந்தப் பெண்மைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும் சுட்டிக்காட்டி, திரு.வி.க. கண்ட பெண்மையையும், பாரதி பாடிய பெண்மையையும் நமது ஆன்மாவில் ஆழப்பதிய வைக்கிறது வேதாத்திரியம்.

"எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திருவுள்ளமென்ன
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே
வாழ்ந்துவரும் மக்களில் இவ்வளமறிந்தோர் எத்தனை பேர்?"

என, தத்துவரீதியாகப் பெண்மையை உயர்த்தியுள்ளார் மகரிஷி.

"பெண் வயிற்றிலுருவாகிப் பின்னுமந்த
பெண் கொடுத்த பால் உண்டே வளர்ந்து மேலும்
பெண்துணையால் வாழுகின்ற பெருமை கண்டு,
பெண்மையிடம் பெருமதிப்பு அறிஞர் கொள்வார்,
பெண்மையே தம்உடலில் பாதியாகும்
பேருண்மை உணர்ந்ததனால், எனினும் சில்லோர்
பெண்ணினத்தைப் பழித்தெழுதிப் பாடியுள்ளார்
பேதைமையால், அறிவுநிலை உயரா முன்னம்."

எனப் பெண்மையின் தாய்மையை உயர்த்தியுள்ளார்.

மெய்ஞ்ஞானிகள் - விஞ்ஞானிகள்

மூலத்தை உணர்ந்தவர்களை மெய்ஞ்ஞானிகள் என்றும், ஞாலத்தை அறிந்தவர்களை விஞ்ஞானிகள் என்றும் நாம் கூறுகிறோம். அத்வைத சாரத்தை எளிய தமிழ்ப்படுத்தி அத்தோடு விஞ்ஞானப் பார்வையைக் கலந்தால் நமக்குக் கிடைப்பது வேதாத்திரியம். புலன்களுக்கும், கருவிகளுக்கும் அப்பாற்பட்ட எந்த ஒன்றிற்கும்

விஞ்ஞானம் நாமரூபங்களைத் தருவதில்லை. எந்த ஒரு விஞ்ஞானியும் எலெக்ட்ரானுக்கு ரூபத்தைக் கொடுத்தது இல்லை. உலகிலுள்ள எந்த ஒரு இயற்பியல் பேராசிரியரைக் கேட்டாலும், 'எலக்ட்ரான்' என்றால் என்ன என்று ஒரே மாதிரிதான் சொல்லுவார். ஆனால் மெய்ஞ்ஞானத்தில் 'கடவுள் என்றால் என்ன?' என்றால் பலப்பலவாகச் சொல்லி மேலும் மேலும் சிக்கலாக்குகிறோம். எலெக்ட்ரானுக்குப் பலவிதமான ரூபங்களைக் கொடுத்து அந்த ரூபங்களை வைத்துக் கொண்டு விஞ்ஞானிகள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதில்லை. ஆனால், கடவுளுக்கு நாமங்களைக் கொடுத்துக் கற்பனையாகப் பல ரூபங்களைக் கொடுத்து, அந்தக் கற்பனை ரூபங்களை வைத்துக் கொண்டு சண்டை போடுகிற "மெய்ஞ்ஞானிகள்" உலகில் ஏராளம் உண்டு.

மெய்ஞ்ஞானத்தை, எல்லையற்றதை எல்லையற்றதாகவே பார்க்கக் கூடிய விஞ்ஞானப் பார்வையோடு அணுக வேண்டும். நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது, அவை உணர்த்துகிற உண்மைக்குச் செவிமடுப்பதே வேதாத்திரியத்தில் நாம் காணும் விஞ்ஞானப் பார்வையாகும். கையாளப்பட்ட உபாயங்களின் உண்மை நிலை பற்றிய சிந்தனைகளையும் கவலையையும் விடுத்து, கூறப்பட்ட கருத்துக்கு முக்கியத்துவத்தைத் தர நம்மைப் பக்குவப்படுத்துகிறது வேதாத்திரியம். மூலத்தைப்பற்றிய விஞ்ஞானப் பூர்வமான ஞானம் இல்லையானால், ஞாலத்தைப் பற்றிய தர்க்கரீதியான ஞானமும் நமக்குக் கிடைக்காது. எனவே மக்களின் உள்ளத்தில் மூலத்தைப் பற்றிய சிந்தனைப்பூர்வமான ஞானத்தைப் பெருக்குவது இன்றியமை யாததாகிறது.

ஞாலம் - பிரம்மன்

வற்றாயிருப்பாக, பேரறிவாக, பேராற்றலாக, தன்னதிர்வு கொண்டதாக, அனைத்து உள்ளும், புறமுமாக இருக்கிற பெருவெளியே அனைத்துமாக மாறியது. மூலமான பெருவெளி, தன்னைத்தானே இறுக்கிக் கொண்டு பரமாணு எனும் துகள்களாக மாற, அந்தத் துகள்களின் கூட்டே இந்த ஞாலமாகியது. அறிவும், ஆற்றலும் உள்ள எந்த ஒன்றும் சும்மா இருக்க முடியாது. பேரறிவும், பேராற்றலும் உள்ள சுத்தவெளியின் இயல்பான சுபாவமே பொங்குவது தான். சர்க்கரை இனிக்காமல் இருக்கமுடியாதல்லவா! அதைப் போலவே சுத்தவெளி பொங்காமல் இருக்க முடியாது! பொங்கிக் கொண்டே இருப்பதால் இதற்கு ஒரு பெயர் பிரஹ்மன் என்கிறார். மேலும் அறிவு பற்றிக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

பேரறிவாகவும், பேராற்றலாகவும் இருக்கும் சுத்தவெளியே பரம அணுவாக மாறுவதால், பரம அணுவுக்கு அறிவுமுண்டு, ஆற்றலுமுண்டு. இந்த பரமஅணுக்களின் கூட்டமே அனைத்துச் சீவராசிகளாகையால், ஒவ்வொரு சீவனுக்கும் அறிவும் இருக்கிறது; ஆற்றலும் இருக்கிறது. அந்தச் சீவனின் உடலமைப்பைப் பொறுத்து, அந்தந்த உடலில் ஒரு குறிப்பிட்ட நியதியோடு அறிவு செயல்படுகிறது. இவ்வாறு பொங்கிய பிரம்மத்தின் ஒரு துளியே நான்.

"அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில்தான்நீ, உன்னில் அவன்
அவன்யார்? நீயார்? பிரிவேது?"

எனும் மகரிஷியின் வாக்கு முற்றிலும் விஞ்ஞானப் பூர்வமானது.

கல்லுக்குள் இருக்கும் தேரையைக் காப்பாற்றுவதும், கலைந்து போகாமலிருக்கப் பெண்ணின் கருவுக்குப் பனிக்குடம் தந்ததும் பேரறிவான சுத்தவெளிதானே என்று கூறி, ஞாலத்தின் சத்தியத்தை மூலத்தை உணரும்போது, ஞாலத்தின் உணர்வு தானாக ஏற்படும். மூலத்தின் ஞானமே ஞாலத்தின் சத்தியம் என்கிறார்.

இறைநிலை - இறைத்தத்துவம்

மனிதனின் குணங்கள் மகேசனுக்குக் கிடையாது. இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, தேவை போன்ற மனித குணங்களுக்கு அப்பாற்பட்டது இறைநிலை. உண்மையை உணர்த்திச் சிக்கல்களைக் குறைக்கும் சீரிய மார்க்கமே மகரிஷி தரும் இறைத்தத்துவம். சிந்தைக்கு வேண்டியது, ஒரு மூலமே நானாகியிருக்கிறதென்ற இறையுணர்வு; செயலுக்கு வேண்டியது நாம் சக உயிர்களிடம் காட்டுகிற அறநெறியாகிய தனிப்பெரும் கருணை. மூலத்தை அருட் பெருஞ்சோதி என்று அழைத்து,

"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெரும்கருணை அருட்பெருஞ்சோதி"

எனும் தாரக மந்திரத்தில் இறையுணர்வையும் அறநெறியையும் இணைத்தார் வள்ளற்பெருமான் என்கிறார் அழகர் ராமானுசம்.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

"ஞாலத்திலிருந்து மூலத்தை அறிவது விஞ்ஞானம்.
மூலத்திலிருந்து ஞாலத்தை அறிவது மெய்ஞ்ஞானம்

என்று தெளிவாக உணர்த்துகிறார் மகரிஷி. இதனை எளிமைப் படுத்தி ஒன்றே பலவானது என்ற வேதாந்த அறிவு போதாதா? அந்த

ஒன்று எப்படிப்பலவானது என்ற வேதாத்திரிய அறிவு நமக்கு வேண்டுமா ? வேண்டும் !

ஒன்று எப்படி பலவானது என்ற சரித்திரத்தை, தர்க்கரீதியாக உள்ளதை உள்ளபடி உணராததால்தான் பிரபஞ்சம் உருவானதைப் பற்றிய பலவிதமான கற்பனைக்கதைகள் முளைத்து நம்மை ஆக்கிரமிக்க ஆரம்பித்தன. வெவ்வேறு மதங்களில் வெவ்வேறு விதமான கதைகள் உருவாகின. இந்தக் கதைகள் காலம் காலமாகக் கைமாறிப் பலகாலமாகச் சொல்லப்பட்டு வருகின்றன என்ற ஒரே காரணத்திற்காக, விழுங்கவும் முடியாமல், ஒதுக்கவும் முடியாமல் அவற்றைச் சுமந்து செல்லுகின்ற அவலநிலைக்கு நாம் தள்ளப்பட்டு இருக்கிறோம்.

கடவுளுக்கு நாம் வைத்த பெயர்கள், கொடுத்த ரூபங்கள், சொர்க்கம், நரகம் என்று நாம் உருவாக்கிய தலங்கள் மற்றும் தலபுராணங்கள் என்பதெல்லாம் நமது கற்பனைதானே! எத்தனை காலத்திற்குத் தான் இந்தக் கற்பனையை நாம் சுமந்து செல்வது ?

“சத்யம் ஞானம் அனந்தம் பிரஹ்மன்” என்ற உபநிடத சத்தியத்திலிருந்து நழுவி, பிரஹ்மனை மனிதனைப் போன்று சித்திரித்தது, நாம் செய்த கற்பனைதானே! முறையற்ற கற்பனை முரண்பாடுகளின் இருப்பிடம் என்பார்கள். எல்லையற்ற பிரஹ்மனை எல்லையுடைய மனிதனாகச் சித்திரித்து, சித்திரித்த கையோடு அவனது தலையிலிருந்து ஒரு சாராரும், காலிலிருந்து இன்னொரு சாராரும் தோன்றினார்கள் என்று ஒரு விபரீதக் கற்பனையைப் புகுத்தி, மனிதகுலத்தில் பிறப்பால் வேற்றுமைகளை விளைவித்த வேதனைகள் இன்னும் தீரவில்லையே! வேற்றுமைகளை விளைவித்த கற்பனைகளை வேதாந்தச் சிக்கல் என்பதா ? வேடிக்கை மனிதர்களின் விபரீத விளையாட்டு என்பதா ?

வேதாத்திரியம் என்றால் என்ன ? என்பதற்கு அழகர் ராமானுசம் அவர்கள் கீழ்வருமாறு விளக்குகிறார்.

“*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்* – என்று திருவள்ளுவரும்,
“*ஒன்றாகக் காண்பதே காட்சி*” – என அவ்வையாரும்,
“*காக்கை குருவி எங்கள் ஜாதி*” – எனப் பாரதியாரும்,
“*யாதும் ஊரே யாவரும் கேளிர்*” – எனப் பூங்குன்றனாரும்

குரல் கொடுத்தார்கள். இந்தக் குரல்களின் குவியல்களே வேதாத்திரியம். இந்தக் குரல்கள் குளிரில் வாடிக் குன்றிவிடாமலிருக்க அவற்றிற்கு ஓர் அற்புதமான விஞ்ஞானப் போர்வையைத் தருகிறார் மகரிஷி!

"அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம் நீ"

என்ற வரிகளின் மூலமாகவும்,

"பழுத்த நிலை வரும் வரையில் நீ, நான் என்போம்
பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்"

எனும் வரிகள் மூலமாகவும் அணுமுதல் அனைத்தும் வெளியின் இயக்க நிலைகளே என அனைத்தையும் ஒன்றாகக் காணுகின்ற காட்சியைத் தருகிறது வேதாத்திரியம்.

"ஆதியென்ற பிரம்மமது கடல்போல் ஒன்று
அதிலெழுந்த ஜீவனெல்லாம் அலை போல் ஆகும்
பேதமுடன் அலைகளவை விரிந்த போதும்,
பிரியாது கடலை விட்டுக் கடல் ஒன்றேனும்" என்றும்;

"ஆழ்கடல்போல் மெய்ப்பொருளாம்
அலைகள் போல் உருவனைத்தும்,
ஊழுழி நிற்பதுவும் உருவெடுத்து மாறுவதும்"

என்றும், நீரும் அதன் அலையும் போன்றதே, பிரம்மமும் உயிர்களும் என நமக்கு உணர்த்துகிறது வேதாத்திரியம். நீரின் எழுச்சியே அலை; அதுபோலவே, பிரம்மத்தின் எழுச்சியே அனைத்தும். எழுச்சியைப் பற்றிப் பேசுகிற மகரிஷி, அதற்கான காரணம் அந்தப் பிரம்மமாகிய பெருவெளியின் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலே என்கிறார்.

வேதாத்திரிய விஞ்ஞானம்

ஒன்றான பிரம்மம் எப்படி பலவாறான தோற்றங்களாக மாறுகிறது என்ற மகரிஷியின் தத்துவம் புதிய விஞ்ஞானமாகவும் மலர்கிறது. இதனையே நாம் வேதாத்திரிய விஞ்ஞானம் என்கிறோம். எந்த ஒன்று பிரபஞ்சமாக மலர்கிறது என்பதை இன்றைய விஞ்ஞானமும் சிந்தித்துப் பல கருத்துக்களையும் கூறுகிறது. இந்தக் கருத்துகளில் ஒன்று தான் உலகெங்கும் பேசப்பட்டு வருகிற "பெருவெடிப்புக் கொள்கை" (Big Bang Theory). எல்லையுடைய ஒரு அளப்பரிய ஆற்றல் உள்ள கோளம் வெடித்துச் சிதறி இப்பிரபஞ்சம் உருவானது என்பதே பெருவெடிப்புக் கொள்கை. ஆனால் இந்தக் கொள்கையைச் சற்று மாற்றி அமைக்கிறது வேதாத்திரிய விஞ்ஞானம். எல்லையுடையதன் வெடிப்பு அல்ல நம் பிரபஞ்சம்; எல்லையற்றதன் மலர்ச்சியே அது; எல்லையற்ற பெருவெளி தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தத்தினால் தன்மாற்றம் அடைந்த நிலைதான் பிரபஞ்சம் என்பது வேதாத்திரிய விஞ்ஞானம்.

ஒன்றாக இருந்த பிரம்மன் ஏன், எப்படி பலவாகி, பரிணாமம் ஆகி நிற்கிறது என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் கேள்வி. மூலம் ஏன், எப்படி இந்த ஞாலமாக மாறுகிறது என்ற கேள்வியின் சாரத்தை;

"ஆதி அந்தம் என்றுரைத்தார் வெண்ணிலாவே - அந்த
ஆதி அந்தம் ஆவதென்ன வெண்ணிலாவே
வித்தில்லாமலே விளைந்த வெண்ணிலாவே - நீ
விளைந்த வண்ணம் ஏது சொல்லாய் வெண்ணிலாவே"

என்ற வள்ளலாரின் வரிகளிலும் நாம் காணலாம்.

இறைநிலையாகிய பிரம்மத்திற்கு "மாயை" எனும் குணத்தைக் கொடுத்ததில் சிக்கல் இல்லாமலில்லை. சிக்கல் இதுதான் : 'சத்யம், ஞானம், அனந்தம், பிரம்மன்' என்பது உபநிடத வாக்கு. ஞான மயமாக இருக்கிற பிரம்மனுக்கு எப்படி "மாயை" இருக்க முடியும் ? ஒன்றாக இருந்த சுத்தவெளி ஏன், எப்படி பலவாறாகப் பரிணமித்தது என்ற கேள்வியை மகரிஷியும் சந்திக்கிறார். விஞ்ஞானப் பூர்வமாக வருகிறது விடை : இறைவெளிக்குத் தன்னைத்தானே இறுக்கிக் கொள்கிற தன்மை உண்டு. இறைவெளியின் இந்தத் தன்னிறுக்கம் தான் தன்மாற்றத்திற்கான முழுமுதற்காரணம் என்கிறார்.

வேதாத்திரிய விஞ்ஞானம் சுத்தவெளியின் தன்னிறுக்கத் தன்மையில் ஆரம்பிப்பதால், அது மெய்ஞ்ஞான விஞ்ஞானமாகிறது. அதே சமயம், சுத்தவெளியின் பேரறிவும், பேராற்றலும் இணைந்த அசைவுதான் இந்தப் பிரபஞ்சம்; ஆகவே இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காணுகின்ற, காணாத அனைத்தும் அந்தச் சுத்தவெளியாகிற பிரம்மத்தின் பல வடிவங்களே எனக் கருதவது விஞ்ஞான மயமான மெய்ஞ்ஞானமாகும்.

"ஒவ்வொரு பொருளும் பரம்முதலாய்
அவ்வுரு வரையில் வந்தகதை
செவ்விய சிறுசொல் பரிணாமம்
சிறப்பை உணர்வாய் நீயும் அதே"

என்கிறார் மகரிஷி.

சுத்தவெளி ஆதி; அதுவே மூலம். அது எழுந்த கோலமே நாம் வாழும் பிரபஞ்சம். மூலம் கோலம் ஆனதன் விரிவான விளக்கமே, வேதாத்திரிய விஞ்ஞானம். இந்த விஞ்ஞானத்தின் வெவ்வேறு பகுதிகளே இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற பிரிவுகள், கோலமான பின்பும், கோலத்தை மூலமாக உணர்வதே தத்துவம். எந்த ஒரு பொருளும் அடிப்படைத் துகள்களின் (Fundamental

Particles) கூட்டுத்தான் என்று விஞ்ஞானம் சொல்கிறது. அந்த அடிப்படைத் துகள் எதனாலானது? அது எவ்வாறு உருவாக்கப்பட்டது? என்ற கேள்விக்கு இன்றைய விஞ்ஞானத்தில் தெளிவான விடையில்லை. அடிப்படைத் துகளைப் பற்றிய அடிப்படை ஞானம் இல்லாததே இன்றைய விஞ்ஞானத்தின் அஞ்ஞானம்.

ஒரு இயற்பியல் துறைப் பேராசிரியரை அணுகி, What is matter? என்ற கேள்வியை அவர் முன் வைத்தால் Matter is a collection of fundamental Particles என்ற சொல்லுவார். அடிப்படைத்துகள்கள் எதனால் ஆக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்போமேயானால், அதற்கு அவரிடம் விடை இருக்காது. அந்தப் பேராசிரியர் மட்டுமல்ல, எந்த ஒரு விஞ்ஞானியும் இந்தக் கேள்விக்கு இதுவரை தீர்க்கமான விடை அளித்ததில்லை. அடிப்படைத்துகள் எவ்வாறு உருவானது? எதனால் ஆக்கப்பட்டது? போன்ற கேள்வி களுக்கு வேதாத்திரிய விஞ்ஞானம் மிக அழகாக விடை தருகிறது.

சுத்தவெளி தன்னைத்தானே இறுக்கிக் கொள்ள, அந்தத் தன்னிறுக்க அழுத்தம் குவிந்து, குவிந்து ஓரிடத்தில் திணிவு அதிகரித்து, உச்சத்தை அடையும்போது, அங்கே சுத்தவெளியின் ஒரு நுண்ணிய பகுதி சுழற்சியுற்றுப் பரமாணுவாக மாறுகிறது. இவ்வாறு சுத்தவெளி ஆங்காங்கே பரமாணுக்களாகத் தன்மாற்றம் அடைகிறது. இந்தப் பரமாணுக்களின் தொகுப்புத்தான் விண் அல்லது ஆகாசத் துகள் அல்லது விஞ்ஞானம் கூறும் அடிப்படைத் துகள் என்கிறார் மகரிஷி அவர்கள்.

மெய்ஞ்ஞான விஞ்ஞான இணைப்பு

மகரிஷியின் பார்வையில் மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும், சுத்த வெளியாகிய பிரம்மத்தில் இணைகிறது. இந்திய அணுவியல் விஞ்ஞானி, டாக்டர் இராஜா இராமண்ணா அவர்கள்

> **ஒரே சத்தியத்தின் இருமுகங்கள் தான் மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும். இந்த இருமுகங்களும் இணைய வேண்டும்; அப்படி இணையும் போது, அவை இணையுமிடம் தான் பிரம்மம்.**

இந்த இணைப்புதான் மகரிஷியின் பிரம்மஞானம் என்கிறார்.

சுத்தவெளியின் சூழ்ந்தழுத்தமே இருபொருள்களுக்கு இடையே உள்ள தூரத்தைக் குறைத்து ஈர்ப்பு விசையாகச் செயல்படுகிறது. ஆகவே சுத்த வெளியாகிய பிரம்மத்தை "Gravity" என்றும் அழைக்கலாம் என்கிறார் மகரிஷி. "Gravity is Brahman"

என்ற மகரிஷியின் மகா வாக்கியத்தில் மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் இணைந்து விடுகின்றன. மகரிஷி இணைத்ததை மனிதர்கள் புரிந்து கொள்வார்களாக! மகரிஷி தரும் இந்த இணைப்பு மனித இனத்திற்குப் புரிய ஆரம்பித்து விட்டது என்பதற்கான அத்தாட்சியே அண்மையில் The New Indian Express (Bangalore. 1-04-2004)ல் வெளி வந்த சில கருத்துகள் எனலாம்.

விஞ்ஞான மெய்ஞ்ஞானம் பற்றிக் கீழ்வருமாறு அழகர் இராமானுசம் அவர்கள் மகரிஷி வழி விளக்குகிறார். மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் இரண்டையும் இணைத்து மகரிஷி தருகிற ஞானத்தை மெய்ஞ்ஞான விஞ்ஞானம் என்றும் சொல்லலாம் அல்லது விஞ்ஞான மெய்ஞ்ஞானம் என்றும் சொல்லலாம். இவரது ஞானம் இதுவரை வந்த மெய்ஞ்ஞான சாரத்தையும் விஞ்ஞான சாரத்தையும் உள்ளடக்கி அவற்றைச் சற்று உயர்த்தவும் செய்கிறது.

இன்றைய விஞ்ஞானத்தின் தந்தை நியூட்டன் ஆவார். பூமியை நோக்கி ஒரு கல் கீழே வருவதற்குக் காரணம், பூமி அந்தக் கல்லை இழுக்கிறது என்பது நியூட்டனின் சித்தாந்தம். பூமி அந்தக் கல்லை இழுக்கவில்லை; பூமியையும் அந்தக் கல்லையும் இறுக்குவது அவற்றைச் சூழ்ந்துள்ள சுத்தவெளியின் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல் தான் என்பது வேதாத்திரி மகரிஷியின் புதிய சித்தாந்தம். இதைப் போன்ற பலப்பல புதிய பார்வைகளையும், விஞ்ஞானத் திற்குத் தருகிறது வேதாத்திரியம்.

சுத்தவெளியின், தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல் ஓரிடத்தில் திணிவு பெற அங்கே சுத்தவெளியின் ஒரு சிறு பகுதி சுழற்சியுற, அந்தச் சுழலும் பகுதியே பரமாணுவாகிறது என்ற கருத்தும், சுழல்கின்ற பரமாணு தன்னைச் சுற்றி விரிவலைகளை உருவாக்குகிறது என்ற கருத்தும், மகரிஷி தனது அகக்காட்சியால் பெறப்பட்ட விஞ்ஞான விளக்கங்கள் ஆகும்.

> **பிரபஞ்சத்தின் ஆதி துகளல்ல; துகளுக்கும் அடிப்படையான சுத்தவெளிதான் பிரபஞ்சத்தின் ஆரம்பநிலை. ஆகவே, சுத்தவெளியைப் புரிந்து கொண்டால் தான், அதுவே துகளாக மாறிய தாத்பரியத்தையும், அந்தத் துகள்களின் கூட்டான பஞ்சபூதங்களையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். துகளிலேயே புழங்கிப் பழக்கப்பட்ட இன்றைய விஞ்ஞானிகள், பிரபஞ்ச விதிகளுக்கான காரணத்தைத் துகளிலேயே தேடுவது தான், இன்றைய விஞ்ஞானச் சிக்கல்களுக்கெல்லாம் காரணம்**

என்ற மாபெரும் தெளிவைத் தருகிறது வேதாத்திரிய விஞ்ஞானம்.

சடப்பொருள்களின் இயக்கத்திற்கான முழுமுதற்காரணத்தைச் சுத்த வெளியில் வைக்கிற வேதாத்திரிய விஞ்ஞானம், உயிர்களின் பரிணாமத்தைப் பற்றியும் விரிவாகப் பேசுகிறது. மகரிஷியும் பரிணாமத்தைப் பற்றிப் பேசுகிறார். ஆனால் மகரிஷியின் பரிணாமக் கொள்கை ஆதியாகிய சுத்தவெளியில் ஆரம்பித்து இன்றைய மனிதன்வரை முடிகிறது.

சடப்பொருள்களின் இயக்கத்தைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் சரி, உயிருள்ளவைகளின் பரிணாமச் சரித்திரமாக இருந்தாலும் சரி, மகரிஷி தொடங்குவது ஆதியாகிய சுத்தவெளியில் தான். ஆதியில் ஆரம்பித்ததால், மகரிஷியின் விஞ்ஞானம், ஆன்மிக விஞ்ஞானமாக மலர்கிறது.

வேதாத்திரிய விஞ்ஞான மெய்ஞ்ஞானம் பற்றி இராமானுசம் அவர்களின் கருத்துகளை இனிப் பார்ப்போம். எல்லையற்று எங்கும் நீக்கமற அமைந்திருக்கின்ற வெளி தன்மாற்றம் அடைந்து, அத்தன்மாற்றத்தின் தற்போதைய நிலையே இப்பிரபஞ்சம். இத்தன்மாற்றம் சுத்தவெளியின் "அலகிலா விளையாட்டு". வெளி ஒன்றே. அதுவே இப்பிரபஞ்சத்தின் ஆதி.

அனைத்துமாகி அனைத்தையும் இயக்குகிற ஆதியைப் பிரம்மம் என்று வணங்குகிறோம்; அல்லா என்றழைத்துக் தொழு கிறோம். பிதாவே என்றழைத்து மன்றாடுகிறோம். தூயவெளி பிரபஞ்சமாக எழுச்சி பெற்றதால், அதை ஈஸ்வர் என்றும் சொல்லுகிறோம். ஈஸ்வர் என்றால் எழுச்சி பெறும் தன்மை. இந்த எழுச்சியைத்தான் திருப்பள்ளி எழுச்சியாகக் கருதுகிறோம்; போற்றுகிறோம். எனவே, அல்லா என்றாலும், ஈஸ்வர் என்றாலும், இப்பிரபஞ்சத்தின் ஆதி நிலைதான் என்ற விஞ்ஞானப் பார்வையை – முற்றும் உணர்ந்த முழுமையான பார்வையை நமக்குத் தருகிறது வேதாத்திரியம்.

"ஈஸ்வர் அல்லா தேரே நாம்
சப்கோ சன்மதி தே பகவான்"

என்றாரே மகாத்மா, அவரது பார்வையும் இதுவே. பிரம்மம், ஈஸ்வர் என்பது மட்டுமல்ல, சுத்தவெளியின் பெயர்கள். இன்னும் எத்தனை, எத்தனையோ! வெளி என்பதை அம்பரம் என்றும் சொல்லலாம்.

"அம்பரமே ஊடறுத்து ஓங்கி உலகளந்த
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்"

என்பார் ஆண்டாள். எங்கும் ஏகமாக இருக்கிற அம்பரத்தின் பெயர் ஏகாம்பரம் ஆயிற்று. வெளி என்பதற்கு இன்னொரு பெயர் அரங்கம். இதனோடு, திரு சேர, அது திருவரங்கம் ஆயிற்று. வெளிதான்

அனைத்துக்கும் மூலமாக இருப்பதால் அதுவே அனைத்துக்கும் நாதன்; தலைவன். ஏகாம்பரநாதனும் அதுவே. வெளியே நாம் பல பெயர்களால் அழைக்கின்றோம். எத்தனை பெயர்கள் இருந்தாலென்ன? தெய்வமாகிய வெளி ஒன்றுதான் என்பதனை

"தானொரு தானாய் தானே தானாய்
ஊனுயிர் விளக்கும் ஒரு தனிப்பொருளே"

வள்ளலாரின் பாடல் வழி அறியலாம். அந்த ஒரு தனிப்பொருளே வெளி. ஏகமாக, ஒன்றாக இருந்த வெளிதான் அநேகமாயிற்று என்பதனையும் வள்ளலார் குறிப்பிடுகிறார்.

"ஏகம் அநேகம் எனப்பகர் வெளியெனும்
ஆகமச் சிறப்பை அருட்பெருஞ்ஜோதி"

அறிவும், ஆற்றலுமான மெய்ப்பொருளாகிய வெளி அநாதி.

வேதாத்திரிய இறைத்தத்துவம்

ஒரே தெய்வம்; ஆனால் அதற்கு ஓராயிரம் பெயர்கள் என்பது ஞானத்தின் உச்சம்! அதுவே விஞ்ஞானப் பார்வை. அதற்கு மாறாக ஒவ்வொரு பெயரும், ஒவ்வொரு தெய்வமென்று நினைப்பது அஞ்ஞானத்தின் அதள பாதாளம். இரண்டு கூட அல்ல; ஒன்றுதான் என்று வலியுறுத்துகிற அத்வைதத் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானவை பல தெய்வக் கோட்பாடாம். அவற்றிற்கு நாம் கற்பித்த வெவ்வேறு விதமான விருப்புகளும், வெறுப்புகளும், அஞ்ஞானத்தில் மூழ்கி அவதியுறுகிற மனிதர்களை மீட்பதற்கான பக்குவத்தை நமக்குத் தரவல்லதே விஞ்ஞானப் பூர்வமான வேதாத்திரிய இறைத்தத்துவம் ஆகும்.

இந்த வெளியே நமக்கு மூலமாதலால், இதனைத் தாயென்றும், தந்தையென்றும், அப்பன் என்றும், ஒப்புமை இல்லாததால் ஒப்பில்லாத அப்பன் அல்லது ஒப்பிலியப்பன் என்றும் ஞானிகள் சுத்தவெளியைப் பல நாமங்களால் குறிப்பிடுவதை நாம் பார்க்கலாம்.

"தெய்வம் பலப்பல சொல்லிப்
பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வதனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்"

என்கிறார் பாரதியார். மறைவாக மாந்தருள்ளே அறிவாக உள்ளதும் தெய்வம் தான்.

"அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானார்
அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக்காட்டி

அறிவதனை அறிவித்தார் திருவள்ளுவர்
அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்
அறிஞர் திருமூலர் அவ்வறிவில் ஆழ்ந்து
ஆனந்தக் கவியாத்தார் இராமலிங்கர்
அறிவில் அறிவாய் நிலைத்து அறம்வகுத்தோர்
அதை வாழ்ந்து காட்டினோர் நினைவு கூர்வாம்"

- வேதாத்திரி மகரிஷி

நிரந்தர சத்தியமான வெளியின் சுயசரிதமே பகவத்கீதை. ஒன்றாகிய வெளியின் தன்மாற்றச் சரித்திரம் கிருஷ்ணனின் வாக்காக மலர்கிறது பகவத் கீதையில்!

"அஹமாத்மா குடாகேஸ ஸர்வ பூதாஸயஸ்தித
அஹமாதிஸ்ச மத்யம் ச பூதா நாமந்த ஏவச" - (10:20)

(எல்லா உயிரினங்களின் உள்ளத்திலும் எல்லோருடைய ஆத்மா வாகவும் இருக்கிறேன்; உயிரினங்களுக்கெல்லாம் ஆதியாவும், மத்யமாகவும், முடிவாகவும் இருக்கிறேன்);

கால : கலயதாம் அஹம் (10.30)

காலம் கணிப்பவர்களின் காலமாக இருக்கிறேன்;

இந்த்ரியாணாம் மநஸ்சாஸ்மி (10.22)

பொறிபுலன்களும் மனதும் நானாக இருக்கிறேன்;

என்பது பகவத்கீதை தரும் சத்திய வாக்குகள்.

பகவத்கீதையின் சாரத்தையும்

God is not a person but the staff of which the universe is made

என்ற ஒஷோவின் கூற்றினையும்

God moves and lives in nature; the whole of it, the entire universe in God. Nature, or God is its own cause and is self-sufficient. Man, in his egoistical way has imagined God to be like him; to be anthropomorphic in character; and further man image that this God (Created in the imagine of man) has a special interest in, and concern for man:

என்ற தத்துவஞானி ஸ்பினோஸாவின் கூற்றின் சாரத்தையும், ஆதிசங்கரின் அத்வைத அழகோடு உணர்ந்து, இன்பமுறும் பகவத் கீதை நமக்குத் தரவல்லது வேதாத்திரியம் என்பது தெளிவாகிறது.

இறைத்தத்துவம்

வெறும் நம்பிக்கையின்மீது அமையாது, தர்க்கரீதியாக அமைகிறது மகரிஷியின் விஞ்ஞானப்பூர்வமான இறைத்தத்துவம்.

தெய்வம் என்பது இங்கே என்றென்றும் இருக்கின்ற நிரந்தர சத்தியம் என்பார் மகரிஷி.

ஆதியெனும் பரம்பொருள் மெய்

என்பதே மகரிஷியின் கூற்று. அந்தச் சத்தியத்தை உணர்வதே இறையுணர்வு. எல்லோரும் இந்த இறையுணர்வு பெறவேண்டுமென்பதே மகரிஷியின் எண்ணமும், செயலுமாகும்.

"இறைவெளி காட்சியாக எல்லோரும் பார்த்துக் கொண்டே
மறைவாக நீ உள்ளாய் என்று மாற்றுரை பகர்கின்றார்

என்கிறது வேதாத்திரியம். இறைவெளியைப் பற்றி யார் எதைச் சொன்னாலும் அதற்கு மேலும் அங்கு உண்டு.

At any point of time, there is always a beyond

என்பார் வேதாத்திரி மகரிஷி.

சுத்தவெளியினைப் பற்றிக் கீழ்வருமாறு அழகர் ராமானுசம் அவர்கள் விளக்குகிறார். சுத்தவெளி எல்லையற்றது; Infinite! எல்லையற்றதை விட வேறு ஒன்றும் பெரிதாக இல்லையாதலால், சுத்தவெளி உருவாக்கப்பட்டது அல்ல! அது இங்கேயிருக்கிற வற்றாத இருப்பு! ஆதியும், நடுவும், அந்தமுமில்லாத நிரந்தரம் (eternal) அது. இந்த நிரந்தர சத்தியத்திற்கு ஆச்சார்யர்கள் அவரவர்கள் உணர்ந்த நிலையில் நின்று, தந்த கோணங்களே அத்வைதமும், துவைதமும், விசிஷ்டாத்வைதமும் ஆகும்.

"கற்கண்டு என்ற ஒரு வார்த்தை சொன்னால்
கரும்பு ரசப்பக்குவத்தின் சரித்திரமாகும்
கற்கண்டைக் கரும்பு ரசம் என்றால் அஃது
கருத்துக்கு அத்துவித தத்துவம்போல்
கற்கண்டு கரும்புரசம் வேறுவேறாய்க்
காட்டுவது துவித நிலை விளக்கம் ஆகும்.
கற்கண்டு கரும்புரசம் இரண்டும் போலாம்
கடவுளும் மற்றனைத்துருவும் கருத்துணர்ந்தால்"

என்பார் மகரிஷி. ஒன்றே பல துளிகளாகியது. அந்த ஒரு துளி 'நான்' என்ற உணர்வு பெறும்போது துவைதம் பிறக்கிறது. இந்த "நான்" வாழ்கிறது; முடிவாக மறைகிறது. மறையும்போது "நான்" என்ற

உணர்வும் மறைந்து, ஆரம்ப அத்வைத நிலையே மிஞ்சுகிறது. பிறப்புக்கும், மறைவுக்கும் இடையே "நான்" என்ற துவைத நிலையில் செயலும், ஆதியாகிய அந்த ஒன்றின் ஓர் அங்கமே "நான்" என்ற அத்வைத ஞானமும் கலந்த வாழ்க்கையே விசிஷ்டாத்வைதம்.

ஆதி, அதன் தன்மைகள், அந்த ஆதியின் தன்மாற்றமே பிரபஞ்சம் என்ற அனைத்துச் சத்தியங்களும் மகரிஷியின் விளக்க உரையில் தெளிவாகக் கையாளப்பட்டிருக்கின்றன. ஆதியையும் மனிதனையும் இணைக்கிற ஓர் சிக்கலில்லா நூலாக மகரிஷியின் விளக்க உரை அமைந்திருப்பதால், இன்றைய விஞ்ஞானத்தில் உள்ள பல சிக்கல்களுக்கும் அந்த உரையே தீர்வாகவும் வருகிறது.

மகரிஷியின் இறைத்தத்துவம் பரமாத்மாவே சீவாத்மாவாக வருகிறது என்ற உபநிடத உட்கருத்துக்கும், "அனைத்தும் நானே" என்ற பகவத் கீதையின் சாரத்திற்கும், எனது தந்தையும் நானும் ஒன்றே (I and my Father are one) என்ற பைபிளின் வாசகத்திற்கும், "அனைத்துப் புகழும், அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து வளர்த்துப் பரிபக்குவப்படுத்தும் (நாயகனான) அல்லாவுக்கே ஆகும்", எனும் திருக்குர்ரானின் கூற்றுக்கும், சிவமே சீவனாயிற்று என்ற சைவசித்தாந்தப் பார்வைக்கும், அறிவேதான் தெய்வம் என்ற சித்தர்களின் வாக்கிற்கும், அறிவேதான் நான் என்ற இரமணரின் உள்ளுணர்விற்கும், அதிசங்கரரின் "நிர்வாண சதகம்" எனும் தத்துவ நூலிற்கும் விளக்க உரையாக அமைவதோடு மனித மனம் ஆதியோடு சமமாகின்ற சமாதி நிலை அடைவதற்கு அகத்தவத்தின் அவசியத்தையும் வலியுறுத்துவது அதன் சிறப்பு எனலாம். நான் யார்? இக்கேள்வி ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓங்காரம் இட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு விடையாக மகரிஷியின் விளக்கம் கீழ்வருமாறு அமைகிறது. நான் யார்? என்ற தத்துவ விசாரம் மூன்று கேள்விகளை உருவாக்குகிறது: எது ஆதி?, அந்த ஆதியின் தன்மைகள் யாவை?, அத்தன்மைகளையுடைய அந்த ஆதி எப்படி நானாகியது? முதல் இரண்டு கேள்விகளுக்கு விடையாக வருகிற வேதாந்த, சிந்தாந்தத் தத்துவங்களைத் தொடர்ந்து, மூன்றாவது கேள்வியான "அந்த ஆதி எப்படி நானாகியது?" என்பதற்கான விஞ்ஞானப்பூர்வமான தர்க்கரீதியான விளக்கம் தந்து தத்துவ விசாரத்தை நிறைவு செய்கிறார் மகரிஷி.

வேதாத்திரிய இறைத்தத்துவம் என்பது ரிஷிகள் தந்த பிரம்ம வித்தை; நபிகள் இறக்கிய அல்லா ஞானம், யேசுவின் தந்தைக்கும், குமாரனுக்கும் உள்ள உறவின் விளக்கம். அருட்பெருஞ்சோதியின் பெரு ஒளி; தனையறிந்த வித்தையது. சிந்தையும் செயலும் இணைந்ததே மனிதன். நமது சிந்தைக்கு இறையுணர்வு வேண்டும்.

வற்றாயிருப்பாக, பேராற்றலாக, பேரறிவாக, காலத்தின் பிறப்பிடமாக உள்ள சுத்தவெளியின் தன்மாற்றமே நாம் என்ற சத்தியம் நமது சிந்தையில் நிறைந்திருக்க வேண்டும். எனவே நமது செயல் அன்பு நிறைந்ததாகவும், அனைத்து உயிரினங்களுக்கும் இசைவாகவும், இனிமையாகவும் அமைதல் வேண்டும். ஆகவே வள்ளற் பெருமான் பாடினார்.

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்"

நான் யார் ? என்னும் தத்துவம் இன்னொரு கேள்வியை நம் முன் வைக்கிறது. அந்த ஆதியே நானாகியிருக்கிறதென்றால், எனக்கும் அந்த ஆதிக்கும் உள்ள இப்போதைய நடைமுறை உறவு என்ன ? வேதாத்திரியத்தின் பதில்: செயல் நீ; அதன் விளைவைத் தீர்மானிப்பது ஆதியில் அடங்கியுள்ள இயற்கை விதிகள்! நமது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டல்லவா! அந்த விளைவு தான் தெய்வநீதி.

"கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பவமன்"

என்கிறது வேதாத்திரியம். கண்ணாடிப் பாத்திரத்தைக் கரடுமுரடான தரையில் போட்டால் உடையும். உடையும் என்பது தான் தெய்வநீதி. தெய்வநீதியை யாராலும் மாற்றவோ, அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவோ முடியாது.

ஒரு செயலைச் செய்வதற்கு முன்பாக அந்தச் செயலின் விளைவறிந்த விழிப்பு நிலையில் செயலாற்ற வேண்டும். ஒரு செயலைச் செய்வதா வேண்டாமா என்று தீர்மானிக்க நமக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதன் விளைவு இப்படித்தான் இருக்க வேண்டுமென்று சொல்ல நமக்கு அதிகாரம் இல்லை. அதைத் தீர்மானிப்பது தெய்வமாகிய இயற்கை விதி. கர்மாவைச் செய்; ஆனால் பலன் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்காதே என்பதுவே பகவத்கீதையின் சாரம். இந்தச் சாரம் காலத்தால் சற்று மருவி, "கர்மாவைச் செய்; பலனை எதிர்பார்க்காதே" என்று மாறிவிட்டது.

சமுதாயத்தை நோக்கிய நமது செயல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப் பற்றிய வேதாந்தக் கருத்தும் வேதாத்திரியக் கருத்தும் ஒன்றே.

"எத்தகைய உயிர்கட்கும் இன்பநிலை காத்து
இறையுணர்வில் இணைந்து அறம் ஆற்றி வாழும் பேறு"

என்பதே வேதாத்திரிய சத்தியம்.

மோட்சத்தின் திறவுகோல்

சிந்தையும், செயலும் மனிதனது இரு அம்சங்கள். சிந்தையில் இறையுணர்வு வேண்டும்; செயலில் அறம் ஓங்க வேண்டும். எல்லையற்ற ஒரு பரம்பொருளின் அம்சமே நான் எனும் தெளிவே இறையுணர்வு; அதே எல்லையற்ற பரம்பொருளின் வெவ்வேறு தன்மாற்ற நிலைகளே நான் காணும் அனைத்தும் என்றுணர்ந்து அனைத்திலும் பணிவுகொண்டு அன்பு பாராட்டுவதே அறநெறி. அன்பு செயலாக மாறும்போது கருணையாகிறது. இறையுணர்வு நமது ஞானம்; அறநெறி நமது செயலின் சத்தியம். ஞானமும் சத்தியமும் இணைவதற்கே சத்தியஞானசபை ஊரெங்கும் அமைதல் வேண்டு மென்றார் வள்ளலார். வள்ளலாரின் சத்திய ஞானசபையே மகரிஷியின் மனவளக்கலை மன்றம் எனலாம்.

சிந்தையின் ஞானமே செயலின் சத்தியத்திற்கான ஆதாரம். ஞானமின்றிச் செயலில் சத்தியம் நிலைப்பது கடினமே. செயலில் சத்தியம் நிலைக்காத பட்சத்தில், நீடித்த அமைதியும் இன்பமும் அமைய வாய்ப்பில்லை. நீடித்த அமைதியும் இன்பமும் பெறுவதே முக்தி அல்லது மோட்சம் எனப்படுகிறது. எனவே ஞானமே மோட்சத்தின் திறவுகோல்.

வித்யாவித்யாம் நிஹந்த்யேவ தேஜ
திமிர ஸங்கவத்

பொருள்

எவ்வாறு ஒளி, இருளை உடனே நீக்குகிறதோ, அவ்விதமே ஞானம் ஒன்றுதான் அறியாமையை நீக்க முடியும். அறியாமை அகல, அகல அமைதி நம்மில் நீடிக்கிறது.

பாகஸ்ய வஹ்னிவஞ் ஞானம்வினா
மோக்ஷோந ஸித்யதி

என்கிறார் ஆதிசங்கரர்.

சுத்தவெளி

சுத்த வெளிதான் அனைத்துமாக மாறியதென்றாலும் ஒவ்வொரு அமைப்பிலும் உள்ள விண்களின் எண்ணிக்கை அந்த விண்களின் சுழற்சி வேகங்கள், இவற்றைப் பொறுத்து அந்த அமைப்பின் குணம் அமைகிறது.

"விண்துகளின் சுழற்சிவிரை வளவுக்கு ஏற்ப
வேறுபடும் இறைவெளியின் அளவுபூதம் ஐந்தாம்

விண்துகள்கள் கூட்டான பஞ்சபூதக் கலவை
விளைக்கும்அவை கூடும்விகி தாச்சாரம் ஒக்க.
விண்வெளியில் காணுகின்றோம் கோடிகோடி உருவம்
வேறுஉண்டோ இறைவெளியும் விண்துகளும் அன்றி?
விண்ணறிந்தால் இறைவெளியில் நுண்பகுதி அலையாம்
விரைவாகச் சுழலும்வெளி சூழ்ந்தழுத்தும் விளைவால்".

என்கிறார் வேதாத்திரி மகரிஷி. இவ்வாறு வேறுபாடுகளையுடைய தனிமங்கள், மூலங்கள், பஞ்ச பூதங்கள் இவற்றின் கூட்டாக உயிரினங்கள் வருவதால் ஒவ்வொரு உயிரினமும் ஒரு குறிப்பிட்ட உருவத்தை உடையதாக, ஒரு குறிப்பிட்ட குணத்தை உடையதாக அமைந்து விடுகிறது. விண்ணின் அல்லது ஆகாசத் துகளின் சுழற்சியில் தொடங்கிய வேறுபாடு விரிந்து விரிந்து கோடானுகோடி உயிரினங்களாக வேறுபாடு அடைந்துள்ளது. ஆனால் கருத்தில் கொள்ள வேண்டியது அனைத்திற்கும் மூலம் ஒன்றேதான்; அதுவே சுத்தவெளி!

சுத்தவெளிதான் மரமாகியது; பாம்பாகியது; விலங்கினமாகியது; மனிதனாகியது. தன்னை முழுமுதற் பொருளோடு ஐக்கியப்படுத்தி, அந்த முழுமுதற் பொருளான இறைவெளியின் தன்மாற்றச் சரித்திரத்தைத் தனது சரித்திரமாக உணர்ந்த நிலையில் மாணிக்கவாசகர் அருளியது.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

அனைத்தும் ஆனது இறைவெளிதான்.

சுத்தவெளியின் ஆற்றல் தன்னை மாற்றிக் கொள்கிற பக்குவத்தின் அடையாளமே ஆறாவது அறிவு. தன்னைத்தானே மாற்றிக் கொள்கிற அதிகாரத்தை மனிதனில் அமைத்தது சுத்த வெளியின் பேரறிவுதான். அமைத்த அதிகாரத்தைச் சுத்தவெளியின் பேரறிவு ஒரு போதும் அகற்றாது. ஆனால், தனக்குள் அமைந்துள்ள எதேச்சை அதிகாரத்தை ஒருவர் தவறாகப் பயன்படுத்தினால், அதற்கான துன்ப விளைவை அவர் எதிர்கொள்ள வேண்டும்; 'முறையாக'ப் பயன்படுத்தினால் அதற்கான இன்ப விளைவை அவர் சந்திப்பார். அவரவர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்துகிற முறையைப் பொறுத்து அவர் உயர்வு பெறலாம் அல்லது வீழ்ச்சியுறலாம்.

"கல்லார் கற்றார் செயல்விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்"

என்பார் மகரிஷி. எந்த 'விதி'க்கும் கட்டுப்படாது, தனக்கென ஒரு பாதையை வகுக்க வல்லவன் மனிதன். இயேசுவாக உயரவும் முயலுவான்; யூதாசாகவும் வீழ்வான்! அன்னை தெரசாவாக வாழ்ந்து அனைவரையும் நேசிப்பவரும் உண்டு; இட்லராக உருவெடுத்து அனைவரையும் நேசிப்பவரும் உண்டு. அனைவரும் மனிதர்கள் தான்! ஆனால் எத்தனை வித்தியாசம்! இந்த வித்தியாசத்தைக் கூர்ந்து நோக்கிய மகரிஷி,

"கருவமைப்பு, உணவு வகை, காலம், தேசம்,
கல்வி, தொழில், அரசாங்கம், கலை, முயற்சி,
பருவம், நட்பு, சந்தர்ப்பம், பல ஆராய்ச்சி,
பழக்கம், வழக்கம், ஒழுக்கம் இவற்றிற்கேற்ப
உருவமைப்பு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி
உடல்வலிவு, சுகம், செல்வம், மனிதர்கட்கு
வரும் வகையும் அவற்றின்தரம் அறிவுக்கேற்ப
வாழ்க்கைநிலை பேதமுடன் தோன்றக் கண்டேன்".

என்கிறார் வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

தெய்வநிலை

காரண சரீரமே நமது ஆத்மா; அது ஒரு அலைத் தொகுப்பு; சதா காலமும் தரமாற்றம் அடைந்து கொண்டேயிருக்கும் அலைத்தொகுப்பு தான் அது என்ற ஞானம் மகரிஷி தரும் மாபெரும் ஞானமாகும். நாம் காந்த அலைத் தொகுப்பு நமது அனுபவங்களின் பதிவிடமாகவும், பதிவானவைகளைப் பற்றிய எண்ணங்களின் பிறப்பிடமாகவும் செயல்படுவதால், அதை நமது மனமென்றும் சொல்லலாம்.

"முறையாய் அக்காந்த அலை மனமாம் உயிருடல்களில்
மதிவுயர்ந்து இவ்வுண்மை பெற மாபிரம்ம ஞானமாம்"

என்றார் மகரிஷி அவர்கள்.

பருவுடல் (Physical Body), நுண்ணுடல் (Astral Body), காந்த அலை உடல் (Casual Body) என்ற மூன்று அம்சங்களும் ஒன்றிணைந்ததே ஒரு சீவன். பருவுடல் என்பது இராசயன அணுக்கள், மூலகங்கள் ஆகியவற்றின் ஒரு முறையான கூட்டு. இந்தப் பருவுடல் முழுவதிலுமே சுழன்று ஓடிக் கொண்டிருக்கும் விண் என்ற ஆகாசத் துகள்களின் இயக்கத் தொகுப்பை நுண்ணுடல் என்கிறோம். இதுவே உயிர் எனப்படுகிறது. இயக்கத் தொகுப்பில் உள்ள ஆகாசத் துகள்களிலிருந்து வெளியேறுகிற காந்த அலைத்

தொகுப்பைக் காந்த அலை உடல் என்கிறோம். பருவுடல், நுண்ணுடல், காந்த அலை உடல் என்ற மூன்று அம்சங்களுக்கும் மூலம் சுத்தவெளியே. இந்த மூன்று அம்சங்களுக்கும் உபாதான காரணமும் (Material Cause), நிமித்த காரணமும் (Efficient Cause), அறிவும் ஆற்றலுமான தூயவெளியாகிய தெய்வநிலையே.

"அறிவேதான் நான்" என்ற இரமணரையும், "அறிவே தான் தெய்வம்" என்ற தாயுமானவரையும் இணைக்கிறது வேதாத்திரியம்.

"எல்லாம் அறிந்த அறிவினை நானெனில்
எல்லாம் அறிந்த இறையென லாமே"

என்ற திருமந்திர சத்தியத்தையும் அது இணைத்துக் கொள்கிறது.

"ஆனபொருள்கள் அனைத்திலும் ஒன்றாய்
அறிவாய் விளங்கும் முதற்சோதி நான்"

என்ற பாரதியையும் அது பக்குவமாய்த் தொடுகிறது.

ஒருவரது உடலில் இயங்கும் ஆத்மா, உலகிலுள்ள அனைவரின் ஆத்மாக்களோடும் தொடர்பு கொண்டுள்ளது. உடல் அழிந்தாலும், ஆத்மாவாகிய அலைத் தொகுப்பு வான்காந்த மண்டலத்தில் நிரந்தரமாக நிலைத்து, வாழ்கின்ற சீவன்களின் ஆத்மாவோடு கலந்து, அந்தச் சீவன்களின் மூலமாகச் செயலாக்கம் பெறுகிறது.

வான்காந்த மண்டலத்தின் மகான்களின் ஆத்ம அலைத் தொகுப்பு மட்டுமல்ல, மடையர்களின் ஆத்ம அலைத் தொகுப்பும் இருக்கத்தான் செய்யும். பொதுவாக மகான்களின் அலைத் தொகுப்பு குறைந்தபட்ச அலைச் சுழல்கள் (Frequency) உடையதாக இருக்கும். உணர்ச்சி வயப்பட்டுச் செயல்புரியும் சாதாரண மனிதர்களின் அலைத் தொகுப்பு அதிகபட்ச அலைச்சுழல்கள் கொண்டதாக இருக்கும். இங்குத்தான் ஒரு சூட்சுமமான செய்திக்கு வருகிறார் மகரிஷி அவர்கள்.

நமது அலைத்தொகுப்பின் அலைச்சுழலைக் குறைவாக வைத்துக் கொண்டால், ஒத்த அலைச்சுழலுடைய மகான்களின் அலை நம்மில் கலந்து அவர்களின் ஞானம் நமதாகிவிடும். அவ்வாறன்றி, நமது அலைச்சுழல் அதிகமாக இருந்தால், உணர்ச்சி வயப்படுவோர்களின் அலைத் தொகுப்பு நம்மில் கலந்து, நாமும் சாதாரண மனிதர்களைப் போன்று உணர்ச்சி வயப்பட்ட நிலையில் வாழ்ந்து மறைந்த மகான்கள் நம்மில் செயல்படுகிறார்களா அல்லது உணர்ச்சிவயப்பட்ட சாமான்யங்கள் நம்மில் செயல்படுகிறார்களா என்பது நம்மைப் பொறுத்ததாகும். நமது அலைச் சுழலைக் குறைத்துக் கொண்டால், நாம் மகான்கள் பக்கம் நிற்கிறோம்.

நமது அலைச் சுழல் அதிகமாக இருந்தால் நாம் சாமான்யர்கள் பக்கம் இருக்கிறோம். அலைச்சுழலைக் குறைக்க ஒரே வழிதான் உண்டு. அதுவே தவம்.

"தவம்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு" - என்பது குறள் 266

தவத்தில் நிலைக்க, நிலைக்கச் சாதாரண நிலையிலிருந்து அசாதாரண நிலைக்கு நாம் மெல்லமெல்ல நகருகிறோம். தனக்குள் இறங்குவது தவம். புறத்தே அலைந்து திரியும் மனத்தை அகத்தே உள்ள காந்த அலை மீது குவித்து நிறுத்துவது குண்டலினி தவம். மூலாதாரத்தில் உறைந்துள்ள காந்த ஆற்றலுக்கு மறுபெயர் குண்டலினி சக்தி (குண்டம் என்றால் நெருப்பு : அலி என்றால் ஆண், பெண் என இருபாலருக்கும் பொதுவானது). காந்த அலைத் தொகுப்பை நாம் ஆத்மா என்பதால் குண்டலினி தவத்தை ஆத்ம தியானம் என்றும் கூறலாம் அல்லது அகத்தவம் என்றும் கூறலாம்.

தியானம்

தியானம் பற்றிக் கீழ்வருமாறு பகவத்கீதை கூறுகிறது. "மனத்தை வெல்பவன் எப்போதும் இறை உணர்வுடன் நிலைத்து விடுவதால் நானே அவனுடைய ஆத்ம சிறையில் அடைபட்டு விடுகிறேன். ஞானம் உள்ள மனிதனுக்கு இன்பமும், துன்பமும், குளிரும், வெப்பமும், மானமும், அவமானமும், வானமும், பூமியும் சமமாகவே தோன்றும். தான் பெற்ற ஞானத்தால், முழுத் திருப்தி அடைந்தவன் பெரும் யோகியாவான். அவன் இறை உணர்வில் நிலைபெற்று விடுகிறான். இந்த உன்னத நிலை பெற்றவனிடம் தன்னடக்கம் என்ற அமைதியைக் காணலாம். அவன் விலையுயர்ந்த தங்கத்தையும், வைரத்தையும் கூட வெறும் உலோகமாகவும், கல்லும் மண்ணும்மாகவும் கருதுவான்''. ஏற்றிய தீபம் காற்று வீசாத இடத்தில் எப்படி அலைவற்று நிலைத்துத் தெரிகின்றதோ அதுபோல் யோகம் செய்ய ஆரம்பிக்கும்போது ஆன்மா மீது அவனுடைய எண்ணம் தியானத்திலே இலயித்திருக்கும்.

குண்டலினித்தவம்

குண்டலினித்தவத்தை உபநிடதங்கள் சக்தியை வழிபடுகிற ஒரு இறை வழிபாடாகவும் சித்திரிக்கின்றன. ஒவ்வொரு சக்கரத் திலும் ஒவ்வொரு ரூபத்தைத் தரிசிக்கிற இறைவணக்கமாகக் குண்டலினி தவமுறை கையாளப்பட்டு வந்ததிலிருந்து சற்று வித்தியாசப்பட்டு, மகரிஷி அவர்கள் குண்டலினி தவமுறையை உடல் ஆரோக்கியத்தைப் பெருக்கி, மனஅலைச் சுழலைக் குறைத்து

மதிநுட்பத்தைப் பெருக்குகிற ஓர் உபாயமாகப் பார்த்தது அவரது விஞ்ஞானப் பார்வையின் சிறப்பு அம்சமாகும். குண்டலினி தவ முறையைப் பற்றிய வேதாந்தப் பார்வைக்கும், வேதாத்திரியப் பார்வைக்கும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. ஒவ்வொரு சக்கரத்திலும் ஒரு தேவதையை வணங்குகிற இறைவணக்கமாகவே வேதாந்தத்தில் குண்டலினி தவமுறை கருதப்பட்டு வந்தது. ஆனால் மகரிஷி குண்டலினி தவத்தை ஒரு உளப்பயிற்சியாகவும், மனத்தின் அலைச் சுழலைக் குறைத்து மதிநுட்பத்தைப் பெருக்குகிற உபாய மாகவும் கருதுகிறார். குண்டலினி சக்தியை மனத்தின் ஓர்மை யினால் அந்தந்தச் சக்கரங்களில் நிறுத்தும்போது, அந்தச் சக்கரங் களுக்கு அருகாமையில் அமைந்துள்ள நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டு உடல் ஆரோக்கியமும் வலுப்பெறுகிறது.

பல இதழ்கள் கொண்ட தாமரைகள் அல்லது பலவிதமான தேவதைகள் என்ற கற்பனையை விடுத்து, ஓர் உளப்பயிற்சியாகக் குண்டலினி தவத்தைக் கருதும்போது அத்தவமுறை சாதி, சமய எல்லைகளுக்கு அப்பாற்பட்டு, எல்லோருக்கும் பொதுவான விஞ்ஞானப் பூர்வமான ஒரு பயிற்சியாகி விடுகிறது. எப்படி உடல்பயிற்சி என்பது சாதி, சமயத்திற்கு அப்பாற்பட்டதோ, அதே போன்று மகரிஷியின் எளியமுறை குண்டலினிப் பயிற்சி மனிதகுலமனைத்துக்கும் பொதுவானதாகி விடுகிறது.

குண்டலினி தவமுறையைச் சாதகம் செய்யச் செய்யப் புலன்களைக் கடந்து நிற்கும் வல்லமை மனதிற்கு நாளுக்கு நாள் அதிகரிக்கும். தேவை உணர்ந்து தனது ஆற்றலைச் செலவிடவும், தேவையில்லாதபோது செலவிலிருந்து விடுபட்டுச் சேமிப்பு நிலையில் நிற்பதற்கான பக்குவமும் மனதிற்கு உண்டாகும். மெய்ஞ்ஞானம் என்ற அருட்கோவிலுக்குள் புகும் வாயில் புருவ மத்தியாகிய ஆக்கினையாகும். ஆசானால் எழுப்பப் பெற்ற குண்டலினி சக்தியின் இயக்கவிசைவு ஆக்கினையில் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே யிருக்க உடல்நலம், மனவளம் ஓங்கும்.

"நாட்டம் இரண்டும் மனைக்குள் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவனாமே"

எனத் திருமூலரும்;

"மூலாதாரத்து மூண்டெழும் கனலைக்
காலாலெழுப்பும் கருத்தறிவித்தே"

என ஔவையார் அகவலும் குண்டலினியைக் குறிப்பிடுவது இங்கே நோக்கத்தக்கது. மூலாதாரத்திலிருந்து தொட்டு எழுப்பப் பெற்ற குண்டலினி சக்தியின் அடுத்த உயர்நிலை தலை உச்சியாகிய துரியம். துரியநிலை தவத்தோடு அகத்தாய்வும் சேர, ஒழுக்கம், கடமை, ஈகை, உயிர்விளக்கம் அனைத்தும் பெற்று, தான் யார்? என்று தெரிந்து கொள்ளும் முழுமைப்பேறு வரையில் இப்பயிற்சி விரிவடைந்து பயன் தருகிறது.

வேதாத்திரியத் தலைமுறையின் சிறப்புகள்

ஒவ்வொரு சக்கரத்தோடும் ஏதோ ஒரு தேவதையை இணைப்பது வேதாந்தப் பார்வை. தேவதையைப் பற்றிப்பேசாது, ஒவ்வொரு சக்கரத்துடனும் ஒரு குறிப்பிட்ட அலைச்சுழலை இணைத்தது வேதாத்திரியப் பார்வை. ஒவ்வொரு சக்கரத்துடனும் பலப்பல இதழ்களுடைய தாமரையை இணைத்தது வேதாந்தப் பார்வை. ஒவ்வொரு சக்கரத்துடனும் ஒரு நாளமில்லாச் சுரப்பியை இணைத்துப் பேசுவது வேதாத்திரியத்தின் விஞ்ஞானப் பார்வை. குண்டலினி தவமுறையோடு தனது யுக்தியையும் கலந்து மகரிஷி உருவாக்கியது தான் துரியாதீதத் தவம். துரியாதீதத் தவத்தில் பிரபஞ்சத்தின் விளிம்பிற்கும் அப்பால் சென்று சுத்தவெளியோடு மனம் இணைந்து நிற்பதே சீவப்பிரம்ம ஐக்கிய முக்தி.

ஆக்கினை தவத்தில் மனம் குவிந்து உயிர்த் துடிப்பைப் புருவ மத்தியில் உணர ஆரம்பித்து, துரியத்தில் அறிவு நிலை உயர்ந்து, துரியாதீதத்தில் சீவஅறிவு பேரறிவாகிய பரவெளியோடு ஒன்றிக் கலந்து விடுகிறது. குண்டலினி தவத்தின் சிறப்பையும் மேன்மையையும் உணர்த்துகிற மகரிஷியின் பாடல்.

"குறைபோக்கும் குண்டலினி தவத்தின் மூலம்
குவிந்து மனம் உயிரோடு உறையும் மேலும்
மறைபொருளாம் அறிவு அதன் முழுமை பெற்று
மாஅமைதி அனுபவிக்கும் நிலைக்களம்ஆம்"
இறைவனது திருநிலையில் இணையும் அப்போது
இன்ப துன்ப விருப்பு வெறுப்பு இவை கடந்து
நிறைவுபெறும் தீயவினை அகலும் வாழ்வில்
நிகழ்வதெல்லாம் பேரின்ப ஊற்றாய் மாறும்"

உடற்பயிற்சியைப் போன்றும், உயிரின் ஆக்கத்திற்கான காயகல்பப் பயிற்சியைப் போன்றும், மனத்தின் நுட்பத்திற்கான பயிற்சியே வேதாத்திரியம் கூறும் குண்டலினி தவமுறை. மகரிஷியின் தவமுறை, நாம ரூபங்கள் இன்றி அவரவர் மனத்தை அவரவர் உயிராற்றலில் ஒடுக்குகிற பயிற்சியாக இருப்பதால், இது

கற்றவர், கல்லாதவர் என உலகத்தோர் அனைவருக்கும் பொதுவானதாக அமைகிறது. இந்தப் பொதுத் தன்மையே வேதாத்திரிய தவமுறையின் சிறப்பாகும்.

அகத்தாய்வு

தனக்குள் இறங்குவதே தவம்; தன்னைத் தனக்கு அறிமுப்படுத்துவதே அகத்தாய்வு. அகத்தவம் உள்ளதை உள்ளபடி உணரும் பக்குவத்தைத் தரவல்லது; அகத்தாய்வு நல்லதை நல்முறையில் இயற்றும் ஆக்கத்தைத் தரவல்லது. புறமனத்தை அகமனத்தோடு இணைப்பது அத்தனை சுலபமல்ல! விரிந்து கொண்டேயிருக்கிற இந்த மனம், சஞ்சலமான இடத்தை நோக்கியே எப்போதும் செல்லும். சலனமற்ற தன்மையில் புறத்தே விரிகின்ற மனம் அகத்திற்குள் உறைவது தவம். கத்தியைத் தீட்டுவது தவம்; தீட்டிய கத்தியை எங்கு, எப்படி உபயோகிப்பது என்பது அகத்தாய்வு. மனம் தவத்தில் தோய்ந்து இறையோடு ஒன்றுவதே ஞானம்; மனம் பிறமனத்தோடு ஒன்றுவது அறம்.

"அறிவினது மூலத்தை ஆழ்ந்து நோக்கி அமர
சிந்தை அடங்கிடும் சீவனே சிவனாகும்"

எனும் பாடல் வரிகளில் மனம் மூலத்தோடு இணைவதை அறிவின் முழுமை என்கிறார் மகரிஷி.

"மனிதனின் மகத்துவம் மனிதன்
அறியாத மயக்கத்தின் விளைவு
மனிதனின் வாழ்க்கையை
மனிதன் பறிக்கிறான்"

எனும் பாடல் வரிகள் மனம் பிறர் மனத்தோடு ஒன்றாத நிலையில் ஏற்படும் துயரினைத் தெள்ளத் தெளிவாக்குகின்றன. ஒருவர் மனம் இன்னொரு மனத்தோடு இணைந்து அவரது இன்பத்தைத் தன் இன்பமாகவும், அவரது துன்பத்தைத் தனது துன்பமாகவும் பாவித்து, தன்னைப்போல் பிறரை நினைத்து வாழ்வதே அறம். ஒருவர் துன்பப்படும் போது அவனது செயல், அவனது கர்மா அவன் அனுபவிக்கிறான் என ஒதுங்கி நிற்பது மனிதத் தன்மையாகாது. துன்பத்திற்கான காரணம் எதுவாயிருந்தாலும், அத்துன்பத்தைப் போக்க முயல்பவனே மனிதன். தவம், ஞானம், அறம் எனும் மூன்றிற்கும் இடையேயுள்ள சார்புகளின் சாரமாக நாம் வேதாத்திரியத்தைப் பார்க்கிறோம். பகைவனை வாழ்த்துகிற பக்குவத்தையும், பகைவனுக்கருள்கிற நெஞ்சத்தையும் நமக்குத் தரவல்லது அகத்தவமும், அகத்தாய்வுப் பயிற்சி முறையும் ஆகும்.

"ஒன்றாகக் காண்பதே காட்சி; புலனைந்தும்
வென்றான் தன் வீரமே வீரம்"

என ஔவையார் கூறியதைப் போல, அனைத்தையும் ஒரே மூலத்தின் தன்மாற்றமாகக் காணும் காட்சியே ஒன்றாகக் காண்பது. அகக்காட்சியைத் தருவது அகத்தவம். புலனைந்தையும் வெல்லும் பயிற்சியே அகத்தாய்வு. பயிற்சியே பழக்கமாகி, பழக்கமே நமது பண்பாடாகிறது. ஆகவே அகத்தவமும் அகத்தாய்வும் நமது பண்பாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன.

சமுதாய உணர்வுகள் நமக்கு வேண்டும். தர்மத்தை நிலைநாட்டவும், நீதி நிலைப்பதற்காகவும், நமது சிந்தனையில் சீற்றம் வேண்டும். நமது சிந்தனையின் சீற்றம் சிறந்த கவிகளாகவோ, அல்லது சீரிய செயல்களாகவோ மாறி இந்தச் சமுதாயத்தை உயர்த்த வேண்டும்.

"உடலில் சிறு காயமோ உறுப்புகளில் அடியோ
ஒருவருக்கு ஏற்பட்டால் உடன் வாழ்வோர் எல்லாம்
கடலுலகில் படும்துன்பம் காண்கின்றோம் போரில்
கணக்கின்றிக் கணப்பொழுதில் மடிகின்றார் மேலும்
படமுடியா துயரோட பருஉடலின் உறுப்பு
பல இழந்தும் பதைபதைத்துத் துன்பமுறக் காண்போம்
நடந்து செல்லும் பிணங்கள் அல்ல நாம் இவற்றைப் பார்த்து
நமது கடமை தேர்ந்து நலம் செய்யாதிருக்க"

என்கிறார் மகரிஷி. சமுதாயத் தவறுகளைச் சுட்டிக்காட்டக் கூடிய துணிவும், தெளிவும் வேண்டும்; அதே சமயம், நமது வீட்டில் நமக்காக வாழ்கிற கணவன், மனைவி, மக்கள், சுற்றத்தார் என அன்றாட வாழ்க்கையில் அவர்கள் அறியாமையால் செய்யும் சிறுசிறு தவறுகளை மன்னிக்கக்கூடிய பக்குவமும் வேண்டும்.

முக்தி

"அளவு கடந்த அன்பின் வெளிப்பாட்டில் ஆழமான அமைதியுடன்
ஆரவாரமற்று வாழ்கிற வாழ்க்கையின் மறுபெயர் முக்தி"

வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பது பற்றி மகரிஷியின்வழி பார்ப்போம். பல மகான்கள் பலவாறாகச் சிந்தித்த கேள்வி இது. ஓரிரண்டு கருத்துகளைப் பார்த்த பிறகு வள்ளலாருக்கு வருகிறோம்; தொடர்ந்து வேதாத்திரியத்திற்கு வருகிறோம்.

வாழ்க்கையை நமக்கு அளிக்கப்பட்ட தண்டனையாகக் கருதினார் ஆதிசங்கரர். எத்தனை முறைதான் பிறப்பது, எத்தனை

முறைதான் இறப்பது என்று சலிப்படைந்தார் அவர். இந்த வாழ்க்கையை முடித்துக் கொண்டு "உனதடி சேரக் கிருபையும் கருணையும் வேண்டும்" என்று இறைவனை வேண்டினார் சங்கரர்.

"புனரபி ஜனனம் புனரபி மரணம்
புனரபி ஜனனம் ஜனனம் சயனீ
இஹ சம்சாரே பஹீதுஸ்தாரே
க்ருபயாபாரே பாஹி முராரே"

என்ற 'பஜ கோவிந்தம்' பாடலை நாம் அனைவரும் அறிவோம். வாழ்க்கை வாழ்வதை விட முடித்துக் கொள்வதே மேல் என்ற ஆதிசங்கரரின் பார்வையைத் தொடர்ந்து, நாம் சூடிக்கொடுத்த ஆண்டாளுக்கு வருகிறோம்.

வாழ்க்கை வாழ்வதற்கு என்பது ஆண்டாளின் வாக்கு. ஆதிசங்கரரிலிருந்து சற்று வித்தியாசப்படுகிறார் ஆண்டாள். ஏழு பிறவிகளிலும் வாழத் தயார். ஆனால் யாருக்காக வாழ்வது? உனக்காகவே வாழ்வேன். எனக்காக அல்ல என்பதே ஆண்டாள் அருளிய அருள்வாக்கு.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உந்தனோடு உற்றோமே யாவோம்
உமக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்"

வாழ்க்கை வாழ்வதற்கே; ஆனால் வாழ்வது இறைவனுக்கே என்ற கோட்பாட்டை ஆண்டாளிடம் காண்கிறோம். வள்ளலாரின் மனிதநேயத்தை வாழ்க்கைத் தத்துவத்தின் அடித்தளமாக அமைக்கிறார் மகரிஷி.

"நீதிநெறியுணர் மாந்தராகி வாழும்
நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்"
எத்தகைய உயிர்கட்கும் இன்பநிலை காத்து
இறையுணர்வில் இணைந்து அறம் ஆற்றி வாழும் பேறு"

எனும் மகரிஷியின் பாடல் வரிகள் நமக்கு உணர்த்துவது : சிந்தைக்கு வேண்டியது இறையுணர்வு; செயலுக்கு வேண்டியது எத்தகைய உயிர்கட்கும் நாம் தரும் பாதுகாப்பும் (அன்பும்) பராமரிப்பும் (கருணையும்) இணைந்த அறநெறி. இதுவே வேதாத்திரிய வாழ்க்கைநெறி. இறையுணர்வும் அறநெறியும் வேதாத்திரியத்தின் இருகண்கள்.

எங்கும் நிறைவாக நிறைந்து அனைத்தும் ஆகி, அனைத்தையும் இயக்குகிற பேரறிவை உணர மறுக்கும் நாத்திகப் பொய்ம்மை;

உணர்ந்த பேரறிவுக்கு உருவங்களைக் கொடுத்து, உருவங்களுக் கிடையே உறவுகளைக் கொடுக்கும் ஆத்திகப் பொய்ம்மை; தனக்கென வாழ்கின்ற வாழ்க்கையின் பொய்ம்மை; தனது மகிழ்ச்சிக்கும், சஞ்சலத்திற்கும் மற்றவர்களே காரணம் என்ற எண்ணத்தின் பொய்ம்மை; விளைவுகளை நமக்கு வேண்டியவாறு வளைத்துக் கொள்ள, பரமனுக்கு நாம் செய்யும் பரிகாரப் பொய்ம்மை என அனைத்துப் பொய்ம்மைகளையும் அறவே அகற்றுகிறது வேதாத்திரியம்.

மனித சமுதாய இணக்கத்திற்கு ஒவ்வாத குணங்களைத் (களங்கங்களைத்) தவிர்த்து, முறையான குணங்களை வளர்த்து உள்ளிருக்கும் அன்பை வெளிப்படுத்துவதே மனிதனது ஆறாவது அறிவின் உயர்நிலை. அறிவின் உயர்நிலையில் தான் மனிதன் மகானாகிறான். அந்த உயர் நிலையை அடையும் வழிமுறையே வேதாத்திரியப் பாதை! ஆணவத்தைக் குறைத்து அன்பைப் பெருக்குவதே இந்தப் பாதையின் சிறப்பு.

"அறிவின் உயர்நிலையில் அன்பும் கருணையுமாய்
நெறியில் சிறந்தபோது நீங்காத இன்ப ஊற்றாய்"

என்பார் மகரிஷி. வேண்டாத குணங்களை வடிகட்டி, வேண்டிய தற்குப் படிகட்டுவதே வேதாத்திரிய வாழ்க்கை.

உலக அமைதிக்கு வேதாத்திரியம்

ஒரு தலைமுறையின் முடிவான உண்மை அடுத்த தலைமுறையின் ஆரம்ப உண்மையாகி விடுகிறது; இந்த ஆரம்ப இருப்போடு அதனை வாங்கிய தலைமுறையின் யுக்தியும் சேர இருப்பு பெருகுகிறது. இப்படி பெருகுகிற அறிவுநிலை உச்சங்களின் அடையாளங்கள்தான் மகான்கள். இன்றைய அடையாளம் வேதாத்திரி மகரிஷி! என்ற வாக்கினை அவரை உணர்ந்தவர் அறிவர். (வேதாந்தமும் வேதாத்திரியமும் : அழகர் ராமானுசம் பக். 13–90)

திருக்குறள் உட்பொருள் விளக்கம்

வேதாத்திரி மகரிஷி அவர்களின் உள்ளத்தில் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் தாக்கம் அனைத்துப் படைப்புகளிலும் இருந்தாலும்; 'திருக்குறள் உட்பொருள் விளக்கம்' என்ற நூலில் திருக்குறளுக்கு அவர் தரும் விளக்கம் புதுமையாகவும், சிந்தனைக்கு விருந்தாகவும் அமைந்துள்ளது. இதனை ஒரு சில குறட்பாக்களைக் காட்டி அவர்தம் நுண்விளக்கங்களை அவர்வழி ஆய்வோம்.

> **திருக்குறளில் அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பிரிவுகள்தான் இருப்பதாகப் பொதுவாக கருது கின்றோம். நான்காவது அங்கமான வீடுபேற்றைப் பற்றியும் அறத்துப்பாலில் திருவள்ளுவர் தந்துள்ள உண்மையை மகரிஷி அவர்கள் தமது விளக்கத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார். மறைபொருளாக உள்ள இறை, உயிர், மனம் ஆகியவற்றை அகத்தவத்தால் அறிவின் முழுமை எய்திட ஆசான் மூலம் நேரிடையாகப் பயின்று உணர வேண்டுமாதலின் வீடுபேறு பற்றித் தனியாகத் திருவள்ளுவர் எழுதவில்லை என்பதை மகரிஷி அவர்கள் விளக்கியுள்ளார்**

என்று எஸ்.கே.எம். மயிலானந்தன் அவர்களின் பதிப்புரையை இங்குப் பதிவு செய்வோம்.

வேதாத்திரி மகரிஷி கடவுள் வாழ்த்தில் உள்ள பத்துக் குறட்பாக்களுக்கும் விளக்கமான உரை எழுதியுள்ளார். மேலும், ‘வான்சிறப்பு’ அதிகாரத்தில் 12–ஆவது குறட்பாவிற்கும்; “நீத்தார் பெருமை” அதிகாரத்தில் 21, 22, 23, 27, 28, 29, 30 என 7 குறட்பாக்களுக்கும் மேலும் 37, 41, 43, 114, 121, 202, 214, 231, 247, 260, 270, 280, 291, 295, 306, 332, 351, 355, 357, 358, 373, 377, 453, 504, 702, 845, 861, 942, 1078, 169, 751, 350 என 50 குறட்பாக்களுக்கு மட்டும் ஆய்வுரை வழங்கியுள்ளார். இனி இக் கட்டுரையில் இப்பகுதியில் பக்க எண் மட்டுமே குறிக்கப்படும். மகரிஷி அவர்கள் முதலில் திருக்குறளின் சிறப்பினைக் கூறுகிறார்

> **திருக்குறள் ஒரு மெய் விளக்க நூல், மனித வாழ்வில் துன்பம் துடைத்து இன்பம் காட்ட வழி காட்டும் கருத்தடக்கமே நூல் எனப்படும்**

என்று தொடங்குகிறார்.

> **பேரியக்க மண்டலத் தோற்றங்களுக்கெல்லாம் அடிப்படையாக உள்ள அருட்பேராற்றல் எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களிலும், எல்லா உயிரினங்களிலும் ஊடுருவி நிறைந்து தனது உவமையற்ற அழுத்த ஆற்றலால் ஒவ்வொரு பொருளையும் அதனதன் அளவில் முறையாக இயக்கிக் கொண்டும் இயங்க வைத்தும் செயல் புரிகிறது.** (ப. 1)

என்று அருட்பேராற்றலின் அற்புதத்தை விளக்குகிறார். மெய்ப்பொருளைப் பற்றிக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

> **உயிர் படர்க்கை நிலையில் மனம் – உணர்ச்சிகள் அடக்க நிலையில் உயிர்– இயக்கம் கழிந்த ஒழுக்க நிலையில் அதுவே இருப்பாற்றலாகிய மெய்ப்பொருள். ஒன்றின் எழுச்சி இயக்க வேறுபாடுகளே தெய்வம், உயிர், மனம் என்ற மூன்று நிலைகளும் ஆம் (ப. 9)**

என்கிறார்.

> *"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
> *பகவன் முதற்றே உலகு"*

என்பதே முதற்குறள். இக்குறள் மூலம் உயிருக்கும் உலகுக்கும் மூலமான இருப்பாற்றல் நிலை – மெய்ப்பொருள் நிலை விளக்கப்பட்டிருக்கிறது. இருந்த, எழுந்த, படர்ந்த மூன்று நிலைகளுக்கும் இருந்த நிலையே தான் மூலம். அந்த நிலையை முதலாகக் கொண்டு எழுந்தவையே உயிரும் உலகும் எனக் கூறியுள்ளார். எந்த மொழியானாலும் 'அ' என்ற எழுத்தை முதலாகக் கொண்டே மற்ற எழுத்துகளெல்லாம் அமைந்திருப்பன போன்று ஆதியாகிய தெய்வ நிலையை முதலாகக் கொண்டே உலகும் இருக்கிறது எனக் குறிப்புக் காட்டுகிறார். மேலும்,

> *"பரமாய சக்தியுட் பஞ்சமா பூதம்*
> *தரம் மாறித் தோன்றும் பிறப்பு"*

என்னும் ஔவைக் குறளையும் இங்கு நினைவிற் கொள்ளலாம் என்கிறார். படைப்பு என்ற கற்பனையிலிருந்து (Theory of Creation) மனிதனைப் பரிணாம விளக்கத்திற்குக் (Theory of Evolution) கொண்டு வரும் பெருங்கருணை இந்தக் குறளில் விளங்கக் காண்கிறோம். பரம் என்ற இருப்பாற்றலிலிருந்து ஐந்து பூதங்களும் ஒன்றிலிருந்து மற்றொன்றாகத் தரம் மாறித் தோற்றம் பெற்றன என்பது பரிணாம உண்மையினை விளக்குவதாகும்.

முதல் குறளில் இருப்பாற்றலாகிய தெய்வ நிலையை விளக்கிவிட்டார். வாழ்வைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள் உணர்ந்து நிற்க வேண்டிய இடத்தை நினைவுப்படுத்தி விட்டார்கள் (ப. 13) என்கிறார் மகரிஷி அவர்கள்.

> *"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்*
> *நற்றாள் தொழாஅர் எனின்"*

சிவனுக்கும் தெய்வத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கி மிக நுண்மையாக, உயிர்நிலையை அதன் சிறப்பாற்றலாகிய அறிவைக் கொண்டே விளங்கிக் கொள்ளுமாறு குறிப்புக் காட்டிவிட்டார்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்ற குறள் பேரியக்க மண்டலத்திற்கும் தெய்வ நிலைக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது என்கிறார். மேலும், இருப்பாற்றல், உயிராற்றல், பேரியக்க மண்டலம் என்ற மூன்று நிலைகளையும் தெளிவாக உணார்ந்தவர்கள் தான் மனம், மொழி, செயல் இவற்றின் தூய்மை பெறுவர். அவர்கள் வாழ்வே மக்களுக்கு வழிகாட்டியாகும். அவர்கள் விளக்கமும் வாழ்க்கை முறையும் உலக மக்களால் போற்றப் பட்டும், பின்பற்றப்பட்டும் நெடுநாட்கள் உலகச் சமுதாயத்தில் நீடித்தும் பலன் தரும். இந்தக் கருத்தையே 'நிலமிசை நீடுவாழ்வார்' என்று கூறுகிறார்.

வாழ்வாங்கு வாழ வேண்டுமெனில் மெய்யுணர்வு, உயிருணர்வு, உணர்ச்சிகளில் ஊடுருவி நிற்கும் மறை பொருள் உணர்வு என்ற மூன்றும் ஒரு மனிதனுக்கு இன்றியமையாத் தேவைகள்.... தெய்வம், உயிர், அறிவு என்ற மூன்று மறைப்பொருட்களின் நிலைகளைத் தெளிந்தால்தான் விளக்கமாகும் . . . அந்த மூன்று மறைப்பொருட் களையும் மூன்று குறளில் விளக்கிவிட்டார் என்கிறார் மகரிஷி.

பெரியோரை ஆசிரியராகக் கொண்டு அவர்வழி நடந்தால் துன்பமே இருக்காது என்று ஆசான் துணையை வலியுறுத்தும் வகையில்;

"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல" - (4)

என்ற குறட்பாவும், இதே கருத்தை மேலும் தெளிவுப்படுத்தி ஐந்தாவது குறளில் விளக்குகிறார்,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" - (5)

இந்தக் குறள்தானே அவனாகும் பேற்றின் பயனை விளக்கு கின்றது. இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தாரிடம் முன்வினையும் ஒழிந்துபோம். இனியொரு தீவினையும் அவர் புரியார். பழைய வினைகளும் ஒழிந்துவிடும். புதுவினைகளும் பற்றாது என விளக்குகிறார் மகரிஷி அவர்கள்.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்" - (6)

என்ற குறட்பாவில் 'நீடுவாழ்வார்' எனச் சுட்டப்படுவது மனிதன் செய்த செயல்களின் நல்விளைவுகள் மனித சமுதாயத்தில் காலம்காலமாக நீண்டு பயனளித்துக் கொண்டே இருக்கும் என்பதாகும்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" - (7)

என்ற இந்தக் குறள் மனித மனத்தின் இயல்பைப் பற்றியும் அது அடையவேண்டிய உயர்வைப் பற்றியும் விளக்குகின்றது. மேலும், தத்துவ முறையில் பல்வேறு விளக்கங்களை அளித்த மகரிஷி அவர்கள், முடிவாக, வள்ளுவர் இறைநிலையறிந்து அதன்வழி வாழ்ந்தால் அன்றி வேறு எந்த வகையிலும் மனக்கவலை மாறாது என்று கருணையோடு எடுத்துரைக்கிறார் என்கிறார்.

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது" - (8)

பரம் பொருளை அடைய ஒரு ஞானாசிரியனைச் சார்ந்து அவரடிப் பின்பற்றி நிற்க வேண்டுமென்று கூறுகிறார். மற்ற உரையாசிரியர் களிலிருந்து இவர் சிறிது வேறுபடுகிறார். 'அறவாழி அந்தணன் தாள்' என்பதனை 'இறைவனடி' என்று உரையாசிரியர்கள் கூற, மகரிஷி அவர்களோ, "மெய்ப்பொருளை உணர்ந்து ஒழுக்கம், கடமை, ஈகை மூன்றும் இயல்பாகப் பெற்று அறக்கடலாக மிளிரும் பேரறிஞர் என்பதாம். பிறவாழி என்பது அறத்திற்கு எதிரான – பவக்கடல் ஆகும்" என்று விளக்கம் தருகிறார்.

"கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" - (9)

இது ஞானாசிரியரின் பெருமையை விளக்குகிறது. எட்டு நற்குணங்களையுடையவனே பேரறிஞன் என்று கூறி, அந்த எட்டு நற்குணங்களையும் விளக்குகிறார். . . . எண்குணத்தான் என்பதற்கு தெய்வம் என்று சிலர் கருதுவார்கள். தெய்வம் என்னும் நிலை குணாதீதம் – குணங்களை எல்லாம் கடந்த ஒரு பெருநிலையாகும். ஆனால் அந்நிலையறிந்த பெருமகனுக்குத்தான் புலனடக்கம், நோயின்மை, இயற்கையோடு இணைந்தாற்றும் அறிவு, இறைநிலை உணர்ந்த விழிப்பு, பற்றற்ற நிலை, அன்பு, பல்கலை அறிவு, பேரின்பம் என்ற எண்குணங்களும் அமைந்துள்ளன. . . . இந்தக் கவியில் இறை யுணர்வும், அறநெறியும் பழகிக் கொடுக்கவல்ல ஞானாசிரியரைத் துணைகொள்ளவில்லையெனில் ஒருவரது பத்து இந்திரியங்களும், அவற்றால் ஆற்றும் செயல்களும் பயனுள்ளவையாகா எனக் கூறுகிறார். கடவுள் வாழ்த்தில் உள்ள பத்தாவது குறளாகிய,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" - (10)

என்ற குறட்பாவிற்கு நீண்டதொரு தெளிவான விளக்கத்தை அளிக்கிறார் மகரிஷி அவர்கள். ஓர் உயிருக்குப் பிறவித்தொடர் நீண்டுகொண்டே போவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. அவை:

1) உலகப் பொருட்களைத் துய்த்தும், நிறைவு பெறாமல் அவற்றின்மீது பற்றி நிற்பது.

2) விளைவறியாது பழிச் செயல்களை ஆற்றி, ஆன்மாவில் பாவப் பதிவுகளைக் கூட்டிக் கொண்டிருப்பது.

3) தனக்கு மூல நிலையான தெய்வ நிலை உணர்ந்து அதனோடு இணைப்புப் பெறாதது.

இறைவனின் பாதங்களைப் பற்றாதவர், பிறவித் தொடர் நீண்டு கொண்டேபோகும். பிறவிக்கடலைக் கடக்க முடியாது என்கிறார் மகரிஷி அவர்கள். கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் உள்ள அனைத்துக் குறட்பாக்களுக்கும் விளக்கம் கூறிய மகரிஷி அவர்கள் அடுத்து வரும் அதிகாரங்களில் ஓரிரு குறட்பாக்களுக்கு மட்டும் விளக்கம் தருகிறார். அதற்குரிய காரணத்தையும் மகரிஷி அவர்களே கீழ்வருமாறு விளக்குகிறார்.

> **தெளிவாக வேறுபாடற்ற கருத்தை வழங்கும் பாக்களுக்கு விளக்கம் தேவையில்லை. மறை பொருட்களைக் கொண்ட பாக்களுக்கு மாத்திரம் நாம் விளக்கம் காண்போம். மேலும், சில பாக்களுக்கு அவரவர் அறிவிற்கேற்ப வேறுபட்ட விளக்கங்களைக் கொண்டு சில அன்பர்கள் கருத்து வேறுபாடு அடைகின்றனர். உண்மையில் குறளில் கருத்து வேறுபாட்டிற்கு இடமே இல்லை. குறளாசிரியர் உள்ளத்தைப் புரிந்து கொண்டால், அவர் பாக்களில் பொதிந்து கிடக்கும் உண்மையான பொருள் விளங்கி விடும். எனவே, அத்தகைய பாக்களுக்கு விளக்கம் தருவோம்**

என்ற மகரிஷி அவர்கள் தம் கூற்று, படிப்பவர்களுக்கு ஏற்படும் ஐயம் நீங்கும் என்பது வெள்ளிடைமலை. 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தில் உள்ள, 2–ஆவது குறட்பா.

> *"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
> *துப்பாய தூஉம் மழை" - (12)*

என்பதாம். "மழையானது, உண்பதற்கு வேண்டிய உணவினை உண்டாக்கித் தருகிறது. தானே நல்ல உணவும் ஆகிறது. (பேரா. கு. மோகனராசு). ஆனால் மகரிஷி அவர்கள் "துப்பு" என்ற சொல் ஐந்து

இடங்களில் வருகிறது. இங்குவரும் 'துப்பு' என்ற சொல்லுக்குப் பொருள் வேறு. 'துய்ப்பு' என்ற சொல் சுருங்கி, 'துப்பு' எனப்படுகின்றது. ஒரு பொருளோடு அல்லது செயலோடு ஓர் உயிர் தொடர்பு கொண்டு இன்புறும் நிலையைத் 'துய்த்தல்' என்று கூறுகிறோம். துய்ப்பவர்கட்கு துய்ப்பு ஆகிய துய்ப்பை ஆக்கித் தருவதோடன்றித் துய்ப்பவர்கட்குத் தானே நேர் துய்ப்பு ஆகவும் நீர் பயன்படுகிறது என்று கூறுகிறது இக்குறள் என்கிறார்.

நீத்தார் பெருமை

உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு எனப்படும். . . . என்று கூறி, அறிவு நிலையுடையோரை, பரதேசி – பரத்தையே அறிவுக்குக் களமாகக் கொண்டவர் என்றும், ஆண்டி – ஆண்டு எனில் விரிவான எல்லையைக் குறிக்கும். அவ்வெல்லையை அறிவின் களமாகக் கொண்டதால் 'ஆண்டி' என்ற வழக்கு என்றும் நித்தன் – உலவாப் பெருநிலையை உட்பொருளாகக் கண்டவன் என்று கூறுவது வழக்கமாயிற்று. உலகப்பொருட்கள் மீது அறியாமை என்ற மயக்கால் பற்றுக்கொண்டு நிற்கும் ஆன்மா, அறிவின் விளக்கத்தால் இருள் நீங்கி, நீறிப் போகின்றது. நீற்ற நிலையுடைய அறிவினாரை, நீற்றார் என்று கொண்டு, நீத்தாராகக் கருதுகிறோம். (பக். 36–37).

இல்லறத்திற்கு ஏற்ற பயிற்சி 'இளமை நோன்பு, (பிரம்மச்சரியம்)' துறவறத்திற்கு ஏற்ற பயிற்சி "அகத்தவம்" முறையாக இளமை நோன்பாற்றி இல்லறம் ஓம்பிப் பின்னர் அகத்தவம் புரிந்து, அறிவின் முழுமை பெற்றுத் துறவறம் ஏற்கும் சிறந்த முறையைத் தான் திருவள்ளுவப் பெருந்தகை 'ஒழுக்கத்து நீத்தார்' என்று கூறுகிறார் (ப. 38).

> *"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
> *வேண்டும் பனுவல் துணிவு"* - (21)

என்ற குறட்பாவிற்கு விளக்கம் அளிக்கிறார்.

> *"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
> *இறந்தாரை எண்ணிக்கொண் டற்று"* - (22)

உரையாசிரியர் கூறும் கருத்திற்கு உடன்பட்ட மகரிஷி அவர்கள் மேலும், அழகியதொரு விளக்கத்தைக் கீழ்வருமாறு விளக்குகிறார். "பறவைகளின் காலடியை ஆகாயத்தில் பார்க்க முடியாததுபோல் உலகில் உள்ள துறவிகளின் மனநிலையை ஒருவராலும் தெரிந்து கொள்ள முடியாது" (ப. 39) என்கிறார்.

இயற்கையின் எதிர்எதிரான போக்குகளைக் தெளிவாக அறிந்து, துறவு கொண்டவர்களின் பெருமையே உலகில் உயர்ந்தது என்கிறார் உரையாசிரியர் மோகனராசு அவர்கள். இரு உலக இருப்பு இயக்க விளைவு நியதிகளையும் உணர்ந்து, நெறியோடு வாழ்பவர்கள் பெருமைதான் உலகில் உயர்ந்தது என்று கூறுகிறார் . . . ஆன்மா உய்வதற்காகவே உடலையடைந்து இருக்கின்றது என்ற உண்மையை அறிந்து, உடலைக் கருவியாக மதித்து, ஓம்பி, எய்த வேண்டிய உயர்வை அறவழியில் எய்துதல் சிக்கலற்ற மனோநிலை. இத்தகைய அறிவின் உயர்நிலை துறவிகட்கே உரியது. இவ்வுயர்ந்த வாழ்க்கை நெறியே மாந்தர் குலத்தை உய்விக்கவல்லது. ஆகவே, உலகம் துறவிகளைப் பெருமையாக மதிக்கின்றது என்கிறார் வள்ளுவர் என மகரிஷி விளக்குகிறார். பல பொருள் புதைந்த மெய்ப்பொருள் விளக்கமாக இந்தக் குறளைத் தந்திருக்கிறார். அது

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" - (27)

என்ற குறளாகும். மகரிஷி அவர்கள் வேதாந்தம், சித்தாந்தம் கூறுகின்ற வழிகளில் விளக்கம் தருகிறார். இன்னும் விளக்கமாகச் சொல்லப் போனால், மெய்ப்பொருள், விண், காந்தம், அறிவு, பருவுடல் ஆகிய ஐந்து தத்துவச் சொற்களுக்கும் மிகத் தெளிவாக அறிவியல், தத்துவம் ஆகிய இரண்டின் அடிப்படைகளிலும் விளக்குகிறார். மனிதன் சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றமென்ற ஐந்தின் தன்மை யறிந்து கொண்டால் அறிவின் சரித்திரம் அறிந்து கொள்வான். அவன் தான் உலகை உணர்ந்து நலம் கண்டு சிறப்போடு வாழ முடியும்.... இறைநிலை, உயிர், சீவகாந்தம் இம்மூன்று மறைபொருட் களையும் உணர்ந்த அந்த அறிவின் விழிப்பில் வாழ வேண்டிய உண்மையை இந்தக்கவி உணர்த்துகிறது என்கிறார் மகரிஷி அவர்கள் (பக். 40–59).

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" - (28)

என்ற குறட்பாவிற்கு மறைபொருள் விளக்கமே வேதம் என்றும், 'மறை' என்றும் வழங்கப் பெறுகின்றது. ஆகவே, மறை எனும் இயற்கைத் தத்துவ நூல்களின் பெருமையைக் கொண்டே அவற்றை எழுதிய நீத்தார் பெரும்மதிப்பை உணரலாம் என்கிறார் மகரிஷி அவர்கள்.

"குணம்என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது" - (29)

என்கிறார். மனிதனிடம் அவன் அறிவாட்சித்தர சிறப்பிற்கேற்ப ஆன்மாவின் தன்மை அமைகிறது. அறிவின் முழுமை பெற்ற நிலையை இங்குக் குணமென்னும் குன்று என்கிறார் வள்ளுவர். சான்றோர்களிடம் அமைந்துள்ள அமைதியான மனநிலையைக் குறள் விளக்குகிறது. சான்றோர்க்குத் தகாத செயல்கள் மூலமோ அல்லது சொற்கள் மூலமோ பிறர் சினமூட்டினாலும் அது எழும்போதே மறைந்துவிடும். ஒரு கணம் கூடச் சினமானது சான்றோரிடம் நிலைக்காது என்பதே இக்குறளின் பொருளாகும்.

சான்றோரிடம் சினம் எழுந்தால் அதை மற்றவர்கள் தாங்க முடியாது அழிந்து விடுவார்கள் எனச் சில அன்பர்கள் இக் குறளுக்குப் பொருள் காண்பார்கள். இது பொருந்தாது. ஏனெனில் குணமெனும் குன்றேறி நின்ற பெரியோர்கள் பிறருக்கு எவ் வகையிலும் தீங்கு எழும், துன்பம் உண்டாக்கும் செயலைச் செய்யவே மாட்டார்கள். அறிவறிந்த தெளிவால், அறம் போற்றி வாழும் நெறியால் துறவுநிலை பெற்ற பெரியோர்களுக்குப் பிறர்க்கின்னா செய்யாமை இயல்பாகி விடுகிறது. சினத்தால் பிறர்க்குத் தீங்கு விளைவிப் பவர்களை எவ்வாறு குணமெனும் குன்றேறி நின்றார் எனக் கூற முடியும்? மேலும், இந்தக் குறள் "நீத்தார் பெருமை" எனும் அதிகாரத்தின் கீழ்ச் சொல்லப் பெற்றிருக்கிறது. அதையும் கருத்திற் கொள்ளவேண்டும்.

தன் முனைப்பால் தான், எனது எனும் குறுகிய நிலைகளில் அறிவு செயல்படுகிறது. பொருள் பற்றும், உயிர்ப்பற்றும் தன் முனைப்பிலிருந்தே எழுகின்றன. பற்று உள்ள மனநிலையில்தான் உணர்ச்சிமயமான சினம் எழும். அறிவறிந்த துறவிகளுக்குக் குறுகிய மனநிலைகளான பற்றுகள் இருக்க இடமில்லை. அதிலிருந்து எழும் பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் ஆறு குணங்களும் இல்லை. இந்தத் தன்முனைப்பின் வெளிப்பாடான ஆறு குணங்களும், அவரிடம் முறையே நிறைமனம், சகிப்புத்தன்மை, ஈகை, கற்பு, நேர்நிறை யுணர்வு, மன்னிப்பு ஆக மாறிவிட்டன.

எனவே, அவர்களிடம் சினம் எழும் என்றோ, சினத்தால் பிறர் துன்புறுவர் என்றோ கருத முடியாது. புலன் மயக்கில் உள்ளவர்கள் அறியாமையால் துறவிகளுக்குச் சினமூட்டினாலும், அது எழும்போதே உருக்குலைந்து அமைதியாக மாறிவிடும்" (பக். 61–62) என்று புதுமையாக விளக்குகிறார் மகரிஷி அவர்கள்.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" - (30)

இந்தப் பாடல் அறிவறிந்த பெரியோரின் அன்புநிலையை விளக்குகின்றது. மெய்ப்பொருளையும் அதன் பரிணாமச் சிறப்பால் உருவாகி இயங்கும் உயிர்களையும் அவற்றின் உணர்ச்சிகளையும் அறிவுநிலைகளையும் உணர்ந்தவர்களே அந்தணர். எல்லா உயிர் களிடத்திலும் பேரன்பு பூண்டு அன்புநெறியே வாழ்வின் ஒழுக்கமாகக் கொண்ட காரணத்தால் நீத்தார் எனப்படும் அந்தணரே மனித சமுதாயத்தில் அறங்காவலராக உள்ளனர் என்று கூறுகிறது இக் குறள் என்கிறார் மகரிஷி. (ப. 63)

இனி, இல்வாழ்க்கை என்ற 5ஆம் அதிகாரத்தில் உள்ள குறட் பாக்களுக்கு மகரிஷி அவர்கள் தரும் விளக்கத்தைப் பார்ப்போம்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்ஆற்றின் நின்ற துணை" - (41)

இல்லற வாழ்வில் ஒருவருக்கு இயற்கையினால் இணைக்கப் பெற்ற மூன்று தரப்பினர்கள் நலமாக வாழத் துணையாக உள்ளார்கள். 1. தனது பெற்றோர், 2. தனது வாழ்க்கைத் துணைவர், 3. தனக்குப் பிறக்கும் மக்கள் என்னும் மூன்று பிரிவினரும் நலமாக வாழ்வதற்கு ஏற்ற துணைபுரிய வேண்டிய பொறுப்பு உடையவர் என்று எடுத்துரைக் கின்றது . . . ஒரு இல்லறத்தான் இயற்கையாக வாழ்வில் இணைக்கப் பட்ட இந்த மூவரையும் பாதுகாக்கக் கடமைப்பட்டவன் என்ற அறவுரையும், அறிவுரையும் வழங்குகிறது இக்குறள் என்கிறார் மகரிஷி. (ப. 69).

யோகிகளையும், ஞானிகளையும் (தெய்வ நிலையறிந்தவர்கள் ஆகையால் அவர்களை தெய்வம் என்று கொள்ளுகிறோம்) விருந்தினர் களையும், சுற்றத்தாரையும், தன்னையும் ஆக ஐந்து தரப்பினர் களையும் பொறுப்போடு பேணிக் காக்கும் கடமை இல்லறத்தாரு டையது என்று விளக்குகிறது இக்குறள் என்கிறார் மகரிஷி. (ப. 70).

நடுவுநிலைமையென்ற அதிகாரத்தில் உள்ள 114-வது குறட்பாவை மிக எளிமையாகக் கீழ்வருமாறு விளக்குகிறார் மகரிஷி அவர்கள். "இது வினைப்பயனைப் பற்றி விளக்கும் ஓர் உயர் கருத்து. எச்சம் என்பது ஒருவர் வாழும் காலத்தில் செய்த செயல்களின் விளைவுகள் சமுதாயத்தில் நிலவி வருவதையும், அவர் வித்தின் மூலம் கருத்தொடராகத் தோன்றிய மக்களையும் குறிக்கும். ஒருவர் நடுநிலை பிறழாமல் செயல்புரிந்தவர் என்றால், அவர் தெய்வநிலை உணர்ந்தவராக இருப்பார். அறநெறி பிறழாதவராக இருப்பார். அத்தகையவர்தாம் விருப்பு வெறுப்பு அற்றவராக எச்செயலிலும் மனம் சமநிலையில் இருப்பவர். அத்தகையவரின் செயல்களின் விளைவுகள் நீண்ட காலம் சமுதாயத்தில், மக்களுக்கு நலமளிப்ப

தாகவும் வழிகாட்டியாகவும் அமையும். அத்தகையவர்களுக்கு உண்டாகும் சந்ததிகளும், அவர் வினைப் பதிவுகளையே, கருவமைப்புப் பதிவுகளாகக் கொண்டு நேர்மையாக வாழ்வார்கள். மக்களைக் கொண்டு இவர்கள் பெற்றோர் எப்படிப்பட்டவர் என்றும், செயல் விளைவுகளைக் கொண்டு அதைச் செய்தோர் எத்தகைய சிறப்புடையவர் என்றும் தெரிந்து கொள்ளலாம் என்பதே இக்குறளுக்கு உரிய பொருள்.

நடுவுநிலைமை பிறழ்தல் என்பது அறிவின் குறைபாட்டினால் சில பொருட்கள் சிலமக்கள் இவற்றின் பால் ஒருதலைப்பட்சமாகப் பற்றுக் கொண்டு அதற்கு ஏற்ப அறம் பிறழ்ந்து செயல்புரிதல், நடுவுநிலைமை பிறழ்தல் ஆகும். ஐயமின்றி இறையுணர்வு பெற்று அறநெறி ஒழுகும் சான்றோர்களிடம் இத்தகைய குறைபாடு இராது என்னும் நீதியை நினைவுபடுத்துகிறது இக்குறள். (ப. 71). அடுத்து அடக்கமுடைமை அதிகாரத்தில்,

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்" - (121)

என்ற குறளுக்குக் கீழ்வருமாறு மகரிஷி விளக்கம் தருகிறார். "மெய்ப்பொருள் மறதி அல்லது அறியாமை என்று தன்முனைப்பைக் கூறலாம். ஆசான் மூலம் அகத்தவம் ஆற்றத் தன்னை உணர்ந்து இறைநிலையையும் உணர்ந்தால் இறைநிலையென்ற எல்லையற்ற பேராற்றலில் தன்முனைப்பு அடங்கிப்போகும். அன்பும் கருணையும் இயல்பாக மலரும். இந்தப் பேரறிவு நிலையில் பேராசை நிறை மனமாகவும், சினம் சகிப்புத் தன்மையாகவும், கடும்பற்று ஈகை யாகவும் முறையற்ற பால் கவர்ச்சிக் கற்பு நெறியாகவும், உயர்வு தாழ்வு மனப்பான்மை நேர்நிறை உணர்வாகவும், வஞ்சம் மன்னிப்பாகவும் தனிமாற்றம் பெறும். தன் முனைப்பு அடங்கிய இந்த உயர் அறிவு நிலையைத்தான் அமர்ந்த அருள் என்று கூறுகிறார் வள்ளுவர். அவ்வாறு அடங்காத தன்முனைப்பு நிலை அறிவிற்கு மயக்க நிலையை, இருள் நிலையை ஏற்படுத்தும், வாழ்வு துன்பம் சூழ்ந்ததாகவே இருக்கும் என்று கூறுகிறார்.

பேராற்றலுள்ள இறைநிலையில் அதன் மதிப்புணர்ந்து அடக்கம் பெற்றால், அப்பெருநிலையின் ஆற்றல்கள் அனைத்தும் நமதாக அருள்வெள்ளத்தில் நீந்தி அமைதியாக மகிழ்ச்சியாக இருக்கலாம். இறைவனோடு அறிவால் இணைந்து கொண்டால் அருள் என்ற பேரின்ப வாழ்வு கிட்டும். இல்லையேல் இருள் என்ற மயக்க நிலையில் துன்புற வேண்டும் என்பதுதான் முழு விளக்கம் (பக். 72–73) என்கிறார். அடுத்து அறிவுடைமை என்ற அதிகாரத்தில் உள்ள

*"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
இவ்வுலக மில்லாகி யாங்கு" - (247)*

என்ற குறட்பாவிற்குக் கீழ்வருமாறு மகரிஷி அவர்கள் விளக்கம் தருகிறார். மனிதனாகப் பிறந்த பயனை அடைவதற்குப் பொருள் வளமும் அதற்கேற்ற முயற்சியும் செயல்களும்தான் முக்கியம். அருள்துறைக்காகக் காலத்தை வீணாக்க வேண்டிய அவசியமில்லை யென்று பலர் நினைக்கின்றார்கள். வேறு சிலர் அருள்துறையில்தான் இறைவன் அருள் கிடைக்கும். பேரானந்த வாழ்வு கிட்டும். அதனால் பொருள் துறையை ஒதுக்கி விட்டு அருட்துறையிலேயே முழுநேரம் முயற்சி செய்ய வேண்டும். அருள் வேண்டுபவர்கள் அதற்காகத் தவம், அறம் முதலியவற்றில் முழுமையாக ஈடுபடுவதற்குப் பொருள் துறையிலிருந்து ஒதுங்கிவிடல் வேண்டும் என்று கூறிக் கொண் டிருப்பது மனித சமுதாயத்தில் தொன்றுதொட்டுப் பரவலாக நிலவி வருகின்றது. இத்தகைய அன்பர்களுக்குச் சிந்தனையின் சிகரமான தனது முடிவினை நடுநிலையில் நின்று உண்மையை விளக்குகிறார் இந்தக் குறள் மூலம்.

பருஉடலைத் தாங்கி, உயிராற்றலால் இயக்கப்பட்டு, சீவ காந்த ஆற்றலின் இருப்பு நிலையான அறிவு இயக்க அலையால் மனமாக இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் எனும் அனுபவங்களைத் துய்த்து வாழும் மனிதனுக்குப் பொருளும் வேண்டும், அருளும் வேண்டும். ஒன்றிலிருந்து மற்றொன்று இல்லாவிட்டால் வாழ்க்கை நிறைவு பெறாது. நலமான உடலும், வளமான அறிவும் அமையாது என்பதை விளக்கித் தருகிறார் இக்கவி மூலம்.

உடலைக் கொண்டு வாழ்வைத் தொடங்கிய மனிதனுக்குப் பசிக்கு உணவு, வெப்ப தட்ப ஏற்றத் தாழ்வைத் தாங்குவதற்கு உறைவிடம், உடை, உடல் கழிவுப் பொருட்களை அவ்வப்போது வெளியேற்றுவதற்கு உரிய வசதிகள்; பருவம் வந்தபோது வித்துக் கழிவை முறையாக உடல் உயிர் நலத்திற்கும், சமுதாய நலனுக்கும் சிக்கலும் துன்பமும் இல்லாத முறையில் வெளியேற்ற ஒத்த பால் நட்பு; இயற்கைச் சீற்றம், வேற்றுயிர் பகை இவற்றிலிருந்து காப்புப் பெறுவதற்கு இன உறவான சுற்றம், சமுதாயம், ஆட்சி அனைத்தும் இன்றியமையாத் தேவைகள் ஆகும். பொருள் தொடர்பிலிருந்து நீங்கினால் அல்லது அதை அலட்சியம் செய்து ஒதுக்கினால் எவ்வாறு உயிர் வாழ முடியும்? எனவே, பொருள் இன்றி எல்லோருக்கும் அடிப்படையாக உலக வாழ்க்கை இல்லை. இவ்வளவு சிறப்புடைய பொருள் வளம் மாத்திரம் போதாது. இதோடு அருளும் வேண்டும் என்று கூறுகிறார்.

மனிதன் பரு உடல், உயிர், அறிவு என்ற மூன்று தத்துவங் களையும் உடையவன். இவற்றின் இருப்பு, இயக்கம், விளைவுகளை நன்றாக அறிந்தால் அல்லாது உடல்நலத்தோடும், மனவளத்தோடும், நட்பு நலத்தோடும் வாழ முடியாது. எனவே உடல், உயிர், அறிவு மூன்றையும் உணர்வதற்குத் தக்க ஞானாசிரியர் மூலம் அகநோக்குப் பயிற்சி கற்று அதன் மூலம் உயிர், அறிவு, தெய்வம் இவற்றின் இருப்பு, அமைப்பு, இயக்கம் விளைவுகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். முடிவாகப் பல தலைமுறைகளாக வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள் அனைத்தும் வினைப்பதிவாகக் கருமையத்தில் அமைந்து அதன் வழியே மனத்தையும், செயல்களையும், ஊக்கியும், உந்தியும் வாழ்வு நடைபெறுகிறது.

அகத்தவத்தாலும் ஆசிரியர் தெளிவுரைகள் மூலமும் விடாமுயற்சி கொண்டு தனக்குள்ளாகவும், எங்கெங்கும் நிறைந்து எல்லா இயக்கங்களையும் நடத்தி வரும் இறைநிலையை உணர்ந்து, அறவழி வாழ்வின் மூலம் வினைப்பதிவுகளிலுள்ள பழிச்செயல்கள் பதிவுகளைத் தூய்மை செய்து கொண்டு இனி உலகில் கருவின் மூலமோ, அல்லது உயிர் உடலை விட்ட பின்னும் ஆன்ம நிலையமான கருமைய ஈர்ப்பு ஆற்றலால் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும், தன் வினைக்குப் பொருத்தமுள்ள ஒருவர் ஆன்மாவோடு சேர்ந்து வினைப்பதிவுகளை நீக்கும் சிரமங்களையும் விடுத்து, பூரண விடுதலையான பிறவிச் சக்கரத்தையோ நிறுத்தி முக்தி அடைதல்தான் அருள்வழியாகும்.

மனிதப் பிறவியின் முழுமை நோக்கமும் இதுவே. மனிதனாகப் பிறந்த யாவர்க்கும் இந்த அருள்நிதி அமைந்திருக்கிறது. இதை முயற்சியால் ஊக்கி முடிவான பதம் பெறுவது எல்லா மக்களுக்கும் தேவையானது என்று பொருள். அருள் இரண்டின் பெருமையையும் முக்கியத்தையும் உணர்த்துகிறது இந்தப்பா. இயல்பூக்கம், பரிணாமம் எனும் இரண்டு இயற்கை நிகழ்ச்சிகளில் உச்சக் கட்டத்தில் வாழும் மனிதனுடைய சிந்தனையை அதன் சிகரத்தில் கொண்டு சேர்க்கிறது இவ்விளக்கம்.

அருளும் பொருளும் வேண்டும்

> *"பொருள் வளத்தில் நல்லறிவில் உயர்வு பெற்றால்*
> *அருள் ஆளும் வாழ்க்கையிலே அமைதி கிட்டும்*
> *பொருள் இன்றி அறிவுமிக அடிமை ஆண்டி*
> *அருள் இன்றிப் பொருட்கள் மிக அறம் பிழைக்கும்".*

அறம் - ஆட்சி - மதம் - பொருள்

"அறம் என்றால் துன்பத்தைப் போக்கும் செய்கை
அதைக்காக்க ஆட்சி, மதம், பொருள், மூன்றாச்சு
அறம் அத்தனை இயற்கை நிலையறிந்து ஆற்ற
அது மதமாம் அறியாதோர் தேவை மீறி
அறம் பிறழ்ந்தால் தண்டனையாற் திருத்தும் செய்கை
ஆட்சிமுறை பொருள் ஈட்டிக் காத்திட்டாற்றும்
அறம் பொருளாதார முறை அனைத்தும் மக்கள்
அமைதியோடு வாழ்வதற்குத் தேவையாகும்".

என்ற அவர்தம் பாடல்களும் பொருளும் அருளும் வேண்டு மென்பதை உணர்த்துவதை அறியலாம்.

ஆறாம் அறிவின் சிறப்பினைப்பற்றியும், அதன் செயலாக்கத்தைப் பற்றியும் அதி. 26–இல் உள்ள 260–ஆவது குறட்பாவை எடுத்துக் காட்டி விளக்குகிறார் மகரிஷி அவர்கள். கு. மோகனராசு அவர்கள், ஒருவன் பிற உயிர்களைக் கொல்லாதவனாகவும், புலால் உண்ணாத வனாகவும் இருந்தால் அவனை உலகத்து உயிர்கள் எல்லாம் கைகூப்பி வணங்கும் என்கிறார். ஆனால்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" - (260)

என்ற குறட்பாவைக் 'கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்றால் கருத்துப் பொருந்தாது என்றும், "கைகூப்பி மறுத்தானை எல்லா உயிரும் தொழும்" என்றால் மிகப் பொருத்தமான கருத்து கிடைக்கிறது. அந்த அன்புள்ளத்திலிருந்து எழும் அலைக்சுழல் எல்லா உயிர் களையும் வசீகரிக்கின்றது. நட்பு கொள்ளச் செய்கிறது என்று கொள்ள வேண்டும் என்று விளக்குகிறார் (ப. 83) மகரிஷி அவர்கள்.

நோன்பு என்றால் என்ன ? தெய்வம், கடவுள் – ஆகியவற்றை மிக அழகாக விளக்கியுள்ளார் மகரிஷி. மேலும், ஆன்மா உய்வு பெறும் வழியினை, 280–ஆவது குறட்பா மூலம் விளக்குகிறார் மகரிஷி அவர்கள்.

எண்ணம், சொல், செயல் என்ற மூன்று வினைகளுக்கும் ஒழுக்க நெறி கூறுகின்றார் வள்ளுவர் என்று கூறி,

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" - (291)

என்ற குறட்பாவை எடுத்துக்காட்டுகிறார்.

உயிரினங்களிலே மனிதனிடம்தான் பேசும் ஆற்றல் அமைந் துள்ளது. பேசும் திறமையால்தான் தனி மனிதனால் சமுதாயமும், சமுதாயத்தால் தனி மனிதனும் பயனடையவும் உயர்வு பெறவும் முடிகிறது. ஒரு தனி மனிதனுடைய வாழ்வு விரிந்த உலக சமுதாயத் திற்கும், தொடர்ந்து வரும் சமுதாயத்தில் நீண்ட காலத்திற்கும் தொடர்பு உடையது. இதனால் ஒருவனுடைய பெருமை சிறுமை இரண்டுமே தனக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் தொடர்ந்து வரும் சந்ததிகளுக்கும், விரிந்த சமுதாயத்திற்கும் நலமும் தீமையும் பயக்க முடியும். இந்த விரிந்த கண்ணோட்டத்தில் ஆராயும் போதுதான் நாம் அறிந்து கொள்வது ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும், குணநலன் களும் நலமுடையதாக, வளமுள்ளதாகச், சிறப்புடையதாக இருக்க வேண்டியதன் அவசியம் உணரப்படுகிறது. இத்தகைய விரிந்த மனநிலையில் வாழ்ந்த தனது அனுபவங்களையும், பேரறிவின் விளக்கங்களையும் கொண்டு மக்கள் குலநலம் பெருக்க வேண்டி பற்பல தலைப்புகளில் அன்போடும் கருணையோடும் எண்ணம், சொல், செயல் என்ற மூன்று வினைகளுக்கும் ஒழுக்க நெறி கூறுகின்றார் வள்ளுவர் இப்பாவின் மூலம்.

புகழ் என்ற அதிகாரத்தில் **231–**ஆவது பாடலாக இந்தக் கருத்தை

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல தூதியமில்லை யுயிர்க்கு" **(231)** என்று ஒரு குறளாகவே கூறியுள்ளார். இதே கருத்தில்தான் பேச்சுக்கு ஒழுக்க நெறியாக "வாய்மை" என்ற அதிகாரத்தில் அறிவுரையும், அறவுரையுமாக மக்கள் சிந்தனைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. பேசும்போது உள்ளம், மனம், வாய்மொழி மூன்றும் இணைந்துள்ளன. எந்தப் பேச்சும் தனக்கோ பிறர்க்கோ, தற்காலத்திற்கோ பிற்காலத் திற்கோ, உடலுக்கோ, அறிவிற்கோ, துன்பம் விளைவிப்பதாக இருக்கக்கூடாது என்ற விரிந்த மனக் கண்ணோட்டம் அந்தக் குறளில் அடங்கியிருக்கிறது.

எந்த அளவில் ஒருவருடைய கருமையம், தூய்மையாகவும் வலுவுள்ளதாகவும் இருக்குமோ அந்த அளவுதான் மனிதனுடைய உயர்வும், சிறப்பும் அமையும். இந்த நியதிதான் தலைமுறைதோறும் தொடர்ந்து கருவமைப்புப் பதிவாகவும், ஒவ்வொரு தலைமுறையிலும் பெறும் அனுபவங்கள் அதோடு கூடிக்கொண்டும் வருகின்றன. இந்த வினைப்பதிவு நிதிதான் மனிதனுடைய ஆளுமைப்பேறு (Personality). ஒருவர் பேசும் பேச்சால் இந்த நிதி கெடாமலிருக்க வேண்டும். அங்கே ஒரு மையத்தில் ஒரு பதிவு இருக்க, வேறொன்று மனத்தால் மாற்றி எண்ணுவதும், மொழியால் முரண்பட உரைப்பதும்,

கருமையத்தை அலைக்கழிக்கும். கருமைய இயக்க நியதியையே சீர் குலைக்கும். உதாரணம் ஒரு குற்றவாளி நீதிபதியின் முன் நின்று பொய் சொல்லுகிறான். கருமையத்தில் அவன் செய்த குற்றம் அப்படியே பதிவாகி இருக்கிறது. அதற்கு மாறாக "நான் அக்குற்றம் செய்யவே இல்லையென்று கூறுகிறான்". கருமையத்தில் பதிவாகி யுள்ள உண்மை செய்தேன் செய்தேன் என்று ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. குற்றவாளி தண்டனைக்குப் பயந்து அதைச் செய்ய வில்லை என்று முயற்சியை வரவழைத்து மாற்றி நினைக்கிறான். பொய் சொல்லுகிறான். இந்த முரண்பாடான இயக்கத்தில் எழும் சீவகாந்த அலையால், கருமையம் தூய்மை கெடு கிறது. உள்ளே இருப்பது உண்மை. மனத்தால் அதை மாற்றுகிறான். வாயால் அந்த மாற்றத்தை வெளியிடுகிறான். உண்மைக்கு மாறாக (கருமையத்தில் இருக்கும் இறைவன் என்ற நீதிபதிக்கு முரண் பாடாக) மனமும், சொல்லும் அமையுமானால், அது உடலைக் கெடுக்கும், அறிவைக் கெடுக்கும். சமுதாய மக்களிடம் இவனுக் குள்ள மதிப்பைக் கெடுக்கும். பின் வரும் சந்ததிகளுக்கும், கேடுற்ற கருவமைப்புப் பதிவு தொடரும். எனவே வள்ளுவர் கூறுகிறார், வாய்மையே பேசுங்கள் என்று. அதற்குப் பொருள் கூறுவதுபோல வாய்மையென்பது யாதொன்றும் தீமையிலாத சொலல் என்ற விளக்கமும் தந்திருக்கிறார்.

உள்ளம், மனம், பேச்சு மூன்றும் ஒன்றாக இணைந்து, முரண்பாடு கொள்ளாது காத்தலே நாகரிகம் என்று கண்ணோட்டம் எனும் தலைப்பில் **580**–ஆவது குறளில் கூறியுள்ளார். நா – என்பது நாக்கு, அகம் – உள்ளம், இரிகம் – என்பது மனம்; இந்த மூன்றும் ஒன்றுபட்டு முரணில்லாமல் இயங்கக் காத்துக் கொள்ளும் ஒழுக்கமே நாகரிகம் என்பதாகும். நாகரிகம் எனும் ஒரு சொல் நா + அகம் + இரிகம் என்ற மூன்று சொற்களின் கூட்டு ஆகும். இந்த விளக்கத்தை வாய்மையென்ற தலைப்பில் **295**–ஆவது குறளில் கூறியுள்ளார்.

> *"மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு*
> *தானஞ் செய்வாரிற் றலை"*

> *"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னு*
> *மேமப் புணையைச் சுடும்"* - (306)

சினம் என்பது யாரிடம் இருக்கிறதோ அவர்களை அழித்து விடுவதோடு, அவருக்கு வாழ்வில் பேருதவியாக இருக்கும் அவர்களது நட்பையும் கெடுத்து விடும் என்று எடுத்துக் கூறுகிறது இக்குறள். பருஉடலில் விண்துகள் தொடரியக்கமான நுண்உடல்

எனும் சூக்கும ஆற்றல் எங்கும் விரைவாக உடல் முழுவதும் நிரம்பி ஓடிக்கொண்டிருக்கிறது. விண்துகள் விரைவான தற்சுழற்சி இயக்கம் உடையது. அதனால், அச்சுழற்சி விரைவிலிருந்து தொடர்ந்து ஒரு அலை தோன்றி, உடல் முழுவதும் இறைவெளியோடு கலந்து சீவகாந்தமாக இயங்குகிறது. மனத்தால் ஆகும் எண்ண இயக்கங் களும், செயல்களால் ஆகும் உடற்கருவி இயக்கங்களும், சீவகாந்த அலையில் திரள்களை உண்டு பண்ணுகின்றன. ஒவ்வொரு திரளும் குறிப்பிட்ட குணநலன்களை உடையது ஆகும். இவற்றைக் கருமையத்திலுள்ள சீவகாந்தச் சுழல் ஈர்த்துச் சுருக்கி நிழலில் நிழல் போன்று இருப்பு வைத்துக் கொள் ளுகிறது. இதுவே வினைப்பதிவு ஆகும். பிறகு அவ்வப்போதைய சூழ்நிலைகளுக்கும் மன அலைச்சுழல் விரைவுக்கும் ஏற்பக் கருமையத்தில் சுருங்கியுள்ள பதிவுகள் மூளையின் செல்களால் விரித்துக் காட்டப்பட்டு எண்ணங் களாகின்றன. அதற்கேற்றவாறு உடல் கருவிகள் தூண்டப்பட்டுச் செயல்களால் மலர்கின்றன. மனிதனுடைய கருமையத்தில் அளவற்ற செயல்திறமைகளும், அறிவின் ஆற்றல்களும் அமைந்துள்ளன. அவற்றின் முழுமையும் நோக்கமும் அவன் தோற்றத்துக்கும் மூலமான இறைநிலையை அறியவும் அடையவும் தான் ஆகும்.

புலன் கவர்ச்சியால் மனம் சிறுசிறு பொருளையும் இன்பங் களையும் துய்த்தலால் அறிவுத் திறமையும், ஆற்றலும் தடைப்பட்டு, தேக்கமுற்று, அதன் இயக்க விரைவு தன்முனைப்பு என ஆகிறது. இந்தத் தன்முனைப்பு, பொருட்கள்மீதும் மக்கள்மீதும் தொடர்பு கொண்டு, பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் ஆறு உணர்ச்சிவயமான குணங்களாகவும் மாறுகின்றன. இந்த உணர்ச்சிவயமான ஆறு குணங்களோடு மனிதன் செயல்புரியும் போதுதான், பொய், சூது, கற்புநெறி பிறழ்தல், கொலை, களவு எனும் ஐந்து பெரும் பழிச்செயல்களைப் புரிகிறான். மனிதகுல வாழ்வில் துன்பங்களும், சிக்கல்களும் பிணக்குகளும் போர்களும் உண்டாகின்றன.

இத்தகைய கேடுகளை விளைவிக்கும் உணர்ச்சி வயமான குணங்களில் சினமும் ஒன்று. சினம் ஒருவரிடம் எழும்போது உடலிலும் மனத்திலும், சுற்றத்தாருக்கும் சிலசில கேடுகள் ஏற்படும். அக்கேடுகள் வினைப்பதிவுகளாகி, அடிக்கடி அதே எண்ணம், அதே செயல், எழுந்து வாழ்வைத் துயர் அடையச் செய்யும்.

சீவகாந்த அலையே மனம். புலன்களை விழிப்பு நிலையில் இயக்கும்போது மன அலைச்சுழல் வினாடிக்கு 14 முதல் 40 வரையில் இருப்பதாகக் கணக்கெடுத்துள்ளார்கள். விஞ்ஞானிகள் அதற்குரிய

கருவியான எலக்ட்ரோ என்செப்லோகிராம் கொண்டு இந்த நிலையில் இயங்கும் மன அலைக்குப் பீட்டா அலையென்றும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். சினம் எழும்போது பீட்டா அலை மிகவும் விரைவு கொள்ளும். அதனால், சீவகாந்த ஆற்றலை மிகுதியாகச் செலவாக்கி விடும். இந்த விரைவான உணர்ச்சி வயப்பட்ட அலையால் காந்த ஆற்றல் குறைவுபடுகிறது. இயற்கை அதை உடனே சமன் செய்யத் தொடங்குகிறது. ஒவ்வொரு உயிர்த்துகளிலும் தற்சுழல் விரைவு அதிகமாகிறது. இதனால் காந்த ஆற்றல் கூடி அதன் இருப்பில் சமநிலைக்கு வருமேயானாலும், தொடர் விளைவுகளைச் சந்திப்போம். விரைவான தற்சுழற்சி உயிர்த்துகள் அடையும்போது, அவை ஒவ்வொன்றுக்கும் இடையில் இயல்பாக அமைந்துள்ள இடைவெளி அதிகமாகிறது. இதனால் சூக்கும உடலின் பருமன் பெருகுகின்றது. உதாரணம் தண்ணீரைச் சூடேற்றினால் நீர் ஆவியாகி அதன் பருமன் விரிவடைந்து, ஒன்றுக்கு நூறாக விரிவடைவது போல, தூல உடலுக்குள் இருக்கும் சூக்கும உடல் (உயிர் ஆற்றல்) விரிவு பெற்றால், உடலை விட்டும் அது வெளியே பிதுக்கம் பெறும். அப்படி வெளியேபோகும் உயிராற்றல் மீண்டும் உடலுக்குத் திரும்பாது. இதனால் உயிரின் திணிவு குறைந்து வலுகுறையும். மேலும் உயிராற்றல் விரிவு மூளையின் செல்களில் மோதும். என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று சிந்திக்கும் நிலையே மாறி ஒருவிதப் போதை நிலையுண்டாகும். பொருளை அழிக்கவோ, மக்களின் உடலுக்கும் மனதுக்கும் துன்புறுத்தவோ தக்க செயல்கள், முரட்டுச் செயல்கள் உருவாகும்.

சூக்கும ஆற்றலின் விரிவு இரத்தத்தை விரைவாக ஓடச் செய்து, இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும். இதனால், இருதயத் துடிப்பும், நரம்புகள் இயக்கமும் பாதிக்கப்பட்டு, கை, கால்கள் நடுக்கமும் உண்டாகும்.

இவ்வளவு விளைவுகளும் ஒரு தடவை சினம் கொள்ளும்போது சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ தவிர்க்க முடியாதபடி ஒரு மனிதனுக்கு ஏற்படுகிறது. அடிக்கடி சினம் கொள்பவர்கள் உடல் நலமும், மனவளமும் என்ன ஆகும்? இந்த விளக்கங்களை உள்ளடக்கியே, சினம் சேர்ந்தாரைக் கொல்லி எனப்படுகிறது. சினம் கொள்ளும் மனிதனின், வளத்தையே அழிக்கிறது என்பதுதான் பொருள்.

மேலும் ஒரு எச்சரிக்கை கொடுக்கிறார். “இனம் எனும் ஏமப் புணையைச் சுடும்” என்று. மிகவும் மதிப்புடைய இன்றியமையாத நட்பையும் சுற்றத்தையும் வெறுப்பு கொண்டோடச் செய்யும் என்பதே இதன் கருத்து.

யார் ஒருவர் அவர் நலனுக்காகவே அன்போடும் பணிவோடும் அக்கறையோடும் உதவி செய்கிறார்களோ அல்லது தொண்டு செய்கிறார்களோ அவர்கள் மீதுதான் அடிக்கடி சினம் எழுகிறது. நலம் செய்பவர்களைப் பாராட்ட வேண்டும். நன்றி செலுத்த வேண்டும். இதுதான் மனிதப் பண்பு. மாறாக அவர்மீது சினம் கொண்டால், அந்த இழிவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவர் வருந்துவார். வருத்த அலை சினம் கொண்டவர்களுக்குச் சாப அலையாகப் பதிவாகும். விளைவு உறவிலே உள்ள அன்பும் பிடிப்பும் குறையும் அல்லது முறிந்து போகும். சாப அலைப் பதிவினால் மனத்தின் அமைதி நிலை பாதிக்கப்படும். இவையெல்லாம் உணர்ந்த பேரறிஞர் திருவள்ளுவர் சினம் என்பது, அது யாரைச் சேருகிறதோ அவர் நலம் அழிப்பதோடு அவருக்கு உள்ள அன்புள்ள நட்பையும், உறவையும் கெடுத்துவிடும் என்று கூறுகிறார், உலக மக்கள் உய்ய வேண்டுமென்ற கருணை உள்ளத்தோடு.

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று" - (332)

என்று கூறுகிறார். நிலையாமை என்ற அதிகாரத்தில் இக்குறள் வருவதால், செல்வம் நிலையாமை குறித்துத் தெளிவான அறிவு பெற்று, அதனை நல்ல வழிகளில் பயன்படுத்த வேண்டும் என்று எடுத்துரைப்பதே இக்குறளின் நோக்கம்.

பொருள், இன்பம் இரண்டையும் முயற்சியின்றியே பெறுவதற்கு அதிகாரமும், புகழும் உதவுவதால் – பொருள், புலனின்பம், அதிகாரம், புகழ் என நான்கு வகைகளில் மனிதனிடம் அவா உயர்ந்து கொண்டே போகிறது. இந்த நான்கு வாழ்க்கை வளங்களும் நிலைப்பதேயில்லை. இந்நான்கும் எந்த அளவு கிட்டினாலும் மனம் நிறைவுபெறாது. மேலும் இத்தகைய அவாவை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் மிக்க முயற்சியால், உடலுக்கும் மனத்துக்கும் துன்பம். முயற்சியில் நினைத்தபடி வெற்றி கிட்டாவிட்டால் சோர்வு ஏற்பட்டுத் துன்பம். இந்நான்கில் வெற்றி கிட்டினால் அவற்றைத் துய்க்கும்போது அளவு முறை மீறல், மாறல் ஆகிய விளைவுகளாலும் துன்பமே. எனவே பொருட்செல்வம் நிலையற்றது என அறிந்து, வருவதிலும் போவதிலும் மனம் சலிக்க வேண்டாம் என்று அறிவுரை கூறுகிறார் வள்ளுவர்.

நிலையாத செல்வங்களை அது வந்தடைந்தபோதே நல்ல விளைவைத் தரும் முறையில், திட்டமிட்டுச் செலவு செய்து பயனடைந்து விடவேண்டும் என்பது குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது இப்பாவின்மூலம்.

அறமும் பொருளும்

"அறம் அன்பு அருள் தொண்டு மக்கள் வாழ்வில்
அசலாகப் பரவி பயன் விளையுமென்றால்
அறம் என்ற நீதிக்கே முரண் இல்லாத
அடிப்படையில் பொருள் துறை நன்கமைய வேண்டும்
அறம் அதனைக் குலைத்தேனும் வாழ்க்கைத் தேவை
அவரவர்கள் முடிக்க வேண்டும் எனும் நிர்பந்தம்
அறம் தழைக்க விடுமோ ஆராய்ந்து தேர்வீர்
அருள்வழியில் பொருள் துறையைச் சீர்செய்வோமே.

என்ற அவர்தம் பாடலை இங்கு எண்ணுவோம்.

"பொருளல்ல வற்றைப் பொருள்என்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" - (351)

மனிதப் பிறவியின் பெரு நோக்கம் அறிவில் உயர்ந்து மெய்ப்பொருள் உணர்ந்து அமைதி பெறுவதாகும். சிந்தனை ஆற்றல் பெருகியபோது மனிதனுக்கு அவன் பிறவியின் நோக்கம், நான் யார்? மெய்ப்பொருள் எனப்படும் தெய்வ நிலை எது? என்னும் வினாக்கள் எழுகின்றன. நான் என்பது உடலா, உயிரா, மனமா மற்றும் ஏதோ ஒன்றா எனச் சிந்திக்கிறான். எளிதில் முடிவு காண இயலவில்லை. இந்த நிலையில் திகைக்கும் சிந்தனையாளனுக்கு ஒரு குறிப்புக் காட்டுகிறார். நிகழ்ச்சிகளுக்கு மூலமான, பிறப்பிடமான அசைவற்ற நிலையே பொருள் என மறைமுகமாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

எது இயங்கிக் கொண்டும் அதன் நிலையில் மாற்றம் பெற்றுக் கொண்டும் உள்ளதோ அது நிகழ்ச்சி. நிகழ்ச்சியெனும் இயக்கத்தைக் கழித்துவிட்டால் மீதி நிலையான ஒன்று என உணரப் பெறுகிறதோ அதுவே பரமாணு எனும் நுண்பொருள். தற்சுழலோடு விரைவாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பௌதீகப் பிரிவு. பரமாணுவின் இயக்க விரைவைக் கழித்துவிட்டால் மீதி என்ன? ஒன்றுமே இல்லை. அப்படியெனில் சுத்த வெளியோடு கலந்துவிட்டது என்பதே உண்மை. பரமாணுவின் ஆதி நிலையைச் சுத்த வெளியென்றே கொள்ள வேண்டும். அசைந்தால் அணு. நிலைத்தால் தூயவெளி. எனவே தூயவெளியே பொருள் நிலை; அதன் நுண்ணியக்க நிலையே பரமாணு.

பரமாணுக்கள் இணைந்த தொடர் நிகழ்ச்சியே இந்த மலர். பிரபஞ்சத்தில் நாம் காணும் தோற்றங்கள் அனைத்தும் நிகழ்ச்சிகளே! நிகழ்ச்சிக்கு மூலம் சுத்தவெளி; இதுவே பொருள்; மொழி வழக்கில் தோற்றங்களைப் பொருள் என்று புலன் மயக்கில் கூறப்பட்டது;

சுத்தவெளியே உண்மையான பொருள் என உணர்ந்தபின் அதனை மெய்ப்பொருள் எனக் கூறுகிறோம்.

நிகழ்ச்சிகளாகிய இயக்கங்களையே மயக்கத்தால் பொருள் என எண்ணியிருந்த நிலைமாறி, இயங்கும் பொருட்கள் அனைத்திலும் நிலையான மெய்ப்பொருளை உணர்ந்து தெளியும் பெரும் பேறு, மெய்விளக்கத் தவத்தால் பெற்ற நுண்ணறிவு ஆராய்ச்சியால் மாத்திரம் பெற முடியும். இதன் அவசியத்தை வள்ளுவரும் "*பொருளல்ல .... பிறப்பு*" எனக் கூறியுள்ளார்.

எல்லா இயக்கங்களுக்கும் 1. இறைவெளி, 2. விண் என்ற இரு பொருட்களே அடிப்படையாகும். இவற்றில் இறைவெளியென்பது இருப்பு நிலை. "விண்" எனும் நுண்துகள் இயக்க அலை. இருப்பு நிலையில் இல்லாததொன்றும் பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளில் இல்லையெனும் உண்மை, மனிதனுடைய சிந்தனையாற்றல் தக்கப் பயிற்சியினால் முழுமையாகப் பூரித்து மலர்ந்தபோதுதான் விளங்குகிறது. அவ்வாறு அடக்கம் பெற்றிருந்த யாவும் விரைவு, அறிவு எனும் பேராக்கத் திறன் இயல்பூக்கமாக முதலில் விளைந்த மலர்ச்சியே நுண்துகள் எனும் "விண்". விண் என்பது பூரணப் பொருளான இறைவெளியின் ஒரு சிறு பகுதியேயாகும். இந்த நுண்துகள் சுற்றிலும் சூழ்ந்துள்ள இறைவெளியின் சம அழுத்தத் தினால் சுழலியக்கமாகியது. இந்தக் கருத்தைக் கொண்டு இறைவெளியைச் சிவம் என்றும் விண் துகளைச் சக்தியென்றும் மெய்விளக்கம் பெற்ற பெரியோர்கள் பெயரிட்டு வழங்கினார்கள். விண்துகளின் விரைவான சுழற்சியால் சுற்றிலும் உள்ள இருப்பு நிலையோடு உரசல் உண்டாகிறது. இந்த உரசலிலிருந்து எழும் அலையே விரிவு அலை. இந்த விரிவு அலை தள்ளும் ஆற்றலாகிறது. இறைவெளியான இருப்பு நிலை ஈர்ப்பு ஆற்றலாக உள்ளது. இந்த இரண்டும் இணைந்து இழைந்தியங்கும் பேராற்றலே காந்தம் எனும் அலையாற்றலாகும். புலன் உணர்காட்சியாக விளங்கும் பேரண்ட இயக்கங்கட்கும் புலன்களுக்கும் எட்டாத மறைபொருளுக்கும் இடையே தொடர்பு கொண்டு இயங்கும் பேராற்றல் காந்தம். விண்துகள்தான் பௌதீகப் பொருட்களுடைய முதல்நிலை. ஆகாசம், விண் துகள்களில் கூட்டுச் சேர்க்கையின் திணிவு நிலைகளுக் கேற்பக் காற்று, அடர்த்திக் காற்று, நீர், கெட்டிப் பொருள் என்று மேலும் நான்கு பௌதீகப் பிரிவுகள் உண்டாயின.

நாம் தோற்றமாகக் காணும் எல்லாப் பொருட்களுமே விண்துகளின் கூட்டுதான். விண்துகளானது விரைவான தற் சுழற்சியுடைய அலை இயக்கம். எனவே விண்துகள்களுக்கிடையே

இறைவெளி நிறைந்துதானே இருக்கிறது. அந்த இறைவெளி விண்துகளிலிருந்து எழுந்த விரிவலையோடு சேர்ந்து ஈர்ப்பு, தள்ளல் என்ற இரட்டை ஆற்றலுடைய காந்தமாகியது. எனவே எல்லாத் தோற்றங்களுக்கும் இடையே ஊடுருவி நிறைந்திருப்பது காந்தமே யாகும். இக்காந்தமானது அணுக்கூட்ட இறுக்க நிலைகளுக்கேற்ப அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணமாகி அவை சேர்ந்த அலைகளை ஒவ்வொரு பொருளிலிருந்தும் பரப்பிக் கொண்டே இருக்கிறது. விண் கூட்டால் தோற்றங்கள், பருப்பொருட்களும், அவற்றிடையே அழுத்தமாக இருக்கும் காந்த ஆற்றல் தன் மாற்றத்தால் மின் ஆற்றல் (ஒளியும், ஒலியும்) இரசாயனங்கள் (சுவையும், மணமும்) இவற்றின் பல்வேறு விகிதாச்சார கூட்டுக் குணங்களும் உண்டாகின்றன. இந்த உண்மையினை அடிப்படையாகக் கொண்டு; **"பொருளல்ல வற்றைப் பொருளாகக் காணும் மருளானாம் மாணாப் பிறப்பு"** எனும் குறளுக்கும், மற்ற மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் வரும் குறள்களுக்கும் பொருள் காண வேண்டும் என்கிறார் மகரிஷி அவர்கள். பொருள் அல்லாத ஒன்றைக் கட்புலன் வரையில் எல்லை கட்டி, விண்துகள்களின் கூட்டு இயக்கத்தைப் பொருள் என மதிப்பது மருள், மயக்கம் என்று கூறுகிறார் வள்ளுவர். இவ்வாறான பொய்யான கருத்தைத்தான் மாயை என்று கூறுகிறார்கள் வேதாந்திகள். தோற்றம் **பருப்பொருள்**, ஆக்கம் **விண் துகள் கூட்டு**, உட்பொருள் **இறைவெளி**. இவ்வாறு தோற்றங்களில் அடங்கிய மூன்று நிலைகளையும் அறிந்து தெளிவோடு அதனோடு தொடர்பு கொண்டால் அதுவே விழிப்பு நிலை. இதனை,

தெய்வ நிலை பேரறிவு வேறு என்றால்
திசை மாறும் சிந்தனைக்கு மயக்கம் ஆகும்
தெய்வம் என்றால் பொருள் நிலையாம்; அறிவு என்றால்
தெய்வத்தின் இயக்க நிலையனைத்து மாகும்;
தெய்வமே அறிவாக இயங்கும் பேற்றைத்
திருவிளையாடல் என்றார் தெளிந்த நல்லோர்;
தெய்வம் நான் எனதாற்றல் அறிவு என்று
தெளிந்திடுவாய் மனிதப் பிறப்பெய்தும் முக்தி.

என்ற பாடலின் மூலம் மனிதப் பிறப்பு அடையும் முக்தியைப் பற்றி உணரலாம்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" - (355)

'கடலும் மலையும் எங்கள் கூட்டம், காக்கைக் குருவி எங்கள் ஜாதி' என்ற பாரதியார் பாடலையும் உவமையாக ஏற்றுக்

கொள்ளலாம். கடல், மலை, நான் எல்லாமே விண்துகள் சேர்ந்த கூட்டம்தான். காக்கைக் குருவி, நான் எல்லாம் இன்பதுன்ப உணர்ச்சிகளையுடைய உயிரினங்கள். பிறப்பு, இறப்பு, பசி, இனவிருத்தி அனைத்திலும் நாங்கள் ஒன்றுதான் என்று கூறுகிறார்.

எந்தப் பொருளிலும், பருஉடல், நுண்ணுடலாகிய விண், காரணப் பொருளாகிய இறைவெளி (தெய்வ நிலை) இம்மூன்றையும் அறியப் பழகிக் கொண்டால், தோற்றங்களில் உள்ள வேறுபாடுகளைக் கொண்டு குழப்பமோ, பிணக்கோ அறிவிற்கு எழாது.

மெய்ப்பொருளும் பிரபஞ்சமும்

ஆழ்கடல்போல் மெய்ப்பொருளாம்
அலைகள் போல் உருவனைத்தும்
ஊழூழி நிற்பதுவும்
உருவெடுத்து மாறுவதும்.

இருளும் - ஈசனும்

மாசற்ற ஒளி ஊடே மறைந்திருக்கும் இருள்போல்
ஈசன் அறிவில் இருக்கும்நிலை.

"ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாய்ப்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு" - (357)

மனமானது தவத்தாலும் ஆராய்ச்சியாலும் அமைதி நிலைக்கு வந்து, இறைநிலையை உணர்ந்து கொண்டால், அதன் பிறகு அவர் ஆற்றும் செயல்கள் அனைத்தும் நல்வினைகளாகவே அமையும்; கருமையத்தில் வினைப்பதிவுகள் ஏதுமிருக்கா; இதனால் கருமூலம் பிறவி உண்டாகாது. சந்ததி இல்லாமலிருந்தால் வினைப்பதிவு மிச்ச மில்லை என்று கருதக்கூடாது. கருமையத்தில் வினைப்பதிவுகள் மிச்சமிருக்குமேயானால் உடலை விட்ட பின்னும் அந்த ஆன்மா, அப் பதிவுகளைத் தூய்மை செய்துகொள்ள, உலகில் வாழ்ந்து கொண் டிருக்கும் ஒத்த குணநலமுடைய ஒருவர் ஆன்மாவோடு இணைந்து, இயங்கி இன்ப துன்பங்களையடைந்து தூய்மை பெறவேண்டும். மெய்யுணர்வு பெற்று, அறநெறி வழுவாமல் வாழ்ந்தவர், வாழ்பவர் களுக்குக் கருத்தொடராகப் பிறவியுமில்லை; உடலை விட்டபின், மற்றொரு உடலில் புகவேண்டிய தேவையும் இல்லை.

பஞ்ச பூதங்களால் அமையப் பெற்ற ஒரு பரு உடலில் சீவகாந்தம் சுழன்றோடிக் கொண்டிருக்கும் வியத்தகு நிலையமே சீவன் எனப்படுகிறது. சீவகாந்த ஆற்றலின் விரைவான சுழற்சியால் அந்தப் பருவுடல் மையப்பகுதியில் காந்தச் சுழல் ஈர்ப்பு மையம்

அமைகின்றது. சுழற்சி இயக்கம் உடைய எந்தப் பொருளிலும் இத்தகைய ஈர்ப்பு மையம் அமைவது இயற்கை நியதி. உதாரணம், விண்துகள் மையப்பகுதி ஈர்ப்பு மையம் கவர்ச்சி ஆற்றலாக இருக்கிறது. விண்துகள் கூட்டு இயக்கமாகிய எல்லாக் கோள்களிலும் ஈர்ப்பு மையம் அமைந்துள்ளது. இதனைக் கோள் ஈர்ப்பு மையம் என வழங்குகிறோம். இதே போன்று எந்தச் சீவனானாலும் அதன் மையப்பகுதியில் சீவகாந்தக் கருமையம் அமைந்துள்ளது. இந்த மைய ஈர்ப்பு நியதியால் விண்துகள்கள் ஒன்றை ஒன்று ஈர்த்துக் கூட்டமாக அமைய முடிகிறது. எந்தக் கோளின் மீதும் வைக்கும் எந்தப் பொருளையும் மையம் நோக்கி இழுக்கின்றது. இதேபோல் ஒரு சீவனின் வெளிப்புறத்தில் நிலவும் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் இவற்றின் அலைகளைக் கருமையம் ஈர்த்துச் சுருக்கி இருப்பு வைத்து, வினைப்பதிவாக நிலைபெறச் செய்கிறது.

இத்தகைய சீவகாந்தச் சுழற்சியாக அமையும் கருமையத்தில் உடலில் தனித்தனியே இயங்கும் விண்துகள் தொகுதி இயக்க மையம் அமைத்துக் கொள்கிறது. உண்ட உணவு; இரசம், இரத்தம், சதை, கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை (மூளை), வித்துக் குழம்பு ஆக ஏழுவரிசைகளின் ஒவ்வொன்றாக மாற்றம் பெறுவதில், உற்ற வயது வந்தவுடன் வித்துக் குழம்பும் அதே காந்த மையத்தில் வந்து சேர்கிறது. வித்துக் குழம்புதான் உயிர் என்னும் விண்துகளை ஓடாமல் ஓரளவு பிடித்து வைத்துக் கொள்கிறது. உயிர்த்துகள்தான் தன் விரைவான தற்சுழற்சியால் அலைகளைப் பரப்ப, அவை இருப்பு நிலையான இறைவெளியில் கூடிச் சீவகாந்தமாகிறது. சீவகாந்தம், உயிர்ச்சக்தி, வித்துக் குழம்பு மூன்றும் சேர்ந்ததே கருமையம். இங்குத்தான் சீவனின் பத்து இந்திரியங்களாலாகும் செயல்களில் விளையும் அலைகள் அனைத்தும் ஈர்க்கப்பட்டு சுருக்கி இருப்பாக வைத்துக் கொண்டு, அவ்வப்போது எண்ணங்களாகவும் செயல்களாகவும் மலர்கின்றன. இந்தக் கருமையம்தான் ஆன்மா எனப்படும். பேரியக்க மண்டலப் பரிணாம மலர்ச்சிக்கு மூலப்பொருளான இறைநிலை யிலிருந்து விண் தோன்றி, அவை பஞ்ச பூதங்களாகி, கோள்களாகி உயிரினம் பலவாகி, உடல் கட்டுக்கோப்பிலும் மன இயக்க நுண்மையிலும் சிறப்பான மனிதனாக உள்ளவரையில் எல்லா இயக்கங்களும் காந்த அலைகளாகப் பல்வேறு திரள்களைப் பெற்ற சிறப்புத் திரள்களாக அமைந்துள்ள இடமே கருமையம். இதுவே ஆன்மா, அகம், உள்ளம் என்று வழங்கப்படுவதாகும். ஆன்மாவில் தான் இறைநிலை உயிர்நிலை காந்த ஆற்றல்கள் எனும் மூன்று மறைபொருட்கள் அடங்கியுள்ளன. எனவே, ஆன்மாவானது பேரியக்கக்

கள இயக்கங்களைச் சுருக்கி இருப்பு வைத்திருக்கும் அருள் திருக்கோயிலாகும். ஒரு சீவனின் உடல் கட்டு முழுவளம் பெறும் காலம் வரையில் ஆன்மா மூளையிலேயே இடம் பெற்றுப் பின்னர்த் தான் கருவாய்க்கும் எருவாய்க்கும் மத்தியில் மூலாதாரம் என்ற அமைப்பாக இயங்குகிறது. இந்தச் சீவகாந்தத்தில் முதற்பொருள் தெய்வநிலை – இறைவெளி, இதுதான் அறிவு ஆகும். துணைப் பொருள் விண்ணின் விரிவலை, இதுவே மனம் ஆகும்.

"ஐயப் படாஅ அகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்" - (702)

என்ற குறளை இங்கு நினைவுகூர வேண்டும்.

ஒருவர் உடலை விட்டு உயிர் பிரியும்போது கருமையத்தில் அதைத் தாங்கும் கருவியாக இருந்த வித்துக் குழம்புதான் பிரிந்து போயிற்று. வினைப்பதிவுகளைச் சுருக்கி வைத்திருக்கும் காந்த ஈர்ப்பு மையமும் போதிய உயிர்த்துகளும் உலக ஈர்ப்பு ஆற்றலிலிருந்து விடுபட்டு, அதனில் அடங்கியுள்ள வினைப்பதிவுகளின் அழுத்த அளவுக்கேற்பக் காற்றிலே மேல்நோக்கி மிதந்து கொண்டிருக்கும். உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நபர்களில் ஒத்த வினைநல முடையோர் கருமைய ஈர்ப்பால் அந்த ஆன்மா ஈர்க்கப்பட்டு, இணைந்த பின்னர், தன் வினைகளைக் கழித்துத் தூய்மை பெறும்; முத்தி நிலையான இறைவெளியாகும்,

மெய்ப்பொருளே உள்ளடங்கியிருந்த ஆற்றல், முகிழ்ந்து விண் ஆகி, விண் கூடித் தோற்றங்கள் ஆகியவைதான் சடப் பொருட்களும், சீவ இனங்களும் என்ற பரிணாம சரித்திரம் அறிவுக்கு விளங்கி விட்டால் பேரியக்க மண்டலத்தை யார் படைத்தது என்ற குழப்பமும் தர்க்கவாதமும் இருக்காது என்று மிக நுட்பமாகக் கூறுகிறார் வள்ளுவர்.

ஊழ் என்ற சொல் மிகவும் ஆழமான கருத்துடையது. அறிவிலும், உடலிலும், வாழ்விலும், சமுதாயத்திலும் பிரிக்க முடியாதவாறு இணைந்து மனிதனை வழிநடத்தும் ஒரு மதிப்புடைய தத்துவம் ஊழ்.

தெய்வம் என்ற சொல்லின் கருத்தை அனைவரும் மதிக்கிறோம். அதே தத்துவம் அணு முதல் பேரியக்க மண்டலம் முழுமையும் நிறைந்து அந்தந்தத் தோற்றத்தின் அசைவு விளைவுகள் அனைத்திலும் இணையற்ற ஆற்றலாகச் செயல்புரிந்துவரும் காண முடியாத, ஆனால் மறுக்க முடியாத ஒரு தத்துவம் ஊழ். தெய்வம் என்ற சொல்லில் எவ்வளவு கருத்துகள் அடங்கியுள்ளனவோ அந்தத் தெய்வத்தின் மலர்ச்சியான பேரியக்க மண்டலத்தில் பரிணாமம்

இயல்பூக்கம் என்ற இருவித ஆற்றல்களால் விளங்கும் செயல்கள், பயன்கள் அனைத்தையும் இணைத்து ஒன்றாகக் காட்டும் ஒரு சொல். இறையாற்றல் என்பது என்னவென விளங்கிக் கொள்ள மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களில் விளக்கியுள்ளார். இந்த எல்லாவற்றிற்கும் உட்பொருளான உண்மையை அறியாமலோ அலட்சியம் செய்தோ மறந்தோ மனித மனம் செயல்படும் போது அது தன்முனைப்புப் பெறுகிறது. அந்தத் தன்முனைப்புதான் அவாவாக எழுச்சி பெற்றுப் பொருளுடைமை எண்ணத்தில் "தனது" என்றும், பிறரை அடக்கியாளவேண்டும் என்ற எண்ணத்தில் "தான்" என்றும் முனைந்து அந்த மயக்கத்தில் இறை நிலையின் பேராற்றலையும் அதன் வினைக்கு ஏற்ற விளைவைத் தவறாமல் அளிக்கும் நீதியையும் மறந்து உணர்ச்சிவயமாகிறான். இந்த மயக்கத்தில் விளையும் மனோ நிலைகள்தாம் பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்ற இந்த ஆறு உணர்ச்சிவய குணங்கள். இவற்றில் பிறப்பனவே பொய், சூது, கொலை, களவு, விபச்சாரம் எனும் ஐந்து பெரும் பழிச்செயல்கள். இவையனைத்தும் விளக்கிக் காட்டி நல்வழிப்படுத்தும் அருளுரையே அவா அறுத்தல் ஆகும்.

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்" - (373)

தான் இதுவரையில் ஆற்றிய செயல்கள் பதிவாலும், கருத்தொடராக வந்த முன்னோர்கள் செய்த வினைகளின் தொகுப்பாலும், ஒவ்வொருவருடைய அறிவுத்திறன் அமைப்பாக உருவாகிறது. அத்தகைய ஒவ்வொரு பதிவும் தக்ககாலத்தில் சூழ்நிலையில் எண்ணங்களாகவும் செயல்களாகவும் மலர்ந்து, அதற்கேற்ப இன்பதுன்ப விளைவுகளைத் தருவது இயற்கை நியதி. இதுவே ஊழ் வலிமை அல்லது ஊழின் நீதி ஆகும்.

ஒருவர் தனது எண்ணம், சொல், செயல்களால் செய்யும் எந்த வினையானாலும் அதனால் உந்தப்பட்ட சீவகாந்த அலையால் வினைத்திரள் அலையாகி அது சீவகாந்த ஈர்ப்பு மையமாகிய கருமையத்தில் சுருங்கி இருப்பாகி விடுகிறது. (கம்ப்யூட்டரில் நாம் பதிவு செய்யும் தகவல்கள் அனைத்தும் அதன் சிப் எனும் ஈர்ப்பு மையத்தில் சுருங்கிப் பதிவாவதுபோல்) அவையனைத்தும் ஒருவர் வாழ்நாள் முழுவதும் காலம், இடம், சூழ்நிலைகள், தேவைகள் இவற்றிற்கேற்ப எண்ணங் களாகவும், செயல்களாகவும் மலர்ந்து பயன் விளைவிக்கும். இவை யாவும் இயற்கையின் நியதியால் நடைபெறுகின்றன. இவற்றில் இயற்கை இனிமைக்கு முரண்பட்ட பதிவுகள் (பழிச்செயல்கள் பதிவுகள்) உடலில் நோயாகவும், மனத்தில்

குழப்பங்களாகவும் வெளிக்காட்டும். வினைப்பயனும் அதன் வலுவான விளைவுகளும். இத்தகைய வினைகளின் அழுத்த வலுவை ஊழ்வலிவு என்று கொள்ளவேண்டும். மருத்துவத்தால் ஒரு நோய் குறைவதும், மீண்டும் அது அதிகமாவதும் ஊழின் வலிமையே ஆகும்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது" - (377)

ஊழ் என்பது இறைநிலைக் குறிப்பு. பேரியக்க மண்டல பரிணாமத்தில் ஆதியாக உள்ள முழு முதற்பொருளாக இருந்தது இறைவெளி; அது எங்கும் நிறைந்தது; பேரியக்க மண்டலத்திலுள்ள கோடிக்கணக்கான சூரியன்களையும் கோள்களையும் தன்னிலே மிதக்க விட்டுக்கொண்டு, முறையாக இயக்கிக் கொண்டிருக்கும் எல்லாம் வல்லது முழு முதற் பொருள்; இதுவே ஊழ் எனப்படுகிறது. ஊழ் எனும் இறைவெளியில் அடக்கம் பெற்றிருந்த விரைவும் அறிவும் நுண்ணிய துகளான "விண்"ணாக முகிழ்ந்தெழுந்த இயக்கத்தில் விளைந்த அலைகள், இறைவெளியோடு சேர, வான்காந்தம் என்ற பிரபஞ்சப் பேராற்றலாகிறது. இந்தப் பேராற்றல், பேரியக்க மண்டலத்திலுள்ள எல்லாப் பொருட்களுக்கும் வடிவம், தன்மை, இயக்க ஒழுங்கு இவற்றை அமைத்து ஒவ்வொரு அசைவுக்கும் இடம், காலம், தொடர்பு கொள்ளும் பொருளுக்கேற்ப விளைவுகளை அளித்துக் கொண்டிருக்கிறது. இதே வான் காந்தம் உயிரினங்களில் சீவகாந்தமாக இயங்குகிறது. உடலில் ஏற்படும் அசைவுகள், மனத்தில் ஏற்படும் விருப்பங்கள் இவற்றிலிருந்து எழும் அலைகளைச் சுருக்கிக் கருமையத்தில் பதிவாக வைத்துக் கொண்டு காலத்துக்கும், இடத்துக்கும், மன அலைச்சுழலுக்கும் ஏற்ப எண்ணங்களாகவும், செயல்களாகவும் மலரச் செய்கின்றன. தீவினைப் பதிவுகள் உடலில் நோயாகவும், மனத்தில் களங்கமாகி, அமைதி குலைத்தும் வெளிக்காட்டும் இத்தகைய வினையும் – பயனும் என்ற நியதியை "விதி" – இயற்கை விதி என்று வழங்குகிறோம். இது வான்காந்த ஆற்றலால் நடைபெறுகின்றது. வான்காந்தத்தில் முதற்பொருளாக இருப்பது இறைநிலை; துணைப்பொருளாக இருப்பது விண்துகளின் சுழலலை; இதனால் வினைக்கேற்ற விளைவு வரும் என்பது இறைநிலையைக் குறித்து ஊழ்தான் வினைக்கு விளைவைத் தருகிறது என்று பொருள்பட மேலோர்கள் கூறுகிறார்கள்.

தீவினையின் பயனாக உடல் உறுப்புகள் குறைவு பட்டோ, அல்லது பூர்வ கர்ம நோயோ ஒருவருக்கு இருக்குமானால், அவர் எவ்வளவுதான் செல்வம் சேர்த்திருந்தாலும், அதை எவ்வாறு அனுபவிக்க முடியும்? இதைத்தான் சிந்திக்க வல்லவர்களுக்குத்

தெளிவுபட உரைக்கிறார் வள்ளுவர். "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தலரிது" என்று.

"மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல்" - (453)

எந்தச் செயலும் எண்ணத்தால் நடைபெறுகிறது. செய்த செயல்கள் கருமையத்தில் பதிவாகி மீண்டும் மீண்டும் எண்ணங் களாகின்றன. எண்ணங்களும் செயல்களும் அவற்றின் விளைவு களும் பதிவாகி அதுவே மனிதனிடம் தன்மையாக, ஆளுமைப் பேறாக அமைகின்றது. இதுவே வினைப்பயன் என்னும் நியதி. ஒருவர் பிறந்த பிறகு ஆற்றும் எல்லாச் செயல்களும் பதிவாகக் கொண்ட நிலை ஒன்று. பிறக்கும்போதே பெற்றோர்களிடமிருந்து கருத்தொடராக வந்த பதிவு ஒன்று. இதனை முற்பிறவி வினை என்பார்கள். இந்த இரண்டுவித வினைப்பயனை உடைய உருவமே மனிதன். கருத்தொடர்வினை, இப்பிறவி வினையென்ற இரண்டையும் கூட்டினால் என்ன தொகை வருமோ அதுவேதான் ஒருவருடைய குணநலப்பேறாக அமைகின்றது. இந்தக் கூட்டுத் தன்மைக்கேற்ப அவ்வப்போது ஒருவருக்குப் பொருள் மீதும் மக்களோடும் செயல்படும் விருப்பமும் செயலார்வமும் ஏற்படுகின்றன. இதுதான் "உணர்ச்சி" என்று கூறப்படுகிறது. மனநிலைக்கேற்ப உணர்ச்சிகள் அமையும். ஆயினும் ஒருவர் மன உணர்ச்சியின் தன்மைகளைப் பிறர் கண்ணால் பார்த்து அறிந்து கொள்ளமுடியாது. அவர் குணநலத் தன்மைக்கேற்ற குணநலம் உடையோர்களை விரும்பியும் சார்ந்தும் செயல்புரிந்து வாழ்வார். ஒருவர் எத்தகைய தன்மையுடையோர் களோடு கூடிச் செயல் புரிகின்றார் வாழ்கிறார் என்ற உண்மை கண்டால் அவர் மனநிலையில் பண்பாட்டில் அறநெறியில் எந்த நிலையில் உள்ளவர் என்று தெரிந்து கொள்ளலாம் என்பதே இக்குறள் கூறும் விளக்கமாகும்.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்" - (504)

தனக்கும் பிறருக்கும் தற்காலத்திலும் பிற்காலத்திலும் துன்பம் எழாத விழிப்போடு, தனது எண்ணங்களையும், செயல்களையும் முறைப்படுத்திக் கொள்வதே, ஒழுக்கம் ஆகும். இத்தகைய ஒழுக்க உணர்வு மீறிய ஒருவருக்கும், சில சமயம் சிந்தனைக்குச் சிக்கல் ஏற்படுகிறது.

ஒரு செயலைச் செய்ய வேண்டியது அவசியம் ஆகிறது. அதனைச் செய்தால் சிலருக்கு நலமும், பலருக்குத் தீங்கும்

உண்டாவதை, சிலருக்குத் தீங்கும், பலருக்கு நலமும் உண்டாவதை உணர்கிறான். ஒரு செயலைச் செய்யாது விடுத்தாலும் அதேபோல நலம் சிறிதும், தீமை பெரிதும் அல்லது நலம் பெரிதும், தீமை சிறிதும் எழும் என்பதையும் உணர்கிறான்; இந்த இடத்தில் சிந்தனை குழப்ப மடைகிறது. அந்தச் செயலைச் செய்வதா அல்லது செய்யாமலிருப்பதா என முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறான். இந்த மனநிலையில் இருந்து விடுபட்டு, விளக்கம் பெற்றுச் சரியான செயலை அல்லது முறையைப் பின்பற்ற ஒரு வழியை வள்ளுவர் காட்டுகிறார்.

இன்பம், துன்பம் என்ற விளைவுகளின் ஆழம், இவற்றைப் பெறும் மக்கள் எண்ணிக்கை, நலம் தீது நீடிக்கும் காலம் இவற்றைக் கணித்து, விரிந்த நோக்கில் முடிவுசெய்து, செயல்படுத்த வேண்டும்.

விளைவறிந்த விழிப்பில் விரிந்து ஆராயும் அறிவோடு நலம், தீது அவற்றின் மிகுதி இவையுணர்ந்து முடிவெடுத்து, செயல் புரியவேண்டும் என விளக்குகிறது இக்கவி.

"ஐயப் படாஅது அகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்" - *(702)*

உடலோ பல அணுக்களால் கட்டப்பட்ட ஒரு தோற்றம். அணுவோ எல்லாம் வல்ல அருட்பேராற்றலின் நுண்ணிய சுழலலை. அணுவினால் கட்டப்பட்ட ஒரு தோற்றம் இந்த உடல். உடலுக்குள் அந்த நுண்ணியப் பொருளாக உள்ள அணுவோ உயிர். அணு திரட்சியில் உடலாகவும் இருக்கிறது. அதன் திணிவு இயக்க நிலையில் உயிராகவும் இருக்கிறது. உயிருக்கு மத்தியில் தொடங்கிப் பேரியக்க மண்டலம் முழுவதும் விரிந்து எல்லையற்ற விரிவு உடைய ஓர் அரூப நிலையே அறிவு.

அறிவு நிலையிலேயே உன்னை உடலாகவும், உயிராகவும், அறிவாகவும் உணர்வாய். உனது அறிவு எல்லையற்றது; விரிந்து அரூபமாக உணரும் நிலையில் அறிவே தான் "பிரம்மம்" என்ற உண்மையை உணர்வாய். ஆன்மாவை அதன் இருப்பு, இயக்கம், விளைவு ஆகியவற்றைச் சிறிது கூடச் சந்தேகமின்றி உணர்ந்து கொள்ள வல்லவர் இறைவனாகவே மதிக்கப்படத்தக்கவர் என்று அத்தகைய அறிவின் மதிப்பையும் அதையறிய வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகிறார்.

"கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்" - *(845)*

பொய்யா ஒழுக்கத்தின் மேன்மையையும் அதன் சிறப்பையும் அறிவுறுத்துவதும், வலியுறுத்துவதும் இக்கவியின் நோக்கம்.

ஒருவர் சத்தியம் தவறி நடந்துவிட்டால், பொய் சொல்லி அது அனுபவத்தில் வெளியாகிவிட்டால், அவர் ஏதேனும் ஒன்று உண்மை தான் என்று உறுதி செய்வதற்கு நான் சத்தியமாகச் சொல்கிறேன் என்றால், அந்தச் சத்தியம் என்ற சொல்லுக்கு மதிப்பு ஏது? உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் அல்லது காட்டிக் கொள்ளும் பாசாங்கு இழிவைத் தரும் என்று அறிவுறுத்துகிறது இக்குறள்.

ஒரு நாட்டை ஆட்சி புரியும் அரசனுக்கு, மற்ற நாட்டரசர் களிடம் பகை ஏற்படுவது இயல்பு. பகை ஏற்படாமல் காப்பதும், பகை ஏற்பட்ட பிறகு அதைத் தவிர்ப்பதும் சிந்தனையறிவு மிக்க அரசன் தகைமையாகும். இதுவே பகைமாட்சி என்று கருதப்படுகிறது. முரட்டுத்தனத்தாலோ, பிடிவாதத்தாலோ பகை வளர்ப்பதும், போருக்கு வித்திடுவதும் தவிர்க்க வேண்டும் என்ற அறிவுரையை,

"வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை" - (861)

என்ற குறள் மூலம் திருவள்ளுவர் வழங்குகிறார்.

எதிரி வலிவு மிக்கவன் என்று தெளிவாக உணர்ந்தபின் மெலிந்தவன் என்ன செய்ய வேண்டும்? எதிரி வலிவைப் பாராட்டி அவனுக்குப் பணிந்து சமரசம் செய்து அமைதி காக்க வேண்டும். இதனையே வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக என்ற அடியில் கூறப்படுகிறது.

அவ்வாறு வலியவனிடம் அவன் நிலையைப் பாராட்டி உயர்வை ஒப்புக்கொண்டு பணிந்து போகாவிட்டால் என்ன விளைவு ஏற்படும் என்று அடுத்த அடியாக "ஓம்பா மெலியார் மேல்மேக பகை" என்று கூறுகிறார். மேகம் பகைத்தால் என்னவாகும்? அதிகமாகப் பெய்தும் கெடுக்கும் அல்லது மழையே பொழியாமல் காய்ந்தும் கெடுக்கும். மேகப்பகையால் நாடு பல்வளங்களையும் இழந்து சீர் கெடும். அது போல வலிவுள்ள நாட்டோடு, அரசனோடு அல்லது மனிதனோடு பகை எழுந்து, அப்பகை பணிந்து போகும் முறையால் சமரசம் செய்து கொள்ளப்படாவிட்டால், எப்போதும் அது அச்சத்தை விளைவித்துக் கொண்டே இருக்கும். அழிவையும் தரும் என்று எச்சரிப்பதே இக்குறளின் கருத்தாகும்.

வலியவர் முன் பணிவு காட்டல் இழிவு ஆகாது. விளைவறிந்த விழிப்பில் பின்பற்றப்படும் ஒரு சிறந்த நெறியே ஆகும். எனவே இது மெலியார்க்குக் கூறியுள்ள பொதுவான அறிவுரை.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்" - (942)

முன் அருந்திய உணவு முழுவதும் சீரணித்த பின், மறு உணவு கொள்ளும் வழக்கத்தை மேன்மையாகக் கொண்டால், மருந்தே உடலுக்கு வேண்டாம் என்பதே இக்குறளின் கருத்து.

உணவில் அளவும் தரமும், முறையும் தவறினால், நோய்கள் உண்டாகும். அவ்வப்போது தக்கபடி மருந்து எடுத்துக் கொண்டால் சரியாகி விடும் என்று இலேசாக நினைப்பதும் சரியல்ல. மருந்து என்றால் என்ன ? மனிதன் ஆற்றும் தவறான செயல்களால் நோய் உண்டாகிறது. அந்நோய்களைச் சமன்செய்ய, ஏற்ற ஆற்றல் உடலிலேயே இயற்கை அமைத்திருக்கிறது. ஒரு சமயம் உடலில் நோய் தீர்க்கும் ஆற்றல் வலுவற்றதாக இருந்தால், அந்த ஆற்றலை ஊக்கி விட ஏற்ற பொருட்களே மருந்து ஆகும். உயிர் ஆற்றலுக்கு உந்து சக்தி என்பது வழக்கு. அவ்வாறான உந்து ஆற்றலுக்குத் துணையாய் உந்தும் ஆற்றலைத்தான் மருந்து என்று கூறுகிறோம். இயற்கையான அறிவின் வழி முன் உண்ட உணவு முற்றிலும் செரிமானமான பின்னரே, அடுத்த உணவு கொள்ளலாகும். இந்த அறிவுரையே இக்கவியில் தொக்கி நிற்கின்றது. இதனையே மகரிஷி அவர்கள் கீழ்வரும் பாடல்கள் மூலம் தெளிவாக்குகிறார்.

அறிந்து அளவுடன் கொள்க

உறக்கம், உழைப்பு, உடை, உணவு
இவைகளில் எவற்றையும்,
மறுப்பதும், மிகுப்பதும் மனித உடலின் மகத்துவம்
அறியாதோர் செய்கையாம்.

அளவோடு உணவு

உணவே உடலாக வந்துள்ளது; ஆகையினால்
உணவை உண்டுதான் உயிர் வாழவேண்டும்
உணவில் அளவுமுறை மீறிட மீறிட
உணவாகவே உடல் மாறியும் போமன்றோ?

இன்பமும் துன்பமும்

"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்" - (1078)

தெளிந்தோர் அறிவுரைகளால் விளக்கம் பெற்று வாழ்வில் பயனடைவார் மேன்மக்கள். கீழ் மக்களோ அறிவுரைகளை ஏற்க மாட்டார்கள். அவர் கீழ் நிலைக்கேற்பச் செயல்களாற்றி அதன் விளைவாகத் துன்பமேற்று, அதன் பின்னரே உணர்ந்து திருந்திப் பயன் அடைவார்கள். கரும்பு நசுக்குண்டபின் பயனாவதைப் போல என்பதே இக்குறளின் பொருள் எனலாம்.

எந்தச் செயலுக்கும் அதற்கேற்ற விளைவு உண்டு. இது இயற்கையின் ஒழுங்கமைப்பு. அவர் செய்து கொண்டே போகும் தவறுகள் அல்லது குற்றங்கள் பெருகப் பெருக, அதன் விளைவாகத் துன்பமும் பெருகத்தானே வேண்டும். அத்தகைய துன்பங்களால் தாக்கப்பட்டு வருந்தி நசுங்குண்டபின் அவருக்கும் ஒரு விழிப்பு ஏற்படும்; சிந்தனை மலரும். தான்படும் துன்பங்களுக்குத் தன் தவறான செயல்களே காரணம் என்ற உண்மையை உணர்வார்; பின்னர் தானே படிப்படியாகத் திருந்துவார். தெளிந்தோர் சொல்கேட்டு அன்றே திருந்தியிருந்தால் துன்பங்களை ஏற்காமலே நலம் பெற்றிருக் கலாம். அதைப் புறக்கணித்ததால் தவறு செய்து, விளைவாகத் துன்பம் ஏற்றுக் கரும்பு நசுங்குண்டபின் சாறு வெளியேறிப் பயனடைவது போல், கீழோரும் துன்பம் ஏற்ற பின்னரே உணர்ந்து நலம் பெறுவர் என்ற இக்கருத்து, இந்தக் குறளில் செறிந்துள்ளது.

சொல்லால் திருத்தம் பெற்று நலமடைவார்கள் மேலோர். தவற்றின் விளைவாக நோயுற்றோ, இழப்பினாலோ வருந்தி உணர்ந்த பின்னரே பயன் பெறுவார் கீழோர் என்பதே பேரறிவு பெற்றோர் கருத்தாக இருக்க வேண்டும்.

இது கயமை என்ற தலைப்பில் கீழோர்களின் இயல்பைக் கூறுகிறதே தவிர அவர்களைப் பண்படுத்தும் விதம் பற்றி மற்றோர்க்குக் கூறப்படவில்லை என்பதையும் சிந்திக்க.

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்" - (169)

தமிழில் அகப்படும் என்ற வார்த்தைக்கு அகம் + படும், சிந்தித்துப் பார்த்தால் அறிவிற்கு எட்டும் என்பதே நினைக்கப்படும் என்ற சொல்லாகும். ஒவ்வொரு மனிதனிடமும் மூன்று வகையான வினை விளைவுகள் இணைப்பாகச் செயல்புரிகின்றன. 1) தனிப்பட்ட முறையில் தான் ஆற்றும் வினை. இத்தோடு கருத்தொடராக பல்லாயிரம் தலைமுறைகளாகத் தொடர்ந்து வரும் வினைகள், 2) சமுதாயத்திலிருந்து பிரதிபலிப்பாக விளையும் வினைகள், 3) பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளான பரிணாமம் இயல்பூக்கம் என்ற தொடரில் இயற்கையின் முதல் நிலையான இறைவெளியும், விண்துகள்களில் எழும் அலைகளும் கூடிப் பேரியக்க மண்டலம் முழுவதும் காந்தக்களமாகி ஒவ்வொரு பொருளிலும் அதன் அணுக்கூட்டுத் திணிவு நிலைக்கேற்ப ஊறு, ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் ஆகத் தன்மாற்றம் பெற்று இயங்கிப் பல்வேறு விளைவுகளைத் தொடராகக் கொடுத்துக் கொண்டிருக்கும் அருட்பேராற்றலின் திருவிளையாட்டுத் தொடர் விளைவுகள். ஆக

மூன்று வகைச் செயல்களுக்கும் அவற்றின் விளைவுகளுக்கும் உட்பட்ட உயிரியக்க நிலையமே மனிதன்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" - (350)

உலகப் பொருட்கள் மீது பற்றுள்ள வரையிலும் மெய்ப் பொருளான இறைநிலையை உணர முடியாது. பிறப்பு இறப்பு எனும் வாழ்க்கைக் கடலைக் கடக்க முடியாது. உடல், உயிர், சீவகாந்தம் மூன்றும் கூடிய சீவனின் உடலுக்கு, பிறப்பு முதல் இறப்பு வரையில் பெரும்பாலும் துன்ப அனுபவங்களாகவே இருக்கின்றன.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்ற குறளில் இறைநிலையுணர்வும், பொருட்கள்மீது பற்று விட்டு மனம் தூய்மை பெற வேண்டியதும் ஒன்றிணைந்து பேறாக உணர்த்தப்பட்டுள்ளன. மறைபொருட்களை உணரத்தக்க ஆறாவது அறிவோடு வாழும் உயர்ந்த பிறவியைப் பெற்ற மனிதனுடைய பிறவியின் நோக்கம் மிக உயர்ந்ததாகும். அது இறைநிலையான மெய்ப்பொருளை உணர்ந்து அறிவின் முழுமையைப் பெற்ற, பிறப்பு இறப்புத் தொடரை அறுத்து விட வேண்டுமென்பதேயாகும். பொருள் பற்றுப் பதிவுகள் அடிக்கடி ஒருவருக்கு எழுந்தால் மனமானது அந்தப் பொருளை அடிக்கடி நினைந்து நினைந்து அதை அடைவதற்கும் அனுபவிப்பதற்கும் தனது ஆற்றலை வாழ்நாள் முழுவதும் செலவிட வேண்டி இருக்கிறது. இதனால் இறைநிலையை நாடுவதற்கும் அதனை உணர்வதற்கும் வாய்ப்பு கிட்டுவதில்லை. எனவே இறை நிலையை உணர்வதற்கும் பிறவிக் கடலை நீந்துவதற்கும் பொருள் பற்றை நீக்கி மனத்தூய்மை பெற வேண்டும். இந்த உயர்ந்த பேற்றினைப் பெறுவதற்கு ஒருவர் தானாக முயன்றால் அந்நிலை கிட்டுவது அரிது. ஏனெனில் அத்தகைய அறிவின் முழுமைப்பேறு போதனை முறை, சாதனை முறை இரண்டும் இணைந்ததாகும். எனவே இந்த உயர்ந்த அறிவு நிலையைப் பெற அறிவின் முழுமை பெற்றுப் பற்று நீங்கிய ஒரு வழிகாட்டியான ஞானாசிரியர் துணை வேண்டும். எனவே முறையாகப் பயின்று பற்று விட்டு வாழும் ஒரு ஞானாசிரியரைப் பற்ற வேண்டும். இந்த நுட்பத்தை உணர்த்துவதே இந்தக் குறளில் முதற் பகுதியில் வரும் "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்பதாகும்.

வினைப்பயனாகத் தொடர்ந்து வரும் பிறவிக் கடலை நீந்த வேண்டும் என்ற பெருநோக்கும் கொண்ட இறை வேட்பாளருக்கு ஞானாசிரியர் தரும் ஒரு நாள் போதனையால் மட்டும் பற்று விட்டு மனம் தூய்மை அடைந்து விடும் என்று கருத முடியாது. பற்று

நீக்குவது என்பது போதனை முறை மட்டுமல்ல. சாதனையும் வேண்டும். ஞானாசிரியர் உடனிருந்து அவர் வாழ்க்கை முறையினைப் பின்பற்றி நடந்து பயில வேண்டும். அத்தகைய நிறைவான அறிவு நிலையைப் பெறும் வரையிலும் ஞானாசிரியர் தொடர்பை விட்டு நீங்காமல் அவரைப் பற்றி நின்று பயன் காண வேண்டும் என்று தெளிவுபடுத்துகிறார் குறளாசிரியர். இக்குறளின் கடைப் பகுதியான **"அப்பற்றை பற்றுக பற்று விடற்கு"** என்று, நீ முழுமை பெற்று, உனது பொருள் பற்று நீங்கி இறையுணர்வு பெற்று வெற்றியடையும் வரையில் ஞானாசிரியரைப் பற்றி நில் என்பதே இக்குறளின் உட்பொருள் என்று கூறித் திருக்குறளுக்குப் புதுமையான, உலகத்திற்குப் பொருந்தும் வகையில் மிக தெளிவாகப் படிப்பவர் உள்ளம் கொள்ளும் வகையில் மகரிஷி அவர்கள் விளக்கியுள்ளார். **(91–** ஆம் பக்கத்திலிருந்து ப.எண்ணைப் பதிவு செய்யாமைக்கு காரணம், விளக்கவுரையின் மிகுதியே எனலாம்.) இனி மகரிஷி அவர்கள் தம் படைப்புகளில், திருக்குறளின் தாக்கத்தினைப் பற்றிப் பார்ப்போம்.

உயிர் - உடல்

அனைத்துயிர்களிலும் மேம்பட்டவன் மனிதன். அந்த மனிதனின் உடல் பற்றியும் உயிர் பற்றியும் திருவள்ளுவர் பல்வேறு இடங்களில் மொழிந்துள்ளார். தலைவன் தலைவியின் அன்பினைக் கூறவந்தவர், உடம்புக்கும் உயிருக்குமுள்ள உறவினை எடுத்துக்காட்டி விளக்குகிறார். இதனை,

"உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு" - *(1122)*

என்ற குறட்பாவால் அறியலாம். வேதாத்திரி மகிரிஷி அவர்களும் மனிதனின் உயரிய தன்மையைப் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். உடம்பு வந்த விதத்தைக் கீழ்வருமாறு நவிலுகின்றார்.

"தகப்பனுடைய ஒருகழிவைத் தாயார் ஏற்றுத்
தன்கழிவை அதனுடனே சேர்த்துச் சேர்ந்து
மிகப்புனித மெனும் இந்தஉடலை ஈந்தாள்
மீண்டும்அவள் உடல்கழிவைப் பாலாய் உண்டோம்"
– (மனவளக்கலை தொகுப்பு மூன்று ப.54)

மேலும், காந்த ஆற்றல் அலைகள் உடலில் ஏற்படுத்தும் ஆற்றல்களையும் மிகத் தெளிவாகக் கீழ்வருமாறு விளக்குகிறார் மகிரிஷி அவர்கள். மனிதன் பூமியில் பிறந்து வாழ்கிறான். அவன் பிறக்கும்போது பூமிக்கும் மற்ற கோள்களுக்கும் இடையே உள்ள

தொலைவையும் கோணங்களையும் அடிப்படைக் கணக்காகக் கொண்டால் அந்த நிலையில் அவனது உடலில் அமையும் காந்தக்கள ஆற்றல் தொடக்கக் கணக்காகும். அதன் பின் ஒவ்வொரு கோளும் தொலைவாக அல்லது நெருக்கமாக உலவும்போது அதற்கேற்ப அதனதன் காந்த ஆற்றல் தன்மை வேறுபடும். ஒரு கோள் உலவும் அதே கோணத்தில் மற்றொரு கோள் உலவினால் இரண்டின் காந்த அலைகள் ஒன்று கூடி வரும். இதனாலும் காந்த ஆற்றல் தன்மை மாறும். மேலும் பிரபஞ்சத்தில் சூரிய குடும்பத்திற்கு அப்பாலான சூரிய குடும்பங்களை நட்சத்திரங்களாக மதிக்கிறோம். அந்த நட்சத்திரக் கூட்டங்களை 12 பிரிவுகளாகக் கணக்கிட்டுள்ளார்கள். அவை ஒவ்வொன்றிற்கும் நேராகச் சூரியனோ மற்ற கோள்களோ வரும்போது அவற்றின் காந்த அலைகளில் மாற்றம் ஏற்படுகின்றது.

இந்த மாற்றங்களைக் கணக்கிட்டு அந்த நிலையில் உள்ள காந்த ஆற்றல் அலைகள் உடலில் என்னென்ன காந்த, மின் சக்தி, இரசாயன, ஆற்றல்களை விளைவிக்குமோ அதற்கு ஏற்ப உடல் நலம், மனவளம், நட்பு நலம், பொருள் வளம், ஆன்மிக அறிவு இவை உண்டாகும் என்பதைக் கணித்திருக்கிறார்கள்.

கருவமைப்பு உணவுவகை, எண்ணம், செய்கை
ககனத்தில் கோள்கள்நிலை, சந்தர்ப்பத்தால்
வரும்இயற்கை நிகழ்ச்சிகளின் மோதல் – எல்லாம்
வாழும் உயிர்கட்குப் பல இரசாயனங்கள்
தரும், மாற்றம், தரமொக்க இன்ப துன்பம்,
தகுந்த அளவாம், இதிலோர் சக்தி மீறி
பெருகி இரத்தச் சுழல் தடுக்க நோயாய் மாறி
பின்னும் அதிகரித்துவிட மரணம் ஆகும்.

உடலடையும் இரசாயன மாற்றங்கள் ஒப்ப
உட்கொள்ளும் சுவாசம் இரத்த ஓட்டம், மற்றும்
குடலதனில் ஆகார சீரணத்தில்,
குறிப்பிட்ட மாறுதல்கள் அறிவின் போக்கில்
திடம் பெருகல் குறைதலோடு சீவவசியத்
திறன் மாறல் அதன்விளைவாய் சமூக வாழ்வில்
கொடல்வாங்கல் அனுபவித்தல் இவற்றில் காணும்
கூர்ந்துணரத் தக்கபல நிகழ்ச்சிகள் ஆம்.

கோள்களின் உலவும் வேகம் அதன் காந்த அலை தன்மைகளும் வானியல் ஆகும். அவற்றால் மனிதர்களுக்கும், மற்ற உயிர்களுக்கும் ஏற்படும் விளைவுகளின் கணிப்பே சோதிடமாகும் என்று கீழ்வரும் அட்டவணை மூலம் உணர்த்துகிறார்.

Planets	Distance from Sun (in miles)	Mass (Earth -1)	Period of Revolution (in days)	Period of Self Rotation	Satellite
Mercury	36,270,000	.06	88 days	59	0
Venus	66,960,000	.82	225 days	243	0
Earth	93,000,000	1.0	365 days	24	1
Mars	139,500,000	.1	687 days	25	2
Jupiter	483,600,000	318	12 Years	10	12
Saturn	883,500,000	95	30 Years	11	10
Uranus	1767,000,000	15	84 Years	11	5
Neptune	2790,000,000	17	165 Years	16	2
Pluto	3627,000,000	06	248 Years	6.4	0

அலை இயக்கத்தில் இத்தனை விதமான இயக்கங்கள் உள்ளன. Clash, Reflection, Refraction, Penetration, Interaction என்று தொடர்ந்து மாறி மாறி இயங்கிக் கொண்டிருக்கிறது. இவை எல்லாம் ஆழ்ந்த அடிப்படையான உண்மைகள் என்று விளக்குகிறார் மகிரிஷி அவர்கள்.

உயிர் - உடல் - மனம்

இந்த உடலிலே பஞ்ச பூதங்களைப் பார்க்கிறோம். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் அதாவது கெட்டிப் பொருள், திரவப் பொருள், வெப்பம், காற்று. அந்தக் காற்றை விட நுண் பொருளாக உள்ள ஒரு நுண்ணிய மூலக்கூறுதான் ஆகாசம். இந்த ஆகாசத்தைத்தான் 'உயிர்' என்றும், 'விண்' என்றும் சொல்கிறோம். நமது உடலிலே இந்த ஐந்து அடுக்குகள் உள்ளன. கெட்டிப்பொருள்,

நீர்ப் பொருள், வெப்பம், காற்று, விண், பிரபஞ்சம் முழுவதிலும் அதே விண், 'மகாகாசம்'. அதைப் பேரியக்கக் களம் என்ற வார்த்தையினால் சொல்கிறோம்.

காற்றிலே, நெருப்பிலே, நீரிலே, நிலத்திலே ஊடுருவி இயங்குகின்றபோது, எல்லாப் பொருட்களிடத்திலேயும் அதே விண்ணைப் பௌதீக உயிர் என்று சொல்கிறோம். 'பூதாகாசம்' என்று வட மொழியில் சொல்வார்கள். உடலுக்குள்ளாக அதே உயிர் உணர்ச்சி நிலையில் இயங்கும்போது, 'சிதாகாசம்' என்று சொல்வார்கள். இடத்திற்குத் தக்கவாறு, அது சேருகின்ற பொருளுக்குத் தக்கவாறு ஒரு கூட்டு இயக்க அலைக்குத் தகுந்தவாறு பெயர் மாறுகிறது.

விளைவு, வேறுபாடு, தன்மை, துல்லியம், இயக்க ஒழுங்கு என்று பரமாணுவிலிருந்து அண்டகோடிகள் வரையில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தன்மை உண்டு. சீவராசிகளாக வந்த பிறகு இந்த இயக்கத் தொடருக்கு உணர்தல் என்ற தன்மை உண்டு. உணர்தலில் கூட மூன்று இயக்கங்கள் உண்டு. அவை **1.** உணர்தல் **2.** அதனாலேயே இன்ப துன்ப அனுபவம் அடைதல். **3.** ஒன்றோடு ஒன்று பிரித்து உணர்தல்.

மனிதனிடம் தன்மை, துல்லியம், இயக்க ஒழுங்கு, என்ற அடிப்படையான இயக்கம் உள்ளது. அதற்கு மேலாக சீவன்களிடத்தில் உள்ள உணர்தல், இன்ப துன்ப அனுபவம் அடைதல், ஒன்றோடு ஒன்று பிரித்து உணர்தல் என்ற உணர்வின் தன்மைகளும் உள்ளன. அதற்கு மேலாக இந்த மறைபொருளை உணரத்தக்க தன்மையான அறிவின் நிலைக்கு ஆறாவது அறிவு என்று பெயர். அந்த ஆறாவது அறிவினால் மட்டும்தான் மறை பொருளை உணர முடியும். புலன்கள் மூலமாக உணர முடியாது.

ஆகவே, மனம், மனத்தைப் பற்றிச் சிந்திக்கத் திரும்புமே யானால் புறப்பொருள் கவர்ச்சியும், வேறு ஒரு பொருளோடு தொடர்பு கொண்டு தன்னிடம் உள்ள வேறுபாட்டை உணர்வதுமான உணர்ச்சிகள் விரிந்து இயங்கு நிலையிலிருந்து ஒடுங்கிக் கொண்டே போகின்ற போது, மனத்துக்கு அடித்தளமாக உள்ள மெய்ப்பொருளாக மாறுகின்றது.

அது மெய்ப்பொருளாகவே இருக்கிறது. இந்த அறிவு உயிரி லிருந்து படர்க்கை நிலையில் புலன்கள் மூலமாகப் பொருட்களைப் பார்த்துப் பார்த்து, உருவம் வடிவம் எடுத்துக் குணங்களாக மாறிமாறி உணர்ந்தவற்றை எல்லாம் பதிவுசெய்து கொண்டுவிடுகிறது. பதிந்தது பிரதிபலிக்கக் கூடிய; 'உள்ளாற்றல்' தான் உள்ளுணர்வு. அதுதான் அகம் எனப்படுவது.

இந்த உடலில் சுழன்று சுழன்று வரக்கூடிய ஏழு தாதுக்களுக்குச் சத்துப் பொருளாக வரக்கூடிய ஓஜஸ் என்று சொல்லக் கூடியதாக இருக்கக்கூடிய ஒரு வியத்தகு ஆற்றல் பெற்றது தான் இங்கு உள்ள உயிர். அதில் பதிவு செய்வது, பிரதிபலிப்பது என்ற மன இயக்கத்திற்கு உரிய செயலாக எண்ணுகின்ற போது அந்த உயிர்ச்சக்தி சுழலுகின்றபோது தானாகவே, ஓர் அலை வந்து கொண்டேயிருக்கும்.

அப்படி உடல் முழுவதிலும் இருக்கக் கூடிய உயிர்ச்சக்தி சுழன்று வெளியிடக்கூடிய அலையினுடைய அழுத்தத்தை உடலிலே சீவகாந்த சக்தி என்று சொல்கிறோம். அந்த அலை அழுத்தம் தான் சீவகாந்தம். உயிருக்கும் சீவகாந்த சக்திக்கும் வித்தியாசம் உண்டு. உயிர் என்பது ஓர் இயக்க நிலையம். இயங்கிக் கொண்டு இருப்பது. அதிலேயிருந்து வெளிவந்து விரிந்து கொண்டே இருப்பது விரிவு அலை. அதுதான் சீவகாந்த சக்தி என்பது.

உயிர்ச்சுழல் முறையாக இயங்கிக் கொண்டிருக்கின்ற போது ஏற்படக்கூடிய ஒரு காந்த அலை சீவகாந்த அலையாக வருகின்ற போதுதான் 'உணர்வு' என்றும், அதிலேயிருந்து 'உயிர்' என்றும் சொல்கின்றோம். "உயிர்" என்றால், எப்பொழுது நிலையாக இருந்த பொருள் இயங்கியதோ, அதுவே உயிர் என்று உயிருக்கும் விளக்கம் தருகிறார் மகரிஷி.

இந்த சீவகாந்த சக்தி எப்பொழுதும் பெருகிக்கொண்டே இருக்கிறது. அழுத்தம் மிகுந்து கொண்டே இருக்கும். உடலுக்குத் தேவையானது போக எஞ்சியதை வெளியே தள்ளிக் கொண்டே இருக்கும். அழுத்தமானது முதலில் நேரடி அழுத்தமாகவும், அதே அழுத்தம் இன்னொரு அழுத்த அலையோடு சேருகின்ற போது ஒலியாகவும், அதைவிட இன்னும் அழுத்தம் சேருகின்ற போது அழுத்தம், ஒலி, ஒளி என்ற மூன்றாகவும், இன்னும் தேக்கமுறுகின்ற போது அதிலிருந்து சுவையாகவும், மணமாகவும் மாறுகிறது. இவ்வாறு மாற்றம் பெறுவதைக் காந்த அலை என்றும் அதையே மின்சாரம் என்றும் சொல்கிறோம்.

இந்த உடலில் மின்சாரம் அல்லது சீவகாந்த சக்தி ஓடிக் கொண்டே இருக்கிறது. இந்த சீவகாந்த சக்தியினுடைய திணிவு சரியாக இருந்தால்தான் உடலிலே உள்ள ஒவ்வொரு செல்லுக்கும் அதனை அடுத்துள்ள செல்லுக்கும் இடையே இருக்கும் காந்த இழுப்புத் தன்மை நீடிக்கும். செல்லின் ஒரு பக்கம் வடதுருவம் என்றால், இன்னொரு பக்கம் தென்துருவம். சீவகாந்த சக்தியானது தொடர்ந்து ஓடிக்கொண்டு இருப்பதால் அணு அடுக்கு ஒழுங்காக

இருக்கின்றது. நம் உடலில் அதனால் தான் காற்று, வெப்பம், இரத்தம் இவை எல்லாம் ஒரு பாதை ஓட்டமாக உள்ளன.

இந்த மூன்றின் அளவும் ஓட்டமும் சரியில்லை என்றால், உடலில் அணு அடுக்குச் சீர்குலையும். அதைச் சரிப்படுத்த உயிராற்றல் தான் துணைக்கு வரவேண்டும். மேலும் உடலில் சுழன்று இயங்குகின்ற போது மின்சார இயக்கம் தோன்றி, உயிரானது இரசத்தை இரத்தமாகவும் மற்றத் தாதுக்களாகவும் மாற்றிக் கொள்ள வேண்டியவற்றைக் கொண்டு, தள்ள வேண்டியவற்றைத் தள்ளி உடலின் அணு அடுக்கைப் பாதுகாக்கிறது. இந்த வகையில் உயிராற்றல் மாற்றம் பெற்றுச் செலவாகிறது.

அணு அடுக்கு சீர்குலைந்தால் மின் குறுக்கு ஏற்படுகின்றது. அப்போது உயிரானது தன் தடையை உணர்வாகப் பெறுகின்றது. அதைத்தான் வலி என்று சொல்கிறோம். உடலில் ஓடிக்கொண் டிருப்பதும், தடைப்படுவதும் உயிரே. எனவே தடையால் வருகின்ற வலியை – தடையாக வருகின்ற வலியை ஏற்பது, உணர்வது உயிர்தான். உடலில் ஏற்படுகின்ற அணு அடுக்குக் குழப்பத்தை அல்லது உயிரோட்டத்திற்கு ஏற்படுத்தப்படுகின்ற தடையை வலியாக உணர்வது உடல்தான் என்பார்கள். உடலில் உயிர் இல்லாதபோதும், உடலானது வலியை உணர வேண்டும். அப்படி இல்லை.

ஆகையால் உயிர்தான் உணர்ச்சிகளை, வலியை உணருகிறது. உடலும் உயிரும் தனித்தனியே இருந்தால் இரண்டில் எதற்கும் வலியோ, உணர்வோ கிடையாது. உடலும் உயிரும் இணைகின்ற போதுதான் உயிர் உணர்ச்சியைப் பெறுகிறது. உயிர்தான் உணர்ச்சியாக, இன்ப துன்பமாக மாறுகிறது. உயிரே உணர்வாக மாற்றம் பெறுகிறது என்பதை நீங்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். உயிர் உணர்ச்சியாக மலருகின்ற கட்டத்தில் தான் மனம் பிறக்கிறது. எனவே உயிர்தான் மனம். உயிரின் படர்க்கை நிலை ஆற்றல்தான் மனம். தடையின் காரணமாக உணர்ச்சியாகப் பரிணமிக்கும் படர்க்கை நிலை வருகின்ற போதுதான் உயிரை மனம் என்கிறோம்.

உடலை இயக்குவது உயிரின் வேலை. அதனைப் பாதுகாத்து, அணு அடுக்குச் சீர்குலைவால் தடை வரும்போது, அதை உணருகின்ற நிலையில் மனமாக விரியும்போது, உணர்ந்த தடையை, நீக்க முயல்வது உயிரின் இரண்டாவது வேலையாகும். தடையால் உணர்ச்சி ஏற்படவே, அதனைப் போக்கப் பொருள் தேவை உருவாகிறது. உணர்ச்சியாக மாறி நிற்பதும் தேவையாக எழுந்து நிற்பதும் உயிர்தான். தேவை ஏற்படவே அதைச் சமன் செய்ய முயற்சி

தோன்றுகிறது. முயற்சியின் காரணமாகச் செயல் மலர்கிறது. செயலானது இயற்கை ஒழுங்கமைப்பின்படி விளைவு தருகிறது. விளைவை உயிரானது அனுபோகம் ஆகப் பெறுகிறது. அனுபோகத்திலிருந்து இன்னசெயல் செய்தால் இன்ன விளைவு வரும்; அதனால் இன்ன அனுபவத்தைப் பெறலாம் என்ற அனுபவத்தை உயிர் பெறுகிறது. உயிர் மேற்கொள்ளுகின்ற ஆராய்ச்சி, அதன்பின் இன்ன விதமான சூழ்நிலையில், இன்னவிதமான உணர்ச்சி தோன்றினால், இன்னவிதமாகச் செயல்பட வேண்டும் என்று ஒரு தெளிவினைப் பெறுகிறது. இறுதியாக எல்லாவற்றையும் தொகுத்து ஒரு முடிவினையும் உயிர் செய்து வைத்துக் கொள்கிறது. எனவே உயிரே உணர்ச்சி, தேவை, முயற்சி, செயல்விளைவு, அனுபோகம், அனுபவம், ஆராய்ச்சி, தெளிவு, முடிவு என்ற பத்துக் கட்டமாக உயர்ந்து படர்ந்து நிற்கிறது.

எனவே உயிரினது படர்க்கை நிலை ஆற்றல்தான் மனம். உடல் வரையில் இன்ப துன்ப அனுபோகங்களில் குறுகி நில்லாமல் ஆன்மாவைப் பற்றியும், இறைவனைப் பற்றியும் ஆராய உயருகின்ற நிலையில் இந்த மனத்தையே அறிவு என்கிறோம். மனத்தைச் சாதாரணமாகவே அறிவென்ற பெயராலும் அழைக்கிறோம்.

தடையை உணர்ந்து நீக்கும் உயிரினது வேலையே மனமாக விரிகிறது. உடலை நடத்துவது உயிரினது வேலை. அங்கு உடலியக்கம் ஆக இருக்கிறது, தடையை உணர்ந்து நீக்குகின்ற வகையில் உயிரினது இரண்டாவது வேலை மன இயக்கமாக இருக்கிறது என்று உடல் இயங்கும் முறையை எளிமையாக விளக்குகிறார் மகரிஷி அவர்கள். மேலும் மனம் பிறக்கும் விதத்தைக் கீழ்வருமாறு உணர்த்துகிறார்.

உயிராற்றல் தூண்டப் பெற்று புலன் இயக்கத்தால் நடைபெறுகின்ற தன்மாற்றம் தான் உணர்ச்சியாக, இன்ப துன்பமாக உணரப்பெறுகிறது. இதுவே பஞ்ச தன் மாத்திரை எனப்படும். இதனை இடைக்காலத்தில் வந்த அருள்துறைப் பெரியவர்கள் விளக்கவில்லை. தொடர்பு கொள்ளுகின்ற பொருளுக்கு ஏற்ப, ஐம்புலன்களில் உயிர் மாறுதல் அடைவதுதான் பஞ்ச தன் மாத்திரை. பஞ்ச தன் மாத்திரையில்தான் மனம் பிறக்கிறது.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் நாம் அடைகின்ற ஒவ்வொரு அனுபோகமும் நமது கருவி மற்றும் புலன்களிலும், மூளையிலும், மேலும் உயிர் அணுக்களிலும், வித்திலும் கூடப் பதிவாகி விடுகின்றது. பொறி புலன்களில் ஏற்படுகின்ற பதிவு பழக்கமாகிறது. மூளையில் ஏற்படுகின்ற பதிவு நினைவாகிறது.

உயிரணுக்களிலும், வித்திலும் ஏற்படும் பதிவுகள் ஒரு மனிதனின் தரமாகின்றன. இந்த எல்லாப் பதிவும் சேர்ந்து மனமாகிறது. இதனால் தான் நேற்று சுவைத்த சுவையின் பதிவினால்தான் – சுவையின் நினைவு பின்னால் ஏற்பட முடிகிறது.

"என் வயது மூன்றுமுதல் இன்று மட்டும்
யான் கண்ட காட்சிகளும், கேட்ட ஓசை
மென்மையுள்ள ஸ்பரிசத்தால் உணர்ந்த எல்லாம்
முகர்ந்த மணம் சுவைத்த சுவை இவற்றினோடு
சொன்ன சொற்கள், செய்த செயல், செயநினைத்த
சோடனைகள் அத்தனையும் அறிவுதன்னில்
என்னவிதமாய்ப் பதிந்ததோ எண்ணும் போது
இவையெல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்துக்காட்டும்
தன்மை யென்ன! தனித்தனியே தோன்றல் ஏனோ!
தத்துவமாய் உள அறிவின் இயல் பென்னென்று
நின்றறிவால் ஆராய்ந்தேன் உண்மை காண
நின்றவன் அவ்வொன்றாய் பரிணமித்து
மின்னெனவே மறைந்து மற்றும் வேறதாயும்
மேலான ஆராய்ச்சியாயும் ஆகி
பன்னிலையாய் மூளைதனில் பரமாகிக்கருவில்
பரவு ரத்தச் சூழலாவே இயங்குவதும் கண்டேன்"

மூன்று வயதிற்கப்புறம் செயல் மற்றும் அனுபோகப் பதிவுகள் நிலைக்கின்றன. முற்பிறவிப் பதிவுகள் ஏற்கெனவே சூக்கும உயிரணு ஒவ்வொன்றிலும் பதிந்திருக்கின்றன. முற்பிறவிப் பதிவும் முக்கியமாக மூன்று வயதுக்கப்புறம் ஏற்பட்ட பதிவுகளும் சேர்ந்து மனமாகின்றன.

உண்ணும் சுவையை உணர்வதும் மனமே. புசித்த சுவையை நினைப்பதும் மனந்தான். ஒவ்வொரு செயலின் மூலமாகவும் மனத்திற்கு ஒரு தன்மை கூடிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு அனுபோகத்தின் காரணமாகவும் ஒரு தன்மை கூடிக்கொண்டே போகிறது. இதுவரையில் சொல்லப்பட்ட விளக்கங்களிலிருந்து தெரிந்து கொள்வது உயிருக்கு ஏற்பட்ட தடையே மனம் என்று ஒன்று உண்டாகக் காரணமாக இருக்கிறது. உயிரே மனமாகிறது. உணர்ச்சி, தேவை, முயற்சி, செயல், விளைவு, அனுபோகம், அனுபவம், ஆராய்ச்சி, தெளிவு, முடிவு எனப் பத்துப் படித்தளமாக உள்ள படர்க்கை நிலை ஆற்றலே – உயிரின் ஆற்றலே – உயிரே மனமாக இருக்கிறது என்று மகரிஷி அவர்கள் கூறுவதிலிருந்து உயிரே மனமாகிறது என்பதனை உணர முடிகிறது.

ஆண் - பெண்

இந்த உலகம் ஆண் பெண் இணைவதால் இயங்குகிறது. திருவள்ளுவர் ஆணையும் பெண்ணையும் 'துணை' என்றே அழைக்கிறார். ஆணையோ, பெண்ணையோ ஒருவரைவிட ஒருவர் மேலானவர் என்று எங்கும் குறிப்பிடவில்லை. இதனை,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" - (41)

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" - (51)

என்ற குறட்பாக்கள் மூலம் அறியலாம். மகரிஷி அவர்களும் பெண்ணின் பெருமையை,

"பெண் வயிற்றி லுருவாகிப்
பெண் பாலுண்டே வளர்ந்தாய்
பெண் துணையால் வாழ்கின்றாய்
பெண்ணின் பெருமை உணர்"
(மாக்கோலமாய் விரிந்த மதிவிருந்து ப. 5)

என்ற வரிகளில் உணர்த்துகிறார். இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் உன்னதமானது. இந்தப் பிறவியில் ஆண், பெண் என்ற வேறுபாடு உடலுறுப்புக்களால் மட்டுமேயன்றி எந்தவித உயர்வு தாழ்வுக்கும் இனங்காண்பதற்காகவும் அல்ல என்பதனை முதலில் உணரவேண்டும். பெண்ணை ஒரு படி உயர்த்திப் பேசினாலும், ஒருவருக்கொருவர் துணையாக வாழவேண்டும் என்ற வள்ளுவர் கருத்தினை ஒட்டியே மகரிஷி அவர்களும் கீழ்வருமாறு மொழிகிறார்.

"மனிதனுக்கு உணவு உடை வீடு வேண்டும்
மற்றவர்கள் கருத்தறிய மொழியும் வேண்டும்
இனியும் ஒருவர் உற்ற வயதடைந்தால்
ஏற்றபடி வாழ்க்கைக்கோர் 'துணையும்' வேண்டும்
(சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 47)

பெண்ணைப் போற்றவேண்டுமென்கிறார் மகிரிஷி அவர்கள். மேலும் மனைவி நல வேட்பு நாளை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 30–ஆம் தேதி கொண்டாடி ஆண் தன் மனைவிக்கு நன்றி கூற வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். இதனை,

"பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரைவிட்டு
பிரிந்துவந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்ற
பற்றற்ற துறவியெனக் குடும்பத் தொண்டேற்று
பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாய்க் கொண்டென்
நற்றவத்தால் என்வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நலநோக்கில் அன்போடு கருணை இவைகொண்டு
மற்றவர்க்கும் அறம் ஆற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான்மதிக்கும் இந்நாள் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

(ச.சி. ஆ. தீர்வுகள் ப. 100)

என்ற பாடல் வரிகளால் அறியலாம். தான்மட்டும் பெண்ணைப் போற்றுவதோடு அல்லாமல், பெண்குலத்திற்குத் தொண்டு செய்ய உலகையே அழைக்கிறார். இதனை,

"பெண் வயிற்றி லுருவாகிப் பின்னு மந்த
பெண் கொடுத்தபால் உண்டே வளர்ந்து; மேலும்
பெண் துணையால் வாழுகின்ற பெருமை கண்டு
பெண்மைக்கே பெருமதிப்பு தந்து உள்ளோம்
பெண்ணினத்தை எங்கெவரும் எவ்விதத்தும்
பெருமைகுன்ற அவமதித்தால் சகிக்க மாட்டோம்
பெண்மைக்கு நமதுகடன் ஆற்றவாரீர்
பெருந்திரளாய் கூடி ஒரு முடிவு செய்வோம்.

(எனது வாழ்க்கை விளக்கம் ப. 30)

என்ற பாடலின் மூலம் பெண்வயிற்றிலிருந்து, அவளால் வாழ்கின்ற நிலையையும் விளக்கியுள்ளார். பொருளாதார ஏற்றத்தாழ்வே பெண்ணடிமைக்குக் காரணம் என்கிறார் மகரிஷி. திருவள்ளுவர் காலத்தில், பெண்களைத் துன்புறுத்தும் வன்கொடுமைகள் பரவலாக இல்லையெனலாம். அதுமட்டுமல்லாமல் பெண்கள் வெளியே சென்று வேலை செய்கின்ற முறைமையும் இல்லை. 20—ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மகரிஷி அவர்கள் சமுதாயத்தில் பெண்களின் அவல நிலையைக் கண்டு அவர்கள் வாழ்வு சீருற வேண்டுமானால் பெண் களிடம் பணம் வேண்டும் என்பதனைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். இதனை,

"ஒரு ஆண் தன் பால் வேட்கைத்
தீர்த்துக் கொள்ள
உதவும்ஒரு கருவியாய்
உடல் கொடுக்க

ஒரு பெண் தன் உடலினையே
அர்ப்பணித்து
உணவு உடை வாடகைபோல்
பெற்றுலாவும்

ஒரு இழிந்த அடிமைநிலை
பெண் இனத்திற்கு
உலகினிலே இனி வேண்டாம்
ஒவ்வோர் பெண்ணும்

ஒரு தொழிலைச் செய்து பொருள்
ஈட்டிக் காத்து
உண்டுடுத்துக் கடமை செய்யும்
உரிமைவேண்டும்." (மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து ப. 79)

என்ற பாடலின் மூலம் இக்காலப் பெண்களின் அவலநிலை தீரவேண்டுமானால் அவரிடம் அனைத்துரிமையும் வேண்டும் என்று விளம்புவதை உணரலாம்.

ஆண் பெண் இணைந்து ஆற்றும் இல்லறத்தைப் பற்றியும், இல்லறத்தின் மாண்பினையும், ஆண், பெண் கடமைகளைப் பற்றி விளக்கமாக இல்வாழ்க்கை (அதி. 5) வாழ்க்கைத்துணை நலம் (அதி. 6) ஆகிய அதிகாரங்களில் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் உணர்த்தியுள்ளார் திருவள்ளுவர். குடும்பத்தின் தலைவனாகிய ஆண்மகனின் கடமைகளை,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை" - (43)

என்று கூறி மேலும் இல்லறத்தான், பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவருக்கும் சிறந்த துணையாக விளங்கவேண்டுமெனவும் அறிவுறுத்துகிறார். இல்லறத்தின் தலைவியாகிய இல்லாளை நோக்கி, வாழவேண்டிய முறைகளைக் கீழ்வரும் குறட்பாவில் குறிப்பாக உணர்த்துகின்றார்.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" - (56)

"இல்லறம் என்ற குடும்ப வாழ்வில் கணவன் மனைவி உறவு தெய்வீகமானது. உலக இன்பங்களைத் துய்க்கவும், வினைப்பதிவு களில் தீயனவற்றைக் கழிக்கவும், இறை நிலையுணர்ந்து அறிவில் முழுமை பெறவும் ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளதே மனிதன் என்ற சிறந்த பிறப்பு. ஆண், பெண் இருபாலரும் வரையறையற்ற அன்பால் வாழ்க்கைத் துணைவர்களாகி ஒருவருக்கொருவர் ஒத்தும், உதவியும் உலகில் வாழ்ந்து பேரின்ப நிலையை எய்த, ஏற்றபடி இறைஆற்றலால் அமைக்கப்பட்டிருப்பதே ஆண், பெண் எனும் இரண்டு வகையில் அமைந்த பால் வேறுபாடுள்ள பிறப்புகள். இருபாலரும் ஒருவருக் கொருவர் வாழ்க்கைத் துணைவராகி ஒத்தும் உதவியும் வாழ வேண்டிய 'இயற்கை வழி' தான் குடும்ப வாழ்வு." (வாழ்க்கை வள

உயர்வுப் படிகள் ஐந்து ப. 46) என்கிறார் மகரிஷி. மேலும் பெண்ணை மதித்துப் போற்ற வேண்டுமெனவும் வற்புறுத்துகிறார். இதனை,

“பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்தஊரை விட்டுப்
பிரிந்துவந்து, பெருநோக்கிக் கடமையறம் ஆற்ற,
பற்றற்றத் துறவியெனக் குடும்பத் தொண்டேற்று
பண்பாட்டின் அடிப்படையில் எனைப்பதியாய்க் கொண்டுஎன்
நற்றவத்தால் என்வாழ்க்கைத் துணையாகி பெண்மை
நலநோக்கில் அன்போடு கருணைஇவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்திமகிழ் கின்றேன்.
(வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து ப. 47)

என்ற பாடலடிகளின் மூலம் அறியலாம். மேலும் மகரிஷி இறைவனுக்கு அடுத்தப்படியாக நினைக்க வேண்டியவர்கள் பெண்கள் என்கிறார். இதனை,

“எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன்திரு வுள்ளமென்ன?
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே!
வாழுகின்ற மக்களின்இவ் வளமறிந்தோர் எத்தனைபேர்?
(ஞானமும் வாழ்வும்; 319)

என்ற பாடலின் மூலம் உலகமக்களை உற்பத்தி செய்வதற்கும் வளர்த்துப் பாதுகாத்து வருவதற்கும் ஏற்ற திருவுருவங்களாகப் பெண்கள் இருக்கையில், அவர்களுக்கு மனித சமுதாயம் . . . . சமமதிப்பு அளிக்கவேண்டும் எனவும் வற்புறுத்துகிறார். தனிமனிதர் களின் இணையால் குடும்பம் உருவாகிறது. பல குடும்பங்களின் சேர்க்கையில் சமுதாயம் உருவாகிறது.

கவிஞர்கள் காண விழையும் சமுதாயம்

திருவள்ளுவரும் மகரிஷி அவர்களும் தனிமனித ஒழுக்கத்தை வற்புறுத்துகிறார்கள். தனிமனிதன் ஒழுக்கமுள்ளவனாக இருப்பின் சமுதாயம் சீர்மையுடன் செயல்படும் என்கிறார் திருவள்ளுவர். இதனை;

“ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்” - *(133)*

என்ற குறட்பாவால் அறியலாம். மகரிஷி ஒழுக்கத்தை அறமாகவே எண்ணுகிறார். இதனை,

“இயற்கை துன்பங்கள் எனும் வெப்ப தட்ப
ஏற்றங்கள் பசி உடலின் கழிவு உந்தல்
முயற்சியால் காலா காலத்தில் தீர்க்க

முடையற்ற வாய்ப்புதான் சுதந்திரம் ஆம்
செயற்கையில் ஒருவர் பிறர் சுதந்திரத்தை
சீர்குலையச் செய்யாத முறையில் வாழும்
பயிற்சியும் நல்நடத்தையும் ஒன்றிணைந்த
பண்பாடே ஒழுக்கம், அறம் நீதியாகும்."

(எனது வாழ்க்கை விளக்கம் ப.38)

என்ற பாடலால் அறியலாம். மேலும் மனிதனின் உள்ளத்தில் உணர்வில், உயிர்ப்பில் அன்பே நிறைந்திருக்க வேண்டும் என்பதனை திருவள்ளுவர்,

"அன்பின் வழிய துயிர்நிலை; அஃதில்லார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு" - (80)

என்று கூறுகிறார். அன்பு நிறை உடம்பே உடம்பெனலாம் என்று ஆணித்தரமாக உரைக்கிறார் மகரிஷி அவர்கள்,

"புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும்
. . . .
பிறர்துன்பம் போக்கும் அன்பு வேண்டும்.

(உலக சமுதாய வாழ்க்கைநெறி ப. 43)

என்கிறார். அன்பும் கருணையும் ஒன்றோடு ஒன்று பிணைந்தது என்று இரு கவிஞர்களும் மொழிகின்றனர்.

"அருளென்னும் அன்பின் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு." - (757)

மகரிஷி அன்புக்கும் கருணைக்கும் உள்ள தொடர்பைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

அன்பும் கருணையும்

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும் தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம். அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது. அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.

ஒரு முட்டையைப் பாருங்கள். அதிலுள்ள அனைத்துப் பொருட்களையும் ஒன்றிணைத்து அதன் ஓடு பிடித்துக் கொண்டிருக்கிறது. இது போன்றது அன்பு. முட்டைக்குள் இருக்கும் மஞ்சட்கருதான் குஞ்சு ஆக உருவாக இருக்கிறது. அந்த மஞ்சள் கருவுக்கு அதனைச் சுற்றியுள்ள வெள்ளைக் கரு தேவையான எல்லாப் பொருட்களையும் அளித்து நலமளிக்கின்றது. இது போன்றது கருணை.

ஒரு மாமரத்தில் பிஞ்சுவிடுகிறது. அதனைச் சிறு காம்பின் மூலம் விழுந்துவிடாமல் மரமானது பிடித்துக் கொண்டிருக்கிறது. இது அன்பு. அவ்வாறு பிடித்துக் கொண்டே பிஞ்சு வளர்வதற்குத் தேவையான இரசாயன நீரை அந்த மரம் பாய்ச்சிக் கொண்டே இருக்கிறது. அதுதான் கருணை.

உயிரினங்களில் ஒரு குழந்தையைப் பெற்ற தாய் அதனை எப்போதும் தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டோ அல்லது அது பிரிந்து போய்விடாமல் கண்காணித்துக் கொண்டோ இருக்கிறாள். இது அன்பு. அதே காலத்தில் அந்தக் குழந்தை வளர்வதற்கும் வாழ்வதற்கும் தேவையான பால், உணவு இவற்றை அது வளர்ச்சி பெறும் வரையில் ஊட்டிக்கொண்டே இருக்கிறாள். இதுதான் கருணை.

பேரியக்க மண்டலத்தில் கோடான கோடி அண்டங்களையும் சூரியன்களையும் பார்க்கிறோம். அனைத்தும் "வேதான்" எனும் நுண்ணணுக்களின் கூட்டுத் தோற்றங்களே. அணுவோ விரிந்து பரந்து எல்லையிலாது விளங்கும் இறைவெளியின் நுண் பகுதியே ஆகும். இறைவெளியில் அடங்கியுள்ள பூரணம், பேராற்றல், பேரறிவு எனும் பிரிவுபடாத முத்தரம் எனும் இருப்பு நிலையில் முகிழ்ந்த தள்ளும் ஆற்றலான இயக்க நியதிகள்தாம் பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறம் (செயல்விளைவு) என்னும் முத்திறன்கள். இத்தகைய பேராதாரப் பெருவெளியில் தோன்றிய நுண்ணணு முதற்கொண்டு, அவற்றின் வட்டத்தாலாகிய அண்டகோடிகள் அடங்கிய பேரண்டத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள இறைவெளியானது (தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் அருட்பேராற்றலால்) ஒன்றிணைந்துகொண்டு எதுவும் சிதறாமல் பிடித்துக் கொண்டிருக்கின்றது அல்லவா ? இதுவே இறைநிலையில் ஒப்புவமையற்ற அன்பு ஆகும். தன் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் அனைத்துக்கும் சக்தியை அளித்து எல்லாமே அதற்கு உரிய தற்சுழற்சியோடு இயங்க வைத்து, ஒவ்வொரு தோற்றத்திலும் பருமன், விரைவு, காலம், தொலைவு என்ற நான்கு பரிணாமங்களையும் சிதறாமல் காத்து வருகின்றதே, இந்தத் திருவருட்செயலே கருணை ஆகும்.

இவ்வாறு இயற்கையின் திருவிளையாடல்களால் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்திலும் மறுக்கவோ, மாற்றவோ முடியாத நியதியாக அமைந்திருக்கும் அன்பையும் கருணையையும் அந்தத் தோற்றங்களில் ஒன்றான மனிதனானவன் உணர்ந்து தன் வாழ்விலும் செயல்களிலும் பின்பற்றி வாழ்வதே இறைவழிபாடு ஆகும். அன்பும் கருணையும் என்ற மாயக்கயிறுதான் தெய்வ நிலையையும் எல்லாப் பொருட்களையும், உயிர்களையும் மனிதர் களையும் வழி நடத்திக் கொண்டிருக்கின்றது. இதனை உணர்ந்து நடந்து கொள்வதற்கு வாய்ப்பான ஆறாவது அறிவு மனிதனுக்கு

அமைந்திருக்கின்றது. இந்தப் பெருநிதியை மனிதன் அறிந்து கொள்ளாமலோ, அலட்சியப்படுத்தியோ, உணர்ச்சிவயப்பட்டோ, வாழ முற்பட்டால் கயிறு அறுந்த காற்றாடியைப் போல், நெறி பிறழ்ந்த வாழ்வு வாழ்ந்து மனிதன் துன்பங்களை ஏற்க வேண்டிவரும். எனவே அன்பும் கருணையும் மனித வாழ்வுக்கு இன்ப ஊற்று என உணர்ந்து விழிப்புடன் வாழ்ந்தால், இன்முகமும் இனிய சொல்லும் உதவும் கரங்களும் வெற்றி வாழ்வும் உருவாகும்.

அன்பும் கருணையுமாய் அகன்ற நிலையிலுள்ளாய்
என்மனத் தைவிரித்து இணைந்துகொண்டாய் உன்னுள்ளே
கன்ம வினைகள்எல்லாம் கழிந்தன உணர்கிறேன்
உன்னை உணர்ந்துஉய்ய உலகோர்க்குத் தொண்டுசெய்வேன்!

என்று ஒவ்வொருவருடைய உள்ளமும் ஒலித்துக்கொண்டேயிருக்க வேண்டும். (வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து பக். 36–39)

அந்த அன்பே அனைத்தையும் தரும். குறிப்பாக நட்பினை நல்கும் என்பதனை,

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" - (74)

என்கிறார் திருவள்ளுவர். ஒருவனுக்கு அனைத்துச் செல்வங்கள் நிறைந்திருந்தாலும் உண்மையான நண்பர்கள் இல்லையெனில் அவனுக்கு மனிதவளம் மன அமைதி கிட்டாது. அதனால் தான் நட்பு (அதி. 79) நட்பாராய்தல் (அதி. 80) பழைமை (அதி. 81) தீ நட்பு (அதி. 82) கூடா நட்பு (அதி. 83) என நண்பனுக்கு முதலிடம் தரும் வகையில் 5 அதிகாரங்களில் நட்பின் இலக்கணம், நண்பனாக்கிக் கொள்ள அவனுக்கு வேண்டிய தகுதிகள், பழகிய பின்பு அவனிடம் பெருங் குறைகள் இருப்பின் எச்சரிக்கையுடன் பிரிந்து விடுதல், பொறுத்துக் கொள்ளும் பிழைகள் இருப்பின் பழைமை பாராட்டி மன்னித்து விடுதல் எனப் பல்வேறு செய்திகளை அடுக்குகிறார். மேலும் சிற்றினஞ் சேராமை (அதி. 46) என்ற அதிகாரத்தில் நல்லோர் கூட்டுறவால் விளையும் பயன்கள், அல்லோரால் ஏற்படும் அல்லல்கள் ஆகிய வற்றைப் பற்றியும் விளக்கியுள்ளார்.

இந்த நூற்றாண்டிலும், ஏன் எந்த நிலையிலும் மனிதன் தனித்து வாழ இயலா. பிறரோடு இணைந்தே வாழவேண்டும். எனவே எவருடனும் பகை, வெறுப்பு, பிணக்கு இவை எழாமல் அவன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வரவு செலவுக் கணக்கில் இலாப நட்டம் இருப்பு இவற்றைக் கணிப்பது போல, தனிமனிதன் வாழ்விலும் அவனுக்கு எத்தனைபேர் நண்பர்கள், எத்தனைபேர் விரோதிகள் என்பதைக் கணக்கெடுத்தால் மனிதவளம் எவ்வளவு அதிகம் என்று

எளிதில் உணரலாம். எனவே மனிதனுக்கு நட்புநலம் என்பது வாழ்வுக்கு மிகவும் உறுதுணை என்பதை எல்லோரும் அறிய வேண்டும். ஆகையால் உடல் நலம், மனவளம் மனித வாழ்வுக்கு மிகவும் முக்கியம் என்பதுபோல நட்பு நலமும் மிகவும் அவசியமானதாகும். இதனை எந்த வழியிலும் காத்துக் கொள்ளும் பண்பினையும், திறமையினையும் ஒவ்வொருவரும் பெறவேண்டும். காக்கவும் வேண்டும் என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் நட்புக்கெடுவதற்கான காரணங் களையும் விளக்கிக் கூறுகிறார் மகரிஷி அவர்கள் (வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து பக். 35–36) நட்பு மலர எளிய வாழ்க்கை, இனியசொல், இன்முகம் காத்தல் என்ற பண்புகளையும் மனிதன் பின்பற்றுமாறு எடுத்துக் கூறுகிறார் (மேற்படி ப. 52).

பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை ஒழுக்கமுள்ளவர் களால் தான் உலகம் சீராய் இயங்குகிறது எனலாம்.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம் - 187)

என்ற ஔவையின் கூற்றினை இங்கு எண்ணுவோம். ஒழுக்க மிழந்தவன் உயிரை இழந்தவனுக்குச் சமம் எனலாம்.

திருவள்ளுவர் ஒழுக்கம் உடைமை (அதி. 14) என்ற அதிகாரத்தில் ஒழுக்கத்தினால் விளையும் நற்பயன்களைப் பற்றியும், ஒழுக்கக் கேட்டால் விளையும் தீமைகளைப் பற்றியும் விளக்கிக் கூறியுள்ளார். உடலிலிருந்த உயிர் நீங்கினால் பிணமென்று அழைப்பது போல ஒழுக்கம் நீங்கியவன் இழிந்த பிறப்பாய் ஆக நேரிடும் (133) என்று எச்சரிக்கிறார். எனவே,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" - (131)

என்று வழிகாட்டுகிறார்.

மகரிஷி 'மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து' என்ற நூலில் ஒழுக்கத்திற்கு இலக்கணம் வகுக்கிறார். இதனை,

"எண்ணம், சொல், செயலில்
எழும் விளைவறிந்திடுக.
உண்மையில் இன்பமே
உண்டெனில் ஒழுக்கமாம்"

என்ற அடிகளால் அறியலாம்.

பகுத்துண்டு வாழ்தல்

உலகமெங்கும் பரவிக்கிடக்கும் இரு பிளவுகள் / ஏற்றத்தாழ்வு எதுவெனில் செல்வம், வறுமை எனலாம். இதனையே திருவள்ளுவர் பல்வேறு குறட்பாக்களில் எடுத்துக்காட்டியுள்ளார். தனக்குக் கிடைக்கும் அனைத்தையும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பவேண்டும் என்கிறார்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்; நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை." - (322)

என்ற குறட்பாவின் மூலம், சான்றோர் சொல்லிய அறங்களுள் தலையான அறம் உலகத்து உயிர்களைப் பாதுகாப்பதே ஆகும். உலகப்பேரரசு அமைத்துத் தனிமனித சுதந்திரத்தைக் காக்க வேண்டும் என்பதனை மகரிஷி,

"உடலெடுத்து உயிர்வாழும் ஒவ்வொரு மனிதருக்கும்
உலகினிலே வாழ்வதற்கும் புலனின்பம் பெறுவதற்கும்
உடல்உயிர் அறிவுபரம் உணர்ந்துநிறை வெய்திடவும்
ஒத்தபொருள் சூழ்நிலைகள் பிறர்உதவி இவை வேண்டும்
உடலெடுத்த பெருநோக்கம் இயற்கையில் பின்மூன்றும்
ஒவ்வொருவ ரும்உணர்த்தும் பிறர்உரிமையைக் காத்தும்
உடல்உயிர் வாழ்க்கையறம் உலகெங்கும் தழைத்தோங்க
உலகிணைந்த பேரரசு உறுதிசெய்யும் நிலைவேண்டும்
(சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள் ப. 66)

என்ற பாடலின் மூலம் மக்கள் பிறருக்கு உதவிச் சமுதாயத்தைச் சீராக்க வேண்டுமென்கிறார். சமுதாயத்தைச் சீர்குலைக்கும் ஒன்று ஏற்றத்தாழ்வு. அந்நிலை நீங்கப் பொருளாதாரச் சிக்கல் தீர வேண்டும். இந்த ஏற்றத்தாழ்வின் காரணமாகப் பட்டினி, நோய், பகை, வஞ்சம், பஞ்சமாபாதகம், ஏமாற்றுதல், கடன், இல்வாழ்வில் மணமுறிவு, கல்லாமை, பிச்சை தேவையற்ற பொருள்தோற்றம் நல்வாழ்விற்கான பொருள் உற்பத்திக்குறைவு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். மேலும் சொத்துரிமையும், வணிகமும் சமூகத்தின் பதர்கள் என்கிறார். நம்முடைய பொருளாதார அமைப்பை "மூலதனம்" என்ற தவறான கருத்தாக்கத்தால் நிர்ணயிக்கப்படும் போக்கு உருவாகிவிட்டது. மூலதனம் என்பது தனியார் உரிமையாக அமையும் போது கீழ்க்காணும் வகையில் சீரழிவுகள் ஏற்படும் என்கிறார் மகரிஷி.

1. சுயமுயற்சி / சுயஉழைப்பு இல்லாமல் போகும்.
2. பிறருடைய உழைப்பைச் சுரண்டும் நிலை உருவாகும்.
3. பணம் என்பதே வாழ்வை இயக்கும் ஆற்றலாக மாறிவிடும்.

மூலதனப் போராட்டம்

மூலதனம் இட்டுத் தொடங்கப்படும் எவ்வகைத் தொழிலும், அத் தொழிலிலிருந்து கிடைக்கும் வருவாயும், மூலதனத்தின் விளைவுப் படைப்பாகக் கருத்து வடிவம் பெறுகிறது.

1. மனிதருக்கிடையே போட்டி, பகை
2. ஒழுக்கமில்லாத பொருள் குவிப்பு நெறி
3. ஆடம்பரம் X வறுமை என்ற சமூகப் பிளவு நிலை
4. பிறர் உழைப்பைச் சுரண்டும் செயல் தன்மை

"மூலதனமே, அரசை, மதங்கள் தம்மை முறை மாற்றிவிட்டுள்ளது, சிந்திப்பீரே" என்கிறார்.

தொழில்களும், பொருள் உற்பத்தியும்

அடிப்படைத் தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான உண்மையான மூலதனமாக இருப்பது பூமியும் உழைப்பும் மட்டுமே.

பண்டங்கள் அனைத்திற்கும் மூலம் பூமி
பாடு ஒன்றே விளைவுகளைக் கொய்யும்; சேர்க்கும்.

என்று மிக அழகாகக் கூறுகிறார் மகரிஷி. இயற்கை விளைவுகளை வாழ்வின் வளமாக்கும் செயல்தான் தொழில் என்றும் கூறுகிறார் மகரிஷி. 'பணம்' என்ற குறியீடு சமூக வாழ்வின் மனிதவாழ்வின் – தரநிலையைக் காட்டும் அளவுகோலாகிவிட்டது.

பணப்பொருளாதாரம்

மகரிஷி, "காசு என்ற கருவியினை ஒழித்துவிட்டால், கடமையிலே வழுவாமல் மக்கள் வாழ்வார்" என்கிறார். எல்லோரும் ஒன்றுபட்டு 'பணம்' என்ற அரக்கனை ஒழித்து விடவேண்டும் என்கிறார்.

வணிக அமைப்பு

சமூகத்தின் சமன்மைச் சீரமைப்பு சிதைந்து, ஏற்றத்தாழ்வுகளும் போட்டி பொறாமைகளும் மிகுவதற்குக் காரணம் என்று தனிமனித வணிக அமைப்பைக் கருதுகிறார் மகரிஷி. ஒரு நல்ல பொருளாதார அமைப்பு என்பது – மக்கள் நலம் சார்ந்த, பொருளாதார அமைப்பாக இருக்க வேண்டுமாயின், உழைப்புதான் அங்கே தலைமையிடம் வகிக்க வேண்டும்.

கூட்டுறவுப் பொருளாதாரம்

தொழிலும், வணிகமும் கூட்டுறவு முறையிலேயே நடைபெற வேண்டுமென்பது மகரிஷியின் கொள்கை. பொருள்களைப் பதுக்குவதும்,

பதுக்குவதனால் ஏற்படும் விலையேற்றம், வறுமை, பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத அவலம் ஆகியன அறவே நீங்கும். ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு அமைப்பு இருக்க வேண்டுமென்று கனவு காணுகிறார் மகரிஷி.

பொது உடைமை

பொதுஉடைமைப் பொருளாதார அமைப்பு, உலகமெல்லாம் தழைக்க வேண்டும் என்று கனவு காணுகிறார் மகரிஷி. பொது உடைமைத் தத்துவம் என்பது, ஒரு பொருளாதாரச் சமன்பாட்டு நெறி மட்டுமல்ல, அது ஒரு சமூக நல வாழ்வுத் தத்துவம் என்பதை அருள்தந்தை மிக அழுத்தமாக மனத்துள் கொண்டிருக்கிறார். அறநெறி சார்ந்த வாழ்வியல் – ஒற்றுமையும், பொது நலமும் சிறக்கும் வாழ்வியல் – அமைய வேண்டும் என்பது தான் அது என்பதை மகரிஷி அவர்கள் மிக அழுத்தமாக உணர்ந்துரைக்கிறார்.

பொதுவுடைமை அமையும் முறை

மக்கள் நலம் சார்ந்த பொருளாதார அமைப்பு, பொதுவுடைமை வழியாகத்தான் அமைய முடியும் என்பதை அழுத்தமாக உணர்ந்துள்ள மகரிஷி, அதை உருவாக்குவதற்கான வழிமுறையையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

'பணம் என்ற குறியீட்டின் ஆளுமை அகற்றப்பட்டு, ஆன்மிகமும் அறநெறியும் தழுவிய பொதுவுடைமைக் கோட்பாட்டை, கூட்டுறவு முறையில் பொருளாக்கமும் பங்கீடும் நடைபெறும் தத்துவத்தை மிக அழுத்தமாக மகரிஷி அருளியுள்ளார். அது மானுடப் பண்பாடாக மலரும் காலம் வரும்.

மனிதநேயம்

மனிதநேயம் என்பது பரந்துபட்ட பொருட்செறிவு மிக்க ஓர் உன்னதக் கோட்பாடு. மனிதநேயத்தை 'மனிதம்', 'மனிதத்துவம்', 'மானுடம்', 'மானுட நேயம்' எனப் பல பெயர்களால் குறிப்பிடுவதுண்டு. மனிதநேயம் என்பது தன்னுரிமை கொண்ட மனித மாண்பு, பகுத்தறிவு பெற்றுள்ள மனிதன் கொண்டுள்ள உண்மை, நேர்மை ஆகிய பண்புகளை மையமாகக் கொண்ட ஒரு 'மெய்யியல்' – தனிமனிதனை மேம்படச் செய்வது இதன் தலையாய நோக்கம் என்கிறார் மகரிஷி.

சுயக்கட்டுப்பாடு

மகரிஷியின் தாரக மந்திரத்தின் முக்கியமான கூறுகளுள் ஒன்று 'சுயக்கட்டுப்பாடு' என்பதாகும். தனிமனித சுதந்திரத்தை மதித்து,

வாழ்க்கைத் தரம் உயரச் சிந்தித்துத் தொண்டு புரியக் கனிவுடன் வேண்டுகிறார் மகரிஷி. வாழ்க்கை என்பது கடைசியாகப் போய்ச் சேர வேண்டிய ஊர் அல்ல; செல்ல வேண்டிய திசை, ஐந்தொழுக்கப் பண்பாட்டின் விளக்கத்தை மகரிஷியின் நூலில் தெளியலாம்.

நேர்மையான வாழ்வியல்

தனிமனிதனைக் கட்டுப்படுத்தி, சமுதாயத்தைக் காத்து, துன்பம் தவிர்ந்த, நட்டம் தவிர்ந்த வாழ்க்கையை உருவாக்க நேர்மையான தொரு 'நீதிமுறையைத் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்த பழக்கத்தின் வழியே நீதி என்ற அநீதி ஒழிக்கப்பட வேண்டும். 'ஒரே ஒரு வாழ்க்கை நல உரிமைச் சாசனம்' வழி ஓர் உலகப் பேரரசு வேண்டும் என்பது மகரிஷியின் விருப்பம் எனலாம். (வே. சமூக. இறை. சிந்தனைகள் பக். 280–283)

கல்வி

கல்வியைக் கண் என்றார் திருவள்ளுவர். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதனை அனைவரும் நவில்வர். ஒரு சமுதாயம் உண்மையில் பொலிந்தோங்க வேண்டுமானால் முதலில் அனைவருக்கும் கல்வி வேண்டும். இரு பெரும் சான்றோரும் கல்வியினை வற்புறுத்து கின்றனர். கல்வி (அதி. 40) என்ற அதிகாரத்தில் படிக்கவேண்டிய நூல்களைப் படிக்கவேண்டும். அவற்றை ஏன் படிக்க வேண்டும்? நூல்களைப் படிப்பதால் ஏற்படும் பயன்கள் யாவை? மற்ற செல்வங் களிலிருந்து கல்விச் செல்வம் உயர்ந்திருப்பதற்கான காரணங்கள் யாவை? போன்ற பல்வேறு வினாக்களுக்கு விடையளிக்கிறார் திருவள்ளுவர். எடுத்துக்காட்டாக,

> *"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
> *மாடல்ல மற்றை யவை"* -(400)

என்ற குறட்பாவைக் காட்டலாம். கல்லாமை (அதி. 41) என்ற அதிகாரத்தில் கல்லாதவன் படும் அவமானங்கள், துன்பங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டி, படித்தவனே மனிதன் என

> *"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
> *கற்றாரோ டேனை யவர்"* -(410)

என்ற குறட்பாவையும் எடுத்துக்காட்டி உணர்த்துகிறார்.

வயதில் முதிர்ந்த கல்லாதவர்களைப் பார்த்து, வருத்தப்படாதே! நீங்கள் கேள்விச் செல்வத்தைப் பெற முயற்சி செய்யுங்கள். அக்கேள்வி ஆற்றுநீர் அற்ற வறட்சிப் பொழுதில் ஊற்று நீர் போல் உதவியாய் அமையும் (414) என்கிறார். வயிற்றுக்கு உணவிட எண்ணி, கேள்வி

உணவை மறந்தவர்களை இறந்தவர்களுக்குச் சமமாக எடுத்துக்காட்டு கிறார். இதனை;

“செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?” - (420)

என்ற குறட்பாவால் உணர்த்துகிறார்.

மகரிஷி அறிவை வளர்க்கும் கல்வியோடு மனத்தினைச் செம்மைப்படுத்தும் ஆன்மிகக் கல்வியும் தேவையெனக் கீழ்வருமாறு வற்புறுத்துகிறார்.

“கல்வி செல்வம் பொருளுடைமை மக்கள் பலம் நட்பு
கண்ணியமாம் ஆளுமைப்பே ரனைத்து மிருந்தாலும்
கல்வியிலே உயர்ந்த அருட்கல்வியில்லை யானால்
கற்றபெற்ற அத்தனையும் சுயநலமாம் அன்புக்
கல்வியெனும் சமநோக்கு நேர்நிலை உணர்வு
கருத்தினிலே உருவாகா பிறர்பொருள் சுரண்ட
கல்வியெல்லாம் பயனாகும் கனிவு அன்பு நீதி
கடமையினை மறைத்து நிற்கும் தன்முனைப்பே ஓங்கும்
(சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத்தீர்வுகள் ப.109)

தொழிற்கல்வி

ஒவ்வொரு குழந்தைக்கும் விவசாயம், நெசவு, சமையல், வீடுகட்டல், இயந்திரங்கள், அறிவியல் கருவிகள் இவற்றின் நுட்பங்கள் அறிந்து அவற்றை இயக்குதல், உற்பத்தி செய்தல் ஆகிய ஐந்து அடிப்படைத் தொழில்களையும் அனைவரும் கற்கும் வகையில் தொழில் கல்வி முறையை வகுக்க வேண்டும். இவற்றோடு அவரவர்களின் சிறப்புத்திறமை, ஆர்வம் இவற்றிக்கேற்பக் குறிப்பான வேறு தொழில்கள் அல்லது கலைகளைக் கற்கவும் வசதிசெய்ய வேண்டும் என்பதனை,

“விவசாயம் துணிநெய்தல் சமையல் செய்தல்
வீடுகட்டல் இயந்திரங்கள் இயக்கல் செய்தல்
தவறாமல் அனைவரும் கட்டாய மாகத்
தக்கவயதிருபதுக்குள் கற்க, மேலும்
எவரெவர்க்கு எக்கலையில் திறமை ஆர்வம்
இயற்கையாய் அமைந்துளதோ அதையும் கண்டு
நவஉலக வாழ்க்கையினை இனியதாக்க
நாம் வகுக்கும் தொழில்கல்வி அமையவேண்டும்”

என்று மகரிஷி கூறுவது இக்காலத்திற்கு ஏற்றவொன்று என்பதனை அனைவரும் ஏற்பர் எனலாம்.

இன்று எங்குப் பார்த்தாலும் சாதி, மத, இனப்போராட்டங்கள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. திருவள்ளுவர் காலத்திலும் ஒரு சில இடங்களில் சாதி, மத, இனப்போராட்டம் இருந்திருக்க வேண்டும். அதனால்;

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" -(972)

என்று எழுதினார் போலும். மேலும் மதவாதிகளைப் பார்த்து,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்" -(280)

என்று கூறினார். மகரிஷி பல்வேறு இடங்களில் உலகச் சமாதானம் வேண்டிப் பல பாடல்களை எழுதியுள்ளார். 'மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து' என்ற நூலில் 'இன்பத்தின் முழுமை' என்ற தலைப்பில் கீழ்வருமாறு பாடுகிறார்.

"இன்றுள்ள சாதி, மத, மொழி
இன, தேச, பேதங்கள் போக்கி
என்று, எங்கும், எவரும்
இன்பமாய் வாழ்வதற் கேற்ப
ஒன்றுபட்டு உலகோர் அனைவரும் கூடி,
ஓரே ஆட்சி காண்பாரோ,
அன்றே, ஆதி அறிவின் பூரணத்தில்,
பொங்கும் நாள் ஆகும்" (ப.21)

மதத்தின் பெயரால் நாட்டை உருகுலைக்கும் மதத்தலைவர்கள், மதத்தின் இலக்கணத்தை உணராதவர்களால் நாட்டில் விளையும் தீமைகள் ஆகியனவற்றை 'மதம்' என்ற தலைப்பில் 'மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து' என்ற நூலில் எழுதியுள்ளார்.

"உடல், பொருள், அறிவு
உலகம், அறிந்தோன் சொன்ன
உடை, எண்ணம், வாழ்க்கை
ஒழுக்கங்களே மதம் (ப.15)

என்ற பாடலின் மூலம் 'மதம்' என்பது என்ன? என்பதற்கான விளக்கத்தை எளிமையாக எழுதியுள்ளார்.

சமூகத்தின் / சமுதாயத்தின் தலைவன் அக்காலத்தில் அரசன் என்று அழைக்கப்பட்டான். திருவள்ளுவர் காலத்தில் மன்னராட்சி முறையே சிறந்திருந்தாலும் மன்னனும் எளிமையாக, அறிஞர் தம் கருத்துகளை ஏற்று, நாட்டை ஆண்டவனாகவே குறள் வழி அறிய முடிகிறது. இன்னொரு கோணத்தில் சிந்தித்துப் பார்த்தால்

திருவள்ளுவர் காலத்தில் ஒரு சில இடங்களில் கொடுங்கோலாட்சியும் இருந்திருக்க வேண்டுமென்பதனை அதி. 56 – இல் அதாவது 'கொடுங்கோன்மை' என்ற தலைப்பில் உள்ள கருத்துகளை வைத்து உய்த்துணர முடிகிறது. அரசனது கடமையாக,

"குடிபுறம் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" -(549)

என்ற குறட்பா மூலம் உணர்த்துகிறார். மாறுபட்டுக் கொடுங்கோன்மை செய்யும் அரசாட்சி அழியும் என்பதனை,

"அல்லல்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" -(555)

என்ற குறட்பா மூலம் உணர்த்துகிறார் திருவள்ளுவர். வெருவந்த செய்யாமை அதி.57–இல் ஆட்சியாளன் ஆட்சி செய்யும் முறைமையைத் தெளிவாகச் சுட்டுகிறார் மகரிஷி. அனைத்து நிலையிலும் மக்களாட்சி முறையையே எடுத்துக் கூறியுள்ளார் என்பதனைப் படிப்பவர் நன்கு உணரலாம். ஆளத் தெரியாதவர்கள் நாட்டை ஆண்டால், என்னென்ன விளைவுகளைச் சந்திக்க நேருமென்பதனை 'மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து' என்ற நூலில் 'ஆட்சி நிலை' என்ற தலைப்பில் கீழ்வருமாறு விவரிக்கிறார் மகரிஷி.

"வாழத் தெரியாதோர் பெரும்பாலோர் வாழ்நாட்டில்
ஆளத் தெரியாதோர் ஆட்சியே நடைபெறும்
கோழை, கயவர், கொலைஞர், தடியர்கள்
ஏழை, நோயுற்றோர் எங்குமே காட்சியாம்" (ப.35)

நாட்டை ஆள அறிஞர்கள் முன்வரவேண்டும் என்கிறார் மகரிஷி. இதனை,

பொருள்துறையில் கற்பொழுங்கில் இன்றுள்ள சிக்கல்
பூவுலகில் மனிதரிடை குற்றங்கள் பலவாய்,
அருள்துறையில் மக்கள் மனம் செல்லாதவாறு,
அறிவினையே திசைமாற்றி அலைத்தமைதி போக்க
மிரள்கின்றார் பெரும்பாலோர் செய்வ தறியாமல்
மிகுதிபொருள் வறுமையொழித்தே கல்வி யூட்டி
இருள்நீக்கும் அறிஞர்களே அரசியலை எங்கும்
ஏற்றுக்கொண்டால் உலகம் இன்பவாழ்வு எய்தும்"
(மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து ப.45)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

உலகம் முழுவதுமுள்ள மக்களுக்கு இவர் தம் கருத்துகள் பயன்தரும் என்பதனை அறியலாம். மேலும் அச்சமற்று வாழ ஒரு வழியைக் காட்டுகிறார் மகரிஷி. இதனை,

"உலகப் பொதுஆட்சி என்ற உயர்திட்டம்
ஒன்றுதான் போர் எழாமல்
ஒவ்வொரு நாட்டை அதனின் மக்கள்தமை
அச்சமின்றிப் பாதுகாக்கும்" (ஞானக்களஞ்சியம் II ப. 1049)

என்ற பாடலால் அறியலாம்.

திருவள்ளுவர் இறைமாட்சி அதி.39–இல் கூறியுள்ள கருத்துகள் அனைத்தும் மகரிஷியின் கருத்துகளோடு ஒத்துப்போகின்றன. ஆயினும் 21–ஆம் நூற்றாண்டில் உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள ஆட்சி முறைகளைக் கண்ட மகரிஷி ஒரு புதிய வழிமுறை களையும் 'மதமும் மனிதனும்' என்ற நூலில் கீழ்வருமாறு தெளிவாக விளக்கியுள்ளார்.

மதத் தலைவர்கள் மூலமாகத்தான் இதற்கொரு முடிவு கட்ட வேண்டும். மதம் ஒன்று போதும். அதை அடைவதற்குத் தெய்வம் ஒன்று போதும். எந்தெந்தக் காலத்தோ, இடம், காலம், தேவை இவையொப்ப, தெய்வம் என்ற கருத்துக்கு உரு கொடுத்தார்கள். அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று ஒத்து வரவில்லை. இந்தக் காரணத்தால் மதங்களைக் கொண்டே அதில் பற்று வைத்து வாழ்ந்து வரக்கூடிய மனிதன் மனத்தாலும், செயலாலும் வேறுபட்டிருக்க வேண்டியது இனியும் அவசியமில்லை.

ஆகையால் மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும். மதத்திற்கு அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்று போதும். இதைத் தனிநபர் யாரும் செய்ய முடியாது. உலகில் உள்ள மதத்தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆராய்ந்து இரண்டு வினாக்களுக்கு விடை காண வேண்டும். ஒன்று கடவுள் (இறை நிலை) என்பது ஒன்றா? ஒன்றுக்கு மேற்பட்டதா? ஆராய்ச்சியின் முடிவில் ஒன்றுதான் என்று கண்டால் எந்த மாபெரிய ஆற்றலை இறைநிலையாகக் கொள்ள வேண்டும்? இந்த இரண்டு வினாக்களுக்கும் விடை கண்டு உலகில் வாழும் ஒவ்வொருவரும் அறிவில் தெளிவுபெற வழி காண வேண்டும். அறிவின் தெளிவுதான் வாழ்க்கை நல நாட்டத்திற்கு வழிகாட்டி.

அடுத்தது ஆட்சிமுறை. ஆதிகால மனிதன் வாழ்ந்த காலம் முதற்கொண்டு கால, இட, தேவைகள் வேறுபாட்டினால் எத்தனை வகையான ஆட்சி முறைகள் உலகில் தோன்றின? வாழ்க்கை நல நோக்கங்களை மனிதனுக்கு விளக்கவும், அவற்றை நிறைவாகப் பூர்த்தி செய்து கொள்ளவும் ஒரேவிதமான உரிமை முறைச் சாசனம் ஒன்று மாத்திரம் போதும். எந்த நாடானாலும், எந்த இனமானாலும் மனிதன் என்றால் ஒரே வகையான தேவையும், அதை நிறைவு செய்து கொள்ள ஒருவிதமான செயலும் தான் உண்டு.

மனிதனுக்கு உணவு, உடை, வீடு வேண்டும். மற்றவர்கள் கருத்தறிய மொழியும் வேண்டும். இனியும் ஒருவர் உற்ற வயதடைந்தால் ஏற்றபடி வாழ்க்கைக்கோர் துணையும் வேண்டும். தனிமனிதன் செயல்களைப் பிறருக்குத் தீமைதராத வகையில் காத்துக் கொள்வதற்கு ஒரு ஆட்சி சட்டமும், ஒழுங்கு முறையும் வேண்டும். இவற்றையெல்லாம் குறிப்பிட்டு வலியுறுத்தும் ஒரே ஒரு வாழ்க்கை நல உரிமைச் சாசனம் போதும். இவையனைத்தையும் மனித இனம் அடைய வேண்டுமெனில் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்துக் காக்கின்ற ஓர் உலகப் பேரரசு வேண்டும்.

உலகுக்குப் பொதுவான பேரரசு அமைப்பதற்கு ஓர் எளிய முறையை விளக்குகிறேன். இன்று ஐக்கிய நாடுகள் சபை ஒன்று இருக்கிறது. அது உலகுக்குப் பொதுவானது. அந்தச் சபையில் பாதுகாப்புக் கவுன்சில் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அதன் கீழ் உலக நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடி எல்லா நாடுகளின் எல்லைகளையும் பாதுகாக்கும் பொறுப்பை இந்தச் சபையே ஏற்றுக் கொள்ளும் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதற்குச் சில ஆண்டுக் காலம் கொடுத்து, முடிவு செய்யவேண்டும்.

அரசியல் சம்மந்தப்பட்ட ஆராய்ச்சியாளர்களும், அத்துறையில் தேறிய நிபுணர்களும் கூடி ஒன்றுபட்டு இந்தத் தேவைகளை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். எந்த நாடானாலும், ஊரானாலும் அங்குள்ள ஆட்சிமுறை இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்தால் போதும். அதற்குக் கேபிடலிஸம், கம்யூனிசம், சோசலிஸம், சர்வாதிகாரம் என்ற பாகுபாடு கொண்ட அரசியல் முறைகள் தேவையே இல்லை.

மனித குல நன்மையைப் பாதுகாத்துச் சீர்திருத்தி நல்வாழ்வு அளிக்க வல்ல அறநெறி சான்ற ஒரே ஒரு ஆட்சிமுறை போதும். ஆட்சி முறையில் அதை அமுல்படுத்துவதற்காக இன்று ஒவ்வொரு நாட்டிலும் கட்சிகள் தோன்றியுள்ளன. ஆட்சியைச் செயல்படுத்த கட்சிகள் தேவைதானா? கட்சி என்றால் மக்களை ஒரு குறிப்பிட்ட வகையில் பிரித்து அந்தப் பிரிவுக்கு வைத்த பெயர்கள்தான் இன்று கட்சி ஆட்சியில் ஓங்கி நிற்கின்றன. கட்சி ஆட்சியினால் ஒற்றுமை உண்டாவது இல்லை.

இதற்கு அரசியல் துறையிலுள்ள சிந்தனையாளர்களெல்லாம் சேர்ந்து கட்சி ஆட்சி முறையை ஒழித்து எந்த ஊர், நாடு, சமுதாயமானாலும் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து, அவருக்குக் கீழே ஓர் அறிஞர் குழுவை அமைத்து இதற்கு முன்னே

வகுத்திருக்கின்ற மனித உரிமைச் சாசனத்தின்படி ஆட்சிமுறை நடத்தி வந்தால் போதும்.

செய்தித் தொடர்பாலும், போக்குவரத்துச் சாதனங்களின் அதிகரிப்பாலும் இன்று உலகம் ஒன்றுபட்டிருக்கிறது. இந்த நிலையில் அரசியல் முறையும் ஒன்றுபடுவது மிக அவசியம். உலகம் முழுவதும் சேர்ந்து ஒரே ஆட்சியின் கீழ் இருந்தால் போதும். மற்ற நாடுகள், ஊர்கள் எல்லா இடங்களிலும் உள்ள ஆட்சி முறை உலகப் பொதுவான ஆட்சி முறையின் கீழ்க் கண்காணிக்கப்பட்டால் போதாதா ? எனவே ஆட்சிமுறையும் ஒன்றுபோதும்.

பொருளாதாரத்தை எடுத்துக் கொள்வோம். மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் ஒருவருக்கொருவர் இடையே பொருளாதாரச் சமத்துவம் வேண்டும். அப்படியெனில் எல்லாருக்கும் தேவையான பொருள் கிடைக்க ஏற்ற கல்வி முறை, தொழில் முறை வகுத்தால் போதும். உழைப்பின் மூலமே பொருட்கள் உற்பத்தியாவதால் உழைப்பாளிகள் வசம்தான் பொருளாதாரச் சமத்துவச் சட்ட நிர்வாகம் அமைய வேண்டும்.

இதற்கு ஏற்ற முறையை 'Prosperity of India' (இந்தியப் பொருள் வளம்) என்ற நூலில் விளக்கமாகக் கொடுத்திருக்கிறேன். மேற் சொன்னவாறு மதம், பொருளாதாரம், அரசியல் இவை மூன்றும் ஒரே மாதிரியாக உலக மக்களுக்கு அமைந்துவிட்டால் போர் ஏது ? வாழ்க்கைப் பொருட்களின் வீண் விரயம் ஏது ? இத்தகைய சிந்தனையை மனித குலத்தின் அறிஞர் பெருமக்கள், சிந்தனையாளர்கள் உணர்ந்து அதற்கெனத் தனிக் குழுவும், இயக்க மையமும் அமைத்து ஆவன செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். 'மதமும் மனிதனும்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட இந்த நூலின் உள்நோக்கு பொதுவாக உலக மக்கள் வாழ்க்கை வளங்களைப் பாதுகாப்பதற்கே யாகும்.

"குலமுதலாய்ப் பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி
பலரும்கூடி உழைத்துப் பகிர்ந்துண்டு வாழ்ந்திடுவோம்
உலகில் பிறந்துவிட்ட ஒவ்வோர் மனிதனுக்கும்
நிலஉலகம் சொந்தமென்ற நீதிநிலை நாட்டிடுவோம்"

(மதமும் மனிதனும் பக். 76–79)

'வாழ்க வையகம்' என்று கூறியுள்ளார் இதன்மூலம் வையகம் சீருற அவர் காட்டிய வழிகள் என்றும் பயன்படுவன என்று அறிய முடிகிறது. உலக ஆட்சி முறை கொண்டு வந்தால் நாட்டில் நல்ல பயன்கள் விளையும் என்பதனை,

"ஓர்உலக ஆட்சியினால் யுத்தபயம் ஒழிந்துவிடும்
போர்ஒழிந்தால் வீரர்களும் பொருட்களும் நற் சேவைக்காம்;
பார்முழுதும் ஏழ்மைபோம்; பண்பாடு சிறந்தோங்கும்
சீர்திருத்த வாழ்வுஅப்போ சிந்திக்கும் சிந்திப்பீர்".

(சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள் ப. 65)

என்ற பாடலின் மூலம் உணர்த்துகிறார். மேலும் இன்றைய அரசியில்வாதிகளின் பண்புகளையும் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"அரசியலும், வாணிபமும் மக்கள் தம்மை
அடக்கிடவும், உறிஞ்சிடவும், ஏற்ற தாச்சு
அரசியலே இவ்விரண்டில் முதன்மைஎன்று
அறிந்திட்டார் சிலர்; அதனால் திட்ட மிட்டு
அரசியலைத் தந்திரத்தால் ஒழுங்கீ னத்தால்
அடையமுயல் கின்றார்கள்; போட்டி யிட்டு,
அரசியலே முரடர்களின் சொத்தாய் மாறும்
அவலநிலை யைமுதலில் மாற்ற வேண்டும். (மேற்படி ப. 36)

என்ற பாடலின் மூலம் அரசியல் இன்று முரடர்களின் கைவசமும், பண ஆதிக்கவாதிகளின் அதிகாரத்திலும் நடக்கிறது என்பதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார் மகரிஷி.

பொது ஆட்சி

இதுவரையில் எவரும் சிந்திக்காத வகையில் மகரிஷி அவர்கள் சிந்தித்துத் தம் கருத்துகளை வெளிப்படுத்துகிறார். இந்த மண்ணில் பிறந்த அனைவருக்கும் இருக்கும் இடம் சொந்தம், சுவாசிக்கும் காற்று, நீர், என 5 பூதங்களும் சொந்தமென ஆணித்தரமாக அறை கூவுகிறார் மகரிஷி அவர்கள், இதனை,

"பிறந்துவிட்ட மனிதனுக்கு வளர, வாழ,
பேருலகம் எங்கெங்கும் சொந்த மாகும்.
இறந்துபோம் வரைக்கும்இந்த உரிமையுண்டு
எவர்இதனைத் தடுத்தாலும் அநீதி ஈதே
மறந்தபடி மனிதர்மனி தனாஇம் சிக்கும்
மதிமயக்கம் தெளியவைக்க அறிஞர் கூடி
சிறந்தமுறை யில்பேத மற்று வாழ,
சேர்ந்துலகப் பொதுஆட்சி காண வேண்டும்.

(சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத்தீர்வுகள் ப. 66)

என்ற பாடலின் மூலம் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையை வலியுறுத்துவதை உணரமுடிகிறது.

வாழும் வழி

மனிதன் துன்பத்தை வெறுத்து இன்பம் விழைபவன். ஆயினும் மனிதனைத் துன்பம் அலைக்கழித்து அவனைப் புரட்டி எடுக்கிறது. அந்தத் துன்பத்திற்குக் காரணம் என்ன? அதனை நீக்கும் வழிமுறைகள் யாவை என்ற பேருண்மையை அறிந்தால் இவ்வுலகிலே இன்பம் காண இயலும். திருவள்ளுவர் அதற்குரிய வழியைக் கீழ்வரும் குறட்பாவில் நவில்கிறார்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" - (341)

அதே கருத்தினையொட்டி "மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து" என்ற நூலில் 'துன்பம் தவிர்க்க' என்ற தலைப்பில் மகரிஷி;

"இன்பத்தை முறையோடு
அளவுடன் அனுபவிக்கத்
துன்பமே பெரும்பாலும் தோன்றாது
ஆய்ந்துணர்வீர். (ப.8)

என்று மொழிகிறார். ஆசையே துன்பத்திற்குக் காரணம். அந்த ஆசையும் பேராசையாகுமானால் விளைவு பெருந்துன்பம் என்று குறட்பா மூலம் உணர்த்துவதை அறியலாம்.

உலகில் பிறந்த மனிதன் படிப்படியாகத்தன் செயல்களில் உயர்ந்து தெய்வமாக வேண்டுமென்பதை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" - (50)

என்கிறார் திருவள்ளுவர். மேலும், கடவுளை அடைய விழைபவனைப் பார்த்துப் பற்றுநீங்கி வாழ வேண்டுமெனவும், மெய்ம்மை – எது என்று உணர்ந்து, வினையை நீக்கிக் கொண்டு இறைவனின் அடிகளை அடைய வேண்டுமெனக் குறட்பாக்கள் மூலம் உணர்த்துகிறார்.

உலகில் பிறந்த உயிர் உய்வுபெற இறைவனடி அடைய முடியும். மனிதன், மனம் சார்ந்த செயல்களை உணர்ந்துவிட்டால் மனிதனது மதிப்புயரும். செம்பொருளாகிய இறைவனை அடைய,

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" - (350)

என்கிறார் திருவள்ளுவர். மகரிஷி அறிவின் உச்சமாகக் கருதப்படுவது பற்றற்று வாழும் பண்பு என்று கீழ்வருமாறு உணர்த்துகிறார்.

"பெற்ற பிள்ளைகளை வளர்க்கும்
பெரும் சுமையும், சமைக்கும்

மற்ற பொறுப்பும் குறைத்து,
மாதர்களை உய்விக்க
உற்றவிதம் ஆட்சிமுறை
உலகோர் கூடி வகுத்து
பற்றற்று வாழும் பண்பே
அறிவின் உச்சம்" (மா. வி. மதி. விருந்து ப. 14)

மேலும் அந்தப் பற்றும் பாசமும் அச்சத்தை உருவாக்கும் களன்கள் என்கிறார் மகரிஷி. இதனை,

"இயக்கங்களுக்கு எல்லாம்
ஈர்ப்புத் தத்துவம் மூலம்,
பயத்துக்கெல்லாம் மூலம்
பாசமும் பற்றும்" (மா.வி.ம. விருந்து ப.14)

என்ற பாடலால் அறியலாம்.

தனி மனிதன், வீடு, சமுதாயம், நாடு, உலகு என்ற தலைப்புகளில் ஆய்ந்தாலும், மனிதனின் மன உணர்வுகளே அவனை உயர்த்தும். அந்நிலை உருவாகக் கவிஞர்களின் தத்துவஞ் சார்ந்த கொள்கைகளை இனிப் பார்ப்போம்.

தத்துவம்

மெய்மையின் ஒரு பகுதி நிலையாமை உணர்வு எனலாம். இந்த நிலையாமையை உணர, மனிதன் உலக இயல்பினை உணர்ந்து கொள்வான். நிலையில்லாதவற்றை, நிலையானவை என்றுணரும் தன்மையை,

"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை" - (331)

என்கிறார் திருவள்ளுவர். மேலும், யாக்கை நிலையாமை, உயிர்நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, கால நிலையாமை, உலக நிலையாமை, வாழ்வு நிலையாமை, இன்ப நிலையாமை, அழகு நிலையாமை, காம நிலையாமை, உறவு நிலையாமை என 11 – வகையான நிலையாமைகளைத் திருக்குறள் சுட்டுகிறது.

யாக்கை - தன்மை

உயிரை உடலிலிருந்து பிரிக்கும் தன்மையை யாராலும் மாற்ற இயலாது என்பதனை உடலில் நிகழும் மாற்றங்களைக் காட்டி விளக்குகிறது. மனிதனுடைய நா அடக்கி விக்குள் மேலெழுந்து இறப்பு நிகழ்வதற்கு முன் நம்முடலில் ஏற்படும் மாற்றங்களைக் கூறி யாக்கை நிலையாமையை;

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்" - (335)

என்று வள்ளுவம் கூறுகிறது.

உயிரின் தன்மை

உயிர் நிலையில்லாதது. உடம்பின் ஒரு மூலையில் குடியிருக்கும் உயிருக்கு நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இல்லை அது மாறி, மாறி வினைக்கேற்ற உடலைச் சென்றடைகிறது. இதனை,

"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு" - (340)

என்கிறது. உயிரைப் பற்றி, ஸ்ரீனிவாசாரியார் அவர்கள் "புவனம் பெரிது, இதனுள் எவ்வுயிரும் அடங்கி உள.... இவ்வாறே எல்லை யில்லாப் பரப்பினது இறைநிலை. இதனுள் அடங்கி இருப்பன உயிர்கள். நம் உயிர்கள் இப்போது உடம்புகளினகத்தே உள. இவ்வுடம்பினுள் உயிர் எப்போதும் இருப்பதில்லை. வருகிறது, வாழ்கிறது, விட்டு அகல்கிறது. ஆதலால், உடம்பு, உயிரினுடைய நிலையான இடம் அன்று. இங்ஙனம் நிலையில்லாத இந்த உடம்பினுள் உயிர் வந்த ஏதுவினை வந்த நெறி என்பர்.... உடம்பினைத் துச்சில் என்பர். இவ்வுடம்பு நாம் வினையினை வினைத்தற்கும், வினைப் பயனை நுகர்தற்கும் உதவுகிறது'' என்ற கருத்தினை எண்ணும்போது உடல், உயிர் இவைகளுக்குள்ள தொடர்பு விளங்குகிறது. தான் இருந்த கூடு தனியே இருக்க, அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்ற நிலையைக் குறள்,

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு" - (338)

என்கிறது. இந்த உயிரின் தன்மையைப் பற்றி ப் பொன். கோதண்டராமன் அவர்கள்,

"உயிருடலின் பிர்வினையைத் தீர்ப்பதற்கே
ஒருவரா லும்மாகா தானா வந்த
உயிருடலைப் பறித்திடுதல் எளிதே என்றோ
ஒரு நாளில் ஒருவர்க்கும் அடங்கா மல்தான்
உயிருடலைப் பிரிந்தேதான் தீரும்."

(கோதைவளவன், இயல் 48, 258; 1–5)

என்ற கவிதை வரிகளின் மூலம் உயிருக்கும் உடலுக்குமுள்ள தொடர்பினைத் தெளிவாக்குகிறார்.

உயிர் - உடல் - தொடர்பு

வள்ளுவம் உயிர் அழியாதது என்றும், அறிவுடையதென்றும், அருவத்தன்மையுடையதென்றும், உடம்பு அழியும், அழிவற்றது, உருவமுடையது, நிலையில்லாதது எனவும் விளக்குகிறது. இதனை ஒரு பறவையின் முட்டையில் தோன்றித் தனக்குரிய பருவம் வந்தவுடன் பற்று விடுவது போன்றே உயிரும் உடம்புக்கு ஆதரவாய் இருந்து, பயன் அடைந்தவுடன் (இவ்வுலக இன்பம் அடைந்தவுடன்) உடலைவிட்டுச் சென்று விடுகிறது. மீண்டும் உடலை அடையலாமென உயிர் எண்ணினாலும் உள்ளே செல்ல இயலாது எனக் குறள் உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பை விளக்குகிறது. பாமரர்களும் விளங்கிக் கொள்ளும் வகையில், உடல் – உயிர் பற்றிய விளக்கம் சிறப்பாக உள்ளது. நாம் உறங்கும்போது மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களும் ஓய்வு கொள்ளுகின்றன. அப்பொழுது உடம்புக்கு ஓரளவு அமைதி கிட்டுகிறது. அதுபோலவே உயிர்களுக்கும் ஓய்வு தேவைப்படுகிறது. இதனை இறப்பு என்கிறது. மீண்டும் ஐம்புலன்களும் விரும்பினால் சுகம் பெறும். அதுபோல உயிர்களின் மாற்றத்திற்குப் பிறப்பு தேவையாகிறது. உடம்பில் உறக்கம், விழிப்பு ஏற்படுகிறது. உயிரில் இறப்பு, பிறப்பு ஏற்படுகிறது. இதை,

"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" -(339)

என்கிறது.

செல்வத்தின் தன்மை

செல்வம், செல்வோம் எனச் சென்றுவிடும். கூத்தினைக் காண ஒவ்வொருவராய் வந்து சேர்வதைச் செல்வம் சேர்வதற்கும், கூத்தினைப் பார்த்த உடனே அனைவரும் பிரிந்து செல்வது செல்வம் நீங்குவதற்கும் உவமை கூறி விளக்குகிறது.

"கூத்தாட்(டு) அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று" -(332)

என்ற இக்குறட்பாவின் மூலம் செல்வம் அழியும் தன்மையது. நிலை மாறும் இயல்புடையது என அறியலாம். இச்செல்வ நிலையாமை உணர்ந்த 'ஃபரிதூன்' என்னும் அரசன், தான் வீற்றிருந்த மண்டபத்தின் முன் கீழ்க்காணும் வாசகங்களைப் பொறித்தான் என்று "குறளும் குலிஸ்தானும்" என்ற நூலில்,

"அன்பனே இவ்வுலகம் ஒருவன்பால் நிலைத்திருப்பது
அன்று..... உன்னைப்போன்ற எத்தனையோ அரசர்களை,
அது வளர்த்து அழித்து விட்டது" (ப.9)

என்று குலாம் தஸ்தகீர் கூறுகிறார். இவ்வாசகங்கள் செல்வம், அரசு, யாக்கை, இன்பம், உலகம் இவை நிலையில்லாதவை என்று விளம்புகின்றன. செல்வம் இளமையில் மனிதனிடம் இருக்குமானால் அதைக்கொண்டு அவன் இன்பம் துய்க்க இயலும். இந்த இளமையும் நிலையில்லாதது. இறப்பு இளமையிலும் வரலாம். உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த உயிருக்கு, நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இதுவரை அமையவில்லை (340) என்கிறது வள்ளுவம். யாக்கை, செல்வம், இளமை இவை நிலைத்திருக்கும் கால அளவை எவராலும் செப்ப இயலாது. எனவே, காலமும் நிலையில்லாதது என்பதனை,

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள(து) உணர்வார்ப் பெறின்" -(334)

என்கிறது.

நாள் என்பது ஒரு கால அளவுபோல் காட்டி உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாக உள்ளது. இதனை, தெ. ஞானசுந்தரம், "சூரியன் தான் காலமானி . . . . அவன் முகங் காட்டும் பகல், மூச்சடங்கும் இரவு இரண்டும் சேர்ந்து நாள் ஒன்று உருவாகிறது!" என்று கூறி மேலும் . . . . வாளின் பொய்ம் முகந்தான் நாள். அது பொய்மைப் போர்வையுள் புகுந்துகொண்டு, மெய்ம் மரத்தை அறுத்துக் கொண்டே இருக்கிறது (வள்ளுவர் வழி ப. 6) என்கிறார். இந்தக் காலமும் வாழ்வோடு பின்னிப் பிணைந்தது என்பதனை,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" -(336)

என்ற குறட்பா மூலம் காலம், வாழ்வு, உலகம் இவற்றின் நிலையாமை தெளிவாகிறது. அறத்துப்பால், பொருட்பால் இவற்றின் மூலம் யாக்கை, உயிர், செல்வம், இளமை, காலம், வாழ்வு, உலகம் என ஏழு வகை நிலையாமைகளைக் கூறுகிறது. காமத்துப்பால் இன்பம், அழகு, காமம், உறவு இவை நிலையில்லாதவை என்று உணர்த்துகிறது. ஆக, குறள் பதினொரு வகையாக நிலையாமையை வகைப்படுத்துகிறது எனலாம். நிலையாமையை உணர்ந்தால் நிலைத்ததைப் பெற இயலும்.

உலகில் பிறந்த உயிர்களை இறைவனை அடைய ஒட்டாமல் தடுப்பது ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்கள் என்பர் சைவசித்தாந்த சாத்திரத்தார். மாயையால் வினை பதிவாகி அந்த வினையின் பயனால் ஆணவம் தலைக்கேற உயிர் இறைவனடியை அடைய ஒட்டாமல் துன்புறுகிறது. இந்தத் தத்துவத்தை மகரிஷி மிக எளிமையாக 'மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து' என்ற நூலில்

'நிலையாமை நினைவிற் கொள்' என்ற தலைப்பில் கீழ்வருமாறு நவில்கிறார்.

"பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு இதை
மறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை" (ப.16)

இவ்வுண்மையை 'உணர்ந்து ஓர்மை நிலைப்பயற்சியினை மேற்கொள்ள மனநலம் மிகும்' என்கிறார். இதனை,

"நினைப்பும் மறப்பும் அற்று இருக்க,
நீ பழகிக்கொள், புலன்கள்
அனைத்தும் அடிமையாம்,
அமைதி கிட்டிடும் ஆங்கே
ஒன்றையும் நினையாது,
உன்னையும் மறவாது,
நின்ற நிலையே அது,
நீயறி நினைவை நிறுத்தி" (மா.வி.மதி. விருந்து, ப. 17)

என்ற பாடலால் அறியலாம்.

வினை

தமிழன் பல்வேறு கோட்பாடுகளைக் கண்டறிந்து உலகுக்கு உணர்த்தியுள்ளான். இறைமறுப்பாளரும் ஏற்கும் வகையில் வினைத் தத்துவத்தை/வினைக் கோட்பாட்டினைத் தமிழர்கள் உணர்த்தி யுள்ளனர். இதனை,

"திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்க இருவழி யுண்டு
கிளைக்கும் தனக்கும் அக்கேடில் முதல்வன்
விளைக்கும் தவம்அறம் மேற்துணை யாமே" - *திருமந்திரம்*

என்ற திருமூலரின் பாடல்வழி திருவள்ளுவரும் மகரிஷி அவர்களும் தெளிவாக விளக்கியுள்ளனர். அதாவது தவம், அறம் என்ற இரண்டு வழிகளை மனிதன் மேற்கொள்ள உயிர்உய்வு பெற்று இறைவனடி அடையும்.

அகத்தவப் பயிற்சி

தவம் என்பதற்கு வள்ளுவர்,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு" - (261)

என்று விளக்கம் தருகிறார். அகத்தவம் எனப்படும் உள்ளப் பயிற்சிக்கும் அடிப்படை நோக்கம் அகிம்சை நெறியைப் பேணுதலே

ஆகும். ஏனெனில் அகிம்சை மட்டுமே உலக உயிரினங்களிடையே நட்புறவைப் பெருக்கி, அமைதியை நிலை நாட்டவல்லது.

'சித்த சலனம் சம்சாரம்', 'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்' என்பன போன்ற அனுபவமொழிகள் உலக வாழ்க்கையில் மனத்திற்கு உள்ள முதன்மையான இடத்தைப் புலப்படுத்துகின்றன. இத்தகைய மனத்திற்கும் மனிதனுக்கும் உள்ள உறவினையும் மனம் குறித்த விளக்கத்தையும் பாரத நாட்டு யோகிகள் விரிவாகத் தெளிவுபடுத்தியுள்ளனர். மனத்தை வளப் படுத்துவதன் வாயிலாகத் தனி மனிதனின் உலக, ஆன்மிக வாழ்க்கையிலும் பிரபஞ்ச உயிரினங்களின் வாழ்க்கையிலும் வளத்தையும் நலத்தையும் பேரின்பத்தையும் மேம்படுத்த இயலும் என்பது யோகிராஜ் வேதாத்திரி மகரிஷியின் திடமான நம்பிக்கை யாகும். அவரது சிந்தனைகள் அடங்கிய வேதாத்திரியத்தின் உயிர்நாடிக் கொள்கையும் இதுவே ஆகும்.

மனம் ஒரு நிலையில் அமைந்து அடங்காது, அலைந்து கொண்டிருக்கும் இயல்பினை உடையது. மன அலைவுகளே சொல்லாகவும் செயல்களாகவும் எண்ணங்களாகவும் உருவெடுக் கின்றன. இதுவே 'சித்த சலனம் சம்சாரம்' என்ற மொழியின் பொருள். மனம் ஏதேனும் ஒரு பொருளைப் பற்றிய எண்ணத்திலேயே ஒடுங்கி ஒருமைப்பட்டு அடங்கும்போது, மனிதன் இறைநிலையை உணர்கிறான். அதன் காரணமாக எல்லாவற்றிடமும் சமநோக்கும் வினைப்பயனில் விருப்பின்மையும் உண்டாகி, இயற்கையோடு இயைந்த வாழ்விற்கு உட்படுகிறான்; உடலுடன் வாழ்ந்த போதிலும் அவ்வுடலுக்குரிய உணர்வினை ஒழித்து, உணர்ச்சிகள் செத்த உடலுடையவனாகி, மண்ணில் உடல் விழும்வரை தொண்டாற்றுதலைத் தன் கடமையாகக் கொள்கிறான். இந்நிலையே வீடுபேறு, மோட்சம், சீவன்முக்தி என்று கூறப்படுகிறது. வாழ்க்கையின் ஒட்டுமொத்த உயிர்நாடியாக மனம் இருத்தலை ஆன்மிக அறிஞர்கள் திறம்பட விவரித்துள்ளனர்.

மனிதனின் மனம் குறித்து யோகிராஜ் கீழ்க்காணுமாறு விவரிக்கிறார். மனிதன் என்ற உருவில்,

> **1. பருஉடல், 2, நுண்ணுடல், 3. காந்தம் என்னும் அலைச் சுழல் மூன்றும் ஒன்றில் ஒன்றாக இணைந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. சிறுசிறு செல்களால் இணைக்கப்பெற்ற ஒரு முழுமையான கட்டுக் கோப்புத் தோற்றமே பரு உடல் (Physical Body). அந்தப் பரு உடலுக்குள் நுண்ணுடல் என்பது ஒன்றுடன் மற்றது**

> நெருங்காத நுண்–விண் துகள்களின் ஒட்டச் சுழல். இதுவே சூக்கும உடல் (Astral Body). சூக்குமமாகக் கருதப்படும் வேதான் என்னும் நுண் விண்ணானது அதனைச் சுற்றியுள்ள இறைவெளியால் சூழ்ந்தழுத்தப் படும் போது இறைவெளியிலிருந்து வெளியாகும் சிற்றலைகளே 'காந்தம்' ஆகும்.
>
> உயிர் உடல்களில் உண்டாகிச் சுழன்றியங்கிக் கொண்டிருக்கும். இந்தக் காந்த அலைதான் 'சீவகாந்தம்' ஆகும். பஞ்சபூதக் கலவையான பருஉடலில் சீவகாந்தமானது அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக மாற்றம் பெற்று இயங்கும்போது, அந்தத் துன்மாற்றத்தின் முழுமைப் பேறாகவும் 'மனமாகவும்' சீவகாந்தம் இயங்கு கின்றது. எனவே, 'மனம்' என்பது 'சீவகாந்த' அலையன்றி வேறு ஒரு தனிப் பொருள் அன்று.

அழுத்தம் (தொடு உணர்வு) முதலான ஐம்புலன்களும் மனத்தோடு நெருங்கிய தொடர்புடையன என்பதை மகரிஷி சுட்டிக்காட்டுகிறார். 'மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி' என்கிறார் வள்ளுவரும்.

அறிவு, செயல் என எல்லாவற்றிற்கும் நெருக்கமாக இருத்தலால் மனத்தை வளப்படுத்துதல் மிக இன்றியமையாதது என்பதனால், அதனை 'அகத்தவம்' என்று மகரிஷி குறிப்பிடுகிறார். இந்த அருஞ்செயலை எளிதாகவும் இனிய உணர்வுடனும் மேற்கொள்ள வேண்டும். இதனாலேயே மனத்தை வளப்படுத்துகிற பயிற்சியை 'மனவளக் கலை' என்று ஒரு கலையாகக் கருதுகிறார்.

மனவளக் கலை

மனத்தை வளப்படுத்தும் பயிற்சியை மகரிஷி நான்கு உறுப்புக்களாகப் பகுத்து விவரிக்கிறார்.

> பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டு இருக்கக் கூடிய மனிதன், பழக்கத்தை முறையாக மாற்றிக் கொண்டு விளக்கத்தை நல்விளக்கமாகப் பெற்று, அந்த விளக்கத்தின் வழியே வாழ்க்கையை மாற்றி கொண்டு வாழ்வதற்கு ஒரு முறையான பயிற்சி எதுவோ அதைத்தான் 'மனவளக் கலை' என்று சொல்லுகின்றோம். மனவளக்கலையின் நான்கு அங்கங்களான தவம், அகத்தாய்வு, குணநலப் பேறு, முழுமைப்பேறு ஆகிய நான்கிற்கும் மனமே விளைநிலம். மனம் தன் திறமையையும் வல்லமை

> **யையும் பெருக்கிக் கொள்ளும் பயிற்சியே தவமாகும். மனம் தன்னைத் தூய்மை செய்துகொள்ள எடுத்துக் கொள்ளும் முயற்சியே அகத்தாய்வாகும். அந்தத் தூய்மையில் மேலும் மேலும் மனம் தன்னை உறுதிப் படுத்திக் கொள்வதே குணநலப் பேறு ஆகும். தூய்மையில் பூரணத்தை அடைந்து அமைதியாக இருப்பதுவே முழுமைப்பேறு ஆகும்.**
>
> (மனவளக் கலை, ப. 23)

தனிமனிதனும் அவன் சார்ந்துள்ள சமுதாயமும் அவனோடு இறைநிலையில் உறவுடைய பிரபஞ்சமும் உறுப்பும் உடலும் போன்ற நெருக்கம் கொண்டவை. பிரபஞ்சம் உடல் என்றால் மனித சமுதாயம் உறுப்பு. சமுதாயம் உடல் என்றால் மனிதன் உறுப்பு. உடலும் உறுப்பும் நலத்தோடும் வளத்தோடும் இருந்தால்தான் அமைதியான இன்பம் நிலைக்கும். இந்தச் சுழற்சிநிலை தனி மனிதனின் உடலுக்கும் உயிருக்கும் பொருந்தும்.

குணநலப் பேறு

மனிதனின் உடல்நலமும் உயிர்நலமும் அவனது மன வளத்தைப் பொறுத்து அமையத் தகுந்தவை. தன்னை இயற்கையின் ஓர் உறுப்பு என்றும் இலகுவான (எளிய) இறைவனின் சுடர் என்றும் உணர்ந்து வாழ்வதன் வாயிலாக மனவளம் எளிதில் சிறப்படையும். உலகில் வாழ்வதற்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் என்ற அத்தியாவசிய நுகர்ச்சியை மட்டுமே உரிமையாக்கிக் கொள்வதன் வாயிலாக மனிதன் பிற மனிதருக்கும் உயிரினங் களுக்கும் இயற்கை வளத்திற்கும் கேடு விளைவித்து – அவற்றின் நுகர்ச்சிக்குத் தடையாக வாழும் போதுதான் மனித வாழ்வில் போராட்டம் நிகழ்கிறது. அவ்வாறே வீண் ஆடம்பர – நாகரிகக் கேளிக்கைகளுக்காக இயற்கை வளத்தைக் குறைக்கும்போது, இயற்கை அமைப்பே சீறி எழ நேரிடுகிறது. இயற்கை வளக் குறைப்பு என்பது மனித உடலில் ஏதேனும் ஒரு சத்துப்பொருள் குறைவுக்கு இணையானது. சத்துக் குறைவினால் மனத்தளவிலும் உடலளவிலும் நோய் உண்டாகும். இயற்கையிலும் நில நடுக்கம், பேரலை, பெரும்புயல் போன்ற அழிவுச் சீற்றங்கள் நிகழும். எனவே இறைநிலையை உணர்ந்து இன்பமாக வாழ முயல்வோர் முதற்படியாக எளிமையாக வாழப் பயில வேண்டும். மகாத்மா காந்தியடிகள் எளிய வாழ்வு, உடலுழைப்பால் வாழ்தல் என்று வலியுறுத்துதல் இது பற்றியே.

அன்புடைமை, அருளுடைமை, பொறுமை, நட்புணர்வு, கொல்லாமை (அகிம்சை), பிறர்க்கு உதவுதல் என இணக்கமான

உறவை வளர்க்கிற பண்புகள் யாவும் குணநலப்பேறு என்று கூறப்படு கின்றன. இப்பண்புகள் அனைத்தையும் பெற்றவருக்கே இயற்கை யையும் மனித சமுதாயத்தையும் பேணுதலுக்கான எளிய வாழ்க்கையை மேற்கொள்ள இயலும். (வே.ச.இ. சிந்தனைகள், பக். 194–197)

தவம் செய்வதால் மட்டும் இறைவனை அடைய முடியாது.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரப் பிற" -(34)

என்கிறார் வள்ளுவர். மேலும், துறவிகளும், தூய்மையாக இருக்க வேண்டுமென்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார். இதனை,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்த தொழித்து விடின்" -(280)

என்ற குறட்பாவால் உணரலாம். மகரிஷி அவர்கள்,

"தன்வியாசம் பூரணமாய்த்
தானறிந்த அறிவாளி,
சன்யாசம் அடைந் தோனாம்
சத்து, சித்து அனந்தன் அவன்" (மா.வி.மதி. விருந்து, ப. 9)

மேலும், 'யோகம்' என்பதன் இலக்கணத்தைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

"எண்ணம் தானாக எழுந்து அலையாமல்
எண்ணத்தில் எண்ணமாய் இருப்பதே யோகம்" (ப. 9)

தியாகியும் – ஞானியும் என்ற தலைப்பில்

"கடமையுணர்ந்து அதைச் செயலில்
காட்டுபவன் தியாகியாம்
கடவுளே மனிதனான
கருத்தறிந்தோன் ஞானியாம்" (ப. 7)

என்று தியாகிக்கும், ஞானிக்கும் உள்ள சிறு இடைவெளியை விளக்குகிறார். வினை உண்மையைத் திருவள்ளுவர் 'கன்மம்' என்கிறார்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" -(5)

அந்த வினை இருவகைப்படும் என்கிறார் திருவள்ளுவர். சைவசித்தாந்தம் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்று மூவகையாக உரைக்கும். அவற்றுள் ஆகாமியம் என்பது நாமாக விரும்பிச் செய்யும் வினை என்பதனைத் திருவள்ளுவர்

"அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து" - (361)

என்னும் குறட்பாவில் தெளிவுறுத்துகிறார்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

இந்த நூற்பாவிற்கு

"The Philosophic Meaning of this Sutra is distinct. The Karma does not transform with the transmigration of souls but romains intact and lies dormant waiting for the proper time according as the karma is Akamiya or Prarathra or Sanchitha"

என்று கூறும் கூற்றை இங்கு எண்ணுவோம்.

திருவள்ளுவர் 'வினை' உண்மையைப் பல குறட்பாக்களில் சுட்டியுள்ளார்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" -(5)

என்ற குறட்பாவில் இருவினை என்று சுட்டுகிறார். வினை மூவகைப்படும். அவை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் எனப்படும். அவற்றுள் ஆகாமியம் என்பது, நாமாக விரும்பிச் செய்யும் வினை என்பதைத் திருவள்ளுவர்,

"அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து" - (361)

என்னும் குறட்பாவில் தெளிவுறுத்துகிறார். இதிலிருந்து உயிரின் இச்சையே பிறப்பிற்குக் காரணம் என்பது பெறப்படும். மேலும் நாமாக விரும்பிச் செய்யும் வினை என்பதும் உணரமுடிகிறது. இன்னும்,

"அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்" - (368)

என்ற கருத்தும் இங்கு எண்ணத்தக்கது. மேலும், ஆகாமியத்தை உயிர்களின் விருப்பத்தால் வருகின்ற வினையென்று கூறலாம். "இந்த வருவினை நல்வினைகளில் விருப்பும், தீவினைகளில் வெறுப்பும் கொண்டு வருவதால் உயிர்களின் விருப்பு, வெறுப்புகள் வினை எனப்படுகின்றன. சஞ்சிதம் என்பது இருப்புவினை எனப்படும். இருவினைகளின் தொகுப்பாக அஃது இருப்பதால் இதனைத் 'தொகுப்பு வினை' என்றும் கூறுவர். உயிர்கள் செய்த இருவினை களையும், பக்குவம் ஆகும் வரையில் நுண்ணிய நிலையில் புத்தி தத்துவத்தைப் பற்றி மாயையில் கிடக்கும் உயிர்களின் நல்வினை,

தீவினைப் பயன்கள் உயிர்களுக்கு ஊட்டப்படுவதற்கு முன்பு அதற்கான பருவ முதிர்ச்சி ஏற்படும்வரை சஞ்சிதமாக இருப்பில் இருக்கும். எனவே அவ்வினை இருப்பு வினை என்று காரணத்தால் பெயர் பெற்றது. இந்தச் சஞ்சிதவினையைப் பற்றி,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்(கு)
எழுமையும் ஏமாப்(பு) உடைத்து" - (398)

என்ற குறட்பாவால் உணர்த்துகிறார். வினைகள்போல உயிரின்கண் கிடந்து அது (கல்வி) புக்குழிப்புகும் என்கிறார் பரிமேலழகர். "உயிரின்கண் கிடந்து" என்னும் தொடர் சஞ்சித வினையைத் தெளிவாக்குகிறது.

"காணாதான் காட்டுவான் தான்காணான்; காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு" - (849)

என்ற குறட்பா ஆணவமலப் பற்று உடையவனது இயல்பைக் கூறுகிறது. ஆணவ மலப்பற்று உடையவன் விடாத பிடிவாதத் தன்மை உடையவன். மேலும், தன்னையே வியந்து கொள்ளும் உணர்வு உடையவன்.

உலகத்தவர் 'உண்டு' என்று சொன்ன பொருளைத் தன் அறியாமையின் காரணமாக "இல்லை" என்று சொல்லுபவன் மனிதன் என எண்ணுதற்கில்லை. சஞ்சிதம் என்பது விதைப்பதற்குப் பயன்படும் 'விதை நெல்' என்று கூறலாம். இதனை,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" - (226)

என்ற குறட்பாவில் வைப்பு + உழி – என்பதனை, வைக்குமிடம் என்று பொருள் கொண்டால், சஞ்சிதம் என்பது சேர்த்துவைப்பது என்ற சைவ சித்தாந்தக் கருத்துக்கு அரண் சேர்க்கும். உலகத்திலேயே மிகப்பெரிய தீவினை, பொறாமையே ஆகும். அதனைப் 'பாவி' என்கிறார் வள்ளுவர். அதாவது பிறர்க்குள்ள நல்ல நிலையினைக் கண்டு, உள்ளம் பொறுக்காது படுகின்ற பொறாமை எனப்படும். தீவினை, அந்தத் தீவினையைச் செய்பவனுக்கு உள்ள எல்லா நலன்களையும் கெடுத்து, அடுத்த பிறவியிலும் அவனுக்கு அழிவை உண்டாக்கக் கூடிய போகூழாக ஆகத்தக்க முறையில் இருப்பு வினையாகிய சஞ்சிதம் ஆகும்.

அடுத்து, "பிராரத்தம்" என்பது இருப்பு வினையிலிருந்து உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளின் பயனாகிய இன்ப துன்பங்களை உயிர்கள் நுகரும் பொருட்டு இறைவனால் ஊட்டப்படும் ஊழினைக் குறிக்கும். இறைவனால் விதிக்கப்பட்டு உயிர்க்கு ஊட்டப்படுவதால் 'விதி' எனப்படுகிறது. உயிர்களால் நுகரப்படுவதால்

"நுகர்வினை" எனப்படுகிறது. இந்த ஊழினைப் (அதி-38) பற்றித் திருவள்ளுவர் பத்துக் குறட்பாக்களில் தெளிவுறுத்துகிறார். இறைவன் ஊட்டினால் அன்றி, மனிதன் நுகர இயலா. இதனை,

"வகுத்தான் வகுத்த வகைஅல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" -(377)

என்ற குறட்பாவால் அறியலாம். ஊழ் இறைவனால் ஊட்டப்படுவதையும். அதனைவிட வலிமிக்கது எதுவுமில்லை என்பதையும், "ஊழிற் பெருவலி யாவுள? (380) என்ற குறட்பாவால் உணரலாம். இறைவனால் ஊட்டப்படும் ஊழை, அவனருளாலேயே வெல்ல இயலும்/

"பொறியின்மை யார்க்கும் பழியன்(று) அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி" -(618)

என்ற குறட்பா மூலம், ஊழை வெல்லாமல் இருப்பது குற்றம் என்று கூறுகிறார். இதன் மூலம் விதியை வெல்லும் வழியினையும், வினைக்கும் - விதிக்குமுள்ள தொடர்பினையும் அறியமுடிகிறது. "திருக்குறளில் சைவசித்தாந்தம்" (பக். 62-65).

விதியை வெல்ல இயலுமா என்று கேட்பவர்க்குத் திருவள்ளுவர்,

"பொறியின்மை யார்க்கும் பழியன்(று) அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி" -(618)

"தெய்வத்தான் ஆகா தெனினும், முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" -(619)

"ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்
தாழா துஞற்று பவர்" -(620)

என்று கூறுகிறார். அதாவது எவனொருவன் திருவருளை வேண்டி முயற்சி மேற்கொள்ளுகிறானோ; அவன் நிச்சயம் வெற்றி பெறுவான் என்பது பெறப்படுகிறது. வினையோடு தொடர்புடைய கொள்கையாக, விதியைக் கூறலாம். மகரிஷி அவர்கள் விதி – மதி – விளக்கம் என்ற தலைப்பில் 'மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து' என்ற நூலில் ப. 19-இல் கீழ்வருமாறு விளக்குகிறார்.

"வேகமாய் இருப்பதை விதி என்போம், சிவம் என்போம்,
இயற்கை என்போம் வேகத்தில் நுட்பமும் கூடியபின்
அதை விவேகம் என்போம், மதி என்போம்"

(மா.வி.ம.விருந்து, ப. 19)

அவை, வேறுவேறு அல்ல என்று கூறி விதி, சிவம், விவேகம், மதி போன்ற சொற்களில் உள்ள நுட்பமான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துகிறார். மேலும் விதியை – மதியையும் பற்றி பக். 115-இல் விளக்குகிறார்.

"எந்த இடம் பொருள், சக்தி
இயற்கையோ அதன் விளைவோ
அந்த இடம் பொருள் சக்தி
அனைத்தும் விதியென் றுணர்வீர்!
எந்த இடம் பொருள் சக்தி
இன்பத் துன்ப உணர்வினின்று
வந்துளவோ அத்தனையும்
வகைப்படுத்த மதியாகும்"

(மா. வி. ம. விருந்து ப. 115)

என்ற பாடலின்மூலம், விதி, மதி பற்றிய உண்மையை உணரமுடிகிறது.

வினைப்பதிவு

பிறவிகளைப் பற்றியும், வினைப் பதிவுகளின் விளைவுகளைப் பற்றியும், வினைப்பதிவுகளைப் போக்கும் முறைகளையும் மிகத் தெளிவாக அருள்தந்தையின் பதில்கள் பாகம்–1–இல் பக் 4–6–இல் தெளிவாகக் கீழ்வருமாறு விளக்கியுள்ளார். ஒரே பிறவியில் அறிவின் விழிப்போடு செயலாற்றி முழுமையடையலாம். இங்கு ஓர் இயற்கை உண்மையை விளக்குகிறேன் என்கிறார் மகரிஷி.

மனிதன் ஒரு சீவகாந்தக்களம். அவன் கருவமைப்பு முதல் கொண்டு இன்றுவரையில் ஆற்றிய எண்ணம், சொல், செயல்களால் துல்லியமான தன்மையை அடையப்பெற்றுள்ளான். அவனிலிருந்து எழும் எண்ணம், சொல், செயல்களால் எழுப்பப்படும் சீவகாந்த அலைகள் எங்கும் நிறைந்துள்ள பூரணம், பேராற்றல், பேரறிவு எனும் முத்தரம் உடைய இறையாற்றலோடு மோதும்போது அந்த அலைகளே தக்க விளைவுகளாக மாறிச் செயல்புரிந்தவரிடமே சென்றடைந்து செயலுக்குத்தக்க இன்பமாகவோ, துன்பமாகவோ மாறிவிடும். இது இயற்கை நீதி. இதனைத்தான் கூர்தலறம் (வினை விளைவுத் தத்துவம்) என்று கூறுகிறோம்.

"இறைவன் என்பவன் எல்லாமாகவும் வந்துள்ளான். அவனே நானாகவும் இருக்கிறான்" என்ற உண்மையை உணர்ந்து கொண்டு, அவனோடு நம் அறிவை இணைத்துத் தூய்மை செய்து, பதிவுகளில் இருந்து விடுதலை பெற்று, உயிர் உணர்ந்து 'வானவனாகி', பிறகு தானே அவனாக மாறித் 'தானவனாகி' இறைநிலையடைவதே மனிதர்களின் முடிவாகும். மேலும், பிறவிகளைப் பற்றிக் கீழ்வருமாறு விளக்குகிறார். பிறவிகள் ஏழு மட்டும் என்பதல்ல. அவை பெருங் கடலாக நீளும். செயல்பதிவு அல்லது வினைப்பதிவு என்பது ஒரு முறை நம்மிடம் பதிந்துவிட்டதென்றால், அது மீண்டும் பிரதிபலிக்காமல் செயலிழக்கச் செய்ய ஏழு தலைமுறைகள் ஆகும்.

அதாவது, ஒரு தலைமுறை என்பது இருபது ஆண்டுகள் என்று வைத்துள்ளார்கள். ஒரு செயலின் பதிவுக்கு நூற்று நாற்பது ஆண்டுள்ளவரை திரும்பத் திரும்பப் பிரதிபலிக்கும் வேகம் உண்டு. அதன்பிறகு அது வான்காந்த ஆற்றலால் தானாகவே மறைந்துவிடும்.

இதில் எந்தத் தலைமுறையில் அந்தப் பதிவிற்குப் பிரதிபலிக்கும் வாய்ப்பைக் கொடுத்தாலும், அந்தப் பதிவைப் புதுப்பித்துக் கொண்டதாகும். அங்கிருந்து அது மேலும் ஏழு தலைமுறைக்கு எழுச்சி வேகம் பெறும். அதனாலேயே ஒரு செயலின் பதிவுக்கு ஏழு தலைமுறைகளிலும் விளைவு வரும் என்பதை ஏழு பிறவிகள் என்று முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

தனக்கு முன்பு தாய் தந்தை வழியாக ஏழு தலைமுறைகளில் பெற்ற பதிவை முன் ஏழு பிறவி என்றும், அப்பதிவுகள் புதுப்பிக்கப் பட்டாலோ அல்லது புதியன செய்தாலோ அவை மேலும் ஏழு தலைமுறைகள் தொடரும் என்பதை பின் ஏழு பிறவிகள் என்றும் கொள்ள வேண்டும்.

வினை - தவம்

வினைப் பதிவுகளைப் போக்கும் வழிமுறைகளைக் கீழ்வருமாறு விளக்குகிறார். அகநோக்குப் பயிற்சியின் மூலம் வினைப் பதிவுகளைப் போக்க முடியும். முதலில் மனத்தை உயிரில் ஒடுக்கி ஆன்ம உணர்வு பெற வேண்டும்.

பிறகு, உயிரை இறைநிலையில் ஒடுக்கித் தெய்வ உணர்வைப் பெறவேண்டும். இன்ப, துன்ப உணர்வுகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் மனிதன் இந்நிலையில் உண்மையுணர்வு பெற்றுப் பின் மனம் மற்றும் உடல்நிலைகளைக் கடந்து, உயிர் நிலையில் நிலைத்துப் பின் உயிர்நிலையையும் தாண்டித் தெய்வ நிலையில் இலயித்து ஆற்றும் செயல்களெல்லாம் – கடமையுணர்வின் கீழ் எல்லோருக்கும் பயனாகும். அறிவோ, தூய்மையான மெய்ப்பொருளோடு ஒன்றிநிற்கும். இங்குப் பதிவான பழிச்செயல்கள் செயலுக்கு வராதது மட்டுமல்ல, முன்பிருந்த பதிவுகள் யாவும் அடியோடு முறிந்தும் போகும். இதனை வள்ளுவர்,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" - (5)

என்று கூறியுள்ளார்.

உடலிலே நோய், உள்ளத்திலே களங்கம் இவையே பதிவுகள் இருப்பதற்கு அடையாளமாகும் என்று கூறி முன்பதிவுகள் நாம்

அறிந்துகொள்ளும் முறைகளையும் விளக்குகிறார். மேலும் மனிதனின் தோற்றம், பிறவிக்குக் காரணம் ஆகியவற்றைப் பற்றியும் கீழ்வருமாறு விளக்கிறார்.

முதல் மனிதன் உலகத்தில் எப்படி தோன்றினான் என்று ஆராய்வோமானால் விலங்கினத்தினுடைய வித்துத் தொடரிலேதான் மனிதன் தோன்றியிருக்க முடியும். ஏனெனில், வித்து இல்லாமல் உருவம் தோன்றியிருக்க முடியாது.

அந்த முதல் மனிதன் ஐயறிவு விலங்கினத்திலிருந்துதான் வந்திருக்க முடியும். அதற்கு முன்பு ஐயறிவு, நான்கறிவு, மூன்றறிவு, இரண்டறிவு என்று பின் நோக்கிப் பார்த்தோமானால், ஓரறிவுள்ள தாவரத்திலிருந்து தான் உயிர் என்பது உற்பத்தியாகியிருக்கிறது. இரண்டறிவில் இருந்து ஐந்தறிவு வரையுள்ள விலங்கினம் எவ்வாறு வாழ்கின்றன ? ஒரு சீவனை மற்றோர் சீவன் பிடித்துக் கொன்று தின்று வாழ்வை நடத்துகிறது. உயிர்க்கொலை, பொருள் பறித்தல், வாழும் சுதந்திரத்தை அழித்தல் ஆகிய மூன்று குற்றங்கள் பதிவாகின்றன.

இந்தப் பறித்துண்ணும் செயல்தான் உடல் செல்கள் மற்றும் கருமையத்தில் பதிவாகி இரண்டறிவு சீவனிலிருந்து, ஐயறிவு வரை வந்து பிறகு முதல் மனிதனாகி இன்றுவரை மனிதனுடைய சீவகாந்த சக்தியால் அவ்வளவும் இருப்பாகவும் இருந்து வருகிறது. இந்தப் பதிவுகளே தேவைகளாலும் சூழ்நிலைகளாலும் மலர்ந்து செயலுக்கு வருகின்றன என்கிறார். மேலும், வினைத்தொடரால் விளையும் பயன்களைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

பரிணாமத்தில் வந்த பிறவித் தொடரில் எண்ணற்ற பதிவுகள் மனிதனிடம் இருக்கும். அவற்றை ஆழ்நிலைப் பதிவு, மேல்நிலைப் பதிவு (Patent) என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தீயகுணம் உள்ளே அடங்கி இருக்கும்போது நற்குணம் செயலுக்கு வந்து கொண்டிருக்கும். அப்போது நல்லதையே செய்வான்; நல்ல மனிதனாகவே வாழ்வான்.

உள்ளே அடங்கியிருக்கும் தீய குணங்களையும், தீய செயல் களையும் விரிப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கலாம். அவை கரு மையத்திலே மட்டும் ஆழ்நிலைப் பதிவாக இருக்கும். அவனுடைய வித்துவின் மூலம் பிறவித்தொடராகத் தோன்றும் குழந்தைகளிடம் அந்த எண்ணங்கள் எழுச்சி பெறும். அதனால் அந்தக் குழந்தைகள், அவர்களின் பெற்றோர் செய்ய முடியாமல் விட்டு, விட்ட தீயசெயல் களையும் செய்கிறார்கள். (அருள்தந்தையின் பதில்கள் – பக். 4–7)

அதேபோல், நல்ல எண்ணங்களெல்லாம் ஒருவரிடம் அடக்க மாகவும் இருக்கலாம். வேறு வழியில்லாது ஒருவர் கசாப்புக்கடை

வைத்திருப்பவராக இருக்கலாம். அவர் மனத்தில் தூய்மையான பணி செய்தால் நல்லது என்ற எண்ணமே மேலோங்கி இருக்கலாம். அப்போது அவருக்குப் பிறக்கக் கூடிய குழந்தை அந்த நல்லெண்ணத்தைப் பதிவாகப் பெற்று இருக்கும். எந்த எண்ணத்தை மனத்தில் வைத்திருந்து அதைச் செயல்படுத்த முடியவில்லையோ அவை கருத்தொடரான குழந்தை வாயிலாகச் செயலுக்கு வரும்போது அத்தகையவருடைய குழந்தை உயர்ந்த எண்ணமுடையதாக இருக்கிறது.

அதேபோல, ஒருவர் பூசைகளெல்லாம் செய்து கொண்டிருப்பவர். அதே நேரத்தில் வருகின்றவர்களிட மெல்லாம் என்ன பறிக்கலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்குப் பிறக்கும் குழந்தை பிறர் வளம் பறித்தலில் முதலிடம் வகிக்கும்.

தீய பதிவுகளைத் தவிர்க்க வேண்டுமெனில் தவத்தினால் விளைவறிந்த விழிப்பு நிலையில் நின்று, செயலுக்கு உரிய விளைவைக் கணித்து, தீய பதிவுகள் எழாது காத்துக் கொள்ளும் நற்பண்பைப் பழக்கத்தில் கொண்டுவர வேண்டும். இதனை மனவளக்கலையில் கற்றுக் கொள்ளலாம் என்று வழியும் காட்டுகிறார் மகரிஷி.

இனி, ஆன்மா என்றால் என்ன ? என்பதற்கான விளக்கத்தை காண்போம். (1) தூல உடலுக்கு மையமான விந்து நாதம், (2) சூக்கும உடலுக்கு மூலமான உயிர்த்துகள்கள், (3) காரண உடலுக்கு மூலமான சீவகாந்தம் இவை மூன்றும் இணைந்தது தான் கருமையம் ஆகும். உயிரினத்தின் பெருமையும், சிறப்பும் இந்தக் கருமையத்தில் தான் அமைந்துள்ளது என்று உணர்த்துகிறார்.

மேலும், உயிர்மையத்துள் அமைந்துள்ள அறிவானது உயிரின் சுழற்சியால் எழும் விரிவலையான காந்த அலை மூலம் புலன்கள் வழியாகப் பொருளோடு தொடர்பு கொள்ளும்போது அந்த அறிவையே மனம் என்கிறோம் என்றும், அகம் என்பதும், நெஞ்சம் என்பதும், உள்ளம் என்பதும், ஆன்மா என்பதும் கருமையத்தை குறிக்கும் என்று மனிதன் உடலாலும், மனத்தாலும் செய்யும் செயல்கள் அனைத்தும் பதிவாகி, வித்தில் மரம்போல் இருப்பு வைக்கப்படும் இடம் கருமையம் என்றும் தெளிவாக மகரிஷி அவர்கள் விளக்கியுள்ளதை உணரலாம். மேலும், வினைப்பதிவுகளை விலக்கும் வழிகளையும் கீழ்வருமாறு உணர்த்துகிறார்.

மனித வாழ்க்கையில் துன்பமும், துயரமும் நேர்வதற்கு 3 சூழ்நிலைகள் உள்ளன. அவை :

(1) ஆகாம்ய கர்மம்

(2) பிராரப்த கர்மம்

(3) சஞ்சித கர்மம்

சஞ்சித கர்மம் என்பது முன்னோர்கள் செய்த புண்ணிய பாவத்தின் தொகுப்பாகும். அவை வழி வழியாகச் சந்ததிகளுக்கு வந்து சேரும் வினைப்பதிவாகும். எனவேதான் ஒரு மனிதனானவன் தான் எந்தத் தவறும் செய்யாவிட்டாலும் கூடத் துன்பமும் துயரமும் அவனது வாழ்க்கையில் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. சஞ்சித கர்ம வினைப்பதிவுகளைத் தீர்த்துக் கொள்ளக் கீழ்க்காணும் மூன்று வழிகள் உள்ளன. அவை : (1) பிராயச்சித்தம் (2) மேல்பதிவு (3) தவம் என்று வினையை நீக்கும் வழிகளையும் விளக்குகிறார்.

தவம் - அறம்

வாழ்க்கை என்ற சிறிய தோணியைப் பற்றிக் கொண்டு கடல் போன்ற வினையைக் கடக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டுள்ள மனிதன், அதிலிருந்து வெளிவர இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று தவம்; மற்றொன்று அறம். இவை இரண்டையும் செய்தால் அவன் மாத்திரம் அல்லாமல் அவனுக்குப் பின்வரும் சந்ததிகளும் நன்மை பெறுவார்கள் என்கிறார்.

மனத்தை உயிர்மேல் வைத்து, ஒடுங்கி நின்று தவம் செய்யும் பொழுது, மன அலை விரைவு குறைந்து, உயிரின் தன்மையை உணர்கிறான். வினையின் பதிவுகள் அவற்றின் பிரதிபலிப்புகள் இவற்றை உணர்கிறான். தகாத தீய வினைப்பதிவின் காரணமாக உடலிலே வரக்கூடிய நோய்களையும், மனத்தில் வரக்கூடிய களங்கங்களையும் அறிந்து அறநெறி மூலம் அகற்றிக் கொள்கிறான்.

மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் அதற்கு முறைப் படுத்தப்பட்ட உளப்பயிற்சி வேண்டும். அப்பயிற்சிக்குத்தான் அகத்தவம் என்று பெயர். அகத்தவமின்றி மன அலைச்சுழல் குறையாது. விளைவறிந்த விழிப்புநிலை வராது. பதிவு நீக்கம் பெற முடியாது. வீடுபேறு நிலைகிட்டாது. வாழ்வின் நோக்கம் நிறைவேறாது. ஆகவே நல்வாழ்வுபெற அகத்தவம் மிகமிக அவசியம் என்று கூறி வாழ்வின் நோக்கத்தைக் காட்டி வழிகாட்டுகிறார். (அருள் தந்தையின் பதில்கள், பக். 18–19)

வினைப்பதிவினைப் பற்றி மிக விளக்கமாகப் பாவம் என்றால் என்ன ? அவற்றைப் போக்கும் வழிகளைப்பற்றி மனவளக்கலை

(தொகுப்பு – 2) என்ற நூலில் (பக். 67–70) கீழ்வருமாறு தெளிவுப்படுத்தியுள்ளார்.

1) தனக்கோ, பிறர்க்கோ துன்பம்தரும் செயல் யாவும் பழிச் செயல்களாகும்.

2) மனம், மொழி, செயல் எதுவாயினும் ஒவ்வொன்றுக்கும் உயிரிலும் பதிவுகள் உண்டு.

3) வினைகளின் தன்மைகளுக்கும், விளைவுகளுக்கேற்ப அவை ஆகாமியம், பிராரப்தம், சஞ்சிதம் என்னும் மூன்றுவித பழிச் செயல் பதிவுகளாக 1. உறுப்புப் புலன்களிலும், 2. மூளையிலும், 3. வித்திலும் பதிவாகின்றன. இவையனைத்தும் ஆன்மாவின் சூக்குமப் பதிவுகளாகிப் பிறவித் தொடராக மனிதனுக்குத் துன்பங்களை அளிக்கின்றன.

4) விழிப்புநிலை பெறவும், மனவலிவு பெறவும் ஏற்ற உளப் பயிற்சி ஏற்று எல்லாப் பழிச்செயல்களையும் பிராயச் சித்தம், உணர்ந்து திருந்தி அழித்தல், தெய்வநிலைத் தெளிவால் முறித்தல் என்ற மூவகையில் போக்கி வினைத்தூய்மையும், மனத்தூய்மையும் பெறலாம்.

5) எந்தப் பழிச்செயலானாலும் மீண்டும் அத்தகைய செயல்களைச் செய்யாதிருக்கும் வழியில் முடிவு கண்ட பின்னர்த்தான், மன வலிவு பெற்ற பின்னர்த்தான் அதை முயற்சியால், பயிற்சியால் முறையாகப் போக்கி நலம் காணலாம் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளவேண்டும்.

ஆக்வே மனவிரிவு, விளக்கம், விழிப்புநிலை என்ற நிலைகளும், கூர்ந்துணர்தல், கிரகித்தல், ஒத்துப்போதல், பெருந்தன்மை, ஆக்கச் செயல்களில் ஈடுபாடு ஆகியவற்றை எந்த அளவுக்கு நாம் வளர்த்துக் கொள்கிறோமோ அந்த அளவுக்குத் தான் மகிழ்ச்சியும் நிறைவும், அமைதியும் பெறலாம்.

பழிச்செயல் பதிவுகள்

'நான்' என்னும் செல்வாக்குப் பற்றும் மற்றும்
'தனது' எனும் பொருள்பற்றும் தன்முனைப்பாம்
ஊன் உருவில் உணர்ச்சிகளாய் அறுகுணங்கள்
உருவாகி எழும்செயல்கள் துன்பம் நல்கும்
ஆன்மாவின் இச்செயல்கள் பதிவு பெற்றால்
அவையே தான் பழிச்செயல்கள் பதிவு ஆகும்
"நான் யார்?" என்றறியாத மயக்கத்தோடு
நலமறியா புலன் மயக்கம் மாயையாகும்.

வினைப்பதிவு

"முன்னோர்கள் செய்த வினைப்பதிவு வித்தில் உண்டு
மூளையிலே உன்செயலின் பதிவனைத்தும் உண்டு
பின்னே நீ செய்வினைக்குப் புலனைந்தும் இயக்கிப்
பெற்றப் பழக்கப்பதிவு உண்டு இம்மூன்றும்
உன்னைநீ உள்ளுணரும் அகத்தவத்தை ஆற்றி
ஒவ்வொன்றாய்ப் பழிப்பதிவை அகற்றி வரவேண்டும்
தன்னில் பதிவான வினைப்பதிவுகளை மாற்ற
தணிக்க பொருள் செல்வாக்குப் பயனாகா துணர்வீர்."

மனம்	வினைகள்	பதிவுகள்
மேல் மனம் : புலன்களுடன் கலந்து விழிப்பில் உழல்வது, புலன் முதலிய கருவிகளுடன் கூடி வினைகளை ஆற்றுவது.	**ஆகாமியம் :** இச்சை வயப்பட்டு செய்யப்படும் செயல்களால் பொறிபுலன்களில் பதிவு ஏற்படுகிறது. அப்பதிவு திரும்பவும் உயிருக்கு ஊக்கமூட்டிச் செயல்படுத்துகிறது.	**பதிவு :** ஞான கர்மேந்திரியங்களில் ஏற்படும் பதிவு, இயக்கப்பதிவு அல்லது அதிர்வுப் பதிவு எனப்படுகிறது.
நடு மனம் : பொறிபுலன்களின் கலப்பு இல்லாமலேயே இயங்க வல்லது. மனம் நலம் பெறப்பெற உயிர் ஒடுக்கமுற்றுத் தூய்மை அடைகிறது.	**பிராரப்தம் :** பிறந்து வாழும் காலத்தில் செய்யும் விளைவுகளின் பதிவு. தொழிலால் ஏற்பட்ட அறிவின் அனுபவம் மூளையில் பதிவு பெற்றுத் திரும்ப அது ஆன் மாவுக்கு இச்சையூட்டிச் செயலாக மாறுகிறது.	மூளையில் நினைவுப் பதிவுகளாகப் பதிகிறது.
அடி மனம் : தியான யோகத்துக் குரியது. மனம் தன் இச்சை வழி, புலன்வழி செல்லாது, தன்னிலையில் ஒடுங்கி அடங்கி ஞான வெளியில் செல்லும். வெளியில் தொடர்பு பெற்று மனம் ஞான திருஷ்டி பெறும்.	**சஞ்சிதம் :** பல பிறவிகளின் தொடர்பாக வித்தில் பதிவாகிப் பிறவித் தொடர்பால் தொடர்ந்து வரக்கூடியது. தன் மூலம் பிறக்கும் குழந்தைகட்கும் அறிவு ஒழுக்கத் தரங்களாகச் சூக்குமமாக வித்தில் பதிந்து தொடரும் பதிவு. பிரபஞ்ச உயிரிலும் மற்ற உயிர்களிலும் பிரதிபலிப்புப் பதிவுகளாகவும் பதிகிறது.	வித்தில் ஒழுக்கத்தரப் பதிவாகவும், பிரபஞ்ச உயிரிலும் மற்ற உயிரிலும் பிரதிபலிப்புப் பதிவாகவும் பதிகிறது.

வினைப்பதிவின் விளக்கமே உடல் உயிர் அறிவாம்

மரத்தினது தன்மையெல்லாம் வித்தில் அமைந்துளவே
மரமது தன் வித்தினது பருவுருவத் தோற்றம்
தரத்திலுயர் மனிதஉரு தன் கருவாம் உயிரின்
தரப்பதிவின் வெளிப்பாடே கூட்டல் குறைவில்லை
பரத்தியல்பால் சூக்குமமே தூலமாய் விளங்கும்
பழைய கதைகள் இதனைத் திரித்து மாற்றிக் கூறும்
உரத்தக் குரலில் பேசி உண்மை மறுப்பார்கள்
உயிர்உடலின் தொடர்பறியார் உன்னுள் ஆய்ந்து தேர்வீர்.

கருத்தொடராய் வந்த வினைப்பதிவுகளின் வலுவைக்
கணிக்காமல் மதிக்காமல் ஏற்ற நல்லவினையால்
திருத்திடவோ சீரமைத்தோ உய்ய நினையாமல்
திரும்பவும் அப்பழைய வினைவழி நின்றே வாழ்ந்தால்,
வருந்துவதும் வருத்துவதும் அன்றி வளம் ஏது?
வாழ்வுள்ளோர் அனைவரும் இவ்வுண்மையை உணர்வோம்
பெருத்துவரும் பழிச்செயல்கள் மாறி உலகுய்ய
பேருலகம் இணைந்த ஆட்சி கல்வி இவை வேண்டும்.

(மனவளக்கலை தொகுதி–2, பக். 67–70)

வினை யென்றால் என்ன? அவ்வினையைக் கழிக்கும் வழிமுறைகள், அதனால் விளையும் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிப் பார்த்தோம். இனி இறைவனடியை அடைய ஒட்டாமல் தடுக்கும் மாயையின் மயக்கம் பற்றிப் பார்ப்போம்.

மாயை

மாயை உருவம் அற்றது. இந்த உலகம் உண்டாவதற்கு வித்தாக உள்ளது. மாயை சுத்தமாயை, அசுத்தமாயை என இரு வகைப்படும். ஆனால் பயன்படுகின்ற வகையில் பிரகருதிமாயையும் இணைத்துச் கூறுவர். ஆணவ மலத்தை அருள் என்றும் மாயா மலத்தை 'மருள்' என்றும் அழைக்கிறார் திருவள்ளுவர். 'மாணாப்பிறப்பு' என்று அழைப்பதால் பிறப்பு துன்பம் என்றும், அந்தப் பிறப்பிற்குக் காரணம் 'ஆணவம்' என்பதும் பெறப்படுகிறது. இதனை,

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" -(351)

"இருள்நீங்கி இன்பம் பயக்கும், மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு" -(352)

என்ற குறட்பாக்களின் மூலம் நிலையில்லாதனவற்றை நிலையானது என்று உணரும் மயக்கவுணர்வு நீங்கப் பெற்று உள்ளதை உள்ளவாறு உணரும் மெய்யுணர்வு உடையவர்க்கு ஆணவ மலப்பற்று நீங்கப்

பெற்று, அதன் பயனாகப் பிறப்பு நீங்கலுற்று அந்த மெய்யுணர்வு அவர்களுக்கு வீட்டின்பத்தைக் கொடுக்கும். மேலும்,

"மருள் தீர்ந்த மாசறு காட்சியவர்" - (199)

"மருளானாம் மாணாப் பிறப்பு" - (1002)

என்று கூறி மாயா மலத்தின் இயல்பை 'மருள்' என்றே வழங்குவதை உணரலாம்.

மகரிஷி அவர்கள் பழிச்செயல் பதிவுகள் என்ற தலைப்பில் புலன்களின் மயக்கமே 'மாயை' எனக் கீழ்வருமாறு நவில்கிறார்.

"'நான்' என்னும் செல்வாக்குப் பற்றும் தன்முனைப்பாம்
'தனது' எனும் பொருள் பற்றும் தன்முனைப்பாம்
ஊன் உருவில் உணர்ச்சிகளாய் அறு குணங்கள்
உருவாகி எழும் செயல்கள் துன்பம் நல்கும்
ஆன்மாவின் இச்செயல்கள் பதிவு பெற்றால்
அவையே, தான் பழிச் செயல்கள் பதிவு ஆகும்
'நான் யார்' என்றறியாத மயக்கத்தோடு
நலமறியா புலன் மயக்கம் மாயையாகும்

(மனவளக்கலை – தொகுதி இரண்டு ப. 68)

இந்த உயிர் இறைவனையடையாது தடை செய்வது தளை ஆகும். அவை ஆணவம், கன்மம் / வினை, மாயை என்னும் மூவகைப் பாசங்களாகும் என்பதனை முன்பே அறிந்தோம்.

வினைப்பதிவுகளின் காரணமாக இவ்வுலகில் பிறக்கின்ற நாம், உலகிலுள்ள அனைத்துப் பொருள்களையும் உண்மை / நிலைத்தவை யென்று எண்ணி வாழ்கின்றோம். மேலும் உயிருக்கு அறியாமையைச் செய்யும் ஒன்று உண்டு. அதுவே ஆணவம் எனப்படும். அதற்குமுன் உயிரின் தன்மையைப் பார்க்கலாம்.

உயிரின் தன்மை

"தனக்கென அறிவிலாதான்; தான் இவை அறிந்து சாரான்; (சிவப்பிரகாசம் 64) அதாவது சார்ந்ததன் வண்ணம் மாறும் தன்மையது எனலாம். இன்னும் விளக்கமாகக் கீழ்வருமாறு கூறலாம். உயிர் அறிவுடைப் பொருள், உடல் அறிவற்ற பொருள், பருஉடலுக்கு வேறாக உள்ள உயிர் ஓர் உள்பொருள். திருவள்ளுவர்,

"நிலத்தியல்பான் நீர்த்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு" - (452)

என்று குறிப்பதை இங்கு எண்ணுவோம்.

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே,
உடம்போ டுயிரிடை நட்பு" -(338)

"உயிருடம்பின் நீக்கியார் என்ப, செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்" -(330)

உயிர்வேறு, உடல்வேறு இந்த உயிர், இறைவனை அடைய ஒட்டாது தடுப்பது ஆணவம் என்ற தளையாகும். தளையை உடைக்க ஒரேவழி, இறைவன் திருவருளைப் பெற்ற குருமார்களை (திருஞானசம்பந்தர், மெய்கண்டார் போன்றவர்கள்) வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். திருவள்ளுவர்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" -(28)

என்கிறார். இங்கே 'நிறைமொழி மாந்தர்" எனப்படுவர் குருமார்களே / சான்றோர்களே எனலாம்.

மகரிஷி அவர்கள் உயிரென்ற பரமணுவின் செயல்பாடுகளைக் கீழ்வருமாறு விளக்கி உயிர் உடலைவிட்டுச் சென்றபின் அந்த உயிரின் நிலையையும் அறிவியல் சார்ந்தே விளக்குகிறார்.

உயிரென்ற பரம அணு
ஒழுங்குற்றப் பருப்பொருளில் சுழல வித்தாம்
உயிர் சுற்றிச் சுழன்றுப் பின்
உருவ உடலைக்கட்டும் மேலும் அந்த
உயிர் உடலைக் காத்து வரும்
உடல் கட்டு ஒழுங்கு மிகக் குலைந்து போனால்
உயிர் உடலை விட்டுப் பல
உயிர்களிலும் விண்ணகத்தும் கலந்து போகும்.

உயிர் உடலை விட்ட பின்னர்
ஒன்றுபட்ட தனி இயக்கம் அதற்கு ஏது?
உயிர் உடலை விட்ட பின்னர்
உணர்ச்சியோ இன்ப துன்ப உணர்வோ ஏது?
உயிர் உடலை விட்ட பின்னர்
ஒவ்வொன்றாய் அணுஅணுவாய்ப் பிரிந்துபோகும்
உயிர் உடலை விட்ட பின்னர்
உயிருக்குப்பின் பிறவித் தொடரே இல்லை.

எண்ணிக்கையில் அடங்காத ஆசைகள், உணர்வுகள், அனுபவங்கள் மற்றும் செயல்களைப் பண்பேற்றமாகக் கொண்ட சீவகாந்த ஆற்றலின் ஒரு மறைபொருளான ஆற்றல் கூறே ஆன்மா ஆகும். உடலை விட்டு ஆன்மா பிரிந்தவுடன் தண்ணீரில் பனிக்கட்டி

மிதப்பது போன்று வான்காந்தக் கடலில் ஆன்மா மிதந்து கொண்டிருக்கிறது. ஆன்மாவின் காந்த வலிமை படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் அது முழுவதுமாக மறைந்து வான்காந்தத்துடன் ஒன்றிக் கலந்து விடுகிறது.

ஆன்மாவின் பண்பேற்றம் பெற்ற காந்த வலிமை குறைந்து கொண்டு வரும்போது வாழ்ந்து கொண்டிருக்கும் ஏதாவது ஒத்த பண்புள்ள மனிதரிடம் இணைத்துக் கொள்ள வாய்ப்புச் சாதகமாக இருந்தால் அவருடன் ஆன்மா இணைந்து கொள்ளும். அப்படி இணைப்பு ஏற்பட்டால் அதை இணைந்த ஆன்மா என்று சொல்வார்கள். இணைக்கப்பட்ட ஆன்மா வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரின் உடலின் வலிமையையும், மன இயக்கங்களையும் அதிகரிக்கலாம். வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மனிதன் தன் இறப்பு நிகழும் வரை, இந்த வாழ்க்கையில் பெற்ற எல்லாப் பண்புகளும் பல தலைமுறையாகப் பெற்ற பண்புகளும் சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும். ஒருவர் தன் வாழ்நாளில் வான்காந்தம் மூலமாகப் பிற வாழும் மனிதர்களுடன் தொடர்பு கொண்டோ அல்லது பிற ஆன்மாக்களைத் தன்னுடன் இணைத்துக் கொள்வதன் மூலமாகவோ சில வியக்கத்தக்க மனம் சார்ந்த செயல்களைச் செய்ய இயலும்.

இந்த உண்மைகள் யாவற்றையும் மனத்தில் வைத்துக் கொண்டு, உடலை விட்ட ஆவிகளின் மூலமாகப் பல மாயச் செயல்கள், நிகழ்வுகள் உள்ளன என்பதை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். இருந்தாலும் மறுபிறவி என்பது ஒருவருக்குக் கிடையாது. ஒரே ஒரு மனிதப் பிறப்பு மட்டுமே உண்டு. அதுவும் பெற்றோர்களின் கருவழிப் பண்புகளைக் கொண்டு மரபு வழித் தொடர் மூலமாகத் தோன்றும் சந்ததியே ஆகும்.

இந்தத் தலைப்பில் மேலும் விவரம் வேண்டும் என விரும்பு கிறவர்கள் ''பிறப்புக்கு முன்னும் இறப்பிற்குப் பின்னும் உயிரின் நிலை'' என்ற ஆங்கிலப் புத்தகத்தையும், மனவளக்கலை மூன்றாவது தொகுப்பு நூலையும் படிக்கலாம்.

வித்துக்கு அருட்பேராற்றலே வித்து

பறவைகளின் காலடியின் அடையா ளத்தைப்
பார்க்கமுடி யாதுநாம் ஆகா யத்தில்,
துறவிகளின் அறிவுநிலை உயர்வை மற்றோர்
தெரிந்துகொள்ள முயற்சித்தால் அதுவும் ஆகா.
திறவுகோல் இல்லாமல் பூட்டு ஒன்றைத்
திறப்பதுவும் மிகக்கடினம், இவற்றைப் போன்றே,
பிறவியதன் முன்பின்னாம் நிலையைப் பற்றி

பேச, விளக் கக்கடினம், மொழியின் மூலம்.

வினைப்பதிவின் விளக்கமே உடல் உயிர் அறிவாம்

மரத்தினது தன்மையெல்லாம் வித்தில்அமைந் துளவே.
மரமதுதன் வித்தினது பருவுருவத் தோற்றம்.
தரத்திலுயர் மனிதஉரு தன்கருவாம் உயிரின்
தரப்பதிவின் வெளிப்பாடே; கூட்டல்குறை வில்லை.
பரத்தியல்பால் சூக்குமமே தூலமாய்வி ளங்கும்.
பழையகதை கள்இதனைத் திரித்துமாற்றிக் கூறும்.
உரத்தகுர லில்பேசி உண்மைமறுப் பார்கள்,
உயிர்உடலின் தொடர்பறியார். உம்முள்ஆய்ந்து தேர்வீர்!

(ச.சி.ஆ. தீர்வுகள், பக். 89–91)

ஆணவம்

இந்த உயிர் உடலில் புகுந்தவுடன் அந்த உயிருக்கு அறியாமையைச் செய்யும் ஒன்றே ஆணவமாகும்.

"எம்மை வந்து அணையத் தானோ மாட்டாது;
யானோ செய்கிலன்; நீயோ செய்யாய்;
நின்மலன் ஆயிட்டு" (இருபா இருபஃது, 4)

என்று அருணந்தி சிவம் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார். உண்மை விளக்கம் "அறியாமை ஆணவம்" (22) என்று திருவதிகை மனவாசகங்கடந்தார் மொழிகிறார்.

உயிரறிவை மறைத்துப் பிறவித்துன்பத்தை ஏற்படுத்துகிறது. என்பதனை,

"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்" – (346)

என்ற குறட்பாவால் உணர்த்துகிறார். ஆணவ மலப்பற்று நீங்க ஆணவம் அழிய வேண்டும். அதனால் பிறவித்துன்பமும் அழியும் என்பதனை,

"இருள்நீங்கி இன்பம் பயக்கும், மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு" – (352)

என்கிறார் திருவள்ளுவர். மேலும் மேலும் ஆணவ மலமறைப்புக்கு உட்படாமல் இருக்க,

"பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்" – (675)

என்கிறார் திருவள்ளுவர். புல்லறிவாண்மை உடையவர்களுக்கு

எதனையும் தெளிவாக்க இயலாது என்பதனை,

> *"ஏவவும் செய்கலான்; தான்தேறான்; அவ்வுயிர்*
> *போஒம் அளவும்ஓர் நோய்"* -(848)

என்ற குறட்பா மூலம் உணரலாம். மேலும், ஆணவ மலத்தின் இயல்பினை,

> *"காமம் வெகுளி மயக்கம்; இவைமூன்றன்*
> *நாமக் கெடக்கெடும் நோய்"* -(360)

என்ற குறட்பா மூலம் உணர்ந்து ஆணவ மலம் அறுத்துப் பிறவி நீங்க முயற்சி செய்ய வேண்டும்.

மகரிஷி ஆணவத்தைத் 'தன்முனைப்பு' என்கிறார். "வாழ்க்கை மலர்கள்" என்ற நூலில் 'மனிதனும் இறைவனும்' என்ற தலைப்பில் மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு, ஆணவத்தை நீக்கும் வழிமுறைகள் ஆகியவற்றைக் கீழ்வருமாறு விளக்கித் தெளிவாக்குகிறார். "உடலுக்குள் இருக்கும் உயிர், உணர்ச்சியின் அனுபோகத்தில் உடல்வரைக்கும் எல்லை கட்டிக் கொண்டு இருந்தாலும் தன் முழுமையை உணர்ந்து கொண்டால் – தன் மூலத்தையும், வியாபகத்தையும் அறிந்து கொண்டால் எல்லாவற்றிலும் தன்னையே பார்க்கின்ற ஒரு தன்மை வந்துவிடுகின்றது. சிறுமை, பெருமை, தன்முனைப்பு எல்லாம் நீங்கி விடுகின்றன. இந்த நிலையில் பிறரை மதிக்கவும், ஆதரிக்கவும், பரிவு காட்டவும், மேல்நிலைக்குக் கொணரவுமான பொறுப்புணர்ச்சியைப் பெறுகிறான். (ப. 260)

ஆணவம், கன்மம், மாயை – இவையே வினைப்பதிவுக்குக் காரணிகளாக அமைகின்றன. அவையே பிறவிக்கு வித்திடுகிறது. இந்தப் பிறவிகளுக்குரிய ஐயங்களை மகரிஷி மேற்படி நூலில் ப. 145–இல் கீழ்வருமாறு தெளிவாக்குகிறார். பிறவிகள் ஏழு மட்டும் என்பதல்ல, அவை பெருங்கடலாக நீளும், செயல்பதிவு அல்லது வினைப்பதிவு என்பது ஒரு முறை நம்மிடம் பதிந்துவிட்டதென்றால், அது மீண்டும் பிரதிபலிக்காமல் செயலிழக்கச் செய்ய ஏழு தலைமுறைகள் ஆகும்.

அதாவது, ஒரு தலைமுறை என்பது இருபது ஆண்டுகள் என்று வைத்துள்ளார்கள். ஒரு செயலின் பதிவுக்கு நூற்று நாற்பது ஆண்டுகள் வரை திரும்பத் திரும்பப் பிரதிபலிக்கும் வேகம் உண்டு. அதன் பிறகு அது வான்காந்த ஆற்றலால் தானாகவே மறைந்துவிடும்.

இதில் எந்தத் தலைமுறையில் அந்தப் பதிவிற்குப் பிரதிபலிக்கும் வாய்ப்பைக் கொடுத்தாலும், அந்த பதிவைப் புதுப்பித்துக் கொண்டதாகும். அங்கிருந்து அது மேலும் ஏழு தலைமுறைகளுக்கு எழுச்சி வேகம்

பெறும். அதனாலேயே, ஒரு செயலின் பதிவுக்கு ஏழு தலைமுறைகளிலும் விளைவு வரும் என்பதை ஏழு பிறவிகள் என்று முன்னோர்கள் சொல்லிவைத்தார்கள்.

தனக்கு முன்பு தாய் தந்தை வழியாக ஏழு தலைமுறைகளில் பெற்ற பதிவை முன் ஏழு பிறவி என்றும், அப்பதிவுகள் புதுப்பிக்கப் பட்டாலோ அல்லது புதியன செய்தாலோ, அவை மேலும் ஏழு தலைமுறைகள் தொடரும் என்பதைப் பின் ஏழு பிறவிகள் என்றும் கொள்ள வேண்டும். திருவள்ளுவர் பிறப்பினைப் பற்றிப் பல்வேறு குறட்பாக்களில் உணர்த்தியுள்ளார். எழுமை, ஏழு பிறப்பு என்றும் குறிப்பிடுகிறார். எதனையும், விரும்பாமையே பிறவாமைக்கு வழியெனலாம். இதனை,

> *"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை*
> *யாண்டும் அஃதொப்ப தில்"* - (363)

என்ற குறட்பாவால் அறியலாம். பிறப்பினை,

> *"உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி*
> *விழிப்பது போலும் பிறப்பு"* - (339)

என்று கூறிப் பிறப்பிற்கும் இறப்பிற்குமுள்ள தொடர்பினை மிக அழகாக விளக்குகிறார். மறுபிறப்பினைப் பற்றி,

> *"இம்மைப் பிறப்பில் பிரியலம்' என்றேனாக்*
> *கண்ணிறை நீர்கொண் டனள்"* - (1315)

என்ற குறட்பாவால் அறியலாம்.

> *"எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்*
> *பண்புடை மக்கட் பெறின்"* - (62)

> *"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்*
> *விழுமம் துடைத்தவர் நட்பு"* - (107)

> *"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி, ஒருவற்*
> *கெழுமையும் ஏமாப் புடைத்து"* - (398)

போன்ற குறட்பாக்கள் மூலம் எழுபிறப்புண்மையை வள்ளுவர் எடுத்துக் காட்டியுள்ளமையை அறியலாம். 'சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்' என்ற நூலில் 'மறுபிறவி' என்ற சிறு தலைப்பில் மிகத் தெளிவாகக் கீழ்வருமாறு விளக்குகின்றார் மகரிஷி.

மறுபிறவி

நீண்ட கால வரலாற்றில் வாதத்திற்கு ஒரு பொருளாகவே 'மறுபிறவி' இருந்து வருகிறது. பிறப்பிற்கு முன்னும் இறப்பிற்குப்

பின்னும் ஆன்மாவின் நிலை என்ன ? என்பது தான் கேள்வி. இக் கேள்விக்குப் பதில் காண வேண்டுமானால் ஒருவர் அவருடைய வாழ் நாளில் ஆன்மாவின் நிலை என்ன என்பதை முதலில் அறிந்தாக வேண்டும். முந்தைய பக்கங்களில் ஆன்மாவைப் பற்றிய பொதுக் கருத்துகளையும், அதன் செயல்களையும் பற்றிப் பார்த்தோம். பிறப்பு–இறப்புப் பற்றிய அனுபவங்களை யாராலும் தானே சான்றாக இருந்து உறுதிப்படுத்திக் கூற முடியாது. இயற்கையின் செயலொழுங்குப்படி பிறப்பின்போதும் இறப்பின்போதும் அறிவின் தானியங்கி செயல்படும் முறையினால் ஆன்மா உணர்ச்சி நிலைகளைத் தாண்டி ஆழ்நிலைக்குச் சென்று விடுகிறது. இந்த நிலை ஒரு விதமான அறிதுயில் செயலற்ற நிலை அல்லது உயிரற்றது போன்ற நிலை ஆகும். எனவே எவரும் தன்னுடைய பிறப்பு அல்லது இறப்பை உணர்வோடு அனுபவித்து அதை நினைவுபடுத்திப் பார்க்கவோ அல்லது பிறப்புக்கு முன்னும் இறப்பிற்குப் பின்னும் அதன் நிலையை யூகித்துப் பார்க்கலாம். அந்த மாதிரியான ஒரு யூகம் எவ்விதத் தர்க்க முறைக்கும் கட்டுப்படாத முழுமையான கற்பனையாக இருக்கக் கூடாது.

தாய் தந்தை என்ற பெற்றோர்களின் இரு ஆன்மாக்களின் இணைப்பினால் உருவாக்கப்பட்ட தனிமையான ஆன்மாதான் ஒவ்வொரு உயிரினத்தின் பூர்வாங்க வரைபடம் ஆகும். இந்தப் பூர்வாங்க வரைபடத்திற்குத் தக்கவாறு மட்டுமே எல்லாவிதமான விளங்காப் புதிரான செயல்களையும், உடலுறுப்புக்களையும் கொண்ட பருவுடல் அமைக்கப்படுகிறது. எனவே கருவில் இருக்கும் நிலையில் பருவுடல் இல்லாத ஆன்மாவோ அல்லது ஆன்மா இல்லாத பருவுடலோ இருக்கவோ அல்லது வளர்ந்து வரவோ முடியாது. ஓர் ஆன்மா பிறவி எடுக்கும் போது அதை உள்ளடக்கி வைக்கும் சாதனமாகப் பருமனில் சிறியதாக இருந்தாலும் கூட ஒரு பருவுடல் கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும். எனவே பருவுடலும் ஆன்மாவும் ஒன்றோடு மற்றது இணைந்தே ஒரு கரு உண்டாகின்றது. ஏழாவது மாதத்தில் தான் ஆன்மா முதிர்ந்த கருவில் நுழைந்து குடியமர்கிறது என்ற பழங் காலத்துக் கொள்கை முற்றிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. முன்காலங்களில் கருப்பையில் ஒரு குழந்தையின் வெவ்வேறு பருவ கால வளர்ச்சியைப் பற்றி அறிவதற்கான வாய்ப்புகள் மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, பல ஆண்டுகளாகக் கரு உற்பத்தியின் இரகசியம் மறைக்கப்பட்டு இருந்தது. இருந்தாலும் பிந்திய ஒரு காலக்கட்டத்தில் விஞ்ஞான அடிப்படையில் எதையும் அறிய ஆர்வமுள்ள இயல்பு வளர்ந்தவுடன், இறந்து போகும் கருவுற்ற பெண்களின் கருப்பையைத் திறந்து பார்த்து கரு முளையின் வளர்ச்சி நிலைகளை அறிந்து கொள்ள ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். இது

ஒரு நடைமுறை மரபாகவும் சடங்கு முறையாகவும் சில பிரிவு மக்களிடையே வந்ததால் இந்த வழியில் கரு வளர்ச்சியின் படிப்படியான நிலைகளைத் தெளிவாக உறுதிப்படுத்தினார்கள். இந்த முறையில் கண்டுபிடித்ததற்கான சான்றாதாரங்கள் கீழைநாட்டு இலக்கியங் களில் உள்ளன. மாதாமாதக் கரு வளர்ச்சியைக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அவை விவரிக்கின்றன.

எண்.	மாதம்	உருவாகும் உறுப்புகள்
	பதினைந்தாம் நாள்	முட்டை வடிவமான கருமுளை
1.	ஒன்று	கம்பம்போல் நீளவடிவம்
2.	இரண்டு	தலை, முகம், முதுகு
3.	மூன்று	கைகள், கால்கள், அடி வயிறு
4.	நான்கு	மூக்கு
5.	ஐந்து	காதுகள், நாக்கு, கண்கள்
6.	ஆறு	நகங்கள்
7.	ஏழு	முடி, நரம்புகள், எலும்புகள், செரிமானத்தொகுதி, சவ்வுப் பை, இதயம், நுரையீரல்கள் மூச்சு ஆரம்பம்
8.	எட்டு	உருவமைப்பு, முழுமையடைதல்
9.	ஒன்பது	பிறப்பிற்குத் தயாராக நிலை மாற்றங்கள், தலை நீர்ப்பை திரும்புதல்.
10.	பத்து	நேரம் வந்தவுடன் குழந்தை பிறத்தல்.

இந்த வளர்ச்சி நிலைகள் எல்லாம் ஆன்மாவினால் தான் செயல்படுத்தப்படுகின்றன. எல்லா உறுப்புகளும் இரண்டாவது மாதத் திலேயே நுண்மையாக அமைந்திருந்தாலும் ஏழாவது மாதத்தில் தான் நுரையீரல்களும் இதயமும் உருவாகி மூச்சு ஆரம்பிக்கிறது. எனவே இந்தக் காலத்தில்தான் உடலினுள் ஆன்மா நுழைகிறது. மூச்சுத்தான் ஆன்மாவின் இருப்பு நிலையைக் காட்டுகிறது எனத் தவறாக நம்பி வந்தார்கள். இந்தத் தவறான கொள்கை; ஆன்மா தனியானது எனவும்

உடல் தனியானது எனவும் ஏழாவது மாதத்தில் ஆன்மா உடலில் நுழைகிறது எனவும் எண்ணிய நம்பிக்கைக்கு ஆதரவாக அமைந்து விட்டது. ஓர் ஆன்மா இல்லாது வாழும் உடலும், உடலில்லாது உணர்வு நிலையான ஆன்மாவும் தனித்து இருக்க முடியாது என்பதே உண்மை யாகும். பிறப்போ அல்லது மறு பிறப்போ இனப்பெருக்கச் செயலின்படி பெற்றோரின் வித்துக்களிலிருந்து மட்டும்தான் நடைபெறுகிறது.

வாழ்வும் இறப்பும்

பரு உடலின் மிகச் சிறிய கூறே செல் ஆகும். ஓர் உயிரினத்தின் செல்கள் இரு துருவங்களைக் கொண்டுள்ளது. உடல் முழுவதும் சுற்றி ஓடிக் கொண்டிருக்கும் சீவகாந்த ஆற்றல் அதன் ஓட்டத்தைக் கருமையத்திலிருந்து ஆரம்பித்துச் சுற்று முடிந்த பின் கருமையத்திற்குத் திரும்பி வந்து விடுகிறது. இந்தச் சுற்றுப் பாதையில் சீவகாந்தம் ஓடும்போது எல்லாச் செல்களிலும் செல்களின் துருவங்களுக்குத் தகுந்தவாறு ஒரு முனையில் சீவகாந்தம் நுழைந்து செல்களை நிரப்பி விட்டு மறுமுனை வழியே வெளியே வருகிறது. ஒவ்வொரு செல்லும் சீவகாந்தத்தைப் பயன்படுத்தி அதன் ஊட்டச் சத்துக்களை எல்லா விதமான உடல் மற்றும் மனம் சார்ந்த செயல்களைத் தொடர்ந்து பேணி வருவதற்குத் தேவையான இரசாயனங்களாகத் தன்மாற்றம் செய்து கொள்கிறது. சீவகாந்தத்தின் உள்ளார்ந்த ஆற்றல் பண்புகளே அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் மற்றும் மன அலை ஆகும். இந்தப் பண்புகள் செல்களின் கூட்டால் உருவாக்கப்படும் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு தெளிவானதாகவும் மறைவு அற்றதாகவும் அமைகின்றன.

சீவ காந்த ஓட்டப் பாதையில் ஒரு புள்ளியில் ஏதாவது உராய்வு, அழுத்தம், குத்தல், உணர்ச்சி அல்லது வெட்டுக்காயம் உண்டானால் அந்த இடைத்தடைகளை மன அலையானது துன்பம், இன்பம், அமைதி அல்லது பேரின்பமாக உணர்கிறது. உராய்வு அல்லது இடைத்தடையின் வலிமைக்குத் தகுந்தவாறு அந்தப் புள்ளியில் சீவகாந்தம் மாற்றம் பெற்று வெளியேறுகிறது. வெளியிலிருந்து அல்லது உள்ளேயிருந்து தோன்றும் இடைத் தடையினால் சீவகாந்த ஓட்டம் தேக்கமுற்று மின்குறுக்கு ஏற்பட்டிருந்தால் இந்த மின்குறுக்கு துன்பம் எனும் நோயை விளைவாகக் கொடுக்கும். மிகச் சிறியதாக இருந்தாலும் ஒவ்வொரு மின்குறுக்கும் கருமையத்தைப் பாதிக்கும். மின்குறுக்கு அதிகமாக இருக்கும்போது, முதன்மை விசையாகச் செயல்படும் கருமையமே மின்குறுக்கால் எரிந்து விடும். இந்நிலையில் சுரப்பிகள் சார்ந்த நரம்புகள் சீர் குலைக்கப்பட்டுச் சீவ வித்துக் குழம்பின் பெரும்பகுதி வெளியேற்றப்பட்டு விடுகிறது. இதன் விளைவாகப் பெரும் பாலான உயிராற்றல் அல்லது நுண்விண்துகள்கள் வெளியேற்றப்பட்டு

அதனால் சீவகாந்த உற்பத்தி முழுவதும் நின்று போய்விடுகிறது. அதனால் எல்லாச் செல்களும், உறுப்புகளும், உணர் உறுப்புகளும் மூளையும் அவற்றின் செயல்களை நிறுத்தி விடுகின்றன. இந்நிலையில் காந்தத் திணிவுப் பெட்டகமான ஆன்மா கருமையத்திலிருந்து வெளியேறி விடுகிறது. இதுவே உயிரினங்களின் இறப்பு ஆகும்.

மூளையின் செல்கள் இயக்கநிலையில் இருக்கும்வரைதான் மனம் இயங்க முடியும் என்பதால் உடலைவிட்டு ஆன்மா வெளியேறிய பின் மூளைத் திசுக்கள் செயலற்று விடும். பருவுடல் எவ்விதமான மனம் சார்ந்த செயலையும் செய்ய முடியாது. உணர் உறுப்புகள், இரத்த ஓட்டம், சீவ வித்துக் குழம்பு உயிராற்றலாகிற நுண்விண் துகள்கள் கருமையம் ஆகியன திசுக்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. ஏழு செயல்களில் (இரசம், இரத்தம், சதை, கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, சீவ வித்துக் குழம்பு உற்பத்திகள்) ஏதேனும் ஒன்று நின்று விட்டாலும் மனம் வேலை செய்யவே முடியாது.

உயிரை எப்படி உணரமுடியும் எனவும், உயிரின் ஆற்றலைப் பற்றியும் உயிர் உடலை விட்டுச் சென்ற பின்பு நிகழும் நிகழ்ச்சிகளையும் 'மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து' என்ற நூலின் பக். 104–105–இல் உள்ள பின்வரும் பாடல்களால் அறியலாம்.

மனிதனின் உயர்வு **25-12-65**

உயிர்கட்கு வெப்ப தட்ப ஏற்றம், காமம்,
உணர்ச்சிகள் பொதுவாகும் இவற்றைத் தீர்க்க
உயிர்களெலாம் உணர்ச்சி சூழ்நிலை பழக்கம்
ஒக்க தம் முயற்சியினைப் பயன்படுத்தும்.
உயிர்களிலே பிற உயிரின் உணர்ச்சி கூர்ந்து
உணர்ந்து ஒத்துதவும் பேராற்றல் பெற்ற
உயிரினமே மனிதனெனும் உயர்ந்த தோற்றம்
உண்மையினை உணர்ந்தொழுகல் உயர் அறமாம்.

உயிரை உணர்தல் **26-12-65**

தெய்வ நிலையறிந்தோர்கள் கோடி என்றால்,
தெளிவாக அறிவறிந்தோர் ஒருவராகும்.
தெய்வ நிலையதனை வெளி பிரம்மம் என்று
தேர்ந்த சில வார்த்தைகளால் விளக்கலாகும்
தெய்வமே உயிராகி அறிவாய் ஆற்றும்
திருவிளையாடல் தன்னை உணர்ந்து கொண்ட
தெய்வர்களல்லால் மற்றோர் உயிரைப் பற்றி
திருத்தமுடன் உரைப்போர் யார்? வாரீர் சொல்வேன்!

உயிரின் ஆற்றல் **27-12-65**

உயிரென்ற பரம அணு
ஒழுங்குற்றப் பருப்பொருளில் சுழலவித்தாம்.
உயிர் சுற்றிச் சுழன்றுப் பின்
உருவ உடலைக் கட்டும் மேலும் அந்த
உயிர் உடலைக் காத்து வரும்.
உடல் கட்டு ஒழுங்கு மிகக் குலைந்துபோனால்
உயிர் உடலை விட்டுப் பல
உயிர்களிலும் விண்ணகத்தும் கலந்துபோகும்.

உணர்ச்சியினால் பிரிவு **28-12-65**

உயிர் என்ற ஒரு சக்தி
உடல்தனிலும் வெளிதனிலும் ஊடுருவி நிற்கும்.
உயிர்த் தன்மை அது இயங்கும்
உடலுக்கும் புலன் கட்கும் ஒத்து ஆற்றும்.
உயிர் உடலில் ஆங்கப் போது
உணருகின்ற தரமொக்க எல்லைக் கட்டி
உயிர் ஒன்றே பலகோடி
உயிர்களென உணர்ச்சியினால் பிரிந்து காட்டும்.

இறந்தபின் உயிருக்குப் பிறவியில்லை **29-12-65**

உயிர் உடலை விட்ட பின்னர்
ஒன்றுபட்டதனி இயக்கம் அதற்கு ஏது?
உயிர் உடலை விட்ட பின்னர்
உணர்ச்சியோ இன்பதுன்ப உணர்வோ ஏது?
உயிர் உடலை விட்ட பின்னர்
ஒவ்வொன்றாய் அணு அணுவாய்ப் பிரிந்து போகும்.
உயிர் உடலை விட்ட பின்னர்
உயிருக்குப்பின் பிறவித் தொடரே இல்லை.

மனம் அறிவு **30-12-65**

உடலில் விண் உயிராக விரைந்தாற்றுங்கால்
1. உணர்ச்சி 2. தேவை 3. முயற்சி 4. செயல் 5. விளைவு
உடலிலுள்ள 6. இன்பதுன்ப அனுபோகங்கள்
7. உற்ற அனுபவங்கள் 8. சிந்தனை 9. தெளிவு
உடல் உள்ளம் ஆற்றும் முறை 10. முடிவு இப் பத்தும்
ஒவ்வொன்றாய்ப் புலன்கள் வழி விரிந்து ஆற்றி
உடல் வரையில் நின்றாற்ற மனம் என்கின்றோம்
ஓங்கி விண் பரமறிய அறிவு என்போம்.

மகரிஷி, பல்லாயிரம் பிறவித் தொடராகக் கூட்டிக்கொண்ட வினைப்பதிவுகளை ஒரே பிறவியில் தூய்மை செய்துகொள்ள

அகத்தவச்சாதனை இணையற்ற ஒன்று என்று கூறி, 'வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து" என்ற நூலில் ப.34–இல் பின்வருமாறு தம் பாடலில் விளக்குகிறார்.

"பல்ஆயி ரம்பிறவி எடுத்தேற்றப் பாவப்
பதிவுகளை ஒருபிறவி காலத்தில் மாற்றி
நலமடைந்து மனிதனாகி, தெய்வமாகி உய்ய
நல்லவாய்ப்பு ஆற்றல்இவை நமக்களித்து இயற்கை
நிலவுலகில் மனிதரிடம் அமைந்துள்ள உண்மை
நேர்முகமாய்க் கருமையத் தூய்மை உணர்ந் தாற்றிப்
பலனடைய அகத்தவத்தால் பரமுணர்ந்து அறத்தின்
பாதையிலே ஒத்துதவி வாழும் முறை போதும்".

(வா.வ.உ. படிகள் ஐந்து ப.34)

பிறவியின் நோக்கமே உயிர் விடுதலை பெற வழி செய்வதெனலாம் என்கிறார் மகரிஷி. இதனை "வாழ்க்கைமலர்கள்" என்ற நூலில் பிறவியின் நோக்கம் என்ற தலைப்பில் ப.255–இல் கீழ்வருமாறு விளக்குகிறார்.

பிறவியின் நோக்கம்

இயற்கையின் ஆதி நிலையே தெய்வம் எனப்படுகிறது. அதனுள் அமைந்த வேகம், ஆகாசம் எனும் பரமாணுத் துகளாகி அவையே பிரபஞ்ச ஆற்றல் களமாகியது. அவ்வாற்றலின் திணிவின் வேறுபாடு களும், காற்று, வெப்பம், நீர், நிலமெனும் மற்ற நான்கு பூதங்களுமாகிய அவை கூட்டால் உயிர்கள் பலவாகின. ஐம்புலன்கள் மூலம், தன்னிருப்பு நிலை, இயக்கச் சிறப்புகள், அழகு, மதிப்பு இவற்றை உணர்ந்து உயிர் நிறைவு பெறுகின்றது.

கடைசியில் மனம், உயிர் தன் மூல நிலை இவையறியும் ஆர்வமே ஆறாவது அறிவாக விரிந்தது. ஐம்புலன்களோடு இயங்கிய உயிர்களின் தொடர்பாக மனித உருவம் வந்ததால், ஆறாவது அறிவு போதிய வளர்ச்சியும், விழிப்பும் பெறும்வரை, புலன்வழி மயங்கி, உணர்ச்சி வயப்பட்டு அறுகுணங்களாகிய துன்பம் விளைக்கும் செயல்களை ஆற்றி அவற்றின் விளைவாகப் பாவப்பதிவுகளை அதிகமாக்கிக் கொண்டது.

புலன் மயக்க மாயையும், தீய செயல்களால் பாவப்பதிவுகளும், தன்னையறியா மயக்கத்தால் ஆணவமும் பெருகி, இவையே ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களாகி, துன்பங்களும், சிக்கல்களும் வாழ்வில் பெருகின. சிந்தனை உயர்ந்தபோது தனது மூன்று களங்கங்களைப் போக்கிக் கொண்டு, அறிவைப் பெருக்கி முழுமை

யடைந்து, ஆதிநிலை வரைக்கும் விரிந்து அதோடு இலயமாகி அறிவு செயல்படுகிறது.

எனவே, நாம் எந்தச் செயல் புரிந்தாலும், களங்கம் போக்கவும், அறிவு பெருகவும் அது உதவியாக அமைய வேண்டும். அப்போதுதான் இனிமை, அமைதி, நிறைவு, மகிழ்ச்சி வாழ்வில் அமையும். குண்டலினி யோகம், தவம், தற்சோதனை, குணநல மேன்மை, முழுமைப்பேறு இவற்றை அடக்கமாகக் கொண்டதால், உயிர் விடுதலை பெற, இது ஏற்ற நல்ல மனச்சாதனையாகும்.

மனிதனுடைய உயிர் இறைவனை அடைய ஒட்டாது தடுப்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் முத்தளைகள் ஆகும். அந்தக் கட்டினை உடைத்துவிட்டால், நீக்கிவிட்டால், அந்த உயிர் இறைவனை அடையும். பிறவியின் பயனே உயிரை உய்வுபெற வைப்பது என்பதனைப் பற்றி ஆழ்ந்து தெளிந்தோம். அந்த இறைவனின் தன்மைகளை, பண்புகளை திருவள்ளுவர் ‘கடவுள் வாழ்த்து’ என்ற அதிகாரத்தில் தெளிவாக்குகிறார்.

இந்த உலகம் ஆதி பகவனை முதலாக உடையது என்றும், தூய வடிவனன் என்றும், மெல்லிய மலரினும் மென்மை இயல்பையுடையவன் என்றும், அதாவது தூய உடம்பினன், மலக்கலப்பற்றுத் தூய உடம்பை யுடையவன், விருப்பு வெறுப்பு இல்லாதவன் என்றும், அறிவை மயக்கிச் செருக்கினை உண்டாக்கும் நல்வினைகளும், தீவினைகளும் சேராதவன் என்றும், ஐம்பொறிகளின் வழியாக வரும் அவாவினை அழித்தவன் என்றும், இவனுக்கு இவனே உவமை எனத்தக்க இயல்புடையவன், நற்குணங்களை எல்லாம் ஒருங்கே கொண்டவன் என்று இறைவனின் பண்பு நலன்களைப் போற்றி, அவரடிகளைப் பின்பற்ற, பிறவியாகிய பெருங்கடலை நீந்த இயலும் எனவும் வழிகாட்டுகிறார் திருவள்ளுவர். எடுத்துக்காட்டாக,

“கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை” -(9)

“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்” -(10)

போன்ற குறட்பாக்களைச் சுட்டலாம்.

திருக்குறட்பாக்கள் முழுமையும் தெய்வம், இறை போன்ற பொதுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ள பான்மையை எண்ணியெண்ணி இறும்பூது அடைவோம்.

இறைவன்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்ற சான்றோர் தம் கூற்றினைச் சற்று எண்ணிப் பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். புல்லாகிப் பூடாகி எனப் பல்வேறு நிலைகளைக் கடந்த ஆறறிவு பெற்ற மனிதப்பிறவியில் மட்டுமே இறைவனை எளிதில் பெற இயலும். எனவே தான் மகரிஷி,

"மெய்ஞ்ஞானத்தை நேரிழைப் பாவாகவும், விஞ்ஞானத்தை ஊடுபாவாகவும் அமைத்து மகரிஷி தயாரித்த தெய்வீக ஆடைதான் இவரது இறைத்தத்துவம். உலக மக்கள் யாவருக்கும் இந்த ஆடை பொருந்தும். நாம் துயரென்ற குளிரில் வாடிவதங்கும் போதெல்லாம் இந்த ஆடை நமக்குத் தேவை. இதன்முறை தவறா இறை நீதி நமக்கு முழுமையான சாந்தியைத் தரவல்லது.... சுயமான சிந்தனையின் மீது சுகமாக அமைகிறது மகரிஷியின் இறைத்தத்துவம்.

...... இறைத்தேடலை இறையுணர்வாக மாற்றியது மகரிஷியின் இறைத்தத்துவம் என்கிறார் முனைவர் ஜி. அழகர் இராமானுசம் அவர்கள் (வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் தலைப்பு; வேதாத்திரியம் தரும் இறைஞானம், பக்.127 – 134) மேலும் இந்தவுலகம் இயங்கும் தன்மையைக் கீழ்வரும் பாடலில் விளக்குகிறார் மகரிஷி.

"இயற்கை என்பதே 'தெய்வம்' சுத்தவெளி பூரணம்
இதுவேதான் பேராற்றல் காலம் பேரறிவும் ஆகும்
இயற்கையதன் தன்மைதான் தன்னிறுக்க அழுத்தம்
இவ்வழுத்த விளைவாம் நுண்ணதிர்வு காலமாச்சி
இயற்கை அழுத்தம் அதிர்பு எனும் இயக்க விளைவாக
இறுக்கி நொறுக்கிய துகளே பரமாணு நுண்விண்
இயற்கை ஒன்றே விண்ணாகி பலப்பலவாய் பெருகி
இணைந்தும் பிரிந்தும் இயங்கும் இயல்பே பிரபஞ்சமாம்"

மகரிஷியின் 'ஞானக் களஞ்சியத்தில்' கூறியுள்ள இறைச் சிந்தனைகளைக் குறித்துக் கட்டுரையாசிரியர் மிக விளக்கமாக எழுதியுள்ளார் (மேற்படி; பக் 250 – 268). அக்கருத்துகளை இங்கு எண்ணுவது பொருத்தமானதாகும். இறை என்றால் என்ன ? இறையை உணர்வதற்கான வழிமுறைகள், பகுத்தறிவால் உண்மைகளைத் தெளிந்து அனுபவப்பூர்வமாக உணர்வதற்கான வழிமுறைகள் யாவை ? இறைக்கும், மதத்திற்குமுள்ள உறவு போன்ற பல்வேறு வினாக்களுக்கு விடையளிக்கிறார் மகரிஷி. இறைத்தத்துவத்தை

"வித்தையென்றால் பிரம்ம வித்தை உணர்வு ஆகும்
வேதாந்தம் பேசுவதால் கிட்டிடாது

அத்துவித மாகி அவள் எங்கு மாகி
அணுமுதலாய் அண்டங்க ளாகித் தாங்கும்
சுத்த வெளி சூனியமாய் நிறைந்த தன்மை
சூட்சுமமாய் அனுபவமாய் அறிந்து நிற்கும்
தத்துவத்தின் முடிவான தானே யான
தனையறிந்த வித்தையது தர்க்கம் வேண்டாம்"

(இறையுணர்வும் அறநெறியும் 2003:4)

என்று கூறி, இறையனுபவம் என்பது தானேயுணர்வதாகும். குழந்தையைக் கொஞ்சும்போது கிடைக்கும் இன்பத்தை எவ்வளவு என்று யாரேனும் வினவினால் எவ்வாறு விளம்ப இயலாதோ, அது போன்றதே இறையனுபவம் ஆகும் எனலாம். மேலும், தெய்வநிலையைப் பற்றிக் கீழ்வருமாறு உணர்த்துகிறார். "அலையலையாய் இயங்குகின்ற மனத்தை நிலையாக்கி நேரடியாகத் தானே அதுவாகி, அனுபவபூர்வமாக உணரக் கூடியது தெய்வநிலை" (இறையுணர்வும் அறநெறியும் 2003:5) என்கிறார் மகரிஷி.

இறைவன் பெயரைக் கூறிக்கொண்டு ஒருசில மதவாதிகள் உயிர்க் கொலைகள் செய்வதும், ஒருவரையொருவர் தாக்கிப் பேசிக் கொள்வதும் நாட்டில் அமைதியைக் குலைக்கும் வழிகள் என்று மகரிஷி உரைக்கிறார். மேலும் பக். 54–இல் உலக அமைதிக்கான வழிமுறைகளைக் கீழ்வருமாறு எடுத்துக் காட்டுகிறார்.

1. **மனித மனம் சிறப்புற அறிவின் நுண்மையோடு வாழத் தனக்கு வேண்டிய தேவைகளை முடித்துக்கொள்ள அவரவர் உழைப்பைப் பயன்படுத்த வேண்டும்.**
2. **பிறருடைய மனம், உடல் வருந்தாத ஒரு விழிப்பு நிலையோடு நமது வாழ்க்கைச் செயல்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.**
3. **உணவுக்காக உயிர்க்கொலை கூடாது.**
4. **பிறருடைய வாழும் உரிமையையும், அவர்கள் ஈட்டி வைத்திருக்கும் பொருட்களையும் நாம் மதித்துக்காத்து அவருக்கு உதவி செய்ய வேண்டும்.**
5. **துன்பப்படும் உயிர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும். இந்த ஐந்தொழுக்கங்களையும் நினைத்துப் பார்த்தால் இதுவே அறநெறி என்ற ஆன்மிக அரண்மனை ஆகும் (மேற்படி, 54) என்று மொழிகிறார்.**

மதச் சண்டைகள் ஒழிந்து ஓரிறையைப் பற்றி உலகம் அமைதி வழியில் உய்ய, மதம் மேற்கண்ட ஐந்து நெறிகளை உணர்த்துவதாய் அமைய வேண்டும் என்கிறார் மகரிஷி. "மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும். மதத்திற்கு அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்று போதும். அதை அடைவதற்குத் தெய்வம் ஒன்றுபோதும்" என்னும் அவர், மதத்

தலைவர்கள் இதற்கொரு முடிவு காணவேண்டுமென்கிறார் (மேற்படி, 76). தெய்வம் ஒன்று என்பதைப் பட்டினத்தாரும் "ஒன்றென்றிரு" என்று போதித் துள்ளார் என்பது இங்கு எண்ணத்தக்கது. (வே.ச.இ. சிந்தனைகள் ப. 274)

ஆதி பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இருவினையும் சேரா இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான், இறைவன் என்றே சுட்டுவதை யெண்ணியெண்ணி மகிழ்வோம். மகரிஷி, புலன்களை வென்றால் அறிவை உணரலாம் என்ற நிலையில் கீழ்வருமாறு கூறுகிறார். திருவள்ளுவரும், மகரிஷியும் இறைக் கொள்கையில் பெரும்பாலும் ஒத்த கருத்துகளையே கொண்டுள்ளனர். புலன்களை வெல்ல அறிவை / இறையை உணரலாம். இதனை,

"அறிவைப் புலன்களில் அதிக நாள் பழக்கினேன்
அதன்பயன் உணர்ச்சிகள் அறிவை வென்றன
அறிவை யறிவால் ஆராயப் பழகினேன்
அந்த நிலையிலும் புலன்களை இயக்கினேன்
அறிவு அகண்டா காரத்தில் நிலைபெற
அதிக விழிப்பும் பழக்கமும் பெற்றது
அறிவு புலன்களை அறிந்தது வென்றது
அங்கு வாருங்கள் அமைதி விரும்புவோர்

(எனது வாழ்க்கை விளக்கம், ப.93)

என்ற பாடலால் அறியலாம்.

வீடுபேறு

எல்லா மதங்களும் உயிரை உய்வு பெற வைக்கவே நாம் மண்ணில் பிறந்தோம் என்று குறிப்பாக உணர்த்துகின்றன. சொர்க்கம், நரகம் என்ற பிரிவினையும் நல்லது செய்யின் மோட்சம், தீயது செய்யின் நரகம் என்பதையும் எடுத்துக் கூறுகின்றன. திருவள்ளுவர்;

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" - (350)

என்று குறிப்பாக உணர்த்துகிறார் மகரிஷி அவர்கள்.

எண்ணம் சீவகாந்தத்தில் எழுகின்ற அலை நிலை
எண்ணமதில் நிலைபொருள் இறைவன் உண்மைதேர்வோம்
எண்ணமொடு சொல் செயல் இம்மூன்று அலைகளை
இறுக்கியும் சுருக்கியும் இருப்பு வைக்கும் காந்தமே
எண்ணிப்பார் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்த ஆற்றலே
எங்கும் நிறை காந்தத்திற்கு இருப்பு நிலை தெய்வமாம்
எண்ண விண் சுழலலையின் இயக்க நிலை காந்தமிது
இருப்பியக்கம் இரண்டுமாய் எங்கும் நிறைந்துள்ளதே

காந்தச் சுழல் ஈர்ப்பு மையம் உயிர் வித்து மூன்றும்
கலந்து செயல் புரியும் கருமைய உண்மை தேர்வோம்
காந்தத்தில் இறைநிலையும் உயிர் அறிவு மனமும்
கருத்தாலே உணர்வதற்கு அகத்தவமே வழியாம்
காந்தமது ஐவகைத் தன்மாத்திரையாய் மனமாய்
கர்மங்கள் பதிவு செய்து பலன் விளைக்கும் நெறியாய்
காந்தமே கருமையம் பிறப்பிறப்பு வாழ்வாய்க்
கண்டு கொண்டால் பேரியக்க மண்டலமே உன்னுள்

(செயல்விளைவுத் தத்துவம், ப.20)

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று கொள்ளும், தெளிவில்லா அறிவினன், பெருமையில்லாப் பிறப்பினன் ஆவான் என்று கூறி, மெய்யறிவு இல்லாதவர்க்கு ஐம்புலன்களால் உண்டாகும் ஐவகை அறிவும் ஒருங்கே வாய்த்திருந்தாலும் அவற்றால் ஒரு பயனும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். இதனை,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு" -(354)

என்ற குறட்பாவால் அறியலாம். மகரிஷி ஐயுணர்வு – மெய்யுணர்வு இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை மிக விளக்கமாக "ஐயுணர்வும் மெய்யுணர்வும்" என்ற தலைப்பில் மனவளக்கலை (தொகுப்பு இரண்டில் பக் 95–107) என்ற நூலில் எழுதியுள்ளார்.

புலன்கள் எந்தப் பொருளை உணர்ந்தாலும் அனுபவத்தாலும், நம்முடைய உயிர்ச்சக்தி அந்த இடத்திலே செலவாகிறது. மேலும் மேலும் செலவாகின்ற போது உடலில் உள்ள அணு அடுக்குகள் எல்லாம் சீர்குலைந்து போகின்றன. அதனால் நோய், துன்பம் ஆகியவை ஏற்படுகின்றன. ஆகையினால் புலன் உணர்ச்சிக்கு ஆட்பட்டு எத்தகைய இன்பம் அனுபவித்தாலும் அதில் உள்ள அளவு ஒன்று, முறை ஒன்று இந்த இரண்டு கருத்தை வைத்துக் கொள்ள வேண்டும். முன் அனுபவம், பின்விளைவு, தற்போது உள்ள சூழ்நிலை இந்த மூன்றையும் இணைத்து அறிவைக் கொண்டு விரித்துப் பார்க்க வேண்டும். அதில் விழிப்பு நிலை வந்துவிட வேண்டும். சுவையாக இருக்கிறது என்று எண்ணிச் சுவையிலே மயங்கி நிற்பது **"ஐயுணர்வு"** இதற்கு மேலாகப் போனால் உயிருக்குத் துன்பம் என்று அளவோடு நிறுத்திக் கொள்வது **"மெய்யுணர்வு"** ஆகும்.

இந்த ஐயுணர்வினால் மனிதன் உணர்ச்சி வயப்படுகிறான். மெய்யுணர்வினால் மயக்கம் தெளிந்து ஞானம் பெறுகிறான். அதனால்தான் "பகுத்துணர்வில் தொகுத்துணர்வுப் பண்பாட்டை உயர்த்தட்டும்" என்று ஒரு கவியில் கூறியிருக்கிறேன். அதாவது பகுத்துணர்வு என்பது புலன் அறிவே. அது இது என்று பிரித்துக்

கொண்டே போய் அதன் தன்மையை உணர்ந்து கொள்வது பகுத்துணர்வு. ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாக முழுமுதற் பொருளாய் இருப்பது எது? இதை எல்லாம் அனுபவிக்கக் கூடிய அறிவு எது? என்பதெல்லாம் அறிந்து, அந்த அறிவைப் பயனுள்ள முறையிலே அறிந்து கொள்ளும்போதுதான் தொகுத்துணர்வு உண்டாகிறது.

ஐயுணர்வு பெற்ற போதிலும் அவன் மெய்யறிவு பெறாது போனால் அந்த ஐயுணர்வும் பயனற்றதாகும். நம் பிறப்பு, வாழ்வு யாவும் பயனற்றதாகப் போய்விடும். இந்தப் பகுத்துணர்வில் தொகுத் துணர்வு பெற வேண்டுமானால் அகத்தவம் பயில வேண்டும். அதைப் பயிலப் பயிலத் தானாகவே மெய்யுணர்வு பெறுவீர்கள். எடுத்து முடிக்கக்கூடிய காரியங்கள் எதுவானாலும் இப்பிறவியில் இயலவில்லை என்றாலும் பிறக்கக் கூடிய குழந்தைகளாவது செய்துவிடும்.

எனவே இந்தப் பிறவியிலும் சரி, தொடர்ந்து வரக்கூடிய பிறவிகளிலும் சரி, குழந்தைகளுக்கும் சரி, உங்கள் குடும்பங் களுக்கும் சரி, உலகத்துக்கும் சரி, ஐயுணர்வின் வழியிலேயிருந்து அனுபவிக்கின்ற போது, பற்று, பாசம் உண்டாகும், மெய்யுணர்விலே இருந்த அந்த உணர்வைப் பெற்றபின் செய்கின்ற செயலானது அந்தப் பற்றிலே உள்ள 'அளவு', 'முறை' இருந்து பிறவியினுடைய நோக்கத்தைப் புரிந்து, காரியம் செய்கின்றபோது பற்று விலகி விடுகிறது.

ஐயுணர்வினைக் கட்டுப்படுத்தித் திட்டம் தீட்டினால் தான் மெய்யுணர்வு பெற முடியும். அதற்கு ஐயுணர்வை ஒழுங்குபடுத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஐயுணர்வுகளிலே இன்ப துன்ப இயல்புகளிலே சுழன்று சிக்கிக் கொண்டு இருக்கிற வரையிலே மெய்யுணர்வுக்கு மேலேறும் நாட்டம் இருக்காது. தொட்டியில் குழாய்கள் பொறுத்தி விட்டாலே தண்ணீர் வந்து விடாது. தண்ணீர் சீராகவும் கணிசமான அளவிலும் குழாயில் வரவேண்டுமானால் அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் கீழ்க் குழாயைத் தேவையில்லாதபோது மூடி வைத்திருக்க வேண்டும். தண்ணீர் கடந்து வருகின்ற பாதையில் தடை ஏதும் இருக்கக் கூடாது. இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பார்ப்போமேயானால் ஒவ்வொரு நிமிடமும் இந்த ஐயுணர்வு இல்லாமல் வாழ முடியாது.

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு" (354)

"அளவு", "முறை" என்ற இரு அம்சங்களைக் கொண்ட சூத்திரம் (Formula) ஒன்று சொல்லியிருக்கிறேன். அதைத் தெரிந்து கொண்டால், எந்த அளவுக்கு ஐயுணர்வில் இன்பத்தை அனுபவிக்கலாம்

என்று வரையறை செய்து கொண்டால் அங்கே நிற்க இயலும். அதில் கிடைக்கக்கூடிய இன்பம் கிடைத்தான பிறகு மீண்டும் அந்தத் இன்பத்தை அனுபவிப்பதற்கு ஒரு கால இடைவெளி தேவை என்ற நிதானம் ஏற்பட்டால், அந்த இன்பம் பிறகும் கிட்டும். அவ்வாறு அல்லாது, அளவுக்கு மீறி ஓர் இன்பத்திலே ஈடுபட்டால், என்ன ஆகும் என்றால் உயிர் ஆற்றல் அளவுக்கு மீறிச் செலவாகி உடல் சோர்ந்துபோகும்.

ஐயுணர்வோடு மெய்யுணர்வு இணைந்து வருகின்ற போது உங்களுக்கு மனோதிடம் வருகிறது என்றால் உறவிலே ஒரு தெளிவு வருகிறது. இது தான் உறவிலேயே கண்ட துறவு நிலை. இது அல்லாது துறவு நிலை என்று தனியான ஒன்று இருக்கவே முடியாது. அப்படியே எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போவதுதான் துறவு என்றால் இறப்பவர்கள்தான் துறவுநிலைக்குப் போவார்கள் என்று சொல்லலாம். நாம் வாழுகின்ற போதே வாழ்வு நலமாக, அமைதியாக, மகிழ்ச்சியாக அமைய வேண்டும். எனவே வாழும்பொழுதே வாழ்வு திருப்தியாக மேன்மையாக இருக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு அனுபோகத்திலேயும் எல்லை கட்டிக் கொள்ள வேண்டும். அளவுமுறை இட்டுக் கொள்ள வேண்டும்.

ஐயுணர்வோடு மெய்யுணர்வு சேருகின்றபோதுதான் அது சாத்தியமாகும். அப்பொழுது நமக்கு என்ன வேண்டும், அது எங்குக் கிடைக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். திருவள்ளுவர் கூட இந்த மெய்யுணர்வைப் பற்றிக் கூறும்போது,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு" - (355)

என்று கூறியுள்ளார். ஒரு பொருள் எந்தத் தன்மையுடையதானாலும் அதைப் பார்த்துப் பிரித்துப் பார்த்தால் அது ஆகாசம் அல்லது சக்தி என்பது தெரியவரும். அந்த ஆற்றல் துகள் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால் அது மெய்ப் பொருளினுடைய பின்னம் என்பது தவிர வேறு அல்ல. உதாரணமாக, கடல் இருக்கிறது, கடலினுடைய மிகச் சிறு பகுதியொன்று எழுந்து இயங்குகின்ற பொழுது, அதற்கு "அலை" என்று பெயர். அலை வேறு, கடல் வேறு என்பதல்ல. அதேபோலச் சக்தி வேறு, சிவம் வேறு அல்ல. அதைத்தான் கடவுள் என்று சொல்லுகிறோம்.

கடவுள் யார்? மெய்யுணர்வு அடைந்த மனிதன் இறைவனை உணர இயலும் என்பதை மிக எளிமையாக வேதாத்திரி மகரிஷி அவர்கள் உணர்த்தியுள்ளார். மக்கள், எந்தவொன்றையும் பயனை எதிர்ப்பார்த்தே செய்யக் கூடியவர்கள். எனவே தான் சொர்க்கம்,

நரகம் பற்றிய கோட்பாடு எழுந்தது எனலாம். நன்மை செய்யின் சொர்க்கமும் தீமை செய்யின் நரகமும் அடைவர் என்ற அச்சஉணர்வு மக்கள் மனத்தில் இயல்பாகவே சிறுவயது முதலே ஊட்டப்படுகிறது. இதனையே இருபெரும் ஞானிகளும் தம் படைப்புகளில் உணர்த்தி யுள்ளனர்.

"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு" -(1103)

என்ற குறட்பா மூலம் திருமால் வாழும் உலகு என்று குறிப்பதால் அத்தொடர் சொர்க்கம் என்று குறிப்பதாக எண்ணுதற்கு இடமுள்ளது. அதுபோலவே

"புகழின்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்(று)
இகழ்வார்பின் சென்று நிலை" -(966)

என்ற குறட்பாவிலும் 'புத்தேள்நாடு' என்பது விண்ணுலக வாழ்வு என்று பொருள் கொள்ளும்வகையில் அமைந்துள்ளதை உணரலாம்.

மகரிஷி 'மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து' என்ற நூலில் சுவர்க்கம் – நரகம் என்ற தலைப்பில் கீழ்வருமாறு பாடுகிறார்.

"உருவம் வரைக்கும் குறுகிநின்ற
உணர்ச்சி நிலையே நர-அகமாம்
அருவ மென்னும் பேரண்டம்
அறிந்த நிலையே சுவர்-அகமாம்; பெருமையுள
விண் என்ற அணுவறிந்தோன்
விண்ணவனாம்; ஆராய்ந்து
விண்கடந்து, வான் அறிந்த
விவேகியே வானவனாம்" (ப.21)

இப்பாடலின் மூலம் மகரிஷி அவர்கள் நரகம், சொர்க்கம் என்றால் என்ன என்பது பற்றி விளக்கியுள்ளமையை அறியலாம். மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்பதனை இருபெரும் தத்துவ ஞானிகளும் உரைக்கின்றனர். மனத்தினைத் தூய்மையுடன் வைத்துக் கொண்டு உலகில் வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்தால் மனிதன் தெய்வமாகலாம் என்கின்றனர். திருவள்ளுவர் இதனை,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" -(34)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" -(50)

போன்ற குறட்பாக்களின்மூலம் உணர்த்துகின்றார். இதனையே மகரிஷி,

"மனித மனத்தைப் பற்றி மனிதர் அறியாமல்
மயங்குகிறார், மயங்குகிறார் உண்மை எங்கு காணும்
மனம் என்றால் சீவகாந்த அலையன்றி வேறோ
மனம் நிலைத்தால் அறிவு அதே இறைவெளி மெய்ப்
பொருளாம்
மனம் ஆற்றும் வினைகளெல்லாம் மறுமுனையில் தெய்வம்
மாறாமல் சுருக்கிக் கருமையத்தில் வைக்கும்
மனம் அறிவு உயிர் தெய்வம் காந்தம் இவை உணர
மாய நிழல்வின் ணறிவு மனிதருக்குத் தேவை.
(செயல்விளைவுத் தத்துவம் பக். 19–20)

என்ற பாடலின் மூலம் மனம், மனிதன், மனத்திற்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பு, மனிதனுக்குத் தேவையானவை யாவை ஆகியவற்றை விளக்கியுள்ளார்.

மேலும், 'மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து' என்ற நூலில் ப.102–இல் மனிதன் தேவனாய்த் திகழ, கீழ்வருமாறு வழிமுறைகளைப் புகலுகின்றார் மகரிஷி.

"கண்ணாடியில் உன்னைக்
கருத்தொடு உற்றுப்பார்
கருத்துக்கட் புலன்
ஒன்றில் நிலைத்திடும்
உண்ணாடி முன் கண்ட
உருவத்தை நினைத்துநில்
உள்ளம் ஐம்புலன்களைக்
கடந்து உயர்ந்திடும்
விண்ணாடிப் பிரபஞ்ச
விரிவை நுணுகி நாடு
விரைவு கெட்டமைதியாய்
விதியில் மதிகூடும்
மண்ணாடிப் பெற்ற
மயக்கம்போம் வெளியாய் நில்
மனிதனே தேவனாய்த்
தெய்வமாய்த் திகழ்வாயே" (பக் 102–103)

"மனிதனென்ற உருவினிலே மாக்களுண்டு, மக்களுண்டு,
மனமறிந்த தேவருண்டு, மதி நிலைத்த மனிதருண்டு,
மனமறிந்து மனஇதமாய், மாக்களுக்கும் மக்களுக்கும்
மனமுவந்து தொண்டாற்றும், மாமுனிவன் முழுமனிதன்"
– (மா.வி.மதி விருந்து ப.42)

என்ற பாடலில் முழு மனிதனாய் வாழ வீடுபேறு கிட்டும் என்பதனைக் குறிப்பாக உணர்த்தி, வீடுபேறு என்ற தலைப்பில் வீடுபேறு என்றால் என்ன ? என்பதனைக் கீழ்வருமாறு பாடுகிறார்.

"வெட்டவெளி பிரபஞ்சப் பொருட்கட் கெல்லாம்
வீடாகும் விண்கடந்து வானறிந்தால்
வெட்டவெளி அணுஅறிவு ஒன்றாய்ப் போகும்
வீடுபேறு எனும் உயர்ந்த பதமும் ஈதே"

(ம.வி.மதி விருந்து ப.42)

இருபெரும் கவிஞர்களும் உலகளாவிய சிந்தனையுடையவர்கள் என்பதனை அவர்கள் தம் பாடல்களின் மூலம் அறிய முடிகிறது. முதல் குறட்பாவிலேயே 'உலகு' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் வள்ளுவர். மேலும் "உலகில் வாழும் மனிதன். எவ்வளவு தான் கல்வி, கேள்வியில் சிறந்திருந்தாலும் அவன் உலகத்தோடு ஒட்டி வாழ வேண்டும் என்பதனைக் கீழ்வரும் குறட்பாமூலம் உணர்த்துகிறார்.

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" -(140)

திருவள்ளுவரும், தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியும் ஒத்த கருத்துடையவர்கள் என்பதனை இவ் ஆய்வின் மூலம் உணர முடிகிறது. தனிமனிதன், வீடு, சமுதாயம், நாடு, உலகு எனத் தனித்தனியே ஆய்ந்தபோதும், மனிதனின் உள்ளுணர்வைப் பற்றிய கருத்துகளைத் தெளிந்தபோதும் இருபெரும் கவிஞர்களின் ஒத்த சிந்தனையை உணர முடிகிறது.

எனினும், மகரிஷி இந்நூற்றாண்டில் தலைவிரித்தாடும் தீவிரவாதம், ஒற்றுமையின்மையால் நாட்டில் விளையும் பிளவுகள் ஆகியன வற்றிற்குப் புதிய முறையில் சில தீர்வுகளையும் வழங்கியுள்ளார்.

ஆய்வு முடிவுகள்

திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள் இருப்பினும், மகரிஷி திருக்குறளுக்குத் தரும் விளக்கம் புதுமையாக, எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையிலும், இன்றைய உலகிற்குத் தேவையான சில வழிமுறைகளும், செயல்பாடுகளும் உள்ளன என்பதனை யாரும் மறுக்கவியலாது. மகரிஷியின் உடல் – உயிர் – மனம் – ஆகியன பற்றித்தரும் விளக்கம் அறிவியலோடு தொடர்புடையன.

1. **தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி தம் படைப்புகளில் உளவியல் – ஓர் ஆய்வு**
2. **தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி தம் படைப்புகளில் அறிவியல் கூறுகள் – ஓர் ஆய்வு**
3. **தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி தம் படைப்புகள் காட்டும் சமுதாயம் – ஓர் ஆய்வு**
4. **தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி தம் படைப்புகள் காட்டும் தத்துவம் – ஓர் ஆய்வு**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	280.00
மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள்	40.00
தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை	250.00
தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி	225.00
அரங்கேற்று காதை ஆராய்ச்சி	140.00
பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள்	45.00
இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம்	60.00
பழந்தமிழ் அறிவியல்	45.00
நீறணி பவளக்குன்றம்	35.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1	100.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2	100.00
நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	30.00
சிறுபஞ்சமூலம்-ஒருசமூகவியல் பார்வை	30.00
இந்தி நாடகப் பனுவல் (ஆடி மாதத்தில் ஒரு நாள்)	50.00
திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு	40.00
பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்	70.00
காரைக்கால் அம்மையார் பாடல்கள் - ஓர் ஆய்வு	40.00

648 தத்துவஞானி வேதாத்திரிமகரிஷியின் படைப்புகளில் திருக்குறளின் தாக்கம் **65.00**